
தவம்
பண்ணிடவில்லையடி
ரமணிசந்திரன்

# தவம் பண்ணிடவில்லையடி

ரமணிசந்திரன்

அருணோதயம்
3, கௌடியாமடம் சாலை
இராயப்பேட்டை :: சென்னை - 600 014.

## நூல விவரப் பட்டியல்

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : தவம் பண்ணிடவில்லையடி |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : நவம்பர், 1998 |
| இரண்டாம் பதிப்பு | : செப்டம்பர், 2000 |
| மூன்றாம் பதிப்பு | : மார்ச், 2002 |
| நான்காம் பதிப்பு | : மார்ச், 2004 |
| ஐந்தாம் பதிப்பு | : ஆகஸ்ட், 2005 |
| ஆறாம் பதிப்பு | : மார்ச், 2007 |
| ஏழாம் பதிப்பு | : ஆகஸ்ட், 2008 |
| எட்டாம் பதிப்பு | : அக்டோபர், 2009 |
| ஒன்பதாம் பதிப்பு | : அக்டோபர், 2012 |
| பத்தாம் பதிப்பு | : அக்டோபர், 2014 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| தாள் | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| பக்கங்கள் | : 288 |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |

**விலை: ரூ.120.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |

# பதிப்புரை

'ரமணி சந்திரன் நாவல்களில் பெண்களின் உரிமை யும், அதே நேரத்தில் கடமையும் வலியுறுத்தப்பட்டிருக் கிறது. படிக்கும்போது கதைப்போக்கிலேயே லயித்து விடுகிறேன்' என்று ஒரு வெளிநாட்டிலிருக்கும் வாசகி எழுதியிருக்கிறார்.

'கதைகள் என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும். எத்தனை முறை படித்தாலும் சலிப்புத்தட்ட வில்லையே' என்று புகழ்கிறார் மற்றொரு வாசகி.

'ஏது, பெண்கள் ரமணிசந்திரன் கதைகளில் பைத்தி யமாகவே இருக்கிறார்களே, ஏன்? என்று நினைத்து நானும் படிக்கத் தொடங்கினேன். இப்பொழுது நானும் தொடர்ந்து படிக்கும் வாசகனாகி விட்டேன்' என்று ஒரு ஆண் வாசகர் எழுதுகிறார்.

எப்படி இருந்தாலும் படிக்கும் வாசகிகள் வாசகர்க ளின் மனதை ரமணிசந்திரன் எழுத்துக்கள் நிறைவு செய்கின்றன என்பது நமக்குப் புரிகிறது.

இதை எல்லாம் பார்க்கும் போது எங்களுக்குப் பெருமையாக உள்ளது. ஆசிரியைக்கும் மேலும் மேலும் பெருமை சேர்க்கிறது.

வளர்ந்து வரும் வாசகர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்த இந்த நாவல் பெரிதும் உதவும் என எண்ணுகிறோம், படியுங்கள்.

பாராட்டுகின்ற வாசகர்கள், வாசகிகள் அனைவருக்கும் எங்கள் நன்றிகலந்த வணக்கம்.

- **அருணோதயம் அருணன்**

# தவம் பண்ணிடவில்லையடி

## 1

ஆட்டோவிலிருந்து இறங்கி, அந்த வீட்டைச் சற்று நேரம் வெறித்து நோக்கினான் புவனமோகன்.

நினைவு தெரிந்த காலத்திலிருந்து அவன் வீடாக அது இருந்திருக்கிறது. ஓடி விளையாடி ஜன்னல் மழைதடுப்பு மேல் ஏறி, விழுந்து, அடிபட்டு, அம்மா வின் மருந்து தடவலில் இதம் கண்டு, சிரித்து, மகிழ்ந்து...

சட்டெனக் கண்ணுக்குள் ஏதோ கரித்து, பார்வை மங்கியது!

இந்த வீட்டைவிட்டு அவன் வெளியேறாமல் இருந்திருந்தால் இவ்வளவு பெரிய அநியாயமும் நேராது இருந்திருக்குமோ?

ஆனால், விதி என்று ஒன்று இருக்கிறதே!

சும்மா சும்மா, விதியின்மீது பாரத்தைப் போட்டு விட்டுத் தன் குறைகளை ஒத்துக் கொள்ள... ஏன்.

கண்டுகொள்ளவே மறுப்போரைப் பார்க்கையில் எப்போதுமே அவனுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வரும்!

ஆனால், இப்போது எதைக் காரணம் காட்டுவது?

அதுவும் குற்றம் குறைகள் அத்தனையையும் களைந்து விட்டு இனி ஒப்பற்ற வாழ்வுதான் என்று இருக்கும்போது, இப்படி அதல பாதாளத்தில் விழ நேர்வது என்றால், காரணம் விதியாக் மட்டும்தானே இருக்க முடியும்?

அவனைப் பொறுத்தவரையில், எல்லாம் அவனது பிழையாகவே இருக்கலாம். 'இருக்கலாம்' என்ன? அவனது பிழையேதான்!

ஆனால், மற்றவரின் துன்பங்கள்? அவனிடம் பாசம் வைத்த பாவத்தால், அவனை நம்பிய கொடுமையால் பட்டவர்கள்? அவர்களின் துன்பத்துகு விதி தவிர வேறு எதைக் காரணம் காட்ட முடியும்?

மனதில் இவ்வளவு வேதனையை வைத்துக் கொண்டு இங்கு வந்தது தப்போ என்றும் புவனனின் மனம் சஞ்சலப்பட்டது. அவனது நெஞ்சின் சுமை, அவனை மற்றவர்களுக்குச் சுமையாக்கி விடக்கூடாதே!

தந்தைக்கு வாக்குக் கொடுத்திருந்தான். உண்மைதான்! கூடவே, இவ்வளவு பெரிய சுமையை அவனால் தனியே தாங்கவும் முடியவில்லைதான். ஆனால், இந்தத் துயரம் பற்றி இங்கு யாரிடமும் சொல்லவும் இயலாது!

குழப்பமும் கலக்கமும் சேர்ந்து அவனை அலைக் கழித்தன.

அவனுக்கு, அது சற்றும் பழக்கமற்ற விஷயம்!

எந்த ஒரு சிக்கலான பிரச்சினை என்றாலும், சட்டென்று அதற்குத் தீர்வு கண்டு, அதை விரைந்து செயல்படுத்தி வெற்றியும் காண்பவன். வெற்றி ஒன்றே லட்சியமாய், மற்ற அத்தனையையும் அலட்சியப் படுத்தி... அந்த அலட்சியம்தான் இன்றைய இன்னலுக்கும் அடிகோலி விட்டதோ?!

வேறென்ன? அதுவேதான்.

எது எதற்கு எந்தெந்த அளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று புரியாமல் வெற்றியை மட்டுமே பெரிதாக எண்ணி வாழ்வில் முக்கியமான அத்தனையையும் காவு கொடுத்து விட்டான்!

எதை எதையெல்லாம் காவு கொடுத்தோம் என்று எண்ணிப் பார்க்கையில் அவன் அயர்ந்து போனான்

தந்தையின் அக்கறை மிகுந்த அறிவுரைகள்!

தாயாரின் அளவுகடந்த அன்பு!

கபடற்ற தங்கையின், பலன் கருதாப் பாசம்!

கடைசியாக...

''யாரு... சின்னய்யாவா?... சின்னய்யா! நீங்களே தானா? கேட்டுப் பக்கத்திலே இருந்து ஆட்டோ கிளம்பிப் போகவும் யாரோண்ணு நினைச்சேன். நீங்களாய்யா? ஆனா, நீங்க ஆட்டோவிலே... சரிசரி. உள்ளார வாங்கய்யா! மத்தது அப்பறம் எல்லாம் பேசிக்கலாம்!''

பால்தூக்கை இடது கைக்கு மாற்றிக் கொண்டு, சின்ன முதலாளியின் பெட்டி, தோள் பை இரண்டையும்

ஒருங்கே தூக்க முயன்ற வேலையாள் சித்தய்யனின் வரவேற்பில் ஒருவிதமான ஆறுதலை உணர்ந்தான் அவன்.

இந்த அன்பு மாறவில்லை!

இந்தச் சித்தய்யனையும்தான். எத்தனை விதமாய் விரட்டியடித்து வேலை வாங்கியிருப்பான்!

ஆனாலும் அவனிடம் சித்தய்யன் பிரியமாய்த்தான் இருந்தான்.

அவன் மட்டுமா? அவனுடைய பெற்றோர் வெகு வாக யோசித்து அவனுக்குச் சூட்டிய பெயருக்குச் சரியாக எல்லோருமே அவனிடம் மயங்கிப் பிரியமாய்த் தான் இருந்தனர்

புவனமோகனன்!

இந்த உலகம் முழுவதும் மகனிடம் மயங்கி, அவனிடம் பிரியமாய் இருக்க வேண்டுமாம்!

இருந்தார்கள்! கிட்டத்தட்ட, அவனோடு பழகிய எல்லோருமே அவனிடம் பிரியமாகத்தான் இருந்தார் கள்!

— ஒரு சிலர் தவிர!

அவர்களும்கூட முதலில் நன்றாகத்தான் பழகி...

‘‘சின்னய்யா! கொஞ்...சம் பையைப் பார்த்துகிட்டு நில்லுங்கய்யா! நான் இந்தப் பெட்டியையும் பாலையும் உள்ளார வச்சிட்டு, இதை எடுத்துப் போக, இதோ ஓடி வந்துர்ரேன்!’’ என்று சித்தய்யன் உரைக்கவும்

புவனமோகனன் ஒருவாறு நிகழ்காலத்துக்கு வந்தான.

"சேச்சே! சித்தய்யா, நீ பால் சிந்தாமல் பால் தூக்கைக் கொண்டு போ! பெட்டி, தோள் பை இரண்டையுமே நானே எடுத்து வந்து விடுகிறேன்..."

"அய்யய்யோ! நானெல்லாம் எதுக்கு இருக்கேன் சின்னய்யா!" என்று ஆட்சேபித்த வேலையாளை அடக்கி விட்டுப் பெட்டியையும் பையையும் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றான் புவனன்.

"என்...னங்கய்யா, நீங்க?" என்று தவித்தபடி பின்னோடு வந்த சித்தய்யன், புவனமோகனன் பிடிவாத மாய்ச் செல்லவும், கெஞ்சுதலைக் கைவிட்டு முன்னே வீட்டுக்குள் ஓடிச் சென்றான்.

"யாரையும் எழுப்ப வேண்டாம், சித்தய்யா!" என்ற குரலுக்குப் பணிந்து உள்ளே சென்று பால் தூக்கை வைத்துவிட்டு பெட்டியை வாங்குவதற்காக மீண்டும் வெளியே ஓடி வந்தான்.

அதற்குள் வீட்டின் முன்புறத் தோட்டத்தைக் கடந்து விட்ட புவனன் வராண்டாவில் தன் சாமான்களை வைத்துவிட்டு, அங்கேயே ஒரு கூடை நாற்காலியில் உட்கார்ந்தான்.

"அய்யா! உள்ளார வாங்கய்யா! இதோ, ஒரு நிமிட்லே உங்க ரூமைத் தயார் பண்ணி விடுறேன்யா..." என்று மீண்டும் பெட்டி, பையைத் தூக்க முனைந்தான் சித்தய்யன்.

"வேண்டாம் சித்தய்யா!" என்று பணியாளைப் புவனமோகனன் மீண்டும் தடுத்தான். அப்பாவிடம்

பேசிவிட்டுத் தான் நான் உள்ளே வரவேண்டும், சித்தய்யா! உன்னால் முடிந்தால் ஒரு காஃபி போட்டுக் கொடு. அது போதும்'' என்று லேசாக முறுவலித்தான்.

''என் சாமி, அதைவிடத்தான் எனக்கு வேறே என்ன வேலை. சின்னய்யா! ஆனாக்க, ஏன் எழுப்ப லைன்னு அம்மா கோவிச்சுக்கிடுவாங்களேன்னுதான்...''

''நான்தான் எழுப்பக்கூடாது என்று சொன் னேன்'' என்று கூறிவிடு. அதற்குமேல் உன்னை ஒன்றும் சொல்ல மாட்டார்கள்!'' என்று அயர்வுடன் உடலைத் தளர விட்டு, தலையை நாற்காலியின் பின்புறம் சாய்த்துக் கண்களை மூடிக் கொண்டான் புவனன்... ''எனக்காக யார் தூக்கமும் கெடக் கூடாது சித்தய்யா! நீ பால் வாங்கப் போயிருக்காவிட்டால் உன்னையும் நான் எழுப்பியிருக்க மாட்டேன்தான்! எனக்காக, இந்த வீட்டில் உள்ளவர்கள் அனுபவித்திருக்கும் துன்பங்கள் போதும்!''

சின்ன எஜமானனின் களைப்பைக் கண்ணுற்று, சமையல் அறைப் பக்கம் காலடி எடுத்து வைத்த சித்தய்யன், மற்றவன் பேசத் தொடங்கவும் மீண்டும் நின்று அவன் பேச்சைக் கேட்டான். வேறு ஏதேனும் உத்திரவு இடப் போகிறானோ என்று நின்றவனுக்கு அந்தச் சின்ன முதலாளியின் பேச்சு வியப்பூட்டியது.

அடுத்தவருக்காகப் பார்க்கிறவனா இந்தச் சின்ன அய்யா? எல்லோரையும் அவன் வசதிக்கு ஆட்டிப் படைக்கிறவன் ஆயிற்றே! இவன் மற்றவர்களிடம் இன்னும் கொஞ்சம் பாசத்தோடு, பரிவோடு நடந்து கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று சித்தய் யனே எத்தனை முறை எண்ணியிருப்பான்! அம்மா,

தங்கைகூடப் பரவாயில்லை. ஆனால் தகப்பனாரிடம்.

ஆனால், இன்று அவனது சோர்வும், மற்றவரின் தூக்கம் கூடக் கலையக்கூடாது என்றதும்கூட ஒருவித மாய் மனதைத் தாக்க, தலையை அசைத்தவாறே, சித்தய்யன் தன் சின்ன எஜமானனுக்காகக் காஃபி கலந்து வரச் செய்தான்.

கொஞ்சம் பாலை மட்டுமாகக் காய்ச்சி, அதற்குள் தயாராகியிருந்த, 'காஃபி மேக்கர்' டிகாக்ஷன் கலந்து, சித்தய்யன் 'காஃபியை எடுத்து ஐந்தாறு நிமிடங்களுக்கு மேல் ஆகியிராது!

அப்போதும், புவனமோகனன் அயர்வுடன் சாய்ந்ததை நினைவில் கொண்டு, ஒருவேளை அவன் உறங்கி விட்டிருந்தால், எழுப்பி விடக்கூடாது என்று ஓசையின்றியே மெல்ல நடந்து வந்தான், அவன்.

ஆனால், புவனன் உறங்கவில்லை. உடல் தளர்ந்து கிடந்தபோதும், கண்கள் மட்டும் எங்கோ இலக்கற்று வெறித்தன!

காஃபி வாசனையில், திரும்பிப் பார்த்தவனின் உதடுகளில் கண்களை எட்டாத முறுவல் ஒன்று மீண்டும் மலர்ந்தது. "ரெக்கார்டு வேகத்தில் காஃபி கொண்டு வந்திருக்கிறாய், சித்தா! நியாயத்துக்கு உனக்கு 'கின்னஸ்' புத்தகத்தில் இதற்காக இடம் கிடைத்தே ஆக வேண்டும்!" என்றவாறு காஃபியை வாங்கிக் கொண்டான்.

"போங்க சின்னய்யா!" என்று ஓர் அசட்டுச் சிரிப்புடன், நெளிந்து விட்டு, "அய்யா! ரொம்ப அசதியாத் தெரிகிறீங்களேய்யா, உடம்பு கிடம்பு சரியில்

பட்டென்று முகத்தில் ஓர் அறை விழுந்தது போல இருந்தது. சின்னவனுக்கு.

புவனனுடைய தந்தையை விட அதிக வயது இந்தச் சித்தய்யனுக்கு. நியாயத்துக்கு மரியாதை கொடுத்துப் பேசிப் பழக வேண்டும். ஊர்ப்பக்கம் இருந்து வந்தவன். அவனே அதை ஏற்க மறுத்தால் ஒருமையில் விளித்துப் பேசிப் பழகிவிட்டது. அதிகாலையில் எழுந்து, பால் கறக்குமிடத்துக்கே சென்று பால் வாங்கி வருவதிலிருந்து, சமையல், ஓரளவு வீட்டு நிர்வாகம் எல்லாம் இவன் பொறுப்புதான். எல்லோரும் படுக்கச் செல்லும் வரை அவன் வேலை நடந்து கொண்டே இருக்கும்! கொஞ்சம் உட்கார்ந்து ஓய்வெடு என்றாலும் விடாமல் செய்கிறவன்தான். அதுவும் விருப்பமாகவே!

ஆயினும், இந்த வயதில் காலையிலேயே எழுந்து பால் வாங்கப் போவது சிரமமாய் இருக்கிறதா என்று ஒரு வார்த்தை கேட்க அவனுக்குத் தோன்றவில்லையே! காஃபி கொண்டு வரும்படி ஏவத்தானே தோன்றியது?

''நீ காஃபி குடிக்கவில்லையா, சித்தய்யா?'' என்று குரல் கனியக் கேட்டான் புவனன்.

''நானா? எனக்கென்ன, சின்னய்யா? எப்ப வேணுமானாலும் ஒருவாய் ஊத்திக்குவேன்! சாமி புண்ணியத்திலே, நான் என்ன சாப்பிட்டாலும், எப்ப சாப்பிட்டாலும் இந்த வீட்டிலே யாரும் ஒரு வார்த்தை என்னைச் சொல்கிறது இல்லை!'' என்றான் அவன் பெருமைக் குரலில். ''அந்த வகையிலே நான் ரொம்பக் கொடுத்து வைச்சவன்யா!''

''நாங்களும் கொடுத்து வைத்தவர்கள்தான்!'' என்றான் புவனப்பிரியன். ''சம்பளத்துக்கு வேலை செய்கிற

வர் மாதிரி ஏனோதானோ என்றா நீங்க
கொள்கிறீர்கள்? குடும்பத்தில் ஒருவராக இருந்தல்லவா எங்களுக்காக உழைக்கிறீர்கள்! அப்பா வழிப்பாட்டி முன்பு எங்களைப் பேணுகிற மாதிரி, பார்த்துப் பார்த்துச் செய்கிறீர்கள்! வாருங்கள். உங்களுக்கும் ஒரு கப் காபி எடுத்து வந்து, என்னோடு உட்கார்ந்து குடியுங்கள்!'' என்று வற்புறுத்தினான் சின்னவன்!

''என்ன சின்னய்யா, என்னைப் போய் நீங்க வாங்கன்னுகிட்டு...?

''எப்போதுமே அழைத்திருக்க வேண்டிய முறை! தப்பைத் திருத்திக் கொள்ளும் புத்தி இப்போதாவது வந்ததே! இனி எப்போதும் இது மாறாது!'' என்றான் அவன் உறுதியாக.

ஆச்சரியத்தை மறைத்துக் கொண்டு, உள்ளே சென்று, ஒரு டம்ளரில் காஃபியை ஊற்றிக் கொண்டு வந்து, வராந்தாப் படியில் அமர்ந்து அதை அருந்தத் தொடங்கினான், அந்த நல்ல பணியாள்!

ஆனால், வேலையாளிடம் உள்ளூர ஒரு பரபரப்பு இருந்ததை உணர்ந்த புவனன் மீண்டும் அவனை எச்சரித்தான். ''நினைவிருக்கட்டும், சித்தய்யா! யாரையும் எழுப்பவோ, எழுந்து விட்டார்கள் என்று கூப்பிட்டுச் சொல்லவோ கூடாது. அவரவர்கள் கீழே வரும் போது தெரிந்து கொள்ளட்டும்''

அவர்கள் வீட்டில், 'பெட்காஃபி' பழக்கம் கிடையாது. எல்லாமே குளியலறையுடன் கூடிய படுக்கை அறைகள். தாயார், தங்கை இருவருமே காலையில் குளித்து முடித்து விட்டுத்தான் அறையை விட்டு

வெளியே வருவார்கள். அவர்களிலும், வசுதா உடற் பயிற்சி முடித்து, வியர்வை அடங்கி, அதன்பின் குளித்து விட்டுச் சற்றுத் தாமதமாகத்தான் வருவாள். அப்புறமும் காஃபி, பால் குடிக்க மாட்டாள். ஏதாவது ஐஸ், காரட், சாத்துக்குடி, முட்டைக்கோஸ், தக்காளி என்று ஏதாவது சாறு எடுத்துக் குடிப்பாள். கீரைச்சாறு ஒருநாள்! அருகம்புல் கூட உண்டு.

புவனிடமும் சொல்லுவாள், "இந்த மாதிரி ஏதாவது சாறு குடியுங்கள் அண்ணா! உடம்புக்கு நல்லது. எங்கள் மேடம் சொன்னார்கள்!" என்பாள்.

"செய்யலாம்! ஆனால், ஆடு, மாடுகள் எல்லாம் பட்டினி கிடந்து சாகும்படி ஆகிவிட்டால் காஃபிக்குப் பால் இல்லாமல் போய்விடுமே என்று தான் தயக்...க மாய் இருக்கிறது!" என்று கூறிச் சிரிப்பான் அண்ணன்.

"போங்கள் அண்ணா!" என்று சிணுங்கி, அவ னோடு கூடச் சேர்ந்து சிரிப்பாள் வசுதா.

இதை எல்லாம் உதறிவிட்டு அவனால் எப்படி விலகிச் செல்ல முடிந்தது?

காஃபியினால் தலைப்பாரம் சற்றும் குறைந்ததாகத் தெரியவில்லை. ஆனால், பாரம் வெறுமனே உடல் சம்பந்தப்பட்டது என்றால் கொஞ்சமேனும் குறைந்த உணர்வாவது ஏற்பட்டிருக்கக் கூடும்! இது மனதில் ஏற்றியிருந்த சுமையல்லவா? இறங்குவது ஏது?

மாடிப்படியில் கேட்ட சிறு சத்தத்தில் புவனமோகன னின் உடல் லேசாக விறைப்புற்றது.

தந்தைதான்!

வழக்கமான காலை வாக்கிங்கிற்காக வருகிறார்.

இந்த ஒலிக்காகவே காத்திருந்தவன் போலச் சித்தையனும் ஓடிவந்து, பாதிப்படிகளில் அவரை எதிர் கொண்டான்.

''ஏய்! மெல்லடா, மெல்ல! நாளுக்கு நாள் வயது குறைந்து கொண்டு போவதாக எண்ணமா? கிட்டத்தட்ட என் வயது உனக்கும் இருக்குமே! கொஞ்சம் நிதான மாய்த்தானே ஏறு!''

தந்தையின் அதட்டலுக்கு மூச்சு இரைத்தபடி எழும் பாத குரலில் சித்தய்யன் பதிலிறுப்பது புவனனுக்குத் தெளிவற்று கேட்டது.

சித்தையன் என்ன சொல்லியிருக்கக்கூடும் என்று ஊகிக்கப் பிரமாத மூளை ஒன்றும் தேவையில்லை.

''என்ன என்ன?''

கார்த்திகேயனின் அமர்ந்த நடை மாறியது. வேலையாளை அதட்டியது மறந்து, அவரும் வேகமாகப் படியிறங்கி வருவது கேட்டு புவனமோகனன் மெல்ல எழுந்து நின்றான்.

ஹாலில் இருந்து, வராண்டாவுக்கு வரும் வழியின் திரை ஒதுங்க, மகனைப் பார்த்தபடி கார்த்திகேயன் சில வினாடிகள் அசையாமல் நின்றார்.

தந்தையின், தலையில் நரை அதிகரித்திருக்கிறதோ? முகத்தில் சுருக்கங்கள் கூடியிருக்கின்றனவோ?

ஓரிரு வினாடிகளில் பெற்றவரின் முகத்திலிருந்து, புவனப்பிரியனின் பார்வை அவரது காலடிக்குத் தாழ்ந்து விட்டது.

'உ... உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும், அப்பா!''

''சித்தய்யன் சொன்னான். பேசிவிட்டுத்தான் உள்ளே வருவேன் என்றாயாமே! நான் ஒருநாளும் உன்னை... சரி, சரி, உட்கார். உட்கார்ந்து சொல். என்ன பேச வேண்டும்?'' என்று அமர்ந்தார் அவர்.

''இல்லை...'' என்று தொடங்கியவன், ஏதோ யோசித்து தலையசைத்து விட்டு முன் அமர்ந்திருந்த பிரம்பு நாற்காலியிலேயே மீண்டும் உட்கார்ந்தான்.

ஒரு மூச்சை எடுத்துக் கொண்டு தொடங்கினான். ''அப்பா, நான் முன்பு பல தப்புகள் செய்திருக்கிறேன்... அதெல்லாம் தப்பு என்று நான் அப்போது நினைத்தது இல்லை. நீங்கள் எடுத்துச் சொன்னபோதும், உங்களிடம் கோபப்பட்டேனே தவிர. அவைகளைத் தப்பு என்று நான் அப்போது புரிந்து கொள்ளவே இல்லை.''

''இதன் பொருள் இப்போது அவை தவறு என்று உணர்ந்து கொண்டாய் என்பதா?''

''ஆமாம் அப்பா!'' என்றான் அவன் சின்னக்குர லில்.

''பின்னே உள்ளே வருவதற்கு என்ன தடை? அன்றும்கூட, அந்தப் பிழைகளுக்காக நீ வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று நான் உன்னிடம் கூறிய தில்லையே! திரும்பி வந்துவிட வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறேன். அப்பா உன்னை வெறுத்தது இல்லை, புவன்!''

''இல்லைதான்! ஆனால் நான் உங்களை... எதை யுமே நான் சரியாகப் புரிந்து கொண்டு இருக்கவில்லை

அப்பா!'' என்றவன் கீழ் உதட்டைப் பற்களால் அழுத்தி யபடி சில வினாடிகள் பேசாமல் இருந்தான்.

கார்த்திகேயன் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க, ஒரு சிறு அமைதியின் பின் புவனனே தொடர்ந்து பேசினான். ''அப்பா... நான்... நான் முன்னை விடவும் பெரிய குற்றங்கள் செய்து விட்டு வந்திருக்கிறேன் அப்பா! அதையெல்லாம் உங்களால்... உங்களால்கூட'' என்றவன் போதும் என்பது போலப் பெற்றவர் கை உயர்த்தவும், சொல்லி வந்ததை நிறுத்திவிட்டு, ''எ... என்னப்பா?'' என்று கேட்டான்.

''பெரிதாக ஒன்றும் இல்லை. ஒரு சின்ன விஷயம் மறந்து பேசுகிறாய். பார், புவனா! நான் உன் தகப்பன்! நீ ஒரு கொலையே செய்து விட்டு வந்தாலும், உன்னை ஆதரிக்கக் கடமைப்பட்டவன். எந்த நிலையிலும் நீ என் மகன்! எனவே, இந்த வீட்டில் இருக்கும், வசிக்கும் உரிமை உனக்கு எப்போதும் உண்டு. இதை மட்டும் ஒருபோதும் மறவாதே!'' என்றார் பெரியவர்.

விழிகளில் நீர் அரும்ப, ''தாங்க்ஸ், அப்பா!'' என்றான் மகன், தடைப்பட்ட குரலில்.

முன்புறமாய்ச் சரிந்து கையை நீட்டி மகனின் தோளைப் பற்றி லேசாக அழுத்தினார் தந்தை. ''உறவு என்றாலே அங்கே உரிமையும் உண்டு தெரிந்து கொள்! இப்போது சொல் உன் பிழைக்காக, மெய்யாகவே நீ போலீசிடமிருந்து ஒளிந்து மறைந்து வாழ வேண்டிய நிலையா? நான் கேட்பது உன் விஷயம் எல்லாம் அறிந்து கொண்டாக வேண்டும் என்னும் ஆசையால் அல்ல. ஏதேனும் உதவி தேவைப்பட்டால் அதைச்

சரியான முறையில் செய்ய வசதியாக இருக்குமே என்றுதான்! நான் சொல்வது புரிகிறதல்லவா?

''புரிகிறது அப்பா!'' என்றான் மகன், சுருக்கமாக. ஆனால் பணிவாக.

''இப்போது சொல்லு? மெய்யாகவே நீ பெரிதாக - கொலை மாதிரி எதையும் செய்து விட்டிருக்கவில்லையே! நீயாக வேண்டும் என்று அப்படிச் செய்திருக்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும். ஆனால், தற்செயலாக எதிர்பாராமல்... அப்படி ஒன்றும் இல்லையே?''

'இல்லை' என்பது போலத் தலையசைத்தபோதும், ''ஆனால், இதுவும் ஒருவகைக் கொலைதான் அப்பா! இந்தக் கொலையைச் செய்ததற்காக எந்தப் போலீசும் என்னைத் துரத்தாது! எந்த நீதிமன்றமும் எனக்குத் தண்டனை கொடுக்காது! ஆனாலும் இதுவும் திட்டமிட்டுச் செய்த கொலைதான், அப்பா! நம்பிக்கைக் கொலை! முன்பு நீங்கள் சொன்னபோதெல்லாம் நான் அதைப் புரிந்து கொள்ளவே இல்லை! ரொம்பவும் அலட்சியமாய் உங்களுக்குத்தான் ஒன்றும் தெரியவில்லை என்று நினைத்தேன். ஆனால், இப்போதோ... தாங்கவே முடியவில்லை, அப்பா!'' என்றான் மகன் குமுறும் குரலில்.

## 2

**மே**லே மகன் எதுவும் சொல்லக்கூடுமோ என்று கார்த்திகேயன் சற்று நேரம் வெறுமனே மகனைப் பார்த்தபடி சில வினாடிகள் காத்திருந்தார்.

ஆனால், மகனின் கண்களில் ஆழ்ந்த துயரத்தை யும், அதைக் காட்டிக் கொள்ளாமல் அடக்க அவன் தவிப்பதையும் கண்ணுற்றதும் அவர் வேறு வகையில் பேச்சைத் திருப்பினார்.

''உனக்கு ஒன்று தெரியுமா, புவன்? நம் வசு இப்போது பாடக் கற்றுக் கொள்கிறாள். அம்மாவின் மகளிர் மன்றத்தில் பாட்டு வகுப்பு! அது பரவாயில்லை! வீட்டில் சாதகம் செய்வதுதான் ஆபத்தாகி விடுகிறது. நல்ல வேளையாக இந்தப் பக்கம் கழுதைகள் கிடை யாது! இருந்திருந்தால் அப்புறம் ஒரே கூட்டப்பாடலாகி விட்டிருக்கும்'' என்று சிரித்தார் அவர்.

தன்னை மீறி முறுவலித்தபடி, ''அநியாயமாய்ப் பேசுகிறீர்கள், அப்பா! வசுவிற்கு வெறும் குரலே இனிமை! அவளைப் போய்க் கழுதை கானத்தோடு ஒப்பிடுவதா?'' என்று மகன் ஆட்சேபித்தான்.

''இல்லையா? என்னதான் குரல் நன்றாக இருந்தா லும் சும்மா வறட்டு வறட்டென்று கத்தினால், கேட்பது கஷ்டம்தானே? அத்தோடு, 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்பது போல, உன் தங்கையின் மயில் குரலே உனக்கு குயிலினது போலத் தோன்றுகிறதோ, என்னவோ?''

தந்தையின் முயற்சி புரிந்துவிட, புவனமோகன னும் முயன்று அவரோடு ஒத்துழைத்தான். ''வசுவின் இனிய குரலை, மயில் குரல் என்கிறீர்களா? இன்று முதல் வேலை, காது ஸ்பெஷலிஸ்ட் ஒருவரிடம் உங்களை அழைத்துப் போவது தான் அப்பா!'' என்று அறிவித்தான்.

உங்களை அழைத்துப் போவது தான் அப்பா!'' என்று அறிவித்தான்.

''தாராளமாய் ஆனால் என்னைப் பரிசோதித்து முடித்ததும், அந்த டாக்டர், அப்பாவுக்கு எல்லாம் நன்றாய்த்தான் இருக்கிறது, தம்பி. உன் காது தான் ரிப்பேர்' என்று விடுவாரே! அப்போது என்ன செய்யப் போகிறாயாம்? திருதிருவென்று முழிப்பாயா? அப்புறம் கண்ணை வேறு பார்க்கச் சொல்லுவார்!''

இருவரும் நகைப்பதை மனங்குளிர நோக்கியபடி கார்த்திகேயனுக்கு உரிய சத்துமாவுக் கஞ்சியைக் கொணர்ந்து அவர் கையில் கொடுத்தான் சித்தையன்.

''சிரிச்சாச்சுது! இனிமே சாமான்களை எடுத்து, உள்ளார ரூமிலே கொண்டு போய் வைக்கலாமுங் களா?'' என்று கேட்டு விட்டு புவனமோகனன் சம்மத மாய்த் தலையசைக்கவும் ஆர்வத்தோடு சாமான்களைத் தூக்கிக் கொண்டு அவசரமாக உள்ளே சென்றான்.

''இவன் இப்போது அம்மாவிடம் நீ வந்தது அறிவிக்கத்தான் ஓடுகிறான். விரைவிலேயே அம்மா வையும் வசுவையும் இங்கே எதிர்பார்க்கலாம் - அவர்களிடம் என்ன சொல்லப் போகிறாய்? உன் உயிர்க்கொலை அல்லாத கொலை விவகாரம் எனக்குப் புரியவில்லை! உன் அம்மாவுக்கும் அப்படித்தான் இருக்கப் போகிறது! ஆனால், இது உன் சொந்த விவகாரம் என்று நான் விட்டு விட்டேன்! உன் அம்மாவால் அப்படி இருக்க முடியாது. உனக்கே தெரியும். அதனால் அவளிடம் என்ன எதுவரை சொல்லலாம் என்று இப்போதே முடிவு செய்து கொள்!'' என்றார் கார்த்திகேயன்.

ஒருவினாடி, கண்மூடித் திறந்து விட்டு, ''ரிடர்ன் ஆஃப் ப்ராடிகல்ஸன்! கண்டபடி சுற்றி அலைந்த ஊதாரிப்பிள்ளை; இப்போது புத்தி தெளிந்து திரும்பி வந்திருக்கிறேன் என்று சொல்லிவிடலாம் அப்பா!'' என்றான் மைந்தன்.

எதையும் தூண்டித் துருவாமல் ''செய்!'' என்று ஒற்றை வார்த்தையில் முடித்துவிட்ட தந்தையை வருத்தமும் ஏக்கமுமாக நோக்கினான் புவனமோகனன்.

லேசாகத் தலையசைத்தார் அவர். ''விட்டு விடப்பா! என்ன நடந்திருந்தாலும் அதுபற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்போதைக்கு அதை மறைக்க முடியாவிட்டாலும் ஒதுக்கி வைக்க முயற்சி செய்!'' என்றவர், ஒரு விரல் உயர்த்தி மேல் தளத்தைக் காட்டி ''சித்தையன் அம்மாவிடம் சொல்லி விட்டான் என்று நினைக்கிறேன். வருகிற வேகத்தில் படியில்...'' என்று அவர் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, புவனமோகனன் எழுந்து, உள்ளே ஹாலில் இருந்த மாடிப்படியை நோக்கி விரைந்தோடினான்.

கார்த்திகேயன் அஞ்சியது போல அல்லாமல், பாதிப் படியிலேயே தாய், தங்கை இருவரையும் புவனமோகனன் எதிர்கொள்ள, அங்கே அழுகையும் சிரிப்புமாக ஓர் அன்புச் சங்கமம் நிகழ்ந்தது.

''அப்பாவிடம் கோபம் என்றால் அம்மா என்னடா பாவம் செய்தேன்? இப்படி விட்டுவிட்டுப் போய் விட்டாயே! ஒரு வார்த்தை, தகவலே இல்லாமல்... இந்த ஓர் ஆண்டாக வசுவும் நானும் எப்படித் துடித்தோம் தெரியுமா?'' என்று குறைப்பட்டாள் அன்னை.

''ஆமாம், அண்ணா! எவ்...வளவு, கஷ்...டமாக

சற்றுநேரம் பொறுமையாய்ப் பார்த்திருந்து விட்டு, ''சரிசரி... அதுதான் போனதே தப்பு என்று திரும்பி வந்து விட்டானில்லையா? இனி அவனுக்குச் சாப்பாடு, குளியல் என்று பார்க்கலாமில்லையா? உன் பராமரிப்பு இல்லாமல், பிள்ளை பாதியாய் மெலிந்திருக்கிறான் பார்!'' என்று தாய் மனதை உசுப்பி விட்டார் கார்த்திகேயன்.

'அய்யோ! ஆமாண்டா! வயிறு ஒட்டிக் கிடக்கிறதே! இருபத்தாறு வயது ஆகிறது! வயிற்றுக்குச் சாப்பிடத் தெரியவில்லையே வா! குளித்து விட்டு வருகிறாயா? அதற்குள் கொஞ்சம் பூரி போட்டு, கிழங்கும் தயிர்ப் பச்சடியும் பண்ணி விடுகிறேன். உனக்குப் பிடிக்குமே! போ! போய் குளி! சித்தய்யா முதலில், அடுப்பில் நாலு உருளைக் கிழங்கை அவியப் போடு!'' என்றபடி சமையல் அறைப்பக்கம் திரும்பினாள் வாசுகி.

''பசியே...'' என்று உணவை மறுத்துப் பேசத் தொடங்கிய புவனமோகனன், தந்தையின் பார்வையில் வாயை மூடிக் கொண்டான்!

''நீ போய், அண்ணன் அறையில் சோப், டவல் எல்லாம் எடுத்து வையம்மா!'' என்று மகளையும் அனுப்பி விட்டு கார்த்திகேயன் சொன்னார்! ''அம்மா! தங்கையிடம் என்ன ஏது சொல்வது என்று யோசிக்க உனக்கு ஒரு சிறு அவகாசம்! எதையாவது யோசித்து இருவரும் நம்பும் விதமாகச் சொல்லு! எதுவானாலும், அதிகம் கஷ்டப்பட்டிருந்தால் அதைச் சற்று மட்டுப்படுத்தியே சொல்லு. இல்லாவிட்டால் அம்மா தாங்க மாட்

டாள்!'' என்றவரிடம் தலையாட்டி விட்டுப் புவனன் சென்றான்.

புவனமோகனன் மாறியிருப்பதை அவனுடைய குடும்பம் ஓரளவு அன்றே உணர்ந்து விட்டது எனலாம்.

அவனுக்கு மிகவும் பிடித்தமான காலை உணவு இந்தப் பூரியும் கிழங்கும். சின்ன வட்டப் பூரிகளும், லேசான மசாலா வாசனையுடன் உருளைக் கிழங்கு கூட்டும், கூடவே கட்டித் தயிரில் வெங்காயம், காரட், பச்சை மிளகாய் பொடிசாக அரிந்து கலந்த பச்சடியும் இருந்து விட்டால், ஒரு வெட்டு வெட்டி விடுவான்.

ஆனால், அன்று அந்தச் சிறு பூரிகள்கூட இரண்டுக்கு மேல் அவனது தொண்டைக்குள் இறங்க மறுத்தன.

தாயின் வற்புறுத்தலுக்காக மேலும் ஒன்றை விழுங்கி முடித்தவன், அதற்குமேல் முடியாது என்று எழுந்து விட்டான்.

வேலையாளை விலகச் சொல்லித் தானே நின்று, செய்து எடுத்து வந்த வாசுகி வருத்தத்துடன் நோக்கவும், ''பயணத்தில் உண்டது சரியாகச் செரிமானம் ஆக வில்லை போல. வயிறு டொம் மென்று இருக்கிற தம்மா!'' என்று காரணம் கூறினான் புவனன்.

''ஏதாவது கஷாயம் போட்டுத் தரட்டுமாப்பா?.. ஆனால் அது உனக்குப் பிடிக்காதே! டாக்டரிடமே பார்த்து விடுகிறாயா?'' என்று கவலையுடன் கேட்டாள் தாய்.

''ஐயோ! அதெல்லாம் வேண்டாம்மா, ஒருநாள் பட்டினி போட்டாலே சரியாகி விடும். நீங்கள் வருத்தப்

படுவீர்களே என்றுதான் கொஞ்சம் சாப்பிட்டேன்... தானாகச் சரியாகி விடும்!'' என்று ஒருவாறு சமாளித்து வைத்தான் மைந்தன்.

''ஊகூம். நான் வரவில்லை யாமினி. என் பிள்ளை வந்திருக்கிறான் — அதுதான், முன்பே உன்னிடம் சொல்லியிருக்கிறேனே, அவன் அப்பாவிடம் தொழில் விஷயமாகக் கோபித்துக் கொண்டு ஊரைவிட்டே போய்விட்டான். ரொம்பவும் ரோஷக்காரன், என் பையன். இவ்வளவு நாள், விறைப்பில் ஒரு கடிதம் கூட எழுதவில்லை. இரண்டு தரம் டெலிஃபோனில் வீட்டில் எல்லோர் சுகம் பற்றிக் கேட்டதோடு சரி! இருக்கும் இடம் கூடச் சொன்னது இல்லை. என்னவோ, மனது இளகி ஒருவழியாய் வந்திருக்கிறான் அவன். மனம் விட்டுப் பேசுவது எப்போதும் என்னிடம் மட்டும் தான். என்ன செய்தான். எது பண்ணினான் என்று எல்...லாம் சொல்லுவான். ஒரு வருடக் கதை சொல்ல வேண்டுமே! இந்த வாரம் முழுவதும் நான் வீட்டை விட்டு அசையப் போவது இல்லை!'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும்போதே மாடியிலிருந்து தந்தை யோடு வெளியே செல்கிறவன்போல உடையணிந்து மகன் வருவதைக் கண்டு வாசுகி திகைத்தாள்.

தொழில் விஷயத்தில் இருவருக்கும் கொஞ்சமும் ஒத்துப் போகாதே! மீண்டும் வார்த்தை தடித்து விட்டால் என்ன ஆகுமோ என்று பதறியது அவளது அன்னை மனம்.

''என்ன புவன், அதற்குள் எங்கே கிளம்பி விட்டாய்? பயண அலுப்பு தீர இரண்டு நாள் நன்றாக

ஓய்வெடுத்துக் கொள்! மற்றது பிறகு பார்த்துக் கொள்ள லாம்'' என்றவள், ''என்ன நீங்கள் வந்ததும் வராதது மாக இன்றைக்கே அவனைப் பிடித்துக் கொண்டு போக வேண்டுமா?'' என்று கணவனிடமும் கேட்டாள்.

''அய்யோ! ஆளைவிடு. உன் பிள்ளையை வா என்று ஒரு வார்த்தை நான் கூப்பிடவில்லை! அவனாகத் தான் வருகிறேன் என்றான்! ஒரு வேளை உன் மகனுக்கு அம்மாவிடம் மாட்டிக் கொண்டு முழிப்பதற்கு, கடை வேலை செய்வது மேல் என்று இருக்கிறதோ என்ன வோ!'' என்று கூறிச் சிரித்தார் கார்த்திகேயன்.

கூடச் சேர்ந்து முறுவலித்தபோதும், ''வேலை என்று சென்று, அங்கே அப்பாவிடம் மாட்டிக் கொண்டு முழிக்கப் போகிறாய், புவன்! ஜாக்கிரதை!'' என்று கேலி போலவே பேசி, மகன் கணவரோடு செல்வதை வாசுகி தடுக்க முயன்றாள்.

பெற்றவளைப் புரிந்து கொண்டவனாய், புவனமோ கனன் அன்னையிடம் சென்றான். அவளது கையைப் பற்றி லேசாக அழுத்தி, ''இந்த ஓர் ஆண்டில் நான் ரொம்பவும் பொறுமை கற்றுக் கொண்டு வந்திருக்கி றேன், அம்மா! அப்பா என்ன சொன்னாலும் எதிர்ப் பேச்சு பேசமாட்டேன். பயப்படாதீர்கள்!'' என்று ஆறு தல் உரைத்து அன்னையிடம் விடை பெற்றுச் சென்றான்.

கணவனோடு மகன் செல்வது இன்னமும் வாசுகிக் குப் பிடிக்கவில்லைதான். ஆனால் இதற்குமேல் மக னைத் தடுப்பதும் அநாகரீகமாகத் தோன்றவும் மேலே பேசாமல், அவள், வாயை மூடிக் கொண்டாள்.

ஆனால், உள்ளூர ஒரே கவலைதான்!

முன்பு தொழிலைப் பார்க்க வா வா என்று கார்த்திகேயன் அவனைப் பிடித்து இழுத்துச் சென்று, வாட்டி வதக்கியதில்தானே புவனன் வீட்டை விட்டே போனான்; மீண்டும் அப்படி நேராது என்று என்ன நிச்சயம் என்று வேதனையோடு எண்ணினாள் அவள்.

வாசுகியின் அச்சத்திற்கு நேர்மாறாக, அவளுடைய கணவரும் மகனும், ஒருவர்க்கொருவர் மிகுந்த நல்லிணக்கத்துடனேயே நடந்து கொண்டனர்.

வந்த வாடிக்கையாளருக்கு, தந்தையிடம் கேட்டு உரிய விலை கூறி வியாபாரம் செய்தான் புவனமோகனன்.

கவனியாதது போல மகனைக் கண்காணித்துக் கொண்டிருந்த கார்த்திகேயனுக்கு உள்ளூர இருந்த கவலை அடியோடு அகன்றது. கூடவே மகனின் தொழில் முறைப்பேச்சு அவருக்கு மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது.

மகன் ஆழ அமர்ந்து விட்டான்! இனி நிம்மதியாக இருக்கலாம்! அவனது அதிரடி வியாபாரத்தில் பெரிய அடி ஏதும் வாங்கியிருப்பான் போலும். அப்பாவின் தொழில்முறை எவ்வளவு பாதுகாப்பானது என்று புரிந்து திரும்பி வந்துவிட்டான்!

சொல்லிக் கொடுத்த வார்த்தையும், கட்டிக் கொடுத்த சோறும் எத்தனை நாளுக்கு வரும்? ஆயிரம் முறை கற்றுக் கொடுப்பதைக் காட்டிலும் ஒரே ஓர் அனுபவத்தினால் பெறும் அறிவு நிலைத்து நிற்கும்.

ஆனால்...

கார்த்திகேயனுக்குத் திடுமென ஓர் ஐயம் எழுந்தது. ஒருவேளை புவனன் தொழிலில் அடிபட்டதில் யாருக்கும் ஏதேனும் பணம் கொடுக்க வேண்டியிருக்குமோ? மகனின் முகத்தில் இருக்கும் இந்த வாட்டம் ஒரு வேளை, தன் கடனை அடைக்கத் தந்தையிடம் எப்படிப் பணம் கேட்பது என்ற குறையினால் இருக்குமோ?

முன்பு அவர் கடுமையாகப் பேசியதை நினைத்து இப்போது கேட்கத் தயங்கித் தவிக்கிறானோ என்று தோன்றவும் தந்தை மனம் உருகி விட்டது.

இருந்திருந்து அவருக்கும் இரண்டே பிள்ளைகள் தானே? அவர் சம்பாதிப்பதும், சேர்த்து வைப்பதும் வேறு யாருக்கு?

ஆனால் அதுபற்றி அவர் விசாரித்தபோது யாருக்கும் எந்த வித பாக்கியும் இல்லை என்றான் அவன்.

''வெளியே உள்ள கொடுக்கல் வாங்கல் போல, இரண்டு வட்டி போட்டு, பைசா குறையாமல் கொடுத்து முடித்து விட்டேன் அப்பா! அந்தக் கணக்கு முழுமையாகத் தீர்ந்து விட்டது'' என்று அவன் சொன்ன விதத்தில் புவனமோகனனிடம் அவனது தொழில் பற்றி அவருக்கு வேறு எதுவும் கேட்கத் தோன்றவில்லை.

தந்தை இறங்கியதும், காரை எடுத்துப் போய் உரிய இடத்தில் நிறுத்தி விட்டுக் கடைக்குள் வந்த புவனமோகனனைக் கண்டதும் கடைச் சிப்பந்திகள் நால்வருமே வாயைப் பிளந்தனர்.

நெடுநாள் கழித்துப் பார்த்ததினால் வந்த ஆச்சரியம்!

மீண்டும் மீண்டும் பணியாளர்கள் தன்னை வெறிப்பது, புவனனுக்கு எரிச்சலூட்டுமோ என்று கார்த்திகேயன் கொஞ்சம் கவலையுற்றார்.

ஆனால், எல்லோரிடமும் ஒரு சகஜ பாவத்துடன் புவனன் பேசிப் பழகவும், நிம்மதியாயிற்று.

பணியாளர்களில் மூவருக்கு அன்று வேலையிருந்தது. அவரவர் செய்ய வேண்டிய பணி குறித்துச் சொல்லி அனுப்பிய பிறகு, எப்போதும் உடனிருக்கும் கணக்கர் பரமசிவம், கார்த்திகேயனிடம் வந்தார்.

புதிய கஸ்டமர் ஒருவரிடம், 'ஸ்லாட்டட் ஆங்கி'ளைப் பற்றி நிதானமாக விளக்கிக் கொண்டிருந்த புவனனை ஆர்வமாகப் பார்த்துவிட்டு, ''சின்னவர் திரும்பி வந்தது ரொம்ப சந்தோஷம் சார்! அதைவிடவும், ரொம்பவும் மாறி வந்திருக்கிறது - பேச்சு, பாவனை, துணிமணி எல்லாம் மாறி, உங்கள் பிள்ளையாகி வந்திருப்பது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது!'' என்று பல்லாண்டு காலம் கூட இருந்து பழகிய உரிமையும் கரிசனமுமாகக் கூறினார்.

முறுவலோடு தலையாட்டிய கார்த்திகேயனுக்கு உள்ளூர ஓர் ஆச்சரியம்! பொதுவாக, அதிகம் உணர்ச்சி வசப்படுகிறவர் அல்ல என்று தன்னைப் பற்றிக் கணித்து வைத்திருந்தவர் அவர். ஆனால், மகன் வரவில் அவர் அதிகமாகவே நெகிழ்ந்து போயிருக்க வேண்டும். மற்றபடி, அவனது உடை வரை மாறியிருப்பது அவர் கண்ணில் அல்லவா முதலில் பட்டிருக்க வேண்டும். மகனின் முகத்தையும் பேச்சையும் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தவர் அதற்குமேல் ஒன்றையும் கவனிக்கவே இல்லையே!

## 3

புவனமோகனனின் ஆடை அணிகலன்களும், அவனது சிகை அலங்காரமும், கார்த்திகேயனுக்கு எப்போதுமே ஓரளவு கண்ணை உறுத்துவனதான். ஆனால், அடுத்த தலைமுறையைச் சேர்ந்த பிள்ளையை, இதற்காகவெல்லாம் பெற்றவர்கள் கண்டிப்பது தவறு என்ற கொள்கையோடு எதுவும் சொல்லாமல் வாளாவிருந்து விடுவார்.

புவனமோகனனும் முதலில் எல்லாம் சற்று அநாகரீகமாக உடுத்துவான். அவ்வளவுதான்! கார்த்திகேயனால் அதைச் சகித்துக் கொள்ளவும் முடிந்தது.

ஆனால் மீசை அரும்பி, அவன் பிளஸ் டூ படிக்கும்போதே என்னென்னவோ கண்ணராவிகளை எல்லாம் - அவன் தொடங்கி விட்டான்.

தொள தொளவென்று அவனோடு இன்னொருவனும் ஒன்றாக சேர்ந்து அணிந்து கொள்ளக்கூடும் போலக் கண்ட கண்ட டிசைனில் சட்டைகள். அதேபோலத் தொளதொளவென்று ரொம்பவும் மட்டமான திரைத் துணியில் பேன்ட்; கையில் விருப்பத்துக்குத் தகுந்தாற் போல செம்பிலோ, பித்தளையிலோ அல்லது இரும்புக் கம்பியினாலே செய்த வளையலை ஒரு கையில் அணிந்து கொள்ளுவான்.

புவனமோகனனுடைய நண்பர்களுள் ஒருவன் ஒற்றைக் காதிலும், ஒருவன் மூக்கிலும் வளையம் அணிந்திருப்பதைக் கார்த்திகேயன் கண்டிருக்கிறார்.

உடம்பில் பச்சை வேறு குத்தியிருந்தனர். மகன் எப்போது இப்படி வந்து நிற்கப்போகிறானோ என்று அவருக்கு - அவருக்கு மட்டுமல்ல; வாசுகிக்கும் பயம்தான். ஆனால், இருவருக்குமே, மகனிடம் தடுத்துச் சொல்லத் தயக்கம். ஒன்றை வேண்டாம் என்று தடுக்கும்போது அதை மீறத் துடிக்கும் வயது இதுதானே?

இருவருமே மிகவும் பொறுமையோடு வாயை மூடிக் கொண்டனர். ஆனால்,நல்லவேளையாகப் புவனனுக்கு அந்த வகையில் புத்தி போகவில்லை. இன்றைக்கு 'ஃபேஷன்' என்று நிலையான எந்த மாற்றத்தையும் உடலில் ஏற்படுத்திக் கொள்ள அவன் விரும்பவில்லை. நாளைக்கே இந்த 'ஸ்டைல்' மாறிவிட்டால், காது மூக்கில் துளையும் உடம்பில் குத்திவிட்ட பச்சையும் என்னைப் பட்டிக்காடாகக் காட்டுமே என்று அந்த ஒன்றில் மட்டும் நண்பர்களோடு இணைய மறுத்து விட்டான்.

அப்பாடி என்று பெற்றவர்கள் மூச்சுவிடும்போதே, 'பிரஸ்ஸிங் மாதிரிக் காதணி ஒன்றை ஒரு காதில் மாட்டிக் கொண்டு வந்து நின்று பெருமூச்சு விட-வைத்தான்.

கரடி மாதிரி புசுபுசுவென்று தலைமயிரும், மீசையும் தாடியுமாகப் பார்த்துவிட்டு ஒருநாள் கார்த்திகேயன் கேலி போல ''என்னடாப்பா, எல்லோரும் நாகரீகம் என்று உன்னைப்போல இருக்கத் தொடங்கி விட்டால், நம்மை நம்பி வாழும் முடிதிருத்தகங்கள்' எல்லாம் நசித்துப் போய் விடாதா? அவர்களும் பிழைக்க வேண்டும் இல்லையா?'' என்று நயமாகக் கேட்டார்.

''அதற்குத்தான் உங்களைப் போல நிறையப் பேர் இருக்கிறார்களே!'' அவரைப்போலவே சொல்லிவிட்டுப் போனான் மகன்.

''என்னடா கோலம் இது?'' என்று வாசுகி ஒருநாள் அங்கலாய்த்தாள். ''நாம் ஒன்றும் பெரிய பணக்காரர்கள் இல்லைதான்! ஆனால் நாம் நன்றாக உண்ண, உடுக்க உன் அப்பா சம்பாதிக்கத்தான் செய்கிறார், தெரியுமா? நம் வீட்டு வேலைக்காரி மகன், அவனுக்கென்று வாங்க வசதி இல்லாமல், நான் கொடுக்கும் உன் சட்டைகளை யும், அப்பா சட்டைகளையும் தொளதொளவென்று போட்டுக் கொள்கிறான். அவனுக்கு இல்லாத கொடுமை! அதே மாதிரி நீயும் ஏண்டா இப்படி பார்க்க சகிக்கவில்லையே!'' என்று வருத்தப்பட்டாள்.

தலையைச் சரித்து ஒருமாதிரி நோக்கி, ''அம்மா! இதேபோல நான் சொன்னால் எப்படியிருக்கும்? எனக் குப் பிடிக்கிற மாதிரி நீங்கள் சுரிதார் அணிந்து 'பாப்' வெட்டிக் கொள்வீர்களா? அப்பா, என் மாதிரி உடை அணிவாரா?'' என்று கேட்டான் புவனமோகனன்.

''என்னடா இது?'' என்று திகைத்த தாயிடம், ''மாட்டீர்கள்தானே? தெரிந்துதான் நான் அப்படி எது வும் சொல்வதே இல்லை. ஆடை, அலங்காரம் எல்லாம் அவரவர் சொந்த விஷயம், அம்மா! அதில் அடுத்தவர் தலையிடுவது அநாகரீகம்!'' என்று ஒரு மாதிரிக் குரலில் கூறிவிட்டு மேலே அங்கே நில்லாமல் சென்று விட்டான் புவனமோகனன்.

மண்டையில் ஓங்கிக் குட்டினாற்போல ஓர் உணர்வு வாசுகிக்கு.

பெற்றவளையே அடுத்தவளாக்கி விட்டானே!

பிரமை பிடித்தவள் போல நின்ற மனைவியை மெல்லத் தட்டிக் கொடுத்தார் கார்த்திகேயன்.

''பார் சுகி! நம் பிள்ளைக்கு நாக்கில் கொஞ்சம் கூர்மை, அதிகம். அதனால் அவனிடம் இதுபோலெல் லாம் வாய் கொடுப்பது நல்லதில்லை. அத்தோடு, தோளுக்கு மிஞ்சினால் தோழன் என்பார்கள். இவனா னால், நம் இருவரின் தலைக்குமேல் மிஞ்சி வளர்ந்து விட்டான். படிப்பிலும் கெட்டிக்காரன்! எல்லாமாகச் சேர்ந்து, தான் என்னவோ பெரீ...ய ஆளாகிவிட்ட நினைப்பு! எல்லாம் இந்த 'டீன் ஏஜ்' தாண்டியதும் தானாக சரியாகிவிடும். அதுவரை பேசாமல் விட்டுப் பிடிப்போம்; சரிதானா? ம்ம்... எங்கே அந்த குட்டி வால்? அம்மாவுக்கு வக்காலத்து வாங்குவதாக நினைத் துக் கொண்டு, அவள் வேறு அந்தப் பையனிடம் எதையாவது பேசி- வாங்கிக் கட்டிக் கொண்டு விடப் போகிறாள்! அப்புறம் அந்தக் குட்டிக்கழுதை விடுகிற கண்ணீரில் வீடு மிதக்கத் தொடங்கி விடப்போகிறது!'' என்று பக்கத்து அறையில் மகள் வசுதா இருப்பதை அறிந்து கொண்டு வேண்டுமென்றே உரக்கப் பேசினார்.

''ம்ம்... நான் என்ன கழுதையா?'' என்று அவர் எதிர்பார்த்தது போலவே வசுதா ஓடி வந்தாள்.

மக்கள் இருவருக்கும் இடையே ஏழு ஆண்டுகள் வித்தியாசம். புவனனுக்குப் பத்தொன்பது நடந்து கொண்டு இருந்தது; வசுதாவுக்குப் பன்னிரண்டு முடிந்தி ருந்தது.

''ஆமாம். ஒட்டுக் கேட்கிற கழுதை!'' என்று செல்ல மகளின் ஒரு ஜடையை லேசாக இழுத்து விட்டார் தந்தை.

''ஆங்... அதெல்லாம் கிடையாது! நான் ஒன்றும் ஒட்டு எல்லாம் கேட்கவில்லை! பா... ருங்கம்மா, அப்பாவை!'' என்று சிணுங்கினாள் வசுதா.

''பின்னே எப்படி நான் உன்னைக் கழுதை என்றது உனக்குத் தெரியுமாம்?'' என்று விளையாட்டாகவே தந்தை மடக்கினார்.

சற்று விழித்துவிட்டு, ''ஒட்டுக் கேட்பதற்கு நீங்கள் என்ன ரகசியமாகவா பேசினீர்கள்? ஏதோ ஒலிபெருக்கி யில் பேசுகிற மாதிரியல்லவா உங்கள் சத்தம் காதைத் துளைத்தது!'' என்று அவள் சமாளிக்கவும், கார்த்திகே யன் 'ஓகோ' என்று சத்தமிட்டுச் சிரித்தார்.

''சுகி, உன் பிள்ளைகளுக்கு மூளை இருக்கிறதோ இல்லையோ! ரோஷம் மட்டும், இரண்டு பங்கு இருக்கி றது! திருப்பிக் கொடுப்பதைப் பார்! என் சத்தம் ஒலிபெருக்கி மாதிரி இந்தம்மா காதைத் துளைத்ததா மே?''

''அப்...படி... இல்லைதான்... ஆனால், நீங்களும் உரக்கத்தானே பேசினீர்கள்?'' என்றாள் வாசுகி மெது வாக.

''மற்ற சமயங்களில் நீ அந்த வாசுகிதான் என்றா லும், பிள்ளைகள் விஷயம் என்று வந்தால்தான் கட்சி மாறி விடுவாயே!''

''நானா? நானா அப்படி? இப்போது பையனைக் கண்டித்து விட்டு வாங்கிக் கட்டிக் கொண்டது யாராம்?'' என்று பதிலுக்குக் கேட்டாள் வாசுகி!

''ஆ...மாம்! ரொம்பவும் அழகாகத்தான் கண்டித்து விட்டாய். அவன், காலைப் பிடித்துக் கெஞ்சாத குறை!'' என்று கிண்டல் செய்தார் அவர்.

''அச்சச்சோ! என்னப்பா, நீங்கள்?'' என்று கன்னங் களில் கை வைத்துக் கண்களை விரித்தாள் வசுதா.

''என்னம்மா விஷயம்?'' என்று தந்தை கேட்க, ''ஆமாம்! நீயாவது உன் அப்பாவிடம் உள்ளதை எடுத்துச் சொல்லு!'' என்றாள் வாசுகி.

''கட்டாயமாய் அம்மா!'' என்ற பெண் தந்தையி டம் திரும்பினாள். தொண்டையைக் கனைத்துக் கொண்டு கம்பீரமாய் நிமிர்ந்து நின்று ''அப்பா ஆனா லும் நீங்கள் இப்படி அநியாயமாய் அம்மாவை மட்டம் தட்டக் கூடாதாக்கும்! பாவம், அம்மா! எவ்வளவு கஷ்டப்பட்டு அண்ணனுக்குப் புத்தி சொல்கிறார்கள். அதுவும், நேராக காலில் விழுந்தால் நன்றாயிராது என்று மனதால் காலைப் பிடித்து, அப்படிக் காலைப் பிடித்தது யாருக்கும் தெரியாது என்று நிம்மதியாய் இருக்கும் போது, இப்படியா அதைக் கெடுப்பது? ஊகூம்! அப்பா, நீங்கள் சுத்த மோசம்ப்பா!'' என்று கூறியவாறே சென்று தந்தையின் பின்னே பாதி மறைந்தாற்போல நின்று கொண்டு நகைத்தாள்.

''உனக்காக அப்பாவிடம் பரிந்து பேசினேன் பார்! எனக்கு நன்..றாக வேண்டும்!'' வாசுகி முகம் திருப்ப வும் ஓடியே போய் தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள் மகள்.

''அம்மா, கோபமாம்மா? நான், சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன், அம்மா... என் செல்ல, அம்மால்ல? ப்ளீஸ் அம்மா! என்மேல் கோபமில்லையா?'' என்று கெஞ்சிக் கொஞ்சினாள்.

''ச்சு! உன்மேல் என்னடி கோபம்? இப்படி கிறுக்கு மாதிரி டிரஸ் பண்ணாதே, நல்ல வீட்டுப் பிள்ளை மாதிரி ஒழுங்காகத் துணிமணி போடு என்று உன் அப்பா கண்டிப்பாகச் சொன்னால் புவனன் மீறவா போகிறான்...'' கணவரைக் குற்றம் சாட்டினாள் வாசுகி.

ஆனால், அவளை ஆழநோக்கி, ''மீறிவிட்டால்?'' என்று கேட்டார் அவர்!

''அப்படி உங்களைக்கூட புவனன் மீறி விடுவானா, என்ன?'' என்று நம்பாத பாவனையுடன் வாசுகி கேட்கவும், ''ஒருவேளை மீறிவிட்டால் அப்புறம் முகத்தை எங்கே கொண்டு வைத்துக் கொள்வது? சொல்லு! அதனால்தான் இதுபோல விஷயங்களில் நான் அதிகாரம் காட்டுவது இல்லை!'' என்றார் கார்த்திகேயன் அமர்ந்த குரலில்.

''ஓகோ!'' என்றாள் வசுதா கண்களில் குறும்புடன்! ''அப்பா! நல்ல ஐடியாதான்! நன்றாய் ஞாபகம் வைத்துக் கொள்கிறேன்!'' தலையை ஒற்றை விரலால் தொட்டுக் காட்டிச் சிரித்தாள்.

வயதுக்கு மீறிய வளர்ச்சியும், புத்திசாலித்தனமுமாக மகளைப் பார்க்கையில் பெற்றவருக்குப் பெருமை தாங்கவில்லை. கார்த்திகேயன் வசுதாவோடு கூடச் சேர்ந்து சிரித்தபோது வாசுகிக்கு எரிச்சல்தான் வந்தது.

''சரிதான், வாயை மூடுடி! என்னத்தில்தான் சிரிப்பது என்று இல்லாமல்...!'' என்று மகளை அதட்டி விட்டு, மீண்டும் கணவனிடம் திருப்பினாள். ''அப்படியானால், இதற்கு என்னதான் முடிவு? அவன் கிறுக்கன் மாதிரிக் கண்ணராவிக் கோலத்தில் சுற்றுவான். பார்த்துக் கொண்டு கைகட்டிச் சும்மா இருக்க வேண்டுமா...?'' என்று ஆத்திரத்துடன் வினவினாள்.

''கை கட்டி, வாய் பொத்தியெல்லாம் இருக்கத் தேவையில்லை... என்று விளையாட்டாகவே தொடங்கிய கார்த்திகேயன், மனைவி மிகவும் சஞ்சலமுற்றிருப்பதை உணர்ந்து அவளைச் சமாதானப்படுத்த முயன்றார். ''பார் சுகி. புவனனின் வயது ஒரு மாதிரி இரண்டும் கெட்டான் நிலை! இப்போது அவன்கூடச் சுற்றுகிறவர்கள் சொல்வதுதான் சரியென்று தோன்றும். என்னென்னவோ கண்ணராவிகள்தான், நாகரீகம் என்று தோன்றும்! அந்த மட்டும் நம்புபவன், அவனுடைய கூட்டாளிகள் - அந்த மற்ற இரு பையன்கள் போல மார்பில் அசிங்கமாய்ப் பச்சை குத்திக் கொண்டு அதைக் காட்டவென்று நெஞ்சைத் திறந்து போட்டுக் கொண்டு அலையவில்லையே என்று திருப்திப்படு!'' என்று மனைவியைத் தேற்றினார்.

''ஆனால்... இவன் பண்ணுவதும்...'' என்று மனைவி அப்போதும் கலங்கவும், ''அதுதான் வயதுக் கோளாறு என்று சொன்னேனேம்மா! அந்தந்த வயது தாண்டும்போது வயதோடு சேர்ந்து மறைந்து விடுகிற அசட்டுத்தனம். இன்னமும் இரண்டு ஆண்டு சென்றால், அறிவு முதிர்ந்து நாமா இப்படிச் செய்தோம் சீச்சீ! என்று

அவனாகவே விட்டுவிடப் போவது! இதற்குப் போய் இந்த அழகான தலையை இப்படிக் குழப்பிக் கொள்கிறாயே!'' என்று மனைவியை நெருங்கியவர், ஆச்சரியமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த மகளைக் கண்டதும், நின்று ''பெரியவர்கள் பேச்சை வாய் பார்க்கிறாயா? ஓடு!'' என்று விளையாட்டாய் மிரட்டினார்.

''ம்ம்...கூம்! நான் ஒன்றும் சின்னப் பிள்ளையில்லை! போங்கப்பா!'' என்று சிணுங்கியபடியே அங்கிருந்து ஒரு துள்ளலோடு அகன்ற மகளைப் பார்க்கையில், பெற்றோர் இருவருக்குமே முகத்தில் புன்னகை மலர்ந்தது.

மனைவியிடம் இவ்வளவு சொன்னபோதும், படிப்பு முடிந்து தந்தைக்கு உதவியாகக் கடைக்குள் அடியெடுத்து வைத்த மகனின் திருக்கோலம், கார்த்திகேயனுக்கே ஆத்திரமூட்டியது.

செய்யும் தொழிலே தெய்வம்; விற்பனைக் கூடமான கடையே அந்தத் தெய்வம் குடியிருக்கும் கோயில் என்று எண்ணுகிறவர் கார்த்திகேயன்.

தினமும் கடையைத் திறக்கிறபோதே உள்ளூரக் கடவுள் துதியோடு தான் திறப்பார். கடை திறந்து, சுத்தம் செய்ததும், உட்புறமாய் மாட்டியிருக்கும் கடவுளர் படங்களுக்கு ஊதுபத்தி ஏற்றி வைத்து வணங்கிய பிறகுதான், விற்பனை தொடங்குவார்.

அது பற்றியெல்லாம் முந்தைய நாள் இரவில் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்திருந்தார் கார்த்திகேயன்.

எனவே, ஒரேயடியாகத் தும்பைப்பூ வேஷ்டியும், ஒத்தாற்போல வெண்ணிற முழுக்கைச் சட்டையுமாக, புவனமோகனனைக் கடையில் அவர் எதிர் பார்க்க வில்லை என்றாலும், ஓரளவேனும் மற்றவரின் மரி யாதை உணர்வைத் தூண்டும் வண்ணம் அவன் உடையணிந்து வருவான் என்று அவர் எதிர் பார்த்தது பொய்யாயிற்று.

பின்னே ஒரு பெரும் புயல் வருவதற்கு முன்னோ டியாக அன்று அவரது கடையில் ஒரு தூரத்து இடி முழக்கத்தின் எதிரொலி கேட்டது!

## 4

**கா**ர்த்திகேயன் காமராஜ் சட்டைக்காரர். முழங்கை வரையான வெண்ணிறத்துக் கதர்ச் சட்டைக்காரர். நாலு முழ வேஷ்டி, அதுவும் கதரே! அந்தத் தூய வெண்ணி றத்து, எளிமையான கதர், தொழில் வட்டாரத்திலும், தொழிலாளர்களிடமும் அவருக்கு மிகுந்த நன்மதிப் பைப் பெற்றுத் தந்தது.

ஆனால், வாசுகிக்கு இந்த உடையும் அவ்வளவா கப் பிடிப்பது இல்லைதான். ''என்ன பெரிய எளிமை? இம்மென்றால் துணியில் அசிங்கமாய்ப் பழுப்பு ஏறி விடுகிறது. அது இல்லாமல் அணிய வேண்டுமானால் குறைந்தது ஆண்டுக்கு இருபது செட் வாங்க வேண்டியி ருக்கு! எனக்கு ஆண்டுக்கு மூன்று நாலு சேலைதான்! தாங்குகிறது! ஆனால் கதர்?'' என்பாள் கோபமும் கிண்டலுமாக.

ஆனாலும் ''சேலை விலை என்னப்பா?'' என்று கார்த்திகேயன் கேட்டால், ''அழுக்கு நீக்கவும், பழுப்பு ஏறாதிருக்கவும் உங்கள் வேஷ்டி சட்டைக்குச் செய்கிற வைத்தியத்துக்கு ஆகிய செலவைக் கணக்கிட்டால் அப்படி ஒன்றும் அதிகம் இல்லை'' என்பாள்.

இத்தனைக்கும் மேலாக, வேலைக்காரி இரண்டு தரம் அடித்துத் துவைத்தால் பட்டென்று கிழிந்து விடுகிறதாம்.

''என்னைக் கேட்டால் அதிகச் செலவு பிடிக்கும் விலை உயர்ந்த ஆடை உங்கள் கதர்தான் என்பேன்!'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக் கணவனின் வாயை அடைப்பாள் அவள்!

அவ்வளவு கேலிக்கும், வாயடைப்புக்கும்கூட அந்த சாது தன் கதரிலேயே உறுதியாக நிற்பவர். கார்த்திகேயன் எளிமை, தூய்மை, மரியாதைக்கு மொத்தத் தோற்றம் தருவது என்று நினைத்து - அதையே அணிபவர்!

வருங்கால முதலாளி என்று, மற்றவர்கள் மதிக்கும் வண்ணம் நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் திருப்பித் திருப்பிச் சொன்னபோது, அதை ஒப்புகின்றவன் போலத் தலையை வேறு ஆட்டி வைத்திருந்தான் புவனமோகனன்!

அந்த நினைவில்தான், அவர் மகனின் நடை, உடை, பாவனையில் ஓரளவேனும் மாறுதலை எதிர்பார்த்திருந்தார்.

''நீங்கள் வழக்கம்போல முதலில் போங்கள், அப்பா! நான் ரெடியானதும் என் பைக்கிலேயே வந்து விடுகிறேன்'' என்று புவனன் சொன்னதையும், மகன் தன் மாறுதலான உடை அலங்காரத்துக்கு எடுத்துக் கொள்ளும் நேரம் என்றுதான் அவர் எண்ணியிருந்தார்.

ஆனால் வழக்கமான பூப்போட்ட தொளதொளா சட்டை பேன்ட், பலவண்ணப் பாசிமணிமாலை, அதே கரடி முடியோடு, சூயிங்கம்மை வாயில் குதப்பிக் கொண்டு வந்து நின்ற மகனைப் பார்த்ததும் கார்த்திகேய னுக்கு உள்ளே கொதித்துக் கொண்டு வந்தது. உடனே பேசினால், பின்னொரு காலத்தில் நினைத்து வருத்தப்ப டும்படியாக எதையாவது சொல்லி விடக்கூடும் என்று அஞ்சி உதடுகளை இறுக மூடிக் கொண்டு உள்ளூர அமைதி அமைதி என்று பலமுறை கூறிக் கொண்டார். பின்னரே, மகனை அழைத்து அருகில் உட்காரச் சொன்னார். ''புவன், என்னடா அது வாயில்? துப்பி விட்டு வரக்கூடாதா? வாயில் அதைக் குதப்பிக் கொண்டு யாரிடம் என்ன பிசினஸ் பேசுவாய்?'' என்று நயமாகவே கேட்டார்.

''கொழகொழவென்று வெற்றிலையைக் குதப்பிக் கொண்டே எத்தனை பேர் தொழில் நடத்துகிறார்கள். இதைப் போய்ச் சொல்லுகிறீர்களே! இது ஒன்றும் இல்லையப்பா! பாருங்கள், நான் பேசுவது உங்களுக்கு நன்றாகப் புரியத்தானே செய்கிறது! அத்தோடு, இது ஆரோக்கியத்துக்காகவும் தான் அப்பா!''

''என்னது?''

''ஆமாம்பா! கண்ணாடியில் பார்த்திருக்கிறீர்களா? உங்களுக்கெல்லாம் தாடை அடியில் சதை வழிகிறது

பாருங்கள்! இப்படி மெல்ல இதைச் சுவைத்துக் கொண்டே இருந்தால் அப்படி வழியாது. தாடை, கன்னத்து எலும்பு இரு இடங்களிலும் உள்ள சதை எல்லாம் உறுதியாகி விடும்.''

''ஓகோ!'' என்றதற்கு மேல் அவர் ஒன்றும் பேசவில்லை! பேசுவதாகவும் இல்லை. ஏற்கெனவே ஆடையணிகளுக்குத் தான் அவன் அம்மாவே வாங்கிக் கொண்டு விட்டாளே!

அவர் ஏதேனும் சொல்கிறாரா, இல்லையா என்று காத்துக் கொண்டு நில்லாமல், புவனமோகனன் கடையை ஆராயத் தொடங்கினான்.

இதற்கு முன்பு புவனன், கடைக்கு வந்ததே இல்லை என்று சொல்ல முடியாது! நாலில், எட்டில், ஏதாவது காரணமாய் அவன் இங்கே வந்து போனது உண்டுதான். எனவே, கடையில் எல்லோருக்கும் அவன் நன்கு தெரிந்தவன்தான். எனவே, அவனது வேடம் கண்டு கொஞ்சம் வெறித்த போதும், அவனது புன்னகையிலும், பேச்சிலும் இளகி, கூடவே, வருங்கால முதலாளி என்பதற்கும் மதிப்பளித்து அவன் விரும்பியதைச் செய்தார்கள், சிப்பந்திகள்.

கடை ஆட்களிடமும், வாடிக்கையாளர்களிடமும் புவனமோகனன் பேசிப் பழகிய விதத்தில் கார்த்திகேயன் குறையேதும் காணவில்லை.

இவன் மட்டும், இப்படிக் கிறுக்கனைப் போல உடுத்திக் கொள்ளாமல் கொஞ்சம் ஒழுங்காக உடையணிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று மட்டும் உள்ளூர வருத்தப்பட்டார்.

மற்றபடி, அவன் அவ்வப்போது தன் நண்பர்களோடு வெளியே சென்று வருவது குறித்து அவர் கவலைப்படவில்லை. ஒரேயடியாய் கடை என்றாலே வெறுத்து ஓடாமல், அவ்வப்போது பார்த்துக் கொள்ளத் தந்தை இருக்கும்போது அவன் வெளியே சென்று வருவதில் தவறு இருப்பதாக அவர் கருதவில்லை.

மகனைப் பொறுப்பாக உட்கார வைத்துவிட்டு, அவரும் அவ்வப்போது வெளியே சென்று வந்தார். முழுப் பொறுப்பேற்க அவனும் பழக வேண்டும் அல்லவா?

இடையே சற்றுச் சளியும் காய்ச்சலுமாக அவதிப் பட்டபோது — முன்னெல்லாம் மாத்திரையைப் போட்டுக் கொண்டு கடையில் போய் கஷ்டப்பட்டு சமாளிப்பவர் — இப்போது முழுதாக வீட்டில் தங்கி ஓய்வெடுத்தார். அதுதான் பார்த்துக் கொள்ள மகன் வந்துவிட்டானே!

ஒருதரம், ஒரு கஸ்டமர் வந்து கார்த்திகேயனிடம் முறையிட்டார். ''ஜப்பான் இரும்பு ஷீட்டில் செய்தது; துருப்பிடிக்காது என்று சொன்னதால் கூடுதல் விலை கொடுத்து வாங்கிப் போனேன். போக்குவரத்தில் அங்கங்கே லேசாகப் பெயிண்ட் போன இடத்தில் இப்போது லேசாகத் துரு மாதிரித் தெரிகிறதே!'' என்று வந்து நின்றார்.

நெடுநாள் பழகிய கஸ்டமர் அவர். அவரது முதல் கடைக்குச் சாமான்கள் — கடை அமைப்புப் பொருட்கள் எல்லாம் கார்த்திகேயனிடம்தான் வாங்கினார்.

கடையின் விற்பனைப் பொருட்களை அடுக்கும் நீண்ட தட்டுகள், கவுண்டர்கள், மேஜை என்று கடைக்கு

வேண்டிய இரும்புச் சாமான்கள் அத்தனையும் கார்த்தி கேயன் கொடுத்ததுதான்.

ஆள் அனுப்பி அவற்றை அமைத்துத் தந்த நேர்த்தி தொடர்ந்து கடை நல்லவிதமாய் நடந்ததால் ராசி, எல்லாம் பார்த்து, அடுத்த கடை அமைப்பதற்கும், இங்கேயே வந்திருக்கிறார். வந்தவரிடம் புவனமோக னன் ஜப்பான் ஷீட்டை அது இது என்று வாய்சாலகமா கப் பேசி அதிக விலைக்கு விற்றிருக்கிறான்.

ஆடை அணிவதில் காமராஜரைப் பின்பற்றிய கார்த்திகேயன் நாணயத்துக்கும் அவரையே முன்னோடி யாகக் கொண்டிருந்தபடியால், மகன் செயலில் உள்ளூர மிகவும் அவமானம் அடைந்தார்.

மகனையும் காட்டிக் கொடுக்க முடியாமல், "என்ன வென்று தெரியவில்லையே... பார்க்கச் சொல்லுகி றேன்..." என்று அவர் தடுமாறிக் கொண்டிருந்தபோது புவனமோகனன் குறுக்கிட்டு "சார், அது ஜப்பான் ஷீட். துருப்பிடிக்காது என்று சொல்லித்தான் எங்களுக்கு வந்தது. எதற்கும் ஒரு புகார் எழுதிக் கொடுத்துவிட்டுப் போங்கள். நாங்கள், சப்ளையரிடம் கொடுக்கிறோம்! அது 'கவர்மென்ட் கோட்டா'வில் வந்தது. ஏதாவது ஈட்டுத் தொகை வருகிறதா என்று பார்ப்போம்" என்று அவரையே ஒரு புகார்க் கடிதம் எழுதச் சொல்லி வாங்கி வைத்துக் கொண்டான்.

அவர் தலை மறைந்ததும் கடிதத்தைக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் வீசினான்.

"என்னடா இது? எதற்கு இந்தப் பொய்?" என்று திகைத்த தந்தையிடம், "அதுதான் இரண்டு பங்கு லாபம்

சம்பாதித்துத் தந்திருக்கிறது'' என்று பெருமை பேசினான்.

''லாபத்துக்காக ஏமாற்றுவதா? நீ செய்தது எனக்குப் பிடிக்கவில்லை. இந்த ஊரில் நம்முடையதுபோல வேறு கடை இல்லை என்றா இவ்வளவு தூரம் நம் கடையைத் தேடி வருகிறார்கள்? நாணயமாய் நடந்து கொள்வோம் என்கிற நம்பிக்கையில்தானே?'' என்றார் கார்த்திகேயன்.

''நாணயமாவது நம்பிக்கையாவது? அதெல்லாம் ஒன்றும் கிடையாது. நீங்கள் பயந்து பயந்து மிகவும் குறைவாக லாபம் வைத்து விற்கிறீர்கள். விலை குறைவு என்று இங்கே வருகிறார்கள். நம் கடையைவிட ஐம்பது காசு குறைத்துக் கொடுப்பதாக ஒருவர் வரட்டும். பிறகு உங்கள் கஸ்டமர்களில் ஒருவர்கூட உங்கள் கடைப்பக்கம் திரும்பியும் பார்க்க மாட்டார்கள்'' என்றான் மகன் மகா நிச்சயத்துடன்.

மறுத்துப் பேச வாய் திறந்த கார்த்திகேயன், சற்றே தயங்கினார். புவனமோகனன் சொல்வது பெருமளவுக்கு உண்மைதான். கார்த்திகேயன் வைத்திருக்கும் லாபம், மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் கொஞ்சம்தான். அதேபோல வாடிக்கையாளர்களும் கார்த்திகேயன் கொடுக்கும் தரத்திலேயே அவரைவிடக் குறைவாக யாரேனும் விற்றார்களானால், அங்கே போவார்களே தவிர, கார்த்திகேயன் கடையை நாடி இங்கே வந்து நிற்க மாட்டார்கள்தான்! ஆனால் அதற்காக?

''எப்படியும் இல்லாத ஒன்றைச் சொல்லி இருப்பதையே நீ விற்றது சரியில்லை. புவன் அது ஏமாற்று

வேலை! இந்தக் கடையில் ஏமாற்று வேலை செய்வது கூடாது!'' என்றார் அவர் அழுத்தமான குரலில்.

இப்போது புவனமோகனனும் முகம் கடுத்தான். குரலும் தான். ''உங்கள் பேச்சைக் கேட்டால் சிரிப்புதான் வருகிறது. அப்பா! என்ன சொன்னீர்கள்? இந்தக் கடையில் ஏமாற்று வேலை நடந்தது இல்லை என்றா? ஆண்டுதோறும் வருமான வரி இலாகாவுக்கு இங்கிருந்து ஒரு கணக்குப் போகிறதே! அது எவ்வளவுக்கு உண்மை? சரியான கணக்கு அப்பா?'' என்று ஏளனமாகக் கேட்டான்.

''நமக்கு விதிக்கப்படுகிற வரியின் அளவு மிக அதிகம்! நாம் உண்மையான கணக்கை அனுப்பினால் தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு கிளம்பி விட வேண்டியதுதான்'' என்றார் கார்த்திகேயன் வறண்ட குரலில்.

''ஆங்! அதுதான் கேட்டேன். நீங்கள் பிழைப்பதற்கு என்றால், ஏமாற்று வேலை செய்யலாம்; மற்றவர்கள் தொழிலை வருமானத்தை உயர்த்துவதற்காக ஒன்று செய்தால் அதற்கு ஆயிரம் வக்கணை சொல்வீர்களாக்கும். சும்மா இருங்கள் அப்பா! முதலில் வரவு செலவு பேரேட்டை எடுத்துப் பார்த்து விட்டு அப்புறமாய் இந்த வரட்டுக் கத்தலைத் தொடங்குங்கள்... அதாவது முடிந்தால்...''

கணக்குப் புத்தகத்தை எடுத்து, கார்த்திகேயன் முன் வைத்துவிட்டு அப்போது வந்த வாடிக்கையாளர் ஒருவருடன், கடையின் பின்பக்கம் சென்றான்.

அங்கேதான் ஸ்லாட்டட் ஆங்கிள், ஏணி, ஸ்டூல், கவுண்டர், மேஜை போன்ற பெரிய பொருட்கள்

எல்லாம் வாடிக்கையாளர் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. அவற்றை எப்படி எப்படிக் கடைகளில் அமைக்கலாம் என்ற சில மாதிரிகளோடு இப்போது புவனமோகனன் அந்தக் கஸ்டமரை என்னென்ன பொய் சொல்லி எப்படி வசியப்படுத்திக் கொண்டு இருக்கிறானோ?

உள்ளூர உளம்பிய வண்ணம் அரைமனதாகவே கணக்கேட்டைப் பிரித்துப் பார்த்தார் கார்த்திகேயன்.

பாங்கிலிருந்து அப்போதுதான் திரும்பி வந்த கணக்கர் முதலாளி கணக்குப் புத்தகத்தைப் பிரிப்பதைக் கண்டதும் மகிழ்ச்சியோடு பேசினார். ''தம்பி, கொஞ்சம் அப்படி இப்படி டிரஸ் பண்ணிக் கொண்டாலும், பிசினசில் கில்லாடி சார்! போன வருஷம் முழுக்கச் சேர்த்துக்கூட நாம் இவ்வளவு லாபம் பார்க்கவில்லை'' என்று பாராட்டினார்.

அந்த வகையில் எண்ணிப் பார்க்கும்போதே கார்த்திகேயனுக்கும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தது.

மகன் சாதித்தான் என்றால் பெற்றவர்களுக்குப் பெருமைதானே?

ஆனால், எந்த வகையில் சாதித்தான் என்று எண்ணிப் பார்க்கும் போதுதான் அவருக்கு உறுத்தியது.

'சத்திய சோதனை'யையும் மகாபாரதத்தையும் — அதிலும் பகவத் கீதையைப் பலமுறை படித்து அதன் சாராம்சங்களை மனதில் பதிய வைத்திருந்த அவருக்கு எது எப்படி நடந்தாலும் கடைசியில் தருமமே வெல்லும் என்பதில் மிகுந்த நம்பிக்கை இருந்தது.

எனவே, மகனின் தொழில் முறையிலும், அதன் வெற்றியிலும் அவருக்குக் கொஞ்சமும் பிடிப்பு ஏற்பட வில்லை! மாறாக, அருவருப்புதான் உண்டாயிற்று.

அன்று வந்த கஸ்டமர், கொஞ்சம் குறைவான விலையில் வாங்கிப் போக வந்தவர். எனவே, முழுநீள மாகப் பத்தடி, இருபதடி என்று இல்லாமல், மற்றவர்கள் ஆறடி, ஏழடி என்று வாங்கியதில் மிச்சமான துண்டுகள் மலிவாகக் கிடைக்குமா என்று பார்க்க வந்திருந்தார்.

இருந்தன. மிகச் சமீபத்தில் ஒரு கடைக்காக ஆறுக்கு ஆறு அளவில் நிறையத் தட்டுகள் அமைத்துத் தரச் சொன்னதால், நிறைய நாலடித் துண்டுகள் மிகுதியா கக் கிடந்தன.

'இதுபோலச் சின்னத் துண்டுகள் விலை போகாது. எங்களுக்கு வீண் என்று ஏற்கனவே அந்தக் கஸ்டமரி டம் கிட்டத்தட்டப் பத்தடிக்குரிய தொகையையே புவன மோகனன் வசூலித்து விட்டிருந்தான். எனவே இந்தத் துண்டுகளை மிகக் குறைந்த விலைக்கே தள்ளிவிட்டிருந் தாலும், அவர்களுக்கு லாபம்தான்! ஆனால், புவனன் அப்படிச் செய்யவில்லை.

அமெரிக்கா, ஜெர்மனி போன்ற தொழிலில் முன் னேற்றம் அடைந்த நாடுகளில் எல்லாம் இப்போது கடைகளில் நீள நீளமாய் பொருள் அடுக்கும் தட்டுகளை அமைப்பது இல்லையாம். நாளடைவில் இரும்பு சூட் டில் இளகி வளையத் தொடங்கி விடுகிறதாம். அதனால் இப்படிச் சின்னச் சின்னத் துண்டுகளுக்கு அங்கே கிராக்கியாம். இன்னும் கொஞ்சம் மொத்தமாய்ச் சேர்த் துக் கொண்டு, அங்கே ஏற்றுமதி பண்ணிவிடப் போகிறா

னாம். நம்நாட்டு மடையர்களுக்கு இந்த அறிவியல் அற்புதங்கள் எதுவும் தெரியாதாம். முதல் ஆட்டுக் கூட்டம்போல, என்றோ ஒருவன் அமைத்த அதே 'டிசைனை'ப் பின்பற்றி நீளம்நீளம் என்று அதேபோலத் தான் கடைகளை அமைப்பார்களாம்!

இவ்வளவு கேட்டபிறகு பழைய மோஸ்தரில் தட்டுகள் அமைக்க வந்தவர் என்ன முட்டாளா? புவனமோகனனிடம் கெஞ்சிக் கூத்தாடி அதிக விலை கொடுத்து, இடையிடையே அதிகப்படி இணைப்புகளுக் காக, அது வேறு அதிகப் பணம் கொடுத்து, பயனற்றுக் கிடந்த சின்னத் துண்டுகளையே வாங்கிப் போனார்.

செல்லுமுன், இப்படி நாலும் அறிந்த ஒரு கெட்டிக் கார மகனைப் பெற்றிருப்பதற்காகக் கார்த்திகேயனைப் பாராட்டி விட்டுச் சென்றார். ''என்ன, காடு மாதிரி வளர்ந்திருக்கிற முடியைக் கொஞ்சம் வெட்டிவிட்டு, நல்லதாக 'ஷர்ட்டும்' பான்ட்டும் அணிந்தால், பார்வைக் கும் ராஜா மாதிரி இருப்பான் என்று அதுவேறு?

கடைச்சிப்பந்திகளின் பார்வையிலும் பாராட்டுதல் தான் இருந்தது. அடிமாட்டு விலைக்குப் போக வேண்டி யதை அதிகப்படிப் பணத்துக்கு விற்றுவிட்டானே! அசகாயச் சூரன் நம் வருங்கால இளவல்.

எல்லோரும், அவரவர் வேலையாக விலகிச் சென்றிருந்தபோது, மகனை அருகழைத்தார் கார்த்திகே யன்.

''என்னென்ன பொய்! எத்தனை எத்தனை புளுகு கள்! கேட்கவே கஷ்டமாக இருக்கிறது, புவன்! வேண் டாம்'' என்றார் நயமாகவே.

''வியாபாரத்தின் லட்சியம் பணம் சம்பாதிப்பது தான் அப்பா. அந்த லட்சியத்தில் வெற்றி கிட்டுவதை மட்டும் நீங்கள் பார்த்தால் போதும்'' என்றான் மகன் அசையாமல் நின்று.

''ஆனாலும் தப்பு வழியில் சம்பாதித்த பணம் நிலைக்காதுப்பா! மகாபாரதக் கதை உனக்குத் தெரியுமே! சகுனியின் சூதாட்டத்தின் மூலம் எவ்வளவோ செல்வங்களை — பாண்டவர்களின் சொத்துபத்து அத்தனையும் அப்போது, கௌரவர்கள் வசமாயிற்று. ஆனால், அது நிலைத்ததா? கடைசியில் தருமம்தானே ஜெயித்தது?'' மகனை திருத்த வேண்டியது தன் கடமை என்று எண்ணி, மேற்கோள் காட்டி விளக்கினார் தந்தை.

ஆனால் சிறு கோணல் பார்வையுடன் புவனன் தந்தையிடம் ''உங்கள் தருமம் எப்படி வென்றது அப்பா?'' என்று வினவினான்.

அவர் பதில் கூறுமுன், அவனே பதிலும் சொன்னான். ''தருமபுத்திரர் சொன்ன ஒரு பொய்யினால் தானே, துரோணரிடமிருந்து பாண்டவ சேனையைக் காப்பாற்றி, அவரையும் கொன்று போரில் வெல்லவும் முடிந்தது?''

கார்த்திகேயன் சற்றுத் திகைத்தார்.

புவனமோகனன் குறிப்பிட்டது மகாபாரதத்தில் ஒரு தர்மசங்கடத் தருணம். நம் இதிகாசங்கள் இரண்டிலுமே இதுபோன்ற தருமசங்கடக் கதைகள் பல எழுதப்பட்டிருக்கின்றன. நட்புக்காக ஸ்ரீராமன் வாலியை மறைந்திருந்து கொன்றது; சிகண்டியை முன்நிறுத்திக் கொண்டு அர்ஜுனன் பீஷ்மரை வீழ்த்தியது. துரோணரை அழிக்க தருமபுத்திரன் பொய் சொன்னது இன்னும் பல.

இவையெல்லாம் இல்லாமலே கூட வால்மீகியும் வியாசரும் இந்த இதிகாசங்களை எழுதியிருக்கலாம். ஆனாலும், இந்தச் சிக்கல்களையும் அமைத்து அவற்றைத் தீர்ப்பதற்காகக் கடவுள் அவதாரங்களும், மகான்களும் தவறு செய்ததாகவும் ஏன் எழுத வேண்டும்?

இந்தக் கேள்வியை எழுப்பி, மூதறிஞர் ராஜாஜி அவர்கள் வெகு அழகாக ஒரு விளக்கமும் எழுதி இருக்கிறார்கள். நம் இதிகாசங்கள் மனிதனை உருவாக்குபவை. தருமசங்கடமான தருணங்களில் அந்தச் சமயத்துக்கு எது நன்மை பயப்பது என்று கண்டு அதைச் செய்ய வேண்டும் என்று நமக்குப் போதிப்பதற்காகவே இதுபோன்ற தருமசங்கடக் கதைகளை எழுதியிருக்கிறார்கள் என்கிறார் அவர்.

தருமபுத்திரர் பொய் சொன்னார் என்றால் அப்படி அவர் சொல்லாவிட்டால் கெட்டவர்களான கௌரவர்கள் வென்று விடுவார்கள். மக்கள் மீண்டும் கஷ்டப்படுவார்கள் என்பதற்காகத்தான். ஒரு பெரிய தீமை நடவாமல் காப்பதற்காக ஒரு சிறு பாவம் செய்வது மேல் என்று செய்தார். எத்தனையோ துன்பங்களை அனுபவித்த போதும், சத்தியம் காத்த அவர், அந்தப் பொய்யைச் சொல்ல மனம் வருந்தி, ஒரு தியாகமாகவே கருதிச் சொன்னார்.

ஆனால், காசு சம்பாதிப்பதில் போய், அன்றைக்குத் தருமரே பொய் சொல்லவில்லையா என்றால் எப்படி? எல்லாம் எடுத்துச் சொன்னாலும், 'எப்படியும் தரும புத்திரர் பொய் சொன்னாரா இல்லையா?' என்று அதிலேயே தான் நிலையாய் நிற்கப் போகிறான்.

சரி பெரியவர்கள் — பெற்றவர்கள் சொன்னால் அது சரியாக இருக்கும் என்று ஒத்துக் கொண்டு செயல்படுவானா என்றால் நிச்சயமாக மாட்டான்.

மகனை எப்படி நல்வழி நடத்துவது என்று கார்த்திகேயன் யோசித்துக் கொண்டிருந்த போது வாய் விட்டுச் சிரித்தான் புவனன்.

சிரித்துவிட்டு, ''நீங்களும் தருமபுத்திரர் போலத் தான் அப்பா. பொய்யைக் கணக்காக நீங்கள் எழுதும் போது அது தப்பில்லை. நான் சொன்னால்...'' என்று தோளைக் குலுக்கினான்.

வேறு வழியில் முயன்று, ''நாளைக்கே நீ சொன்ன தெல்லாம் பொய் என்று நம் கஸ்டமர் விசாரித்து அறிந்து கொள்ளும்போது, உன் மரியாதை, கடை மதிப்பு எல்லாம் என்னப்பா ஆகும்?'' என்று கார்த்திகே யன் கேட்டார்.

''விசாரித்தால்தானே? நிச்சயமாக மாட்டார். அப் படி விசாரிக்க வேண்டும் என்கிற எண்ணம் இருப்பவர், இன்று பொருளைப் பணம் கொடுத்து வாங்கியிருக்க மாட்டார். ஏதாவது சாக்குச் சொல்லி, இன்னொரு நாள் வந்து வாங்குவதாகச் சொல்லிப் போயிருப்பார். போய், விசாரித்தும் இருப்பார். இப்படி விழுந்தடித்து அதிக விலை கொடுத்து வாங்கியிருக்க மாட்டார்'' என்றான் மகன் அலட்சியமாக.

இதுபோல மீண்டும் ஒருதரம் கார்த்திகேயன் ஆட்சேபித்தபோது, ''அப்பா, வருகிறவர்களிடம் அடித் துப் பிடித்து மிரட்டி பணத்தைப் பிடுங்கிக் கொண்டு, நாம் பொருளை அவர் தலையில் கட்டுவது இல்லை.

குதிரையைத் தண்ணீரிடம் கொண்டு நிறுத்துவது மட்டும் தான் நம்மால் முடியும். அணி அலங்காரமாக எங்கள் தண்ணீரில் தேனும் பாலும் கலந்து ஓடுகிறது என்று சொல்லத்தான் செய்வோம். அந்தத் தண்ணீரில் தேனும் பாலும் இருக்கிறதா, வெறும் தண்ணீரா அல்லது சாக்கடையா என்று கண்டறிந்து குடிப்பதோ, விடுப் பதோ குதிரையின் பொறுப்பு. நாம் என்ன பொருளைக் கண்ணில் காட்டாமலா விற்பனை செய்கிறோம்? பொரு ளைப் பார்க்கிறவன், அதை ஆராய்ந்து பாராமல் நாம் சொல்வதை அப்படியே நம்பி கண்ணை மூடிக் கொண்டு வாங்கினால், அது அவன் தப்பு. அந்த ஏமாளித்தனத் துக்குத் தண்டனையாக அதிகப் பணம் இழக்கிறான். இதில் தப்பாக என்ன இருக்கிறது?'' என்று வாதாடி னான் புவனமோகனன்.

மகனுக்கு உணர்த்தவும் முடியாமல், அவனது செயலை ஒத்துக் கொள்ளவும் முடியாமல் கார்த்திகேயன் தான் சங்கடப்பட்டார். பெற்ற பிள்ளையைப் பிறரிடம் காட்டிக் கொடுக்கவும் மனம் வரவில்லை. எனவே மீண்டும் வரும்போது அந்த வாடிக்கையாளர்களுக்கு எதிலாவது விலையை மிகவும் குறைத்துப் போட்டுக் கொடுத்தார். கடையிலும் முன்போலவே முழுமையாக உட்கார்ந்தார்.

புவனமோகனன் முட்டாளல்ல. நேரடியாகத் தந்தை அதற்கு ஈடாக இது என்று சொல்லாவிட்டாலும் நடப்பதைப் புரிந்து கொண்டு விட்டான். அதன்பின், கடை வியாபாரத்தில் அவ்வளவாகத் தலையிடுவது இல்லை. பெரும்பாலும் கடையில் இருப்பதும் இல்லை.

பெற்றவருக்கு உள்ளூர வருத்தமே என்றாலும் ஓரளவு நிம்மதியாகவும் இருந்தது.

கார்த்திகேயனின் விற்பனைப் பொருட்கள் பெரும் பாலும் கடை, காட்சியகம், வாசக சாலை போன்றவை களை நிர்மாணிக்கப் பயன்படும் பொருட்களே. எனவே ஸ்லாட்டட் ஆங்கிள், இரும்பு அல்லது கண்ணாடித் தட்டுகள், கவுண்டர்கள், மேஜை, நாற்காலி, ஏணி இன்னமும் இது போன்ற பல பொருட்கள் இவற்றை வாங்கும்போது, வாங்குவோர் இடத்தில் அதை அமைத் துக் கொடுக்கவும், கார்த்திகேயனே ஆள் அனுப்புவார். பெரிய அளவில் வாங்கினால், இந்த அமைத்துத் தரும் வேலைகளை இலவசமாகவே செய்வதுண்டு.

இப்படி நடக்கும் வேலைகளைக் கண்காணித்து வருவதாகத்தான், புவனமோகனன் முதலில் வெளியே சுற்றத் தொடங்கியது. பல சமயங்களில் அவனுடைய நண்பர்களும் வருவார்கள். மூவருமாக மகனின் பைக் கில் செல்லும்போது கார்த்திகேயனுக்குக் கவலையாக இருக்கும். 'மூன்று பேரை 'பைக்' தாங்காது. வேண்டுமா னால் காரை எடுத்துக் கொள்' என்பார்.

தந்தைக்குப் பணிவது போல ஒருசில சமயங்களில் காரில் சென்ற போதும், 'பைக்'கில் செல்வதையும் புவனன் விடவில்லை.

விட்டுப் பிடிக்கலாம். வெளியே சென்று நாலுபேர் கடையை நல்லபடியாகப் பேசுவதைக் கேட்கும்போது மகன் தானாகச் சரியாகி விடுவான் என்பது கார்த்திகேய னின் கருத்தாக இருந்தது. அதனால் மகன் வெளியே சென்று வருவதை அவரே ஊக்குவித்தார்.

ஆனால் அதுவே குடும்பத்தில் பிளவு ஏற்படவும் காரணம் ஆயிற்று.

## 5

ஓரிரு ஆண்டுகள் இப்படியே கழிந்தன.

மெல்ல மெல்ல புவனமோகனனின் முகத்தில் இருந்த இறுக்கம் மாறி உற்சாகம் பொங்குவதைக் காணவும் கார்த்திகேயனுக்கு வேறு எண்ணம் உண்டா யிற்று.

கடையில் உட்கார்ந்திருப்பது தன் நடமாட்டத்தைக் குறுக்குவது போல மகன் உணர்ந்திருப்பானோ என்று நினைத்தார். அப்படியானால் அவனது இயல்புக்கு ஏற்றபடி ஏதேனும் தொழில் தொடங்க முதல் கேட்டால் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

ஆனால், அவ்னாகக் கேட்க வேண்டும். கேட்டால் தான் கிடைக்கும் என்பது தெரிய வேண்டும் என்று எண்ணி, மகன் கேட்பதற்காக அவர் காத்திருந்தார். புவனன் எதையும் தந்தையிடம் கேட்கவில்லை.

மாறாக வீட்டினருக்குச் சிறு சிறு பரிசுகள் வாங்கி வந்து கொடுத்தான். அதிலும் தங்கைக்கு வாங்குவது நல்ல பரிசாகவே இருக்கும். சற்று அதிக விலை உள்ளதாக.

இந்த நிலையில்தான், நல்ல பெருமாள் என்ற நண்பர் கார்த்திகேயனைத் தேடி வந்தார். நெருங்கிய நண்பர் என்று சொல்ல முடியாதுதான் என்றாலும் பார்க்குமிடங்களில் சிரித்துப் பேசிப் பழகுகிறவர்.

அவர் வந்த விவரம் அறிந்த போது கார்த்திகேயன் அதிர்ந்தார்.

டி.வி. ஒன்றை உள்ளே வெளிநாட்டுப் 'பார்ட்ஸ்' போட்டு உருவாக்கியது என்று சொல்லி, புவனமோகனன் அவருக்கு விற்றிருக்கிறான். சில மாதங்கள் நன்றாக இருந்த டி.வி. திடீரென்று ஒன்றுமில்லாமல் கெட்டு விட்டது. புவனமோகனனை அணுகியபோது, ''எலக்ட்ரானிக் சாமான், அங்கிள். அதன் ஆயுளைக் கடவுளால் கூட நிர்ணயிக்க முடியாது! நாற்பது ஆண்டு ஓடுவதும் உண்டு; நாலே நாளில் போவதும் உண்டு'' என்று விட்டான். வேறு டி.வி. ரிப்பேர் ஆளிடம் காட்டியபோது, எல்லாம் பழைய ஓட்டைச் சாமான் போட்டுச் செய்திருக்கிறார்கள். இத்தனை நாட்கள் வந்ததே அதிசயம் என்றாராம்.

''உங்கள் மகன் என்று நம்பி வாங்கினால், என்ன பண்ணி விட்டான், பாருங்கள்!'' என்று வருந்தினார்.

''அது...அவனுக்கே தெரியாமல் யாராவது ஏமாற்றியிருப்பார்கள். இதை விட்டுப் போங்கள்! நான் என் செலவில் டி.வியைச் சீர் செய்து தருகிறேன்'' என்று மகனின் பிழைக்குப் பொறுப்பேற்றார் கார்த்திகேயன்.

தந்தையாய், மகனை அழைத்துக் கண்டித்தார்.

ஆனால், பணிந்து மன்னிப்புக் கேட்பதற்குப் பதிலாகப் புவனமோகனன் பொங்கி, எழுந்தான். அவனது தொழிலில் தந்தை தலையிடுவதாகச் சொல்லி ஆத்திரப்பட்டான். ''நீங்கள் தொடங்கிய உங்கள் தொழிலில், என் விருப்பம் போல நடந்து கொள்ளக் கூடாது என்றீர்கள். ஐந்து மடங்கு அதிக லாபம் சம்பாதித்தபோ

தும், அது உங்களுடைய தொழில். உரிமை உங்களது என்பதால் உங்கள் சொல்லை ஒத்துக் கொண்டு விலகி னேன். இப்போது நானாகச் செய்யும் என் தொழிலில் நீங்கள் எப்படித் தலையிடலாம்?'' என்று கோபமாகக் கேட்டான்.

''ஏமாற்றி சம்பாதிப்பது ஒரு தொழிலாடா?'' என்றார் பெற்றவர் கோபமும் வெறுப்புமாக.

''ஏமாற்றி ஏமாற்றி'' என்று ஏன் அறுக்கிறீர்கள்? அதன் பெயர் வியாபர தந்திரம். அது என் கெட்டிக்காரத் தனம்?''

இப்படித் தொடங்கிய தகராறுதான் வளர்ந்து கொண்டே போனது. கடைசியாகக் கார்த்திகேயன் தன் தொழிலுக்குக் கச்சாப் பொருட்கள் வாங்கும் இடத்தி லேயே புவனமோகனன் கை வரிசையைக் காட்டிய போது அவரால் பொறுக்க முடியாமல் போயிற்று.

வாடகைக் கார் நிறுவனம் ஒன்றில், மிக அதிகமாக ஓடி, ரிப்பேர் பண்ணிய வண்டி ஒன்றை ஸ்பீடாமீட்ட ரைத் திருத்தி, பெயின்ட் அடித்து பத்தாயிரம் கிலோ மீட்டர் கூட ஓடாத புது வண்டி என்று விற்று விட்டான்.

நம்பி, நல்ல விலை கொடுத்து வாங்கிய பெரிய மனிதர் காரை மெக்கானிக்கோடு கார்த்திகேயனிடம் அனுப்பி விட்டார்.

அவர் கொடுத்த லட்சத்துப் பத்தாயிரம் ரூபாயை யும் அப்படியே கொடுத்தனுப்பிவிட்டு, அந்தக் காரோடு வீட்டுக்கு வந்தார். நெஞ்சில் கொதிப்போடுதான்.

இப்படியே போனால், நியாயமான எந்த வருமா னம் தாங்கும்? இவன் தப்புகளுக்கு அபராதம் கட்டியே

தொழில் அழிந்து விடும் அபாயம் வந்து விடும் போல இருக்கிறதே? இப்படியே ஈடு கொடுத்துக் கொண்டிருந் தால், இந்த மடையனுக்கு ஒரு தங்கை இருக்கிறாளே! அவள் கதி என்ன ஆகும்?

யார் ஈடுகட்டச் சொன்னார்கள் என்று அவரது கேள்விக்கு அதே வேகத்தில் திருப்பிக் கேட்டான் மகன். சும்மா சும்மா அவனது தொழில் சுதந்திரத்தில் அனாவசி யமாய் குறுக்கிட்டால் படவேண்டியதுதான் என்றான்.

''சுதந்திரத்தில் குறுக்கிடுவதா? பெற்ற பாவத்துக்கா கத் தண்டம் கட்டுகிறேன்'' என்றார் கார்த்திகேயன்.

''ஏன் கட்ட வேண்டும்? யாரிடம் வாங்கினாயோ அவனையே போய்க் கேள் என்று என்னிடம் அனுப்ப வேண்டியதுதானே?''

''அனுப்பி என்னடா செய்வது? எழுத்து மூலம் மாட்டிக் கொள்ளாத படி செய்கிற ஏமாற்று வேலையைத் தான் பக்காவாகச் செய்து வைத்திருக்கிறாயே?''

''திருப்பித் திருப்பி இந்த வார்த்தை சொல்லி என்னை இழிவு படுத்துகிறீர்கள். ஏன்? இப்போது உங்களிடம் வந்து 'லபோதிபோ' என்று அடித்துக் கொள்கிறார்களே, அன்றைக்கு வாங்கும்போது இன்னும் கொஞ்சம் கவனத்துடன் ஒரு மெக்கானிக்கிடம் காட்டி செக் பண்ணிக் கொண்டு வாங்குவது தானே? இந்த ஆண்டு மாடல் இந்த விலைக்கு வருகிறதே என்று யோசிக்க வேண்டாம்? அப்போது, ஓசைப்படாமல் மலிவாய் தட்டி விடலாம் என்ற பேராசை. அப்படிப் பேராசையில் வாங்குகிற பொருளைச் சரிவரப் பாரா மலே முழுங்க நினைக்கிறவன் பட வேண்டியதுதான் நியாயம்?

''பேராசையில் சரிவரப் பாராமல் வாங்கவில்லை யடா. முட்டாள்! இன்னாருடைய மகன் பொய் சொல்ல மாட்டான் என்ற நம்பிக்கையில்தான் அவன் சரிவரப் பார்க்கவில்லை! அவ்வளவுதான் என்னிடம் உள்ள நம்பிக்கையடா நம்பிக்கை?''

''என்னது?'' என்று சீறினான் மைந்தன். ''உங்கள் பெயரினால்தான் எனக்கு விற்பனையா? நல்ல வேடிக்கை. அநாகரீகமாக தொழிலில் அவசியமற்றுக் குறுக்கிடுவதோடு நில்லாமல் தொழிலே உங்கள் பிச்சை என்கிறீர்களா? இனி, இது சகிக்க முடியாது. நான் இந்த வீட்டிலிருந்து வெளியேறுகிறேன்...''

தந்தைக்கும் மகனுக்கும் இடையே நடந்த வாக்கு வாதத்தைக் கவலையுடன் கவனித்துக் கொண்டிருந்த வாசுகி சட்டென இடைப்புகுந்து, ''புவன் என்ன பேச்சு இது? ஆத்திரத்தில் வார்த்தைகளைக் கொட்டிவிடாதேப்பா?'' என்றாள்.

உறுதியோடு தலையசைத்தான் மகன். ''இல்லை யம்மா! கொஞ்சம் நாட்களாகவே நான் யோசித்துக் கொண்டு இருந்ததுதான். என் தொழிலைச் சுதந்திரமாகச் செய்ய முடியாமல் அப்பாவின் குறுக்கீடு அதிகமாகிக் கொண்டே வருவதால், வீட்டை விட்டு வெளியேறி வேறு எங்காவது இருந்து கொண்டு தொழில் பண்ண லாம் என்று நினைத்தேன். ஆனால், இப்போது ஊரை விட்டே செல்ல வேண்டியிருக்கிறது! இந்த ஊர் முழுவதும்தான் அப்பாவின் பெயர் கொடி கட்டிப் பறக்கிறதே! இம்மெனுமுன் மூக்கை நுழைக்க வந்து விடுவாரே!'' என்றான் அவன் கசப்புடன்.

சொல்வது அறியாமல் கணவனைப் பார்த்தாள் வாசுகி. உச்சுக் கொட்டினார் அவர். "தகப்பன் நல்லதிற்கு சொல்வான் என்று புரிந்து கொள்ளத் தெரியாத முட்டாளுக்கு நாலுபேர் நடுத்தெருவில் இழுத்துப் போட்டு அடிக்கும் போதுதான் அறிவு வரும். உன் பிள்ளை போகிற போக்குக்கு, அதுவும் ஒருநாள் நடக்கத்தான் போகிறது. பட்டுவிட்டு, அதன் பிறகேனும் புத்தியோடு திரும்பி வரட்டும்!" என்றார் கார்த்திகேயன் அலுப்புடன்.

உதடு துடிக்க ஆத்திரத்துடன் பெற்றவரை நோக்கினான், புவனமோகனன்.. ஆழ்ந்த மூச்சுகள் எடுத்து, சினத்தை ஓரளவு சமனப்படுத்திக் கொண்டு, "நல்ல ஆசீர்வாதம் செய்தீர்கள் அப்பா! இதுபோல நானும் பேச முடியும், ஆனால் மாட்டேன்! ஏனென்றால் என் குடும்பம் கஷ்டப்படுவது எனக்குப் பிடிக்காது!" என்றவன், மாடிப் படிப்பக்கம் சென்றான்.

படி ஏறுமுன் சற்று நின்று, "என் துணிமணிகள் கொஞ்சம் எடுத்துப் போகிறேன். அம்மாவும் கஷ்டப்படுவார்கள்..." என்று அவன் கூறியபோது, "கொஞ்சமா? என்னடா பேசுகிறாய்?" என்று வாசுகி அழுதபடி அவனிடம் சொன்னாள்.

"அம்மா! நான் சம்பாதிப்பதற்காகத்தான் போகிறேன். வெளியூரில் வேலை பார்க்கிற மாதிரி வைத்துக் கொள்ளுங்களேன்! அப்படி நான் கிளம்பினால், அழுவீர்களா? பாருங்கள்! அப்பா ஒரு நல்ல ஆசீர்வாதம் பண்ணியிருக்கிறார்! பொருத்தமாக நீங்கள் அழுத முகத்தோடு என்னை வழியனுப்பப் போகிறீர்களா?"

என்று அவன் கேட்கவும், வாசுகி சிரமப்பட்டு அழு கையை அடக்கிக் கொள்ள, கார்த்திகேயனின் முகத்தில் லேசாகப் புன்னகை அரும்பியது.

பேச்சில் பயல் கில்லாடிதான். வேறு எந்தவிதமாக வும் இவன் தாயின் கண்ணீரை நிறுத்தியிருக்க முடியாது, என்று மகனை மெச்சிக் கொண்ட போதும். அதை வெளிக் காட்டாமல், ''எனக்கு ஒரே ஒரு வாக்குக் கொடுத்து விட்டுக் கிளம்பு!'' என்றார் மகனிடம்.

''என்ன?''

''உன்னால் சமாளிக்க முடியாதபடி கஷ்ட நஷ்டம் ஏற்பட்டால் கவுரவம் பாராமல், என்னிடம் நம்பி வந்து விட வேண்டும். வீம்பு பிடித்துக் கஷ்டத்திலேயே உழலக் கூடாது.

''இதுவும் பிரமாதமான ஆசீர்வாதம்தான். ஆனால், அந்த மாதிரி நிலைமை ஏற்படாது!''

''பின்னே வாக்குக் கொடுப்பதில் என்ன கஷ்டம்?'' என்று கார்த்திகேயன் மடக்கவே அவரைக் கோபமாக முறைத்து விட்டு, ''சரி!'' என்ற மகன் விறைப்புடன் படி ஏறிச் சென்றான்.

''அவன் தான் சிறு பிள்ளைத்தனமாய்ப் பேசுகி றான் என்றால், நீங்களும் அவனைக் கிளம்பு என்கிறீர் களே!'' என்று வருத்தமும் கோபமுமாக வாசுகி வினவியபோது, ''நான்தான் சொன்னேனேடி! அனுப வக் கல்வி பயிலப் போகிறான். போய்விட்டு வரட்டும். அவன் அசடனும் அல்ல. அத்தோடு உன் பிள்ளையால், ஒரேயடியாக உன்னையும், பொடிசையும் விட்டுட்டு

இருக்க முடியாது. அனுப்பி வை'' என்று உரைத்து விட்டு, மீண்டும் வியாபாரத்தைப் பார்க்கச் சென்றார்.

அன்று கிளம்பிச் சென்றவன்தான் புவனமோகனன்.

செல்லுமுன், தந்தை அந்தச் செக்காகக் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுக்கவும் அவன் மறக்க வில்லை. ரோஷம்! அவனுக்காக, அவனுடைய தந்தை நஷ்டப்படத் தேவை இல்லையாம்.

கோபமும் கொதிப்புமாகச் சென்றவன் திரும்பி வரக் கிட்டத்தட்ட ஓர் ஆண்டு காலம் ஆகியிருந்தது.

முதலில் எல்லாம் வாசுகி கண்ணீரும் கம்பலையுமா கவே இருந்தாள். கணவனிடம் எரிந்து விழுவாள்.

பிள்ளையின் பிரிவு தாங்காத தாய் மனம் என்று கார்த்திகேயன் பொறுத்துப் போய் விடுவார்.

செல்லப் பெண் வசுதாவின் துள்ளாட்டம் கூட மறைந்து போய் விட்டிருந்தது.

ஆனால், அப்பா என்ன செய்தாலும் சரியாக இருக்கும் என்பதில் அவளுக்கு அசையாத தன்னம் பிக்கை! எனவே, அவரிடம் குறை காண்பதோ, கோபப்படுவதோ இராது. ஆனால், அவளது முகவாட் டம், மனதைப் பறைசாற்றும். ஆனாலும் தாயார் கண்ணீர் விடும்போது அவளைத் தேற்றுவதில் ஈடுபடு வாள்.

புவனமோகனன், முதல் தடவை டெலிஃபோன் செய்தபோது அவன் வீட்டை விட்டுச் சென்றே மூன்று மாதங்கள் ஆகியிருந்தன.

கார்த்திகேயன் வீட்டில் இருக்க முடியாத நேரம் பார்த்துதான் புவனன் ஃபோன் செய்தான்.

விம்மி அழுத தாய்க்கு ஆறுதல் கூறித் தேற்றினான். அவனுடைய நண்பர்கள் இருவரும் கூடவே வந்து விட்டதால், மகன் பற்றிய அனாவசியக்கவலைகள் வேண்டாம் என்றவன், தொழில் நல்லபடியாக நடப்பதாகத் தந்தையிடம் கூறும்படிச் சொல்லிவிட்டுப் பேச்சை முடித்தான்.

'இன்னமும் புத்தி வரவில்லை' என்று எண்ணிக் கொண்டார் கார்த்திகேயன்.

அடுத்து நாலு மாதம் கழித்து முன் போலவே ஒரு பேச்சு வார்த்தை! இருக்கும் இடத்தை மட்டும் பிடிவாதமாகச் சொல்ல மறுத்து விட்டான்.

''ஒரு தலைவலி கால் வலி வந்தால் எனக்கு எப்படியடா தெரியப் போகிறது'' என்று வாசுகி விடாமல் அங்கலாய்க்கவும், ''அப்படி எதுவும் ஆகி விட்டால் என் நண்பர்கள் உங்களுக்குத் தகவல் தெரிவிப்பார்கள்!'' என்றான் மகன் சுள்ளென்று.

தாயின் பேச்சு நின்று போகவும் சற்று இளகியவன் போல, ''நான் என்ன சின்னப் பிள்ளையாம்மா? உடல் ஆரோக்கியத்தை அலட்சியம் செய்கிறவனா நான்? இந்த மாதிரி அனாவசியமாய்க் கவலைப்பட்டு எனக்கு எரிச்சல் மூட்டுகிறீர்களே! அப்பா ஒரு விதம் என்றால், நீங்கள் இன்னொரு விதம்! சரிசரி. அழுது விடாதீர்கள்! எனக்கு உடம்பு கல் மாதிரி நன்றாய் இருக்கிறது! அதனால் கவலையும் படாதீர்கள். பண விஷயத்திலும் நன்றாய்த் தான் இருக்கிறேன் என்று அப்பாவிடம் சொல்லுங்கள்!'' என்றுரைத்துப் பேச்சை முடித்தான்.

'இந்த அப்பாவிடம் சொல்லுங்க'ளின் மூலம் மகன் இன்னமும் திருந்த வில்லை என்பதைக் கார்த்திகேயன் கண்டு கொண்டார். ஆனால், எப்படியும் அவன் திருந்தி விடுவான் என்பதில் நம்பிக்கை வைத்துக் காத்திருந்தார்.

அதேபோல அவன் வந்தும் விட்டான்.

புவனமோகனன், திருந்தியும் வந்திருப்பது பெற்றவருக்கு நிம்மதியை அளித்தது.

மகனது கண்களில் இருந்த ஆழ்ந்த வலி அவருக்குக் கொஞ்சம் வேதனையாகத்தான் இருந்தது. அவர் எதிர்பார்த்த அடி, மிகவும் பலமாக விழுந்து விட்டதோ என்று கவலை தோன்றியது. ஆனால் எப்படிப்பட்ட அடி என்றாலும் அது இந்த வயதில் அதன் வலியைச் சமாளித்து நிமிர்ந்து விட முடியும். பின்னாளில் வயது முதிர்ந்தபிறகு அடி விழுந்தால், அப்படி நிமிர முடியாது!

எனவே, எல்லாம் நல்லதற்கே என்று எண்ணிக் கொண்டார் கார்த்திகேயன். கவனியாதது போலக் காட்டிக் கொண்டு மகனைத் தொழிலில் ஈடுபடுத்தினார்.

தந்தையின் பேச்சு எதையும் தட்டாமல் பணிந்து வேலை செய்தான் புவனமோகனன்.

ஒரேயடியாக அடிபணிந்து என்று சொல்வதற்கு இல்லை. அவர் சொல்வதில் ஏதாவது தவறு இருந்தால், அடுத்தவர் அறியாமல் அருகில் வந்து, அதைச் சுட்டிக் காட்டத்தான் செய்தான். ஆனால், முன்பு போல அவரோடு விவாதம் செய்து கொண்டு நிற்கவில்லை.

நல்ல மாற்றம் தான்.

உடையிலும் அப்படியே!

பழைய தொள தொளாக்கள் மறைந்து ஜீன்சும், டீ ஷர்ட்டும் பார்க்கப் பளிச்சென்று இருந்தான்.

கரடித் தோற்றம் காணாமல் போயிருந்தது.

எல்லா வகையிலும் கார்த்திகேயனுக்கும், அவர் மனைவிக்கும் மகள் வசுதாவுக்கும் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் கூட இருந்திருக்க வேண்டும்!

ஆனால்...

கார்த்திகேயன் எதிர்பார்த்தது போலப் புவனமோக னனின் கண்ணில் தென்பட்ட வலி மறையவோ, குறையவோ இல்லை. அவ்வப்போது வான் வெளியை வெறிக்கும்போது, அவன் கண்களில் இருந்த பரித விப்பு, அவரைக் கவலை கொள்ள வைத்தது.

மகனுடைய நண்பர்கள் விஷயமாகத் துன்பம் எதுவும் நேர்ந்திருக்குமோ என்ற ஐயத்தில் அவர்களைப் பற்றி விசாரித்துப் பார்த்தார்.

''இருவருக்கும் கையில் இருந்த பணத்தைக் கொடுத்து, நல்லபடியாகத் தொழில் வைத்துப் பிழைக்கச் சொல்லி அனுப்பி விட்டேன்'' என்றான் மகன் சாதாரண மாக.

அதற்குமேல் தூண்டித் துருவ அவருக்கு மனம் இல்லை. சொல்ல வேண்டியதாக, சொல்லக் கூடியதாக எதுவும் இருந்தால் அவனாகவே சொல்லுவான் என்று எண்ணினார்.

எனவே, சும்மா இருக்கும்போது தானே கண்ட நினைவும் வந்து குட்டை குழப்பும் என்று கணக்கிட்டு, அதற்கு இடமின்றி, மகனின் வேலைப் பளுவைக் கார்த்திகேயன் அதிகரித்தார்.

ஆனால் வாசுகி கண்டது வேறு வழி.

சாப்பாட்டு ராமனாக இல்லா விட்டாலும், பிடித் ததை ரசித்து உண்பவன் புவனமோகனன். இப்போது, தட்டில் என்ன விழுகிறது என்பதைக் கூடக் கவனியா மல், அரைகுறையாக இரண்டு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டு கிளம்புவது, தாய்க்கு வேதனையாக இருந்தது.

உணவில்தான் ரசனை குறைந்து விட்டது என்றில் லாமல் பொதுவாக எல்லாவற்றிலும் அவனுக்கு சிரத்தை குறைந்து விட்டதாக அவளுக்குத் தோன்றியது.

முன்னெல்லாம் எந்நேரமும் அவனது அறையிலி ருந்து ஏதாவது இசை முழங்கும். உட்கார்ந்து பத்திரிகை படிக்கும்போதுகூட ஏதாவது பீட்டுக்குச் சரியாகக்கால் தட்டிக் கொண்டிருக்கும். அன்று அலரும் மலர்களைப் பார்த்து ரசிப்பான். மல்லிகைப் பந்தல் அருகே காற்றடிக் கும் திசை பார்த்து நின்று, கண்ணை மூடிக் கொண்டு வாசம் பிடிப்பான்.

இப்போது, அப்படி எதுவுமே இல்லை.

தன் வரையில் ரொம்பவும் யோசித்து, வாசுகி ஒரு முடிவுக்கு வந்தாள்.

மகனுக்குத் திருமண ஆசை வந்து விட்டது.

முன்பே, பெண் வீட்டார் சிலர் நெருங்கி வந்தார் கள்தான். ஆனால் தொழிலில் சாதித்த பிறகுதான் திருமணம் என்றிருந்தான் புவனன். அத்தோடு வீட்டை விட்டுச் சென்று விட, அந்தப் பேச்சு பற்றிய எண்ணமே மறந்து விட்டிருந்தது.

இப்போது, இப்படி இருக்குமோ என்ற ஊகத்தி லேயே, உள்ளூர மகிழ்ச்சி பொங்க, வாசுகி, கணவரிடம் அது பற்றிக் கருத்துக் கேட்டாள்.

''புவனனுக்குத் திருமண ஏக்கம் என்று எனக்குத் தோன்றவில்லை. ஆனால்... எதற்கும் கேட்டுப் பாரேன்! '' என்று பச்சைக் கொடி காட்டினார் கார்த்திகேயன்.

திருமணம் மகனின் உள் காயத்துக்கு மருந்தாகச் செயல்படக் கூடும் என்பது அவரது எண்ணம். ஆசை யும் கூட.

ஆனால் இந்த ஆசை ஊகத்துக்கெல்லாம் புவன மோகனன் முற்றுப் புள்ளி வைத்த விதம் வீட்டினா எல்லோரையும் அதிர வைத்தது.

திருமணம் செய்வது பற்றித் தாயார் ஆவலோடு கேட்டபோது சற்று நேரம் அவன் பதிலை சொல்ல வில்லை.

கை முஷ்டிகள் இறுக, கண்களை அழுந்த மூடிச் சற்றுநேரம் பாடு பட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட பிறகு மெல்லிய குரலில் அவன் சொன்னான். ''இந்தப் பேச்சே ரொம்பவும் தப்பு அம்மா! ஏனென் றால்... ஏனென்றால் எனக்கு ஏற்கெனவே திருமணம் ஆகிவிட்டது'' என்றான் மிகுந்த சிரமத்துடன்.

புவனமோகனனின் அறிவிப்பைத் தொடர்ந்து அங்கே பேரமைதி நிலவியது!

## 6

**வீ**ட்டில் ஒரு திருமணம் என்றால் எல்லோருக்குமே உள்ளூர ஓர் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படுவது இயல்பு.

புவனமோகனன் வீட்டின் முதல் மகவு! ஒரே மகன்! அவனுக்குத் திருமணம் செய்வது பற்றி பேசப் போவதே எல்லோருக்கும் ஆவலைத் தூண்டி விட ஏதோ காரணம் காட்டி வாசுகி மகனிடம் பேசுவது காதில் விழும் இடத்திலேயே இருந்தனர் வசுதா சித்தையன் உட்பட!

இரவு உணவு முடிந்து முன் ஹாலில் சற்று நேரம் உட்கார்ந்து டி.வி.யில் இரவு நேரச் செய்தி அறிவிப் பைப் பார்ப்பது கார்த்திகேயனின் வழக்கம். புவனமோக னனும் தந்தையோடு உட்கார்ந்திருப்பான்.

டி.வி. செய்தி முடியும்போது வாசுகி, தந்தை மகன் இருவருக்கும் பாலை ஊற்றிக் கொணர்ந்து கொடுப் பாள். ஏதாவது சிறு பேச்சினூடே அதைக் குடித்து விட்டு, இருவரும் படுக்கப் போவார்கள்.

அன்றும் அப்படி இருவரும் பாலை அருந்தி முடிந்ததும் தான் வாசுகி மகனிடம் திருமணப் பேச்சை எடுத்ததே!

பால் அருந்திய தம்ளர்களை எடுத்துப் போன சித்தையன் கதவருகே நின்று கேட்க, பாடம் படிக்கும் சாக்கில் வசுதா அடுத்த அறையில் நின்று கவனித்துக் கொண்டிருந்தாள்.

எடுத்த எடுப்பில் திருமணம் செய்து கொள்கிறேன் என்பதைப் புவனனிடம் யாரும் எதிர்பார்க்கவில்லை தான்.

'இப்போது, என்ன அவசரம் பிறகு பார்க்கலாம் தங்கைக்கு முதலில் செய்யலாம். உங்கள் விருப்பம் நான் என்ன சொல்லட்டும்' என்பன போன்ற வாய் உபசார வார்த்தைகள்தான் முதலில் வரும்; மெல்ல இரண்டு தரம் வற்புறுத்தினால் சம்மதித்து விடுவான் என்றே வாசுகி நினைத்திருந்தாள்.

ஆனால், மகன் தன்னோடு கலந்து ஆலோசிக்காமல் தன்னிடம் அனுமதி பெறாமல் தனக்குத் தெரிவிக்கக் கூட இல்லாமல் கல்யாணம் செய்து கொண்டிருக்கக் கூடும் என்று வாசுகி கனவிலும் கருதவில்லை.

புவனனின் பரிதவிப்பின் மூல காரணம் ஒரு பெண்ணாக இருக்கலாமா? என்ற ஐயம் ஓரிரு முறை தோன்றியிருந்தபோதும், கார்த்திகேயனுக்கும் இந்தச் செய்தி அதிர்ச்சிதான்.

சித்தையன் வாயைப் பிளந்து கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டான்.

அடுத்த அறையிலிருந்து ஒட்டுக் கேட்ட வசுதை வாய் திறந்து என்ன பேச முடியும்? அத்தோடு, அவளுக்குப் பேரதிர்ச்சிதானே?

முதலில் சமாளித்துக் கொண்டவள், வாசுகிதான். அதிர்ச்சியைத் தொடர்ந்த ஆத்திரத்தின் வேகத்தில் ''என்னது? திருமணம் ஆகிவிட்டதா? ஏண்டா, உன்னைப் பெற்று வளர்த்தவள் என்று ஒரு பாவி உயிரோடு

இருப்பது உனக்கு அடியோடு மறந்து போய் விட்டதா? அப்பா, தங்கை... ஒருவர் கூடவா...'' என்று படபடத்த வளை, ''வாசுகி!'' என்ற கார்த்திகேயனின் குரல் தேக்கி நிறுத்தியது.

அந்த மாதிரிக் குரலில் முழுப் பெயரிட்டு கணவர் அழைத்தால் அதற்கு மேல் பேசி வாசுகிக்குப் பழக்க மில்லை. பெரிய பெரிய மூச்சுகளை விட்டுக் கொண்டு நின்றவளிடம் புவன மோகன் வந்தான். ''அம்மா...! என்றவன் தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டு, ''நான் செய்தது தப்புதான் அம்மா! அப் போது... நான்... நான் இந்த வீட்டை விட்டுப் போனதே எவ்வளவு பெரிய பிழை! அன்றைய முட்டாள்தனத்தில் நான் செய்த அடுத்த குற்றம். அந்தத் திருமணம் தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள் அம்மா!'' என்று தாயின் கைகளைப் பற்றி முகத்தில் வைத்து அழுத்திக் கொண்டான்.

மகன் மன்னிப்பு வேண்டியதிலேயே வாசுகியின் மனம் இளகி விட்டது. தொடர்ந்து கையில் ஈரத்தை உணர்ந்ததும் உருகி விட்டாள்.

''சரிசரி. என்னமோ ஒரு வேகத்தில் பண்ணி விட்டாய், போல! கல்யாணம் செய்தவன், மனைவியை விட்டு விட்டா வருவது? உடனே போய் அவளைக் கூட்டிக் கொண்டு வந்து விடு!'' என்றாள்.

கார்த்திகேயன் மனைவியைப் பார்த்துப் பெருமித மாய் முறுவலிக்க, ''அது முடியாதம்மா!'' என்று மெல்லிய குரலில் கூறி, மீண்டும் அவர்களைத் திகைக்க வைத்தான் புவனன்.

''ஏண்டா?''

''ஏனென்றால் அவள்.. அவள் வரமாட்டா ளம்மா?''

''மயக்கிக் கல்யாணம் செய்து கொண்ட மாய்மாலக் காரிக்குக் குடும்பம் நடத்தக் கசக்கிறதோ?''

''அம்மா, ப்ளீஸ்''

தன்னை மீறி வார்த்தைகளை விட்டுவிட்ட வாசுகி, மகனின் அதட்டலில் திகைத்து நின்றாள்.

மீண்டும் தாயின் கையைப் பற்றிக் கொண்டு புவனமோகன் பொறுமையோடு பேசினான். ''அம்மா, உங்களை அதட்டி, அவமதிக்க எனக்கு விருப்பம் இல்லையம்மா! பெரிய குற்றம். ஆனால், அவளைப் பற்றித் தவறாக யார் ஒரு வார்த்தை சொன்னாலும், அதையும் என்னால் பொறுக்க முடியாதும்மா... அம்மா, அவள் வரமாட்டாள் என்றதன் காரணம்... அவளை 'வா' என்று அழைக்கும் தகுதி கூட எனக்கு இல்லை என்பதுதான். அம்மா ப்ளீஸ், இனி இந்தப் பேச்சு வேண்டாம்! என் மேல் அன்பு இருந்தால் இனி அவள் பற்றிக் கேளாதீர்கள்! அவளைப் பற்றிய பேச்சே... பேச்சே தயவு பண்ணி வேண்டாம் அம்மா!'' என்று அவன் குமுறும் குரலில் கூறியபோது, அதற்கு மேல் எதுவும் கேட்க, யாருக்கும் நாவெழவில்லை.

புவனமோகனனுக்குப் பிடிக்காததைச் செய்வது எப்போதுமே அந்த வீட்டில் பழக்கமற்ற விஷயம். அதிலும் அவன் பிரிந்து சென்று திரும்பிய பின், வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் எல்

லோருமே அதில் இன்னமும் அதிகக் கவனமாகவே இருந்தனர். இப்போதும் அவனது திருமணம், மனைவி பற்றிய பேச்சு வேண்டாம் என்று அவனது வேண்டு கோளை உத்திரவாகவே எல்லோருமே ஏற்று நடந்தார் கள். அதிலும் அவன் நொந்திருப்பது தெளிவாகத் தெரிந்தபின், அதைக் கிளறிவிட யாருக்குமே மனம் வரவில்லை.

மாறாக, அவனுக்கு இதம் தேடி ஓடி ஓடிச் செய்தனர்.

வசுதா அண்ணனை இருக்க வைத்து, ஏதாவது அரட்டை அடித்தாள். சலவைத் துணி வரும்போதே அவனது துணிகளை எடுத்துப் பிரிந்துவிட்ட தையல், பிய்ந்து விட்ட பட்டன் எல்லாம் தைத்து வைத்தாள். தினமும் அவன் அறையில் பூங்கொத்து வைப்பது, பொருட்களை அடுக்குவது, சுத்தம் செய்வது என்று அவளது வழியில் இயன்ற அளவு முயன்றாள்.

தாய் தன் வழியில் சுவையான உணவு படைத்து, இனிமையாய்ப் பேசி உண்ண வைத்தாள்.

தந்தை, தொழிலில் சுதந்திரம் கொடுத்தார். ஏதா வது புது முயற்சியில் ஈடுபட்டால் அந்த யோசனையில் மனம் மற்றதை மறக்கும் என்று எண்ணி கடை அமைக்கும் வேலை தவிர வேறு ஏதாவது முயலும்படி மகனைத் தூண்டினார்.

அவனும் ஆவலாய்ப் புது முயற்சிகளில் ஈடுபட் டான். இரும்புக் கம்பிகளை, அழகான, வடிவங்களாய் - இலை, பூ, பூங்கொத்து என்று வடிவமைத்து, அந்த வடிவங்களைக் கொண்டே சோஃபா செட், பூந்தொட்டி

தாங்கிகள், விளக்கு வெளி அமைப்புகள் என்று செய்து பொருத்தமாய் பெயிண்ட் அடித்து விளம்பரத்தோடு விற்பனைக்கு ஏற்பாடு செய்தான். நியாயமான லாபமும் வைக்கவே, விற்பனை அள்ளிக் கொண்டு போனது. பெரிய பெரிய 'ஷோ' ரூம்களுக்குக் கூட இதுபோன்ற வடிவமைப்புகளுக்கு ஆர்டர்கள் வரத் தொடங்கின.

தொழில் பெருமளவு விரிவடைய, புவனனும் புதுப் புது வடிவங்களை உருவாக்க, நிறுவனம் இன்னமும் அதிகமாய்ப் பணமும் பெயரும் சம்பாதித்தது.

சொந்த வாழ்வு பற்றி நினைத்துப் பார்க்கவும் நேரமில்லாமல் தொழிலே கவனமாக இருந்ததாலோ என்னவோ, புவனமோகனனின் முகமும் மெல்லத் தெளிவடையலாயிற்று.

இந்த நிலையில், இன்னும் ஒரு பின்னடைவு நேர்ந்தாற்போல அண்ணன் கண்களில் மீண்டும் ஓர் இறுக்கத்தை அடுத்தவர் அறியாமல் வலியைப் பொறுத்துக் கொள்ளும் கவனத்தை, வசுதா கண்டு கொண்டாள்.

ஒரு வாரம் கூர்ந்து கவனித்தபின், அது தன் கற்பனை அல்ல, அண்ணன் மெய்யாகவே உள்ளூரத் தவிக்கிறான் என்பது அவளுக்குத் தெளிவாயிற்று.

இப்படி மூடி மூடி வைத்தால் இந்தப் புண் என்றைக்கு ஆறும்?

அன்றிரவு எல்லோரும் உறங்கி விட்டார்கள் என்று நிச்சயமாக அறிந்தபின் நள்ளிரவு நேரத்தில் ஓசையற்றுக் கதவைத் திறந்து கொண்டு மொட்டை மாடிக்குச் சென்று, இங்கும் அங்குமாய்ச் சோர்வுடன் அலைந்து விட்டுக்

கடைசியாகக் கால் ஓய்ந்து, மடியில் ஊன்றிய கைகளில் முகம் புதைத்து அவன் அமர்வதைக் கதவிடுக்கில் இருளில் நின்றபடி பார்த்துக் கொண்டு இருந்தவள், ஒரு முடிவுக்கு வந்தவளாய், அண்ணனை நோக்கிச் சென்றாள்.

புவனமோகனன் சுலபத்தில் தன் வேதனையைத் தங்கையிடம் வெளியிட்டு விடவில்லை.

''நீ சின்னப்பிள்ளை. இதெல்லாம் உனக்கு ஒன்றும் புரியாது! பேசாமல் போய்ப் படுத்துத் தூங்கு. ஒழுங் கான தூக்கம் இல்லாவிட்டால் ஆரோக்கியம் கெட்டு விடும். போ! போய்த் தூங்கு'' என்று விரட்டினான்.

''தூங்காவிட்டால் ஆரோக்கியம் கெட்டு விடுமா? அப்படியானால் பகல் முழுவதும் லேத்தில் கடையில் வேலை செய்துவிட்டு இரவிலும் தொடர்ந்து ஒரு வாரமாய் தூங்காமல் இப்படி உலாத்துகிறீர்களே! உங் கள் உடம்பு மட்டும் இரும்பாலா அடித்து வைத்திருக்கி றது? சொல்லுங்கள் அண்ணா! என்ன ஆயிற்று? உங்கள் தங்கை நான். நம் இருவர் உடம்பிலும் ஓடுவது ஒரே இரத்தம்! உடன்பிறந்தோர், உறவினர் என்றெல்லாம் இருப்பது எதற்கு? இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்ளத்தானே? சொல்லுங்கள் அண்ணா? சொன் னால் சுமைகூடக் குறையக்கூடும்.''

''குறைவதா?'' என்றான் அண்ணன் நம்பிக்கை யற்ற குரலில். உடனே தலையசைத்து, ''போம்மா! போய்த் தூங்கு என்று சொன்னால் கேட்க வேண்டும்'' என்றவன் தங்கையின் முகத்தில் பிடிவாதத்தைக் காண வும், ''இதெல்லாம் புரிகிற வயது உனக்கு இன்னமும்

ஆகவில்லை என்று சொன்னால் கேட்க வேண்டும்!'' போ'' என்று மீண்டும் அவளை உள்ளே அனுப்ப முயன்றான்.

''புரிகிற வயது எனக்கு ஆகவில்லையா? 'வசு' வுக்கு நல்ல குணமுள்ள பையனைப் பாருங்கள். திருமணத்தை முடித்து விடலாம்! என்று இன்று தானே யாரோ அப்பாவிடம் சொன்னார்களாம்! கல்யாணம் செய்து கொள்ள வயதாகிறது. கஷ்டத்தைப் புரிந்து கொள்ள வயது ஆகவில்லையாமா? நன்றாய் இருக்கி றதே நியாயம்!''

தன்னைமீறி அண்ணன் லேசாகப் புன்னகை புரிய வும், வாய்ப்பை விடாமல் வசுதா தொடர்ந்து வற்புறுத்தி னாள். ''நீங்கள் மட்டும் என்னிடம் சொல்லவில்லை என்றால் என்னை உங்கள் தங்கையாகவே எண்ண வில்லை; யாரோவாக எண்ணி ஒதுக்குகிறீர்கள் என்று தான் நினைப்பேன்! ஏன் அண்ணா! நான் உங்களுக்கு யாரோவா? அல்லது எனக்கு இப்படி ஒரு கஷ்டம் நேர்ந்தால் உங்களிடம் வந்து நிற்கக்கூடாது என்று சொல்லாமல் சொல்கிறீர்களா?''

இப்படி ஒரு கஷ்டமா? பதறிப்போன புவனமோக னன், ''வேண்டாம்மா! இந்த மாதிரி வேதனை, கனவில் கூட, உனக்கு நேர வேண்டாம், கண்ணம்மா!'' என்றான் குரல் தழுதழுக்க.

சிறு மவுனத்தின் பின், ''என்னண்ணா நடந்தது?'' என்று மெல்லிய குரலில் வசுதா வினவினாள்.

ஒரு பெருமூச்சுடன் புவனன் கேட்டான். ''உனக்கு என்ன தெரிய வேண்டும். இங்கிருந்து நான் கிளம்பிச்

சென்றபிறகு என்ன நடந்தது என்றா அல்லது இன் றைக்கு என்ன ஆயிற்று என்றா?''

''இரண்டும்தான் கொஞ்சம் தேறி வந்தீர்களே, இப்போது மீண்டும் என்ன ஆயிற்று என்று முதலில் சொல்லுங்கள். பிறகு...''

சற்று நேரம் புவனமோகனன் பேசாமல் இருந்தான்.

அண்ணன் மனதை மாற்றிக் கொண்டு, இவளிடம் ஒன்றும் சொல்ல வேண்டாம் என்று தீர்மானித்து விட்டானோ என்று வசுதா கவலையுறத் தொடங்கிய போது, புவனன் வாய் திறந்தான்.

''நேற்றோடு எங்களுக்குத் திருமணமாகி ஓர் ஆண்டு முடிவடைகிறது...''

''ஓ... சாரி அண்ணா! அதுதான் இப்படி...''

''இல்லை. யோசித்துப் பார்த்தால், அந்தத் திரும ணம் பற்றி நான் பெருமையாக எண்ணி மகிழ ஒன்றும் இல்லை! ஆனால்...''

''ஆனால்?''

''இன்றைக்குக் குடும்பக் கோர்ட்டில் என் மனைவி விவாகரத்து கோரி மனுத்தாக்கல் செய்திருப்பாள்.''

''அண்ணா!'' என்று அதிர்ந்தாள் வசுதா

''ஏ... ஏன் இன்றைக்கு...?''

எழுந்து சென்று கைப்பிடி 'கிரில்'லைப் பிடித்தபடி நின்று சற்றுநேரம் இருளை வெறித்தான் புவனமோக னன். மீண்டும் திரும்பி வந்து அமர்ந்து, ''ஏனென்றால் ஒரு திருமணத்தை ரத்து செய்யக் கோரி மனு கொடுக்க

வேண்டுமானால், அந்தத் திருமணம் நடந்து குறைந்தபட்சமாய் ஓர் ஆண்டு காலமாவது முடிந்திருக்க வேண்டும். நேற்றுடன் அந்தக் கெடு முடிந்து விட்டது. அதன்பின், அதிகப்படியாக ஒருநாளை வீணாக்கவும் அங்கே யாருக்கும் விருப்பம் இராது. அதனால்தான், இன்றைக்கே மனு தாக்கல் செய்திருப்பார்கள் என்றேன்... அதற்குத் தேவையானது எல்லாம் எழுதிக் கொடுத்து விட்டுத்தான் வந்தேன். ஆனாலும்.. ஆனாலும் சட்டபூர்வமாகவும் அவள் என்னை விட்டுப் பிரிந்து விடப் போகிறாள் என்பதை என்னால் தாங்க முடியவில்லை. வசு!'' என்று உணர்ச்சியற்ற குரலில் உரைத்தான்.

அண்ணனின் மரத்த குரலின் பின்னே மறைந்திருந்த வேதனை புரிபட, வசுதாவும் உள்ளூரக் கலங்கினாள்.

ஆறுதல் கூறத் தகுந்த வார்த்தைகள் ஒன்றும தோன்றாது போய்விட ''ஏன், அண்ணா. அப்படி எழுதிக் கொடுத்தீர்கள்?'' என்று வருத்தத்துடன் வினவினாள்.

''அது... நடந்தது எல்லாம் சொன்னால்தான் உனக்குப் புரியும் வசு. ஆனால்...'' என்று இழுத்தவன், உதட்டால் மட்டுமாக லேசாக முறுவலித்தான்.

''உன்னைச் சின்னப் பிள்ளையாகவே எண்ணிப் பழகிவிட்டு, இப்போது, என் வாழ்க்கைப் பிரச்னையை உன்னிடம் சொல்வது என்றால் கொஞ்சம் விசித்திரமாய்த்தான் இருக்கிறது. ஆனால் இதை அம்மாவிடமோ, அப்பாவிடமோ என்னால் சொல்ல முடியாது. ஒரு தலைமுறை முந்திய அவர்கள், சட்டெனத்

தேவியை ஒரு வார்த்தை குறைவாகச் சொல்லி விடுவார்களோ என்ற பயத்தினாலேயே, என்னால் அவர்களிடம் மனம் விட்டுப் பேச முடியவில்லை. வசு... ஆனால், நீ வளர்ந்து விட்டாய். ஒரே தலைமுறை என்பதால் புரிந்து கொள்வாய்...'' என்று தொடங்கி எல்லாம் சொன்னான்.

வீட்டை விட்டு வெளியேறியபோது, கிட்டத்தட்ட கட்டவிழ்ந்த கன்றின் நிலைதான் புவனமோகனனுக்கு.

இங்கே, அவனால் துணிந்து செயல்பட முடியாமல் இருந்தது. அவனது தொழில் முறை தந்தைக்குப் பிடிக்கவில்லை என்பதோடு, மகனால் மற்றவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் கார்த்திகேயன் ஈடுகட்டியது அவனுக்கு மிகவும் எரிச்சலூட்டி வந்தது. எந்த ஒரு முயற்சியும், அவர் காதுக்கு எட்டிவிடக் கூடாதே என்று யோசித்துச் செயல்பட வேண்டியிருந்தது.

எனவே, குடும்பத்தைப் பிரிவது சற்று வருத்தம் தந்தபோதும், சுதந்திரமாகத் தொழில் நடத்தலாம் என்பதால் உற்சாகம் அதிகமாகவே இருந்தது.

தந்தைக்கும் தனக்கும் முடிந்த அளவு அதிகத் தூரம் இருக்க வேண்டும் என்று புவனமோகனன் விரும்பினான்!

பம்பாயின் புறநகர்ப் பகுதியில் தமிழர் மிகுதியாக வாழும் இடத்தில் சற்றுத் தொலைவில்தான் கார்த்திகேயனின் வீடும், தொழில் நடத்தும் இடமும் இருந்தது.

அங்கிருந்து, அதிகத்தூரம் என்று, சென்னையைத் தன்நிலைக்களமாகப் புவனமோகனன் தேர்ந்தெடுத்

தான். அவனுடைய நண்பர்கள் சபாவும், குணாவும் ஏற்கெனவே அவனை அண்டிப் பிழைப்பவர்கள். இருவருமே, அவரவர் குடும்பங்களில் இடிசோறு உண்ணும் முக்கால் அனாதைகள். பணம், பெரும் பிரச்னையாக இல்லாதபோதும், அன்பு எட்டா உயரத்தில் இருந்தது. எனவே வீட்டை விட்டுப் புவனமோகனனோடு அவர்களும் கிளம்பி விட்டார்கள்.

சென்னையில் வீடு, தொழில் இரண்டிற்கும் இடத்துக்கு ஏற்பாடுகள் செய்தார்கள். குண்டூசி முதல் கோட்டை வரை வாங்க விற்க என்று பெரிதாகப் போர்டு எழுதித் தொழிலைத் தொடங்கினார்கள்.

முதலில் அவர்களைச் சீந்துவார் இல்லாதபோதும், புவனமோகனனின் வாக்கு சாதுர்யம், மெல்ல மெல்ல அவர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்தது.

அப்போதுதான்...

சிறு மவுனத்தின் பின் புவனமோகனன் மீண்டும் தொடர்ந்தான்.

புவனமோகனன் சென்னை சென்று சுமார் ஏழு மாத காலம் முடிந்திருந்தது. கையில் சில லட்சங்கள் சேர்ந்திருந்தன. அந்தச் சமயத்தில் ஒரு வீடு விலைக்கு வந்து, வாங்குவோர் இல்லாமலும் கிடந்தது.

வீட்டைக் கட்டிக் கொண்டு இருந்தவர், கட்டி முடிக்கிற சமயம்! என்ன துன்பமோ, ஓர் இளம் ஜோடி சாவதற்கு வேறு இடம் கிடைக்காமல் ஆள் இல்லாதிருந்த இந்த வீட்டில் வந்து தூக்கு போட்டுக் கொண்டு செத்துப் போனார்கள்.

அதற்குமேல் அந்த வீட்டை முடித்து, குடியேற வீட்டுச் சொந்தக்காரருக்கு மனமில்லை. விற்கலாம் என்று முயன்றால், இந்தக் கதையினால் வாங்கவும் ஆளில்லை. ஆன செலவுக்குக் குறைவாக விற்கக்கூட வீட்டுக்காரர் தயாராக இருந்தார்.

இந்த வீட்டை மலிவாக வாங்கி, கொஞ்சம் பணம் செலவு செய்து வேலையை முடித்து, யாராவது ஏமாந்த வன் தலையில் நல்ல லாபத்துக்குக் கட்டிவிடலாம் என்று புவனமோகனன் நினைத்தான்.

இதே எண்ணத்தில் ஓரிரு தரகர்களும் முயற்சிப்பது தெரிய வர, கையில் இருந்த பணத்தை முன்பணமாகக் கொடுத்து விட்டான்.

மூன்று மாதத்திற்குள்ளாகப் பத்திரம் பதிவாக வேண்டும். இல்லாவிட்டால் முன் பணம் போய்விடும். ஒப்பந்தமும் ரத்தாகிவிடும்.

அதற்குள் என்னமாவது வந்து மாட்டாதா என்ன, என்கிற நம்பிக்கைதான் புவனனுக்கு.

அவனுடைய நண்பர்களுக்குள்ளே அவனை விட வும், அவன் மீது அதிக நம்பிக்கை.

''உனக்காடா சம்பாதிக்க முடியாது? ஒன்றுமே இல்லாமல், வெறும் வாய்ப் பந்தலிலேயே 'லட்சம் லட்சமாய்ப் புரட்டி விடுவாயே!'' என்று துதிபாடினர்.

அவர்களது மெய்யான எண்ணமும் அதுதான்.

ஆனால், புவனமோகனனுக்கு அதில் உடன்பா டில்லை. ''அது தப்புடா, மச்சி! நாம் ஒரு பொருளைக் காட்டுகிறோம். அதை உயர்வு நவிற்சி அணியாக,

இப்படி அப்படி என்று கதை கட்டுகிறோம். அதை நம்பி, பொருளைச் சரியாகப் பாராமல் ஒருவர் வாங்கி னால், அது வாங்குகிறவரின் குற்றம்...''

''அதுவும் வாய்ப்பந்தல் தானே. பாஸ்?''

''ஆமாம். ஆனால் எதிராளி இழக்கும் பணம், பொருளைச் சரிபாராமல் வாங்கும் அவனது தப்புக்கு ரிய தண்டனை! நாம் காட்டுகிற பொருளையே நாம் கொடுத்து விடுவதால் அதில் நம் தப்பு எதுவும் இல்லை! ஆனால், பொருளே இல்லாமல் வெறும் வாய்ப் பந்தலில் சம்பாதிப்பது ஏமாற்று வேலை! அது கூடாது... பார்க்கலாம்! ஏதாவது கிடைக்கும்...'' என்று முடித்தான் புவனமோகனன்.

இப்படிப் பணம் பண்ண ஒரு வாய்ப்புக்காக அலைந்து திரிந்து அதே கவனமாய் மூவரும் சுற்றிக் கொண்டு இருந்த போதுதான் புவனமோகனன் தேவி யைச் சந்தித்தான்!

''தேவி அதுதன் அண்ணியின் பெயரா, அண்ணா?''

புவனமோகனன் மவுனமாகத் தலையாட்டவும், ''அண்ணி பார்க்க எப்படி இருப்பார்கள் அண்ணா?'' என்று வசுதா ஆவலோடு வினவினாள்.

''தேவி...'' புவனமோகனனின் பார்வை, தேவியை கண்முன்னே காண்பவன் போல எதிரே வெறித்தது. ''மெல்லிய கொடி போன்ற மேனி. நல்ல உயரம். அழகான பெரிய கண்கள்... அடர்ந்த கூந்தல். பிறை நெற்றியிலிருந்து கால் விரல் நக முனைவரை மென் மையே உருவானவள்...''

# 7

அந்தக் கடையில் அப்போது ஒரு தள்ளுபடி விற்பனை நடந்து கொண்டிருந்தது. சிறு சிறு தடுப்புகள். ஒவ்வோர் அடைப்பிலும் ஒவ்வொரு விதமான பொருள். ஒரு பக்கம் டி.வி.கள், ஒரு பக்கம் ஃபிரிஜ், இன்னோர் இடத்தில் மின் விசிறி வகைகள், பாத்திரங்கள், பிளாஸ்டிக் பொருட்கள்... பிளாஸ்டிக்கில் நாற்காலி தினுசுகள், அடுத்து, பல வகையான கிரைண்டர்கள்.

நாற்காலிகள் பகுதியில் மேலோட்டமாய் ஒரு பார்வை செலுத்திக் கொண்டு இருந்தபோதுதான் புவன மோகனன் தேவியை முதல் முதலாகக் கண்டது.

சற்று மெலிந்த தோற்றம், அவளது உயரத்தில் மிகைப்படுத்தப்பட்டு ஒல்லியாகவே தோன்றினாள். சொல்லப் போனால், அவளைவிட, அவள் வயதை ஒட்டியவர்கள் போலத் தோன்றிய இன்னும் இரு பெண்கள், ஆண்களின் பேச்சு சத்தத்தில்தான் புவனன் அங்கே திரும்பிப் பார்த்ததே!

அவர்களும் அந்தப் பெண்ணின் ஒல்லியான தோற்றத்தைக் கேலியாகச் சுட்டிக் காட்டித்தான் பேசிக் கொண்டு இருந்தார்கள். ''ஆமாம். இப்படிச் சாப்பாடு வேண்டாம் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டே இரு. கொஞ்ச நாளில் காற்றில் காணாமலே போய்விடப் போகிறாய்? கம்பர் எழுதியதாய்ச் சொல்வார்களே, அந்தப் பொய்யோ எனும் இடையாள் மெய்யாகி விடும் தேவி'' என்றாள் சற்றுக் கட்டையாக குண்டாக இருந்த ஒரு பெண்.

''ஆமாம்! தேவிக்கு ஒரு வகையில் இடை பொய்யாகி விடும். சாப்பிட்டு சாப்பிட்டு மோனியோ எதிர்மறையாய் பொய்யோ எனும் இடையாள் ஆகிவிடு வாள்!'' என்று ஒருவன் கூற, எல்லோரும் சிரித்தார்கள்.

''அட, போனால் போகிறது. அதற்காகப் பட்டினி கிடப்பது எல்லாம் நம்மால் ஆகாதுப்பா. இப்போதே வயிறு பசி கபகப என்று எரிகிறது. இப்போதுதான் ஆளே இல்லையே! சாப்பாட்டு நேரம் என்று அட்டை யில் எழுதி வைத்து விட்டுப் போய் விடுவோம். வேணுமானால், பார்த்துக் கொள்ளுங்கள் என்று கடை யில் ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போவோம். நீ போய்ச் சொல்லி விட்டு வாடா சரத்'' என்றாள் அந்தக் குண்டுப் பெண் மோனி.

''கடைக்காரன் காதிலேயே போட்டுக் கொள்ள மாட்டார். வந்த உடனேயே சொல்லி விடவில்லையா? பத்துக்குப் பத்து அந்த நூறு சதுர அடி இடம் உங்களுக்கு உங்கள் கிரைண்டர்களை எப்படி வைத்து எப்படி விற்பீர்களோ, உங்கள் பொறுப்பு! பில் போட மட்டும் இங்கே அனுப்பி விடுங்கள். மற்றபடி உங்கள் சாமான், உங்கள் பொறுப்பு என்றாரே! ஆள் கறார் பேர்வழி. அதெல்லாம் நம் இடத்தைக் கண்காணிக்க மாட்டார்'' என்றான் அந்த சரத்.

''அது மெய்தான். எந்தவித உதவியும் எதிர்பார்க் கக் கூடாது என்று முதலிலேயே கடைக்காரர் சொல்லி விட்டார்...'' என்றான் கூட இருந்த ஆண்களில் அடுத்த வன்.

''அதுதான், நான் இருந்து பார்த்துக் கொள்கிறேன் என்கிறேனே, அண்ணா!'' என்றாள் அந்தத் 'தேவி', தன் இனிய குரலில் சலுகையாக.

"ஐயய்யோ! உன்னைத் தனியே விட்டுப் போக முடியாதும்மா! உன்னைப் பார்த்துக் கொள்ளும்படி அம்மா திருப்பித் திருப்பிச் சொல்லி அனுப்பியிருக்கி றார்கள்!" என்றாள் இன்னொருத்தி.

"ஏனோ, மைத்திக்கா? என்னை என்ன, திருடன் தூக்கிப் போய் விடுவானா? என்னைப் பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியாதா?" என்றாள் தேவி ரோஷத்துடன்.

"அதில்லை, தேவி. நீ சின்னப் பெண்..." என்றாள் அந்த மைத்திக்கா சமாதானமாக.

"என்ன சின்னப் பெண்? மோனிக்கும் எனக்கும் ஒரே வயதுதானே? அவளை இப்படியா பாதுகாக்கிறீர் கள்? எல்லாம் கல்யாணமானதும் என்கைக்கு வரும்படி அம்மா அப்பா எழுதி வைத்து விட்டுப் போன அந்த முப்பது லட்சம் ரூபாய்க்காக! அதுதானே? சொல்லு மைத்திக்கா, எவனாவது, வந்து நின்றால், அவன் கழுத்தில் மாலையைப் போட்டு, அந்தப் பணத்தை அவன் கையில் தூக்கிக் கொடுத்து விட, நான் முட்டாளா? நீங்களே சொல்லுங்கள், அண்ணா?" என்று தேவி, அங்கிருந்த ஆண்களில் மூத்தவனிடம் முறையிட் டாள்.

"உன்னை முட்டாள் என்று யாரும் சொல்ல வில்லை, தேவிம்மா! ஆனால் வீட்டுக்குள் இருந்து வளர்கிறீர்கள். வெளி உலகம் சரியாகத் தெரியாது. சித்தி, சித்தப்பா இருந்திருந்தால் வேறு மாதிரி. இப் போது அவர்களின் பொறுப்பு, எங்கள் அத்தனை பேருடையதும் ஆகிவிட்டது" என்றான் அந்த அண் ணன் சமாதானமாக.

''ஆனால் எப்படியும் பெரியப்பாவும் பெரியம்மாவும் இப்படி உயில் எழுதி வைத்திருக்கக் கூடாது! இல்லையா பெரியண்ணா? இப்போது அன்னிய ஆண்களைப் பார்த்தாலே இந்தப் பணத்துக்காகத்தான் தேவி பின்னால் சுற்றுகிறானோ என்ற சந்தேகம் தானே வருகிறது. இவளது அழகு குணத்திற்காகக்கூட இவளை யாரும் 'லவ்' பண்ணக்கூடும் என்பது தோன்ற மாட்டேன் என்கிறதே!'' என்றாள் மைத்திலி.

''அம்மாடியோய்! இப்போது வயிற்றுப் பசிக்கு என்ன வழி? அதைச் சொல்லுங்கள்!'' என்றாள் முதலில் பேசிய மோனி.

''சும்மா அந்த அடைப்புக் கயிறை முழுதாக இழுத்துக் கட்டிவிட்டு எல்லோருமாய்ப் போய் வரலாம், அண்ணா'' என்றான் சரத்.

''ஏய், சும்மா இருடா! பெரிதாகப் பெரியவர்களிடம் இந்த ஆண்டுத் தள்ளுபடி விற்பனையை நாங்களே பார்த்துக் கொள்கிறோம்; லாபத்தை எங்களிடம் தந்து விட வேண்டும் என்று பெருமை பேசி விட்டு வந்தோம். ஒன்று திருட்டுப் போனால் பத்து விற்பனையின் லாபம் போய் விடும். நான் இருக்கிறேன், நீங்கள் போய்ச் சாப்பிட்டு விட்டு வந்த பிறகு எனக்கு...'' என்று அந்தப் பெரியண்ணன் முடிக்குமுன், எல்லோருமாய்ச் சேர்ந்து ''கூடாது, கூடாது'' என்றனர்.

''சும்மாவே உங்களுக்கு 'அல்சர்' தகராறு! வேளைக்குச் சாப்பிட வைக்க வேண்டும் என்று பெரியம்மா எங்களிடம் சொல்லி அனுப்பியிருக்கிறார்கள்! அண்ணா, எனக்கு என்றைக்குமே மதியச் சாப்பாடு

அவ்வளவாய் விருப்பம் இல்லாததுதானே! நான் பார்த்துக் கொளகிறேன். எல்லோரும் போய்ச் சாப்பிட்டு விட்டு, எனக்கு 'லைட்'டாக ஏதாவது வாங்கி வாருங்கள் .. சும்மா யோசிக்காதீர்கள். அந்தப் பண விஷயம் தெரிந்தவர்கள் இருந்தால் தானே வம்பு? இங்கேதான் அதுபற்றி யாருக்கும் தெரியாதே! தைரியமாய்ப் போய் வாருங்கள்'' என்று வற்புறுத்தி தேவி மற்ற அனைவரையும் உணவருந்த அனுப்பி வைத்தாள்.

பக்கத்து பிளாஸ்டிக் நாற்காலி அடைப்பில் ஆள் உயரத்துக்கு இறக்கப் பட்டிருந்த நாற்காலிகளின் மறைவில் நின்று ஒருவன் இந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தது அவர்கள் யாருக்கும் தெரியாது.

அடுத்த அடைப்பில் அரவம் அடங்கிய பிறகு புவனமோகனன், அந்த 'தேவி' அறியாமல் வந்த வழியே வெளியேறிச் சென்று, சற்றுத் தொலைவில் நின்று அவளைப் பார்த்தான்.

கிரைண்டர் பகுதியை நோக்கி இரண்டு எட்டு எடுத்து வைத்தவன் சட்டென நின்று யோசித்தான்.

சற்றுமுன், தேவியிடம் கவனமாயிருக்கும்படிச் சொல்லிவிட்டுச் சென்ற நால்வரும், எதிர்ப்புறம் இருந்த ஓட்டலை நாடிச் சாலையைக் கடந்து கொண்டிருந்தார்கள். திரும்பிப் பார்த்தால், ஏதோ கதைப் புத்தகத்தைப் படிக்கத் தொடங்கியிருந்தாள் தேவி.

மீண்டும் அங்கங்கே நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, உணவுக்காகச் சென்ற நால்வரும் திரும்பி வருவதைக் கண்டபின், தன் வழியே சென்றான்.

மாலையில் திரும்பி வந்த சபாவும், அறையில் இருந்த குணாவும், புவனமோகனனைக் கண்டதும் வியப்படைந்தார்கள். ''என்ன புவன்?'' என்று ஆச்சரிய மாய் வினவினார்கள்.

''எப்படி இருக்கிறது? அதைச் சொல்லுங்கள்!''

ஒழுங்காக வெட்டப்பட்ட சிகை அலங்காரமும், அடர்ந்த மீசை தவிர மழிக்கப்பட்ட முகமும், புவனனை மிக உயரமாகக் காட்டின.

''நன்...றாய் இருக்கிறது! ஆனால், இதைப் பம்பா யிலேயே செய்திருந்தால், உன் அப்பா, அம்மா மகிழ்ச்சியடைந்திருப்பார்களே!''

''அப்போது அது பிடித்தது!''

''இப்போது இது பிடித்து விட்டதாக்கும்!''

''ம்! செய்து கொண்ட பிறகு ரொம்பப் பிடித்து விட்டது'' என்று புவனமோகனன் சிரித்தான்.

''நீ சிரிக்கிறாய்? ஆனால், நமக்கு ஏற்றபடி இன்னும் ஒரு பட்சி, கண்ணில் கூடக் காணவில்லையே, மச்சி!'' என்றான் குணா வருத்தத்துடன். ''இப்படியே போனால் அட்வான்ஸ் கொடுத்த உன் பணம் அம்பேல் ஆகிவிடும் போல் இருக்கிறதே!'' என்றான் சபா அழுகுரலாக.

''பட்சி இருக்கிறது! பையன்களா!'' என்றான் புவனமோகனன். ''அதைப் பிடிக்கத்தான் இந்த வலை!'' என்று ஒரு கையால் அலட்சியமாகத் தன் தோற்றத்தை உருமாற்றத்தைக் காட்டினான்.

எதையும் மறைக்காமல், சொல்லிக் கொண்டே வந்த புவனமோகனன் சற்று திரும்பி தெரு விளக்கின் ஒளியில் தங்கையைக் கூர்ந்து நோக்கினான்.

''என் நோக்கம் உனக்குப் புரிந்திருக்கும், வசு. நம் அண்ணன் இவ்வளவு மோசமானவனா என்று அருவருப்பு கூட ஏற்பட்டிருக்கும். இதற்கு மேலும் என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறாயா?'' என்று கம்மிய குரலில் கேட்டான்.

''எது எப்படி இருந்தபோதும் நீங்கள் என் அண்ணன் என்பது மாறாதல்லவா, அண்ணா! என் பாசம் மட்டும் எப்படி மாறிவிடும்? நீங்கள் மேலே சொல்லுங்கள்'' என்றாள் தங்கை.

மறுநாள் உணவு நேரத்தில் புவனமோகனன், அந்தத் தள்ளுபடி விற்பனைக் கடைக்குச் சென்றான்.

அவன் எதிர்பார்த்தது போலவே தேவி ஒரு புத்தகத்தைப் படித்தபடி தனியே இருந்தாள்.

மடமடவென்று கிரைண்டர் பகுதிக்குள் சென்றவன், அவளை அப்போதுதான் கண்டவன் போலத் தயங்கி நின்று, ''இங்கே விற்பனையைப் பார்ப்பதற்கு யாரும் இல்லையா?'' என்றவாறே, கையைத் திருப்பி மணி பார்த்துவிட்டு, ''உணவு இடைவேளை போலும், சாப்பாட்டு நேரம் எப்போது முடியும் என்று சொன்னீர்களானால், நான் அப்புறமாய் வர முயற்சிக்கிறேன்!'' என்றான்.

எழுந்து நின்று, ''ஏன்? என்னைப் பார்த்தால் விற்பனை செய்கிறவள் மாதிரி உங்களுக்குத் தோன்றவில்லையா?'' என்று தேவி ரோசத்துடன் கேட்டாள்.

புவனமோகனன் ஆச்சர்யமே வடிவாகிப் போனான். ''நீங்கள்! இங்கே விற்பனைப் பணிபுரிகிறீர்களா? அப்படியானால், இதெல்லாம் புது ஸ்டாக்கா? நேற்றையச் சரக்குதான் நேற்றே விற்றிருக்க வேண்டும்!'' என்று முறுவலித்தான்.

அவனது குறிப்பைக் கண்டு கொண்டு, கலீரென்று சிரித்தாள் தேவி. ''தினம் ஒரு கடையில் இவ்வளவு விற்றால், அப்புறம் நாங்கள் ஒரே மாதத்தில் கோடீசுவரர் ஆகிவிடுவோம்!''

''சாத்தியப்படாது!''

''எது சாத்தியப்படாது? கோடீசுவரர் ஆவதா?''

''சுற்றி வளைத்துப் பார்த்தால், அதுவும்தான். ஏனென்றால் தேவதை மாதிரி நீங்கள் எல்லாக் கடைகளிலும் போய் விற்பனையைக் கவனிப்பது சாத்தியமல்ல! அதனால் எல்லாக் கடைகளிலும் இப்படி முழு ஸ்டாக்கும் விற்பது சாத்தியப்படாது! அதனால்...''

''நாங்கள் கோடீசுவரர் ஆவதும் சாத்தியப்படாதாக்கும்!'' என்று உதட்டைப் பிதுக்கினாள் தேவி.

''ஏற்கனவே கோடீசுவரராய் இருந்தால் ஒழிய சாத்தியப் படவே படாது!'' என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறி, அவளை முறுவலிக்க வைத்தான் புவனமோகனன்.

சில வினாடிகளிலேயே சிரிப்பை அடக்கிக் கொண்டு உங்களுக்கு என்ன வேண்...''என்று தொடங்கியவள், சட்டென அண்ணன்மார் கூறியிருந்ததை நினைவு கூர்ந்து, ''எந்த வகை 'கிரைண்டர் தேவை?'' என்று விற்பனையில் கவனம் செலுத்தினாள் தேவி.

''எனக்கு இன்னமும் திருமணமே ஆகவில்லை! தனிக்கட்டை எனக்கு எதற்குங்க கிரைண்டர்? தேவையே கிடையாது!'' என்று தான் இன்னமும் பிரம்மசாரி என்பதைப் புவனமோகனன் தெரிவித்துக் கொண்டான்.

ஆனால், அவன் எதிர்பார்த்ததற்கு மாறாகப் புருவம் சுருக்கி, ''பின்னே எதற்காக இங்கே வந்தீர்கள்!'' என்று சந்தேகத்துடன் தேவி கேட்டாள்.

வேடிக்கைப் பேச்சுக்கோ ஐஸ் வைப்பதற்கோ இது சமயமல்ல என்பதை உணர்ந்து, ''நண்பன் ஒருவன். கணவன், மனைவி இரண்டே பேர்! இட்டிலி தோசை தவிர மற்ற எதையும் காலை உணவாய் ஒத்துக் கொள்ளவே மாட்டான் சினேகிதன். எந்த மாதிரி 'கிரைண்டர்' வாங்கினால் உதவியாக இருக்கும் என்று நீங்கள்தான் சொல்ல வேண்டும்'' என்று வரிசைப் பற்கள் பளீரிடப் புன்னகை செய்தான் புவனமோகனன்.

பார்வையில் இருந்த ஐயம் மறைந்துகூட, இலகுவாய் நடந்து, ''இதோ, இந்த 'டேபிள் டாப்' மாடல் இரண்டு பேருக்குச் சரியாக இருக்கும். அரை லிட்டர் கூட அரைக்கலாம்...'' என்று பலவண்ணப் பூச்சுகளுடன் வரிசையாக வைக்கப்பட்டிருந்த சிறு கிரைண்டர்களை அவள் காட்டினாள்.

இவள் சந்தேகப்படாதிருப்பதற்காகவேனும், வாங்கித்தான் ஆக வேண்டுமோ என்று புவனமோகனன் யோசித்தபோது, வேறொரு குடும்பம் 'கிரைண்டர்' பார்க்க வந்தார்கள்.

யாரைக் கவனிப்பது என்று தேவி தடுமாறிய போது, 'பெருந்தன்மையாக விட்டுக் கொடுப்பது

போல, 'அவர்களைக் கவனியுங்கள்' என்று சைகை செய்தான் புவனன்.

அவர்கள் மெய்யாகவே வாங்க வந்தவர்கள்! எதிலும் நூறு சதவீத திருப்தி தேடுகிற குணம் போலும். கடையைப் புரட்டி எடுக்க விரும்பினர். ஒன்றின் மேல் ஒன்று அடுக்கி வைத்திருப்பதில் அடியில் இருப்பதைத் தான் பார்க்க வேண்டும் என்றார்கள்.

தேவி திணறிப் போனாள். அவள் எங்கே கிரைண்டரைத் தூக்கி எடுத்துக் காட்டுவது! சட்டென உதவிக்கு வந்து, அவர்கள் கேட்டதை புவனமோகனன் எடுத்துக் காட்ட அவர்களும் திருப்தி அடைந்து, கிரைண்டரை வாங்கிச் சென்றனர். பூவாய் மலர்ந்த முகத்துடன். ''அவர்கள் யார் உதவியும் இல்லாமல் நானே தனியாக ஒரு கிரைண்டர் விற்று விட்டேன்' என்று பெருமிதப்பட்டாள் தேவி. கூடவே! புவனனுக்கு நன்றி சொல்லவும் மறக்கவில்லை. ''நீங்கள் உதவி செய்திராவிட்டால் இது நடந்தே இராது. ரொம்பவும் நன்றி சார்!'' என்றாள் மகிழ்ச்சியாக.

''நன்றி சொல்லும் அளவுக்கு நான் என்ன பெரிதாகச் செய்து விட்டேன். நான் இல்லாவிட்டால் வாங்கியவரே எடுத்துப் பார்த்து, அப்போதும் வாங்கிக் கொண்டு தான் போயிருப்பார்கள்'' என்று புவனன் சொல்லிக் கொண்டிருந்தபோதே, பசியாறச் சென்றிருந்த நால்வரும் திரும்பி வந்தனர். ''இந்தா, நீ கேட்ட 'பன்பட்டர் ஜாம்' இதை மட்டும் சாப்பிட்டு எப்படித்தான் உன் வயிறு நிறைகிறதோ'' என்று மோனி உணவுப் பொட்டலத்தைத் தேவியிடம் நீட்ட, நெரித்த புருவத்துடன்

இடையில் வந்து நின்று, ''என்ன வேண்டும்?'' என்று அதட்டலாகக் கேட்டான் அவர்களில் மூத்தவன் ரகு.

நால்வரின் பார்வையும் தன்னைக் கூறு கிழித்து ஆராய்வதை உணர்ந்தும், கவனியாதவன் போல, ''அந்த கிரைண்டர் என் நண்பனிடம் கேட்டுக் கொண்டு வந்து வாங்குகிறேன்'' என்று தேவியிடம் சொல்லி லேசான தலையசைப்பின் மூலம் விடைபெற்றுக் கொண்டு அகன்றான் புவனமோகனன்.

''நண்பருக்காக கிரைண்டர் வாங்க வந்தார் பெரியண்ணா!'' என்று தேவி கூறியதும், கிழித்தான். ''தனியாக ஒரு பெண் இருக்கிறாள் என்று ஏதாவது இளித்துப் பேச வந்திருப்பான். துணையாக எங்களைக் கண்டதும் இவனாவது கிரைண்டர் வாங்குவதாவது? திருட்டுப்பயல்!'' என்று ரகு சொன்னதும் புவனமோகனனின் கூரிய செவியில் விழுந்தன.

இனி, இந்த கிரைண்டர் வாங்காவிட்டால் நன்றாயிராது என்று மறுநாள் சென்று பணத்தைக் கொடுத்து வாங்கிவிட ''பாருங்கள்! அந்த நல்ல மனிதரைப் பற்றி என்னென்னவோ சொன்னீர்களே!'' என்று ரோஷமும் பெருமையுமாகத் தேவி, தன் உறவினர்களிடம் பில்லைக் காட்டினாள்!

அடுத்து அவர்கள் சந்தித்தது ஓர் ஐஸ்கிரீம் பார்லரில்.

அன்று, கிரைண்டர் வாங்கும்போதே பேச்சுக் கொடுத்து, முன்னிரவு எட்டறைக்குள் சாமான் கணக்கைக் கடையில் ஒப்படைத்துவிட்டு ஐவரும் பெரியப்பா, சித்தப்பா மக்களோடு, நடுவில் பிறந்து, இடையிலே

இறந்து விட்ட ஒரு சகோதரருடைய மகளான இவளு மாக ஐந்து பேரும் பார்லரில் ஐஸ்கிரீம் சாப்பிட்டு விட்டு, இங்கே அடையாறில் இருந்த தேவியின் வீட்டிற்குப் போய் விடுவார்கள் என்பதைப் புவனமோக னன் அறிந்து கொண்டிருந்தான்.

''அதென்ன, உங்களுக்கு மட்டும் இங்கே வீடு?'' என்று விசாரித்தபோது தேவியுடைய குடும்பம் பற்றி மேலும் சில விவரங்கள் அவனுக்குத் தெரிய வந்தது.

கோவையில் வளமான பரம்பரை தேவியுடையது. அவளுடைய தாத்தாவுக்கு மூன்று பிள்ளைகள். ரகு, மைத்ரேயுடைய தந்தை பிரபாகரன் மூத்தவர். அடுத்த வர் தேவியுடைய தந்தை ஜெயகர். மோனி, சரத்துடைய தந்தை கிருஷ்ணன் கடைசி பிள்ளைகளுக்குள் எந்தவித வேற்றுமையும் வர இடமின்றி, மூவருடைய மனைவிய ரும் உறவாலும், நடப்பாலும் பிணைக்கப்பட்டிருந்தனர். தாத்தா இருக்கும்போதே ஓரளவு மூன்று பிள்ளைகளுக் கும் ஒதுக்கி விட்டிருந்தார். அப்படி ஜெயகரன் பெய ருக்கு வந்த சொத்துதான் இந்த அடையாறு வீடு! கீழ்த் தளத்தை வாடகைக்கு விட்டு விட்டு மேலே சொந்த உபயோகத்துக்கு வைத்திருந்தனர். குடும்பத்தில் யார் சென்னைக்கு வந்தாலும் அந்த வீட்டில்தான் தங்குவார் கள்.

அதேபோலப் பங்களூரில் உள்ள வீடு பிரபாகரன் கைவசம் இருந்தது. செகந்திராபாதில் கிருஷ்ணனின் பெயரில் இருந்தது. மூன்று ஊர்களிலும் தொழிலின் கிளைகள் உண்டு.

குடும்பத் தொழில் கிரைண்டர் உற்பத்தி. எல்லோ ரும் சேர்ந்து வசிப்பது கோவையில். அவளுக்கு வர

இருந்த பணம் பற்றி தேவி மூச்சுகூட விடவில்லை. உள்ளூரச் சிரித்துக் கொண்டபோதும், சொத்து, பணம் பற்றிப் புவனனும் எதுவும் கேட்கவில்லை.

''நீங்கள் மட்டும் ஒரே பெண்ணாக்கும். அப்பா அம்மாவுக்கு ரொம்பச் செல்லமாயிருப்பீர்கள்'' என்றான் புவனமோகனன்.

உயில் எழுதிவிட்டு இறந்து போன பெற்றோர் பற்றிய விபரம் தெரியாத மாதிரிக் காட்டிக் கொள்ள, இந்தக் கேள்வியை அவன் மனசில்லாமலே கேட்க வேண்டியிருந்தது வேறு வழியில்லை.

எதிர்பார்த்ததுபோல, தேவியின் முகத்திலும் லேசாக வாடவும், அவனுக்குக் கொஞ்சம் கஷ்டமாகத் தான் இருந்தது.

''என்ன தேவி? கேட்டது தப்பு என்றால் மன்னித்து விடுங்கள்'' என்றான் உண்மையான வருத்தத்துடனேயே!

''தப்பு ஒன்றுமில்லை'' என்றாள் அவள் முயன்று வரவழைத்த முறுவலுடன். ''எனக்கு... என் பத்தாவது வயதில் ஒரு விபத்தில் அப்பா இறந்து போனார்... அம்மா! அதற்கு மேல் அதிக காலம் வாழவில்லை!'' என்றாள் மெல்லிய குரலில்.

''சரிம்மா...'' என்று சம்பிரதாயமாகச் சொல்லும் போதே, அவளது இழப்பை எண்ணி, உள்ளூரத் தன் மனமும் வருந்துவதைப் புவனன் ஓர் ஆச்சரியத்துடன் உணர்ந்தான்.

என்ன பைத்தியக்காரத்தனம்? தேவியுடைய பெற்றோர் உயிருடன் இருந்திருந்தால், இப்படி ஒரு திட்டம் தீட்டவே வழியிருந்திராதே!

ஓரக்கண் பார்வையில், ஓட்டலை விட்டு ரகு வெளியே வருவது படவே, தேவியிடம் விடை பெற்றுக் கொண்டு, அன்று வாங்கிய கிரைண்டருடன் புவனமோகனன் கிளம்பினான்.

முன் தினம் வந்த இளைஞன் ஏமாற்றுக்காரன் அல்ல என்று நிரூபித்து மகிழ்ச்சி நாளெல்லாம் தேவியுள் ஊற்றாய் பொங்கி நிலைத்திருக்க, கிரைண்டரைப் பார்த்து வியந்த நண்பர்களிடம், ''பெரிய மீனைப் பிடிக்கத் தேவைப்பட்ட சின்ன மீன்!'' என்றான் புவனமோகனன்.

''மீனைப் பிடிப்பாயோ, மாவுதான் அரைத்துக் கொடுப்பாயோ!'' என்ற அவர்களோடு கிண்டலும், கேலியுமாகப் பேசிக் கொண்டிருந்து விட்டுப் புவனமோகனன் மீண்டும் வெளியே கிளம்பினான். 'வலை போட' என்றுரைத்து விட்டு.

## 8

'ஐஸ்கிரீம்' பார்லரில் மாலை நேர விற்பனை மும்முரமாக இருந்தது.

''இத்தாலியன் டிலைட்' வேண்டும் எவ்வளவு?'' என்று பர்சை எடுத்தான் புவனமோகனன்.

''இத்தாலியன் டிலைட் இருக்கிறதா பார்'' என்று பில் கவுன்டரில் இருந்தவன் பையனை ஏவினான்.

ஏவிவிட்டுப் புவனமோகனனைப் பார்த்து ''பொருளெல்லாம் கொஞ்சம் அதிக விலை அயிட்டம் சார். அதனால், கணக்காய்த் தான் வாங்குவது!'' என்று விளக்கினான்.

பெரிய ஃபிரிஜ்ஜில் தேடிவிட்டு, ''நாலு இருக்கிறது!'' என்றான் சேல்ஸ் பையன்.

பில் போடுகிறவன் விலையைச் சொன்னதும் இரு மடங்கு எடுத்துக் கொடுத்தான் புவனன். ''இரண்டு வாங்கிக் கொள்கிறேன். ஒன்றை இப்போது சாப்பிட்டு விட்டு, கொஞ்சம் வெளியே போய்விட்டு வந்து அடுத்ததை வாங்கிக் கொள்கிறேன்'' என்று கூறி, ஒரு ஐஸ்கிரீமை மட்டும் வாங்கி உண்டபடியே வெளியேறினான்.

எட்டரை மணிக்குள் இன்னும் இரண்டு விற்றுப் போய்விடாதா என்ற நம்பிக்கை அவனுக்கு.

தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டு திரும்பி வந்து, அவன் தன் இத்தாலியன் டிலைட்டை வாங்கிக் கொண்டு ஒரு புறமாய், பல வண்ணத்துணிக் குடையின் கீழ்க் கிடந்த நாற்காலி ஒன்றில் அவன் அமர்ந்தபோது, ஐவர் அடங்கிய கும்பல் ஒன்று பார்லருக்குள் நுழைந்தது.

''மாங்கோ டூயட் இரண்டு, கஸாட்டா ஸ்லைஸ் இரண்டு, ஒரு இட்டாலியன் டிலைட்...'' என்று கவுண்டரில் ஆர்டர் கொடுத்தான் ரகு.

''சார். மற்றதெல்லாம் இருக்கிறது. இத்தாலியன் டிலைட் இப்போது இல்லை சார்'' என்றான் பில் போடுகிறவன்.

''எல்லாம் இருக்கும். நன்றாகத் தேடிப் பார்க்கச் சொல்!''

''மெய்யாலும் இல்லை சார். ஒன்றே ஒன்றுதான் இருந்தது. அதையும் ஒருவர் வாங்கிப் போய் விட்டார். ''ச்சு! என்னப்பா நீங்கள். தேவி உனக்குப் பிடித்தது இல்லையாம். வேறே என்ன?'' என்று ரகு கேட்டுக் கொண்டிருக்கும்போதே, ''இன்னமும் மூடியைத் திறக்க கூட இல்லை. இதோ உங்களுக்குப் பிடித்ததை நீங்களே சாப்பிடுங்கள்!'' என்று நீளமான இத்தாலியன் டிலைட் கப்பை அவளிடம் நீட்டினான் புவனமோகனன்.

''ஐயோ! நீங்கள் சாப்பிடவென்று ஆசையாய் வாங்கியது'' என்று அதை வாங்க மறுத்தாள் தேவி.

''பரவாயில்லை நான் ஏற்கெனவே ஒன்று...'' என்று புவனமோகனன் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே சரத்தும் ரகுவும் தேவியை மறைத்துக் கொண்டு அவள் முன்னே வந்து நின்றனர்.

''வேண்டாம் மிஸ்டர் நீங்களே அதைச் சாப்பிடுங் கள்'' என்ற ரகு, கவுண்டர் ஆளிடம், ''எங்கள் ஆர்டரைக் கான்ஸல் பண்ணி விடுங்கள்; இப்போது எங்களுக்கு எதுவும் வேண்டாம் விடுங்கள்'' என்று ரைத்து, தேவியை ஒரு கையால் பற்றியபடி ஐஸ்க்ரீம் பார்லரை விட்டு வெளியே அழைத்துச் சென்றான்.

முரட்டுத்தனம் காட்டாவிட்டாலும் இழுத்துச் சென் றான் என்றே சொல்லலாம்.

பதில் பேசாமல், மற்ற மூவரும் துரிதமாக வெளி யேறி விட, சிவந்த முகத்தைத் திருப்பிப் பின்புறம்

நோக்கிப் புவனமோகனனிடம் கெஞ்சும் பார்வையி லேயே மன்னிப்பு வேண்டியபடி தேவி, உடன் சென் றாள்.

அந்த இடத்தில் கையை உதறி விடுவித்துக் கொண்டு, 'நான் வரவில்லை' என்று மறுத்து ஒரு தகராறு நடக்க விருப்பம் இல்லாமல் பெரியப்பா மகனான, அண்ணனோடு சென்றபோதும், புவனமோக னனிடம் தன் உறவினர்கள் நடந்து கொண்ட விதம் தேவிக்கு மிகவும் அநியாயமாகப் பட்டது.

அப்படிப் புவனமோகனன் என்ன தப்புப் பண்ணி விட்டான்? அவன் உண்பதற்காக, விரும்பி வாங்கிச் சென்ற ஐஸ்கிரீம்! அவளுக்கும் அதுவே விருப்பம் என்று தெரிந்ததும் ஒரு ஸ்பூன் கூட உண்ணாமல் அதைக் கொடுக்க முன் வந்த தியாகி.

''பரவாயில்லை, சார். விரும்பி வாங்கியிருக்கிறீர் கள்! நீங்களே உண்ணுங்கள்'' என்று மரியாதையுடன் மறுத்திருக்கலாமே!

அதைவிட்டு இப்படியா ஒருவரை அவமதிப்பது?

அந்த நேரம் வாயைத் திறந்தால் அசிங்கமாகி விடக்கூடும் என்று அண்ணன் இழுத்த இழுப்புக்குப் பணிந்து, சென்றபோதும், வீடு சேர்ந்ததுமே தன் ஆத்திரத்தை வெளிப்படையாக உரைத்தாள்.

''அந்த ராஸ்கலாவது, தியாகியாவது? அவன் சரியான திருட்டுப் பயல் தேவி. நீ சின்னப்பெண். இதெல்லாம் ஒன்றும் தெரியாது. நாங்கள் யாவரும் உனக்குக் கெடுதல் செய்துவிட மாட்டோம் என்பதை

நினைவில் வைத்துக் கொண்டு பேசாமல் இரு'' என்றான் அவன்.

மறுநாளுடன் அந்தத் தள்ளுபடி விற்பனை முடிந்து விட இந்த ஒன்றுவிட்ட அண்ணன் தங்கைகளுக்கு ஒரே உற்சாகம். நிறைய விற்று விட்டார்களாம்.

டெலிஃபோனில் பெரியவர்களிடம் விவரம் சொல்லிவிட்டு, முன்னரே திட்டமிட்டபடி லாபத்தை ஐவரும் பிரித்துக் கொண்டு அவரவர், பணத்துக்கு வேட்டு வைத்தனர். ஆண்கள் இருவரும் பர்மா பஜார் போனார்கள்.

மோனியும், மைத்திரேயியும் ஃபவுண்டன் பிளாசாவுக்குச் செல்ல, சந்தடி ஜனநெருக்கம் பிடிக்காத தேவி ஸ்பென்சர் பிளாசாவுக்குப் போனாள்.

இப்படி ஒரு திட்டம் இருப்பதை அன்றைய பேச்சில் கிரகித்திருந்த புவனமோகனனும் எதேச்சை போல, ஸ்பென்சர் பிளாசாவில் தேவியைச் சந்தித்தான்.

அவனைப் பார்த்ததுமே தேவி முதல் வார்த்தையாக அவனிடம் மன்னிப்புக் கேட்டாள். ''ரகு அண்ணனும் மற்றவர்களும் அன்று உங்களிடம் நடந்து கொண்ட விதம் ரொம்பவும் தப்பு! ஆனால் எனக்காக அவர்களை மன்னித்து விடுங்கள்!'' என்றாள் குரலில் இறைஞ்சுதலோடு.

கண்ணில் சிரிப்புடன், ''இவ்வளவு கேட்டபிறகு மன்னிக்காமல் இருக்க முடியுமா? கட்டாயம் மன்னிக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. முதலில் இங்கே உட்காருங்கள்'' என்று அவளை உட்கார வைத்துவிட்டுச் சென்றான் அவன்.

சற்று நேரத்தில் அவன் திரும்பி வந்தபோது, அவனது கைகளில் இரண்டு கேக் துண்டுகள் இருந்தன.

பதிலாக ஒரு முறுவலைச் சிந்தியபடியே, கேக்கை வாங்கிக் கொண்டாள் தேவி.

இருவரும் பேசியபடியே கேக்கை உண்டனர்.

கேக் முடிந்ததும், எழுந்து சென்று ஒரு சிப்ஸ் பாக்கெட்டும், கோக்கும் வாங்கி வந்தான் அவன்.

பேச்சினூடே அதுவும் காலியாயிற்று.

உட்கார்ந்திருந்தது அலுத்துவிட, ஏசியின் மிதக் குளிரை ரசித்து அனுபவித்தபடியே தளம் தளமாக ஏறி இறங்கிச் சுற்றினார்கள்.

அன்று மாலையில் மற்ற நால்வரும் அவரவர் வாங்கிய பொருட்களைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வர, தேவி மட்டும் ஒன்றுமே வாங்கியிருக்க வில்லை.

அதிசயமாய் நோக்கியவர்களிடம், ''சில சுரிதார், ஹேர் பான்ட் எல்லாம் பார்த்து வைத்துவிட்டு வந்திருக் கிறேன் மோனி. இன்று போய் வாங்க வேண்டும்'' என்றாள் அவள்.

''நன்றாய் இருக்கிறதா? நாளை நானும் வரட்டு மா?'' என்றாள் மோனி.

''வே... வேண்டாம், மோனி. அங்கே எல்லாம் என்னை மாதிரி ஒல்லிக் குச்சிகளுக்குத்தான் சரி... அத்தோடு கறார் விலை! கொஞ்சமும் குறைக்க மாட்டார் கள். ஓர் ஐந்து ரூபாயாவது குறைத்து வாங்காவிட்டால் உனக்குத் தூக்கமே வராதே?'' என்றாள் தேவி.

அவளுக்கு மோனி தன்னுடன் வந்து விடுவாளோ என்று ஒரே கவலை! ஏனெனில், மறுநாளும் புவனமோகனன், அவளை ஸ்பென்சர் பிளாசாவில் சந்திப்பதாகச் சொல்லியிருந்தான்.

''இரண்டு கார் ஏசி. இன்னும சிலது வாங்க வேண்டியிருக்கிறது. நீங்கள் கவனமாக இருந்து கொள் வீர்கள் அல்லவா? தேவி, என்னம்மா, நீ மட்டும் தனியே செல்வது கொஞ்சம் கவலையாக இருக் கிறதே?'' என்றான் ரகு பெரியவனாய்.

''ஸ்பென்சர் பிளாசா பாதுகாப்பான இடம் தானே அண்ணா? அத்தோடு, மோனி, மைத்திக்கா போல எனக்குப் பேரம் பேசத் தெரியாது! கறாா் விலைக் கடைகள் மட்டும்தான் போகப் போகிறேன். அதனால் விலையில் ஏமாந்து விடுவேனோ என்கிற பயமும் இல்லை'' என்றாள் தேவி. ஆனால் அங்கும் சில கடைகளில் விலையில் பேரம் பண்ணலாம் என்பதை வேண்டுமென்றே மறைத்தாள்.

''தேவி சொல்வதும் சரிதான் ரகுண்ணா! ஆனால் தனியே வேறு எங்கேயும் போகாதேம்மா'' என்றான் சரத் அவளை ஆதரித்து.

எல்லோரும் அவளை மிகவும் எச்சரிக்க அவள் அதை அப்படியே பாவனையுடன், புவனமோகனனிடம் சொல்லிச் சிரித்தாள். ''எல்லோருக்கும் நான் சின்னப் பாப்பா என்கிற எண்ணம்''என்றவள். ஏதோ எண்ணத் தில் முகம் சிவந்தாள்.

''யாராவது தூக்கிக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வது என்று பயம் போல! என்னிடம் யார்

பேசினாலும் வரிந்து கட்டிக் கொண்டு வந்து விடுவார் கள்'' என்றாள் ஏதோ விளக்கம் போல.

புரிந்து கொண்டது போலப் புன்னகை செய்தான் புவனமோகனன்.

''உன்னிடம் மிகுந்த பிரியம் வைத்திருக்கிறார்கள் என்பது சந்தோஷம்தான். ஆனால் உன்னோடு யார் பேசினாலும் என்பதில்தான் ஒரு சிறு திருத்தம். யார் பேசினாலும் என்று இல்லை. நான் பேசுவதுதான் பிடிக்கவில்லை. ஆனால், அதற்காக அவர்களைக் குற்றம் சொல்வதற்கில்லை. நான்... நான் இல்லாதவன் தானே?'' என்று அவன் கூறவும் தேவி உருகி விட்டாள்.

''பணம் இருப்பதால் மட்டும் யாரும் உள்ளவர்க ளாகவோ, இல்லாதவர்களாகவோ ஆகிவிடுவது இல்லை. தெரியுமா?'' என்றாள் தேவி, சவால் விடுப வள் போலத் தலையைச் சிலுப்பி.

யாருக்கு இந்தச் சவால் என்று உள்ளூர நகைத்தான் புவனமோகனன்.

முன்னெச்சரிக்கையோடு அன்று முதலிலேயே நிறைய பொருட்களைத் தேவி வாங்கி விட்டிருந்தாள். எல்லோரும் அவரவர் வாங்கியதை மற்றவரிடம் காட்டு வதிலும், அதுபற்றிப் பேசுவதிலுமாக அன்றைய நாள் கழிந்தது.

இன்னமும் இரு தினங்கள் இப்படியே கழிந்தன.

இதற்குள், எதிர்காலம் பற்றிப் பேசும் அளவுக்குப் புவனனும் தேவியும் வந்திருந்தனர்.

அவனை ஒட்டி அமர்ந்து பெப்சியும் கோக்கும் அருந்தியபடி சமோசாவும் பஃப்பும் உண்பதின் சுகத்

துக்கு ஈடு உலகில் எதுவும் இல்லை என்று தேவி நிச்சயமாய் நினைத்தாள்.

இயன்ற மட்டும் மற்ற கடைகளைப் பீராய்ந்து விட்டு, இந்தத் தேவி ஸ்பென்சரில் மட்டுமாய் அப்படி என்னதான் கண்டாளோ நாமும் அதைக் கொஞ்சம் ஆராயலாமே! என்று எண்ணி அங்கே வந்து சேர்ந்த மோனியும் மைத்திரேயியும், அங்கே அவர்களுடைய தேவி, ஓர் அன்னியனோடு அருகமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த விதம் கண்டு திகைத்துப் போனார்கள்.

அவர்களை முதலில் கண்டு கொண்டது புவனமோ கனன் தான். பார்த்ததுமே தேவியிடம் தலைசரித்து மெல்லிய குரலில் எச்சரித்து விட்டு அவள் கையிலிருந்த காலி பெப்சி கப்பை வாங்கியபடியே எழுந்தான்.

அருகில் இருந்த குப்பைத் தொட்டியில் காலி கப்புகளைப் போட்டு விட்டு அவன் திரும்பி வந்த போது, மற்ற இரு பெண்களும் தேவி அருகே வந்திருந்தனர்.

புன்னகையோடு, 'ஹலோ!'' என்றவனிடம் என்ன சொல்வது என்று புரியாமல் அவர்கள் விழிக்க தேவி, இருபாலாருக்கும் இடையே அறிமுகம் செய்து வைத்தாள்.

சங்கடத்தையும், சஞ்சலத்தையும், மறைத்துக் கொண்டு, நாகரீகம் கருதி, இரண்டு வார்த்தை பேசி விட்டு, தேவியை அழைத்துக் கொண்டு மைத்தியும் மோனியும் கிளம்பினர்.

மறுநாள் வழக்கம்போலச் சந்திப்பதாகத் தேவி கூறியதும் இருவருக்கும் அதிர்ச்சிதான்.

அன்றிரவு வீட்டில் ஒரு சிறு புயல் வீசியது.

''தேவி, அவன் யாரென்றே உனக்குத் தெரியாது. அவனையெல்லாம் நம்பக் கூடாதும்மா!'' என்றான் சரத்.

''அவர் யாரென்றே தெரியாமல் அவரை நம்ப லாமா கூடாதா என்று எப்படி சொல்ல முடியும் சின்னண்ணா'' என்று தேவி கேட்கவும் அவன் விழித் தான்.

அவர்களால் தேவி, புவனமோகனன் சந்திப்பைத் தடுக்க முடியாமல் போகவும், அவசரமாகப் பெரியவர் களை வரவழைத்தார்கள்.

பொதுவாகத் தேவி உறவோடு ஒத்துப் போகிறவள் தான் என்றாலும், ஒரேயடியாகப் பணிந்து போகிறவள அல்ல! அப்படிப் பணிய வைத்து, அவளுடைய உறவினருக்குப் பழக்கமும் இல்லை. அத்தோடு, பெற் றோரை இழந்தவள் என்பதால் எந்த அளவு அவளைப் பாதுகாத்தார்களோ, அதேபோல அவளுக்குச் சலுகை யும் தந்தேதான் வளர்த்தார்கள்.

எனவே, கடுமையான வார்த்தைகள் அந்த வீட்டில் பழக்கம் அற்றவை!

பெரியப்பா, சித்தப்பா மக்கள் புவனமோகனனுக்கு நியாயம் செய்யவில்லை என்ற எண்ணம் கொண்டு, அதற்கு ஈடு செய்ய வேண்டும் என்று நினைத்திருந்த தேவி, வீட்டுப் பெரியவர்களைக் கண்டதும் உள்ளூர விறைப்புற்றாள்.

அவர்களும் சேர்ந்து கொண்டு, புவனமோகனன் பழக்கத்தை வெட்ட முயலவும் அவளது பிடிவாதம்

வலுப்பெற்றது. அதென்ன, ஒருவனிடம் பேசிப் பழகிப் பாராமலே ஒதுக்கி விடுவது என்ற கோபம் அவளுக்கு.

தேவியிடம் பேசிப் பயன் இல்லை என்று கண்டதும் எல்லோரும் புவனமோகனனிடம் முயன்றனர்.

அவனுக்குப் பணம் தருவதாகவும், அதை வாங்கிக் கொண்டு தேவியை விட்டு விலகி விடவேண்டும் என்றும், அவனுக்கு விலை பேசினர்.

அது அவர்கள் செய்த இமாலயத் தவறு.

ஏனெனில், அப்படி அவர்கள் கொடுத்த பணத்தைப் புவனமோகனன் பயன்படுத்திய விதத்தில் தேவி அடியோடு குடும்பத்தைத் துறந்தாள்!

புவனமோகனனைச் சந்தித்துப் பேசுமுன், தேவியிடம் கிருஷ்ணன் ஒரு கேள்வி கேட்டார். ''தேவிம்மா! உனக்கு வர இருக்கும் பணம் பற்றி நீ ஒன்றும் அந்த - அந்தப் பையனிடம் சொல்லி விடவில்லையே?'' என்று கவலையுடன் வினவினார்.

பொருள் புரிந்து, அவரை முறைத்தாள் பெண்.

''சொல்லும்மா!''

''மனிதர்களிடம் உங்களுக்கு இன்னும் கொஞ்சம் நம்பிக்கை இருக்கலாம், சித்தப்பா! அவர் ஒன்றும் அப்படிப் பணத்தாசை பிடித்தவர் அல்ல; நானும், நீங்கள் நினைக்கிற அளவு முட்டாள் அல்ல! இந்த வீடு கூட, அப்பா பெயரில் இருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறேன்!'' என்றாள் அவள் ரோஷத்தோடு.

பரம்பரைப் பணக்காரரான அவருக்குப் புவனமோகனன் நடத்திக் கொண்டிருந்த தொழிலோ, அந்தத்

தொழிலை அவன் நடத்தி வந்த இடமோ அவனது நண்பர்களோ... எதுவும் பிடிக்கவில்லை.

எனவே, புவனமோகனின் உபகாரத்தை ஒதுக்கி விட்டு, அவர் நேரடியாக விஷயத்துக்கு வந்தார். ''உனக்கு ஒரு லட்ச ரூபாய் தருகிறேன், எங்கள் பெண்ணை விட்டுவிடு'' என்றார்.

முகம் மாறாமல் அவன் பார்த்துக் கொண்டு இருக்க, ''அதிகபட்சமாய் ஒரு லட்சம் தருகிறோம். என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டார்.

லேசாக விழி இடுங்க நோக்கிவிட்டு, ''உங்கள் விருப்பம்'' என்றான் புவனமோகனன் சுருக்கமாக.

வந்த காரியம் இவ்வளவு எளிதாக முடியும் என்று எதிர்பார்த்திராத கிருஷ்ணன், மகிழ்ச்சியோடு ஒரு லட்ச ரூபாயை அவன் முன்னே எடுத்து வைத்து விட்டுக் கிளம்பினார்.

கவலையோடு காத்திருந்த மற்றவர்களிடம், ''சனி விட்டது'' என்று பெருமையோடு கூறியவர், அடுத்த ஒரு மணி நேரத்தில், வெள்ளை வெளேரென்று புத்தம் புது உடையணிந்து அங்கே வந்து நின்ற புவனமோகன னைக் கண்டு திடுக்கிட்டார்.

அவர் மட்டுமல்ல! உற்சாகத்துடன் மாலை காபி, டிபனுக்காகக் கூடியிருந்த வீட்டினர் அத்தனை பேருமே திகைப்புடன்தான் நோக்கினர்.

புவனமோகனன் அவர்களில் யாரையும் பார்த்ததா கக் கூடக் காட்டிக் கொள்ளவில்லை. வியப்பும் மகிழ்ச்சி யுமாக, இமை தட்டாமல் அவனைப் பார்வையாலேயே

வரவேற்ற தேவியிடம் நேராகச் சென்றான். 'பான்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு சிறு நகை டப்பாவை எடுத்துத் திறந்தான்.

நடுவில் ஒரு பெரிய கல்லும் சுற்றிலும் சற்றே சிறிய அளவுள்ளவையுமாக வைர மோதிரம் ஒன்று அங்கே ஒளிவீசிக் கண்ணைப் பறித்தது.

மோதிரத்தைக் கையில் எடுத்து, ''என்னை மணந்து, உன் எதிர்காலத்தை என்னோடு இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையோடு உன்னிடம் வந்திருக்கிறேன், தேவி! அதன் அடையாளமாக இந்த மோதிரத்தை ஏற்றுக் கொள்வாயா?'' என்று கேட்ட புவனமோகனன், அவளது இடது கையைப் பற்றி மோதிர விரலில் அந்த மோதிரத்தை அணிவித்தான்.

கண்கள் மேலும் விரிய, கன்னம் குழிய நகைத்த வாறு, ''என்ன மோகன், திடீரென்று என்ன அவசரம்?'' என்று ஆச்சரியத்துடன் வினவினாள் தேவி.

அவசரமாக எழுந்த கிருஷ்ணனிடம் ஓர் அலட்சி யப் பார்வையைச் செலுத்தி விட்டு, புவனன் மீண்டும் தேவியிடம் திரும்பினான்.

''உனக்கு ஏற்ற மாதிரி, இப்படி வைரமோதிரம் வாங்கப் பணத்துக்கு எங்கே போவேன் தேவி. உன் சித்தப்பா, இன்று மதியத்துக்குமேல் என்னை வந்து சந்தித்து, உன்னை மறந்து விடும்படி உத்திரவிட்டு மறப்பதற்கு ஒரு விலையாக ஒரு லட்சம் ரூபாய் தந்துவிட்டுப் போனார்!'' என்றான், குரலில் ஏளனம் தொனிக்க.

கண்களில் கனல் எழ சிறிய தந்தையின் பக்கம் திரும்பினாள் தேவி. அவர் முகத்தில் எதையோ கண்டு கொண்ட அவளது பார்வை, வேகமாக அங்கிருந்த அனைவரையும் வலம் வந்தது. ''இன்றைய அதிகப்படி உற்சாகத்தின் காரணம் இப்போது புரிகிறது'' என்று ஏளனமாக உரைத்தவள் மீண்டும் புவனமோகனனைப் பார்த்தாள். ''திருமண ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்தில் திருமணப் பதிவுக்காக நம் பெயர்களைக் கொடுத்து விடுங்கள், மோகன். பதினைந்து நாட்களுக்கு நம் பெயர் அங்கே அறிவிப்புப் பலகையில் இருக்க வேண்டுமாமே! நாளையிலிருந்து பதினைந்தாவது நாள் நம் திருமணம் அங்கே நடக்கும்!'' என்றாள் உறுதியான குரலில்.

## 9

**பெ**ரிய சிறிய தந்தையாரும் அவர்களுடைய குடும்பத்தினரும் எவ்வளவு கெஞ்சிக் கூத்தாடியும் தேவி தன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை.

அவளுக்கு மறைத்து அவளது வாழ்வு பற்றி மற்றவர்கள் சதி செய்ததையும், புவனமோகனனிடம் பணத்தை நீட்டி அவனை அவமானப்படுத்தியதையும் அவளால் கொஞ்சமும் மன்னிக்க முடியவில்லை.

தேவியின் பிடிவாதத்தை மாற்ற முடியாது என்பதைக் கண்டு கொண்டு, திருமணத்தை குடும்ப வழக்கம் போல நடத்தி வைப்பதாக, அவர்கள் சொன்னதையும் அவள் ஏற்கவில்லை.

"இப்படி என்று தோன்றிவிட்டது, பெரியம்மா. இப்படித்தான் நடக்க வேண்டும் என்பது விதி என்று நினைக்கிறேன்" என்றாள்.

இங்கே புவனமோகனனிடம் குணாவும் சபாவும் கேட்டார்கள். "என்னதான் கோபதாபம் என்றாலும், உன் பெற்றோருக்கு நீ ஒரே பிள்ளை புவனா! திருமணத்துக்கு அவர்கள் வரவேண்டாமா? அம்மாவுக்குத் தெரியாமல் செய்வது தப்பு!" என்றெல்லாம் வாதாடினார்கள்.

"உண்மைதான்" என்று ஒத்துக் கொண்ட புவன மோகனன், சற்று யோசித்துவிட்டு, "ஆனால், அவர்கள் வந்தால், என் திட்டமெல்லாம் தலை கீழாகிவிடுமே. அதனால் சொல்ல வேண்டாம்" என்று முடிவு செய்தான்.

திருமணம், ஒரு சாதாரண ரிஜிஸ்டர் திருமணம் போல எளிமையாக நடந்து முடிந்தது. தேவியை விட்டுக் கொடுக்காமல் அவளுடைய உறவினர் எல்லோருமே வந்து விட்டுப் போனார்கள்.

திருமணத்தின்பின், புவனமோகனன் மட்டும் தேவியோடு, அவளுடைய வீட்டிலேயே வசிப்பதாக ஏற்பாடு ஆயிற்று. அதற்கு வசதியாகக் கீழ் வீட்டில் குடியிருந்தவர்களைக் காலி செய்ய வைத்து குடித்தனத்துக்கு வேண்டிய எல்லாவற்றையும் வாங்கி வைத்து விட்டே தேவியுடைய சித்தியும் பெரியன்னையும் சென்றனர்.

திருமணமாகிப் பத்து நாட்கள் சென்றபின் இருவரும் ஒருநாள் மாலையில் திரைப்படத்துக்குப் போய் விட்டு வந்தார்கள்.

இரவு உணவின்பின், அவளது கை விரல்களைப் பிடித்து விளையாடியபடியே பேசிக் கொண்டிருந்த புவனமோகனன், பேச்சுப் போக்கிலேயே, ''ஒரு பிசினஸ் முடிக்க, இருபத்தைந்து லட்ச ரூபாய் தேவைப்படுகிறது, தேவி கிடைக்குமா?'' என்று கேட்டான்.

தேவி பேசாமல் எழுந்து உள்ளே செல்லவும், புவனனுக்கு முதலில் துணுக்கென்றுதான் இருந்தது.

ஆனால், விரைவிலேயே உள்ளிருந்து திரும்பி வந்த தேவி, இருபத்தைந்து லட்ச ரூபாய் என்று எண்ணாலும் எழுத்தாலும் எழுதி, முன்னும் பின்னுமாய்க் கையெழுத்திட்ட காசோலையை அவன் முன்னே டீபாயில் வைத்து விட்டு அருகே அமர்ந்து, அவன் தோளில் சாய்ந்து கொள்ளவும், அவனேகூடச் சற்று நேரம் மலைத்துதான் போனான்.

''இது எதற்கென்று தெரிய வேண்டாமா, தேவி?'' என்று அவன் கேட்டபோது, ''உங்களுக்குத் தேவை; என்னிடம் இருக்கிறது! அதற்குமேல் என்ன?'' என்று அவள் இலகுவாகச் சொன்னாளே தவிர, எந்த விவரமும் அவனிடம் கேட்கவே இல்லை.

ஆனால், செக்கைத் தன் பெயரில் புவனன் கட்டப்போனபோது, பாங்கில் அவர்கள் அவ்வளவு எளிதாக அதை ஒத்துக் கொள்ளவில்லை! பத்து முறை தேவியின் கையெழுத்தைச் சரி பார்த்தார்கள். டெலிஃபோனில் கேட்டார்கள். வீட்டுக்கே ஆள் அனுப்பி விசாரித்தபிறகே செக்கை 'பாஸ்' செய்தார்கள்.

அந்த வீட்டைப் புவனமோகனன் மேற்கொண்டு பூச்சு வேலை எல்லாம் முடிந்த கொஞ்ச நாளிலேயே

அதை மீண்டும் வாங்கிக் கொள்ள ஓர் ஏமாளியும் அவனுக்குக் கிடைத்தான்.

'தற்கொலை அது இது என்கிறார்களே'' என்று சற்றே தடுமாறிய அந்த மனிதனிடம், ''அது ஒரு சினிமா பட ஒத்திகை! 'கறுப்பாய் வாந்தி எடுத்தான் என்பது எப்படிக் காக்காயாய் வாந்தி பண்ணியதாக மாறி விடுமோ, அதேபோல நம் ஊர் வம்பர் மகாஜனங்கள் கதைக்கு மேல் கதையாக்கி அந்த சினிமாப் பட ஒத்திகையை, மெய்யான தற்கொலையாகவே ஆக்கி விட்டார்கள்'' என்று அளந்து விட்டான் புவனமோகனன்.

உண்மை அறிந்து இப்போது இந்த வீட்டுக்குக் கிராக்கி மேல் கிராக்கி வருவதாக அவன் கூறவும், வீடு கை நழுவிப் போய்விடுமோ என்று அஞ்சி வாங்கிக் கொண்டார் அவர்.

நிகர லாபமாய்ப் புவனனுக்குப் பல லட்சங்கள் கிடைத்தன.

முன்னரே அவன் திட்டமிட்டிருந்தபடி, இந்தப் பணத்தில் தேவியிடம் வாங்கிய இருபத்தைந்து லட்சத் தோடு, அதற்கு இரண்டு வட்டி கணக்கிட்டுச் சேர்த்து, அவள் கணக்கில் கட்டினான்.

பிறகு இவ்வளவு நாட்களாக அவன் மனைவிக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டவை களை எல்லாம் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான்.

திரும்புகிற வழியில், சபாவும் குணாவும் வீடு நோக்கி வந்து கொண்டிருந்ததைக் காணவும் அவர்களை யும் கூடவே அழைத்துக் கொண்டு வந்தான்.

''இன்னமும் அம்மா திரும்பி வரவில்லை'' என்றாள் அந்த உம்மாணா மூஞ்சி வேலைக்காரி.

அவளுக்குத் தன் தேவதை எஜமானியம்மா, தகுதியற்ற ஒருவனைக் கல்யாணம் செய்து கொண்டதாக ஒரு கடுப்பு. புவனமோகனனிடம் பேசும்போது, அவள் முகத்தில் சிரிப்பே இராது. ஆனாலும், தேவிக்கு அவளிடம் மிகுந்த அன்பு என்பதால் புவனன் அவளைப் பொறுத்துப் போவான். ஆனால் தேவிக்கு எல்லோரிடமுமே அன்புதான்.

ஒரு தோழியைச் சந்திக்கப் போவதாக அவள் சொல்லியிருந்ததால், பாங்க்கில் இறங்கிக் கொண்டு அவன் காரைத் திருப்பி அனுப்பியிருந்தான்.

நாலு மணிக்குத்தான் வெளியே செல்லப் போவதாகத் தேவி சொல்லியிருந்தபோதும், அவளுக்கோ, அவளது காரின் டிரைவருக்கோ தெரியாமல் பல சாமான்கள் வாங்க வேண்டியிருந்ததால் புவனன், காரை உடனே அனுப்பி விட்டான்.

விரும்பிய பொருட்களை, விரும்பிய வண்ணம் அலைந்து திரிந்து வாங்க இவ்வளவு நேரம் ஆகக்கூடும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

ஆனால், நாலு மணிக்குத் தோழியைச் சந்திக்கக் கிளம்பிச் சென்ற தேவி, மணி ஆறரை ஆகி, இருள் கலையத் தொடங்கிய பிறகும் திரும்பி வரவில்லையே என்று புவனனுக்குக் கொஞ்சம் கவலையாகத்தான் இருந்தது.

ஆனால், காரும்தான் திரும்பி வரவில்லையே! தோழிகள் பேச்சில் நேரம் போவது தெரிந்திராது என்று உள்ளூரச் சமாதானமும் செய்து கொண்டான் அவன்.

சபா, குணா இரண்டு பேருக்கும் இந்த 'டீல்' நல்லபடியாக முடிந்ததில் மிகுந்த மகிழ்ச்சி! அத்தோடு, புவனனும், அவர்கள் இருவருக்கும் ஆளுக்கு ஒரு லட்ச ரூபாய் கொடுத்திருந்தான்.

புவனனின் திருமணம் வரையிலாவது, அவனது பணிகளையும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். இப் போது ஒன்றுமே இல்லாமல் இவ்வளவு பணம் அவன் தரவும், "எதற்கு புவன்? செய்தது எல்லாம் நீதானே?" என்றார்கள்.

"முன்பாவது அவ்வப்போது ஆள்காட்டி விடு வோம். பொருள் இருப்பது வந்து சொல்வோம். இந்த வீட்டு விஷயம் முழுக்க முழுக்க உன் வேலைதானே..." என்று தொடங்கியவர்களை உதட்டின்மீது விரல் வைத் துக் காட்டி வாய் மூட வைத்தான் புவனன்.

உட்புறம் திரும்பி, "ஆயா!" என்று குரல் கொடுத் தான். அவள் வந்ததும், "தோட்டத்தில் இருக்கிறேன். அம்மா டெலிஃபோன் செய்தால் கூப்பிடு... வேறு யாரும் தேடி வரவில்லையே?" என்று விசாரித்தான்.

தேவி வெயில் தாங்க மாட்டாள். சோர்ந்து சுருண்டு விடுவாள். எனவே, அவளுக்காக புவனன் ஒரு போர்ட்டபிள் ஏசி வாங்கியிருந்தான். கோடவுனில் இருந்து எடுத்து உடனேயே அனுப்பி விடுவதாகக் கடைக்காரர் சொல்லியிருந்தார். அவர் சொன்னபோது மணி இரண்டு. அதை எதிர்பார்த்தே புவனன் கேட்டது.

யாரும் வரவில்லை என்று சொல்லிவிட்டு ஆயா திரும்பிச் சென்று விட்டாள்

நாளைக் காலையில் முதல் வேலை இந்தக் கடைக்காரரோடு பேசுவது என்று மனதுள் குறித்துக் கொண்டு, நண்பர்களோடு தோட்டத்துக்குச் சென்றான் புவனன்.

''இங்கே நின்று பேசுவோம்! தேவி காரில் வந்தால் உடனே கண்ணில் படும்'' என்று பக்கவாட்டில் ஒரு பூப்பந்தல் அருகே நின்றான்.

''ஓகோ!'' என்று சிரித்தான் சபா! ''பணத்துக்காக ஏமாற்றி மணந்த பெண்ணிடம் அவ்வளவு பயமா?'' என்று கேட்டான்.

''பயம் என்று ஒன்றுமில்லை! ஆனால் அது விவரம் அவளுக்குத் தெரிவது எனக்கு விருப்பம் இல்லை'' என்றான் புவனன்.

''பயம் இல்லை என்று நீ சொன்னால் நம்பிக் கொள்கிறோம்பா'' என்று குணா கூற மீண்டும் ஒரு சிரிப்பு அலை பரவியது.

''ஆனால் அந்த முப்பது லட்ச ரூபாய் விஷயம் அடுத்த அடைப்பில், சேர் மறைவில் நின்ற உன் காதில் விழுந்தது. முழுக்க முழுக்க நம் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். இல்லையா புவன்?'' என்று அதிசயப்பட்டான் குணா.

''மெய்தான்! அதிர்ஷ்டம்தான்! ஆனால் எப்போதுமே புவனனுக்கு அதிர்ஷ்டம் கைகொடுத்துக் கொண்டேதான் இருக்கிறது'' என்ற சபா, திடுமென விழுந்து விழுந்து சிரித்தான்.

''என்னடா? ஏய் என்னடா? சொல்லிவிட்டுச் சிரியேன்?

''அதில்லையடா! அன்றைக்கு அந்த கிரைண்டரை வாங்கி வந்தானே! மாவரைக்கப் போகிறாயே என் றோமே! கடைசியாகப் பார்த்தால் வீட்டோடு மாப்பிள் ளையாகவே ஆகிவிட்டான். அந்த வேலைக்காரி முகத்தை பார்த்தால் எப்போது மாவாட்ட வைக்கலாம் என்று துடித்துக் கொண்டு இருப்பது போலத்தான் தெரிகிறது. ஜாக்கிரதை புவன்!'' என்றுரைத்து மேலும் சிரித்தான் அவன்.

''சேச்சே! புவனனின் 'லக்' அதற்கெல்லாம் இடம் கொடுத்து விடாது! ஆனால் அந்த 'டேபிள்டாப் கிரைண்டரில் உன் அதிர்ஷ்டம் கொஞ்சம் மட்டுப்பட்டுத் தான் போய்விட்டது, புவனா! பழைய விலைக்கு விற்றதில், பாதி விலைக்குத்தான் போயிற்று'' என்றான் குணா.

''அதனால் மட்டும் அதிர்ஷ்டம் குறைவென்று சொல்லிவிட முடியுமா? 'பெரிய மீனைப் பிடிக்க உதவும் சின்னமீன்' என்றுதானே, புவனன் அதை வாங்கி வந்தான். அப்படிப் பார்த்தால், அரைவிலை கிடைத்ததும் லாபம்தானே?'' என்றான் சபா.

''சரிசரி. இந்தப் பேச்சு போதும் சபா! நான் இந்த ஒரு லட்சம் எதற்குத் தந்தேன் என்று சொல்லி விடுகிறேன். இதை வைத்து ஏதாவது தொழில் செய்து உருப்படியாகப் பிழைக்கத் தொடங்குங்கள். பணம் போதாது என்றால் கேளுங்கள். இன்னும் தருகிறேன்...'' என்ற புவனமோகனன், வாயிற்புறமாய் கேட்டருகே

ஒரு கார் தயங்கி நிற்கவும், ''தேவியா?'' என்று முன்னே சென்றான்.

''புவன், அப்படியானால் நாங்களும் கிளம்புகிறோம்பா! ஆனால்... சரி. அதெல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம்?'' என்று நண்பர்கள் இருவரும் கிளம்ப, அவர்களை வழியனுப்ப சுற்றுமதில் கேட் வரை, கூடச் சென்றான் புவனன்.

புவனன் அருகில் வரவும், அட்டென்ஷனில் நின்று, கூர்க்கா சலாம் வைத்தான்.

''கார் நின்றதே'' என்ற கேள்விக்கு, அட்ரஸ் கேட்டாங்கோ, சாப்!'' என்று கூர்க்கா கூறவும் நண்பர்களை வழியனுப்பி விட்டு வீட்டினுள் சென்றான்.

சுற்றி அலைந்த களைப்பும், அழுக்கும் மாற தேவி வருமுன் குளித்து விடலாம் என்று குளியல் அறைக்குள் புகுந்தான்.

ஷவரின் பூஞ்சிதறலை அவன் அனுபவித்துக் கொண்டு இருந்தபோது கீழே கார் வந்த சத்தம் கேட்டது.

தேவி வந்து விட்டாள்.

அவசரமாகக் குளியலை முடித்து, உடைமாற்றிக் கொண்டு அவன் சென்றபோது, தேவி 'சிட்அவுட்'டில் விளக்கைப் போடாமலே உட்கார்ந்திருந்தாள்.

அருகில் சென்று உச்சியில் உதடு பொருத்தி, ''என்னடா இருட்டில் உட்கார்ந்திருக்கிறாய்? வா! உள்ளே வா! உனக்கு ஒன்று ஊகூம்.. சிலது காட்ட வேண்டும்'' என்று அவளை எழுப்பி உள்ளே அறைக் குள் அழைத்து வந்தான்.

அறையினுள் அவன் போட்டு வைத்திருந்த விளக்குகளில் ஒன்றைத் தவிர மற்றவற்றை அணைத்துவிட்டு, ஏனென்று கேட்டவனிடம், ''கண் கூசுகிறது'' என்றாள் அவள் மெல்லிய குரலில்.

''ஏன்? எல்லா விளக்குகளும் எரிந்தது அதிகப் பிரகாசம் ஆகிவிட்டதா? சரி, பரவாயில்லை. இந்த ஒரு விளக்கே போதும், இதோ பார். தேவி, நான் உனக்கு என்னவெல்லாம் வாங்கி வந்திருக்கிறேன்!'' என்று தான் வாங்கி வந்த பொருட்களை, ஒரு பள்ளிச் சிறுவனின் உற்சாகத்துடன், கடை பரப்பினான் புவன மோகனன்.

''பார், இந்த ஜரிகைக் கட்டமிட்ட ஆரஞ்சு வண்ணச் சேலை. ஒரு நாள் ஷோ கேசில் பார்த்தேனா, அன்றிலிருந்து உனக்கு இதை வாங்கிவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டே இருந்தேன். இந்த ஹேர் பின் பார், வெள்ளியில் செய்தது, அப்புறம் காதுக்கு இந்த 'டிராப்ஸ்' பார். பவளமும், முத்துவுமாக இந்தச் சேலைக்குச் சரியாக வாங்கினேன்...''

எதையும் கையில் வாங்கிப் பாராமல் அவள் அசையாது நிற்க, அவன் ஒவ்வொன்றாகக் காட்டி, அருகில் கிடந்த டீபாயின் மீது வைத்துவிட்டு அடுத்ததை எடுத்தான்.

எல்லாவற்றையும் எடுத்துக் காட்டிவிட்டு, ''பிடித்திருக்கிறதா?'' என்று அவன் கேட்டபோது ''இதற்கு அவசியம் இல்லை'' என்றாள் அவள் சுருக்கமாக.

''ஏன்? ஏன் அவசியம் இல்லை? அடடா! இதெல்லாம் ஏற்கெனவே உன்னிடம் இருக்கிறதா?'' என்றான் புவனன், குரலில் ஏமாற்றத்துடன்.

''இல்லை. என்னிடம் இதில் எதுவும் இல்லை. ஆனாலும் இதெல்லாம் நீங்கள் வாங்கி வரவேண்டிய அவசியம் இல்லை!'' என்றாள் அவள், அதே குரலில்.

''ஏ..ன்? ஏய், ஏன் குரல் ஒரு மாதிரி இருக்கிறது? உடம்பு கிடம்பு சரியில்லையா? எங்கே பார்ப்போம்...'' என்றபடி அவளது நெற்றியை அவன் தொட்டுப் பார்த்தபோது, சட்டெனப் பின்னடைந்து, ''இதற்கும் அவசியம் இல்லை'' என்றாள் அவள் சற்று அழுத்த மான குரலில்.

''நீ சொல்வது புரியவில்லையே. என்ன விஷயம்?''

ஒரு பெருமூச்சு விட்டு, ''பணம் கிடைத்துவிட்ட பிறகும், எதற்காகக் கஷ்டப்பட்டு நடித்தாக வேண்டும்?'' என்றாள் தேவி.

''தேவி!'' அதிர்ந்து போய் நின்றான் புவனமோக னன்.

## 10

**சி**ல கணங்கள் புவனமோகனனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

இவள் என்ன சொல்கிறாள்? விஷயம் தெரிந்து சொல்கிறாளா? அல்லது யாராவது போதனை ஏற்றியி ருப்பார்களா? இன்று சந்திக்கச் சென்றாளே, அந்தத் தோழி...? ஆனால், இவள் அப்படிப் பிறர் பேச்சை ஏற்கிறவள் இல்லையே! மிகவும் நெருங்கிய சுற்றத்தின ரின் பேச்சைக்கூட அலட்சியம் செய்தவள் ஆயிற்றே.

''தேவிம்மா... நீ...'' என்று ஏதோ சொல்லத் தொடங்கியவனைத் தலையசைத்து நிறுத்தினாள் தேவி.

''நீங்களும், உங்கள் நண்பர்களும் தோட்டத்தில் பேசிக் கொண்டிருந்ததை நானே கேட்டேன்'' என்று தவிப்பை மறைக்க முயன்றபடி அவள் கூறவும் புவன மோகனன் செய்வதறியாது திகைத்தான்.

ஒரு சந்தேகம் தெளிவதற்காகத் தேவி அன்று டாக்டரிடம் சென்றிருந்தாள். சோதனை எல்லாம் முடிந்து, டாக்டருடன் அவள் பேசிக் கொண்டு இருந்த போது, டாக்டரை ஓர் அவசரக்கேசில் அழைத்தார்கள். டாக்டரின் கார்; மெக்கானிக் ஷெட்டுக்குப் போயிருக் கவே, தேவி தன் காரை டாக்டருக்குக் கொடுத்தாள்.

வீட்டின் காம்பவுண்டின் அடுத்த பிளாட்டில் அவர் களுடைய கோடவுன் இருந்தது. கோடவுனை அடுத்தி ருந்தது மெயின்ரோடு. இங்கே வீடுவரை வந்து, ஒன்வேயில் சுற்றிக் கொண்டு இருக்க வேண்டாம் என்று தேவி, கோடவுன் வாயிலில் இறங்கி, குறுக்கே நடந்து வீட்டுக்கும், கொடவுனுக்கும் இடையே இருந்த சிறு கேட்டைத் திறந்து விடச் சொல்லி, அப்படியே வீட்டுக்கு வந்தாள்.

ஆயாவை அழைத்து ஏதோ கேட்டு விட்டு நண்பர்களுடன் புவனமோகனன் வீட்டைவிட்டு வெளியே வந்து கொண்டிருந்தான்.

தன் செய்தியைக் கணவனிடம் தனிமையில் சொல் லத் துடித்துக் கொண்டு இருந்த தேவிக்கு, அப்போது வேறு யாருடனும் பேசிக் கொண்டிருக்க மனம் இல்லை.

புவனனும் நண்பர்களும் வீட்டுப் பக்கமிருந்து வெளியே வந்தபடியால், காபி, டிபன் போன்ற விருந்தோம்பல் உபசாரங்கள் ஒழுங்காகவே நடந்திருக்கும் என்று எண்ணியவள் அப்படியே செடி மறைவில் அமர்ந்து விட்டாள்.

அதன் பிறகு அவள் மீது கொட்டப்பட்டது குடம் குடமாய்க் கொதிநீர்.

முழு விவரத்தையும் தேவி, கணவனிடம் சொல்லவில்லை. சொல்ல அவளுக்கு மனமும் இல்லை. அவனது உண்மை தெரியும். ஐயம் திரிபறத் தெரியும் என்பதை மட்டும் தெரிவித்தாள்.

ஐயோவென்று இருந்தது புவனமோகனனுக்கு.

என்ன மாதிரிச் சமயத்தில் போய் எப்படி அடி விழுந்து விட்டது.

ஆனால் அதற்காக எல்லாவற்றையும் விட்டுவிட முடியுமா, என்ன? எப்படியாவது அவளுக்குத் தன் நிலை உணர்த்தியே ஆக வேண்டும்.

''தேவிம்மா...'' என்று குழைவான குரலில் அழைத்த படி மனைவியை நெருங்கினான்.

மீண்டும் பின்னடைந்து, ''வேண்டாம்'' என்றாள் அவள்.

''என்ன வேண்டாம். தேவி நீ என்ன சொல்கிறாய்? முதலில்... கேட்டு விடு...'

''வேண்டாம்'' என்றாள் தேவி. மூன்றாம் முறையாக ''என்ன வேண்டும் என்று திட்டமிட்டு இந்தத்

திருமணம் செய்தீர்களோ, அது உங்களுக்குக் கிடைத்து விட்டது. அது கிடைப்பதற்காக நடிக்கப்பட்ட நாடகங் கள் இனித் தொடர வேண்டாம்'' என்றாள் அவள் தீர்மானமாக.

''இது நாடகம் அல்ல, தேவிம்மா?''

தேவியின் முகத்தில் இருந்த நம்பாத தன்மை அவனைச் சுட்டு தொலைதூரத்துக்கு அப்பால் கொண்டு போய்த் தள்ளிற்று. கூடவே, அவளது அடிபட்டு வலியில் சுருண்டு விட்ட தோற்றம் அவனையும் அந்த வேதனை அனுபவிக்க வைத்தது.

'இவளை எப்படித் தேற்றுவது? இனி, இந்தப் பிழை பிழையே நேராது என்று எப்படி நம்ப வைப்பது?'

அவசரமாக அவனது ப்ரீஃப் கேசைத் திறந்து, அவன் கணக்கில் வட்டியோடு பணம் கட்டிய செல் லானை எடுத்துக் கொண்டு வந்து அவளிடம் காட்டி னான்.

''பார் தேவி, பார்!'' என்று அவள் கண்முன்னே அந்தத் துண்டுக் காகிதத்தை பிரித்து விரித்துக் காட்டி னான்.

ஆனால், அவளோ, ''இதுவும் அவசியம் இல்லை'' என்றாள் வெறுத்த குரலில்.

''இருக்கிறது. அவசியம் இருக்கிறது தேவி! இந்தப் பணத்தை நான், உன்னை ஏமாற்றி அடித்துக் கொண்டு போய்விடவில்லை கண்ணம்மா!''

''அதாவது இந்தப் பணத்துக்காக நீங்கள் என்னை ஏமாற்றவே இல்லை என்கிறீர்களா?''

''தேவி, ப்ளீஸ்... நான் சொல்ல வருவது அது வல்ல!''

தேவியின் பார்வை எங்கோ வெறித்தது. ''எல்லோ ரும் சொன்னார்கள். எல்...லோரும் சித்தப்பா, சித்தி, பெரியம்மா, பெரியப்பா, அண்ணா சரத், மைத்திக்கா, மோனிகூட அவள் என்னைவிடச் சின்னவள். அவளும் கூடச் சொன்னாள்! ஆனால், அவர்கள் எல்லோரும் அறிவிலிகள்! எனக்கு மட்டும்தான் மூளை இருக்கிறது' என்று நினைத்து... நினைத்து விட்டேன்... கடைசியில்...''

மற்ற எதையும்விட அவள் தன்னைத்தானே வருத் திக் கொள்வதையே அவனால் கொஞ்சமும் தாங்க முடியாது போய்விட, ''தேவி, ப்ளீஸ்! தயவு பண்ணி, **அதை** மறந்து விடும்மா'' என்று தழைந்து வேண்டினான் **புவனன்**.

''எப்படி முடியும்?'' என்று கேட்டாள் அவள். உங்களைப் பார்க்கும்போது நான் ஏமாந்ததுதானே எனக்கு நினைவு வருகிறது... ஆனால் ஒருவேளை... ஒருவேளை, பாராமல் இருந்தால்?''

''தேவீ!'' என்று அதிர்ந்தான் புவனமோகனன்.

''உங்களைப் பாராமல் இருக்க முடிந்தால், ஒரு வேளை மறக்கவும் முடியலாம்!'' என்று தன் போக்கில் தொடர்ந்து சொன்னாள் அவள்.

''முடியுமா கண்ணம்மா? என்னைப் பிரிந்து வாழ் வது உனக்குச் சாத்தியப்படுமா, கண்மணி?''

''ஏன் முடியாது? முன்பு பாராமலேதான் உங்களை அறியுமுன்பும் நான் மகிழ்ச்சியோடுதானே இருந்தேன்...

இந்த மாதிரி முட்டாளின் சொர்க்கத்தில் அல்லாமல் மெய்யான மகிழ்ச்சியோடு...''

''ஆனால் அறிந்தபின்? அறிந்தபின் பிரிந்து வாழ முடியுமா, தேவி?''

''பார்த்து வாழ்வது பெரும் வேதனை என்றால்...''

புவனமோகனன் பதறிப் போனான்! இவள் என்ன பேசுகிறாள்! பேசுவதை உணர்ந்துதான் பேசுகிறாளா? ''தேவீ! ப்ளீஸ். யோசித்துப் பேசு'' என்று கெஞ்சிக் கேட்டான்.

தன்னையே தாங்க மாட்டாதவள் போலச் சுவரில் சாய்ந்து கொண்டு நின்ற தேவி மெல்ல நிமிர்ந்தாள். ''யோசித்துதான் பேசுகிறேன். இது என் வீடு. அதனால்...''

''தேவீ! என்ன சொல்கிறாய்? புரிந்துதான் பேசுகிறாயா? இங்கே பார்...'' என்றவன் அவளை நெருங்கி, அவளை வலிய இழுத்து அணைத்தான்.

அவளிடம் எந்தவித எதிரொலியும் இல்லை. அவனை விலக்கித் தள்ளவும் இல்லை. அவனது அணைப்பில் அவள் நெகிழவும் இல்லை. விழி உயர்த்தி அவனைப் பார்க்கக்கூட இல்லாமல், ''உங்களை விலக்கித் தள்ள எனக்கு உடல் வலிமை கிடையாது. ஆனால்... சின்ன வயதில் ஒரே ஒரு முறை என்மேல் நெருப்புப் பட்டிருக்கிறது! இப்போது என்மேல் உங்கள் உடம்பு படுகிற இடம் எல்லாம் அந்தத்தீ சுட்டது போலவே எரிகிறது!''

சட்டென அவளை விட்டு விலகினான் புவனமோகனன்.

அன்றைய இரவு இருவரும் உண்ணவும் இல்லை! இருவரின் பொது அறைக்குள் காலடி எடுத்து வைக்கவும் இல்லை.

காலையில் 'சிட் அவுட்'டில் காபி கப்புடன் உட்கார்ந்திருந்த மனைவியின் முகத்தைப் பார்த்தபோது, அவளை அணைத்து ஆறுதல் அளிக்கப் புவனனின் உடம்பின் ஒவ்வோர் அணுவும் துடித்தது. ஆனால் உன் தீண்டல் நெருப்பு சுடுவது போல இருக்கிறது என்பவளை எப்படித் தொடுவது? எப்படி அணைப்பது?

'ஜக்கி'லிருந்து தனக்கும் ஒரு கப் காப்பியை ஊற்றிக் கொண்டு அவள் எதிரே அமர்ந்தான்.

ஒரு மிடறு காபியைச் சுவையோ, சூடோ அறியாமல் விழுங்கிவிட்டு, ''உன்னிடம் எல்லாம் சொல்ல வந்திருக்கிறேன், தேவி?'' என்று தொடங்க முயன்றான்.

ஆனால் அவன் பேச்சு காதிலேயே விழாதவள் போல அவள், ''சித்தி இன்று வருகிறார்கள்'' என்றாள், அதே மரத்த குரலில், தெளிவாக.

இவள் முடிவெடுத்து விட்டாள்.

வரண்ட முகத்தில் பிடிவாதம் இருந்தது? ''சித்திக்கு ஃபோன் செய்தேன். இன்று விமானத்திலேயே வருவதாகச் சொன்னார்கள். என்னென்ன வேலையோ? அத்தனையும் விட்டுவிட்டு நான் அழைத்தேன் என்று உடனே ஓடி வருகிறார்கள். அவர்கள் எல்லோரும் என்னிடம் அன்பு உள்ளவர்கள். என் நன்மையை நாடுகிறவர்களும் கூட! அன்றைக்கு நிதானித்து யோசிக்க எனக்குத் தெரியாமல் போயிற்று. ஒரு லட்சம் உங்களுக்குத் தந்து

என்னைக் காப்பாற்றத்தான் முயன்றிருக்கிறார்கள். அந்தப் பணத்தை எந்தக் கணக்கிலிருந்து எடுக்க முடியும்? கைப்பணத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நாளில் யார் செய்வார்கள்? எனக்குத்தான் கொஞ்சமும் புரிந்து கொள்ளத் தெரியவில்லையே, ஆனால் அப்போதும்கூட அவர்களிடம் பணத்தை மறுக்கவில்லையே. நீங்கள் பணத்தை வாங்கிக் கொண்டு அவர்களை நம்ப வைத்து, அதே பணத்தைக் கொண்டு எனக்கு மோதிரம் வாங்கி வந்து அவர்களை மோசம் செய்தீர்கள். அவர்களோடு என்னையும்? அவர்கள் பணத்தில் நீங்கள் என்ன எனக்கு மோதிரம் போடுவது? அப்போதே நான் இதை யோசித்திருக்க வேண்டும்.''

இரவெல்லாம் தூங்காமல் தேவி எப்படியெல்லாம் தன் மனதை வாட்டிக் கொண்டு இருந்திருக்கிறாள் என்பது புவனமோகனனுக்கு நன்றாகப் புரிந்தது

ஆனால் இந்த எண்ணங்களை மாற்றி, தன்னை நம்பச் செய்யும் வழிதான் அவனுக்குத் தெரியவில்லை. ஏனெனில், அவனல்லவா தவறு - பெரிய தப்பு செய்திருந்தான். ஒருதரம் ஏமாற்றியவனை மீண்டும் எப்படி நம்புவாள்?

'நான் செய்ததெல்லாம் தவறுதான், கண்மணி! ஆனால் உன் எல்லையற்ற அன்பு என்னை அடியோடு மாற்றி விட்டது. இப்போது நான் உன்னை உயிராக மதிக்கிறேன். தயவுபண்ணி, என்னை மன்னித்து ஏற்றுக் கொள்' என்று கெஞ்சினாலும், அவள் அதை ஏற்பாளா?

பொய்யும் மிகைப்படுத்தலும் துள்ளி விளையாடி மற்றவரை நம்ப வைத்த நாவு சொந்த மனைவியிடம்

மெய்யைக் கோர்வையாக எடுத்துரைத்து ஒத்துக் கொள்ள வைக்க இயலாது தடுமாறியது.

எப்படியும் உண்மையைச் சொல்லி விடுவது! பிறகு கடவுள் விட்ட வழி? என்று புவனமோகனன் பேச வாய்திறந்தபோது, தேவியே மீண்டும் பேசினாள். ''இவ்வளவு நாள் என் கணவராக இருந்ததற்கு எவ்வளவு பணம்...''

காபி கப்பை டீபாய்மீது வைத்துவிட்டுப் புவனன் எழுந்து விட்டான்! இதற்கு மேல் ஒரு கணம் இங்கே நிற்பதுகூட அவளது பணத்தின் மீதுள்ள நப்பாசையாக அல்லவோ தோன்றும்?

மடமடவென்று அவனது அறைக்குச் சென்றான்.

அவனது துணிகளைக் கையில் அகப்பட்டதை எடுத்து ஒரு பெட்டியுள் திணித்தான்.

ஒரு காகிதத்தை எடுத்து, 'இந்தத் திருமணத்தில் இருந்து, தேவி எப்போது விடுதலை பெற விரும்பினாலும் அதற்காக அவள் எடுக்கும் எந்த நடவடிக்கையும் தனக்குச் சம்மதமே' என்று எழுதிக் கையெழுத்திட்டான்.

பெட்டியும், கடிதமுமாக மீண்டும் தேவியிடம் சென்றான்.

அவள் இன்னமும் பழைய இடத்தைவிட்டு அசையவே இல்லை. அசையும் அளவு சக்தியில்லையோ என்று ஒரு கணம் புவனனின் மனம் கலங்கியது.

ஆனால் அதுபற்றி அவன் ஒரு வார்த்தை பேசினாலும் அதுவும் இப்போது பொய்யாகத்தான் தோன்றும்.

அத்தோடு, விரைவிலேயே தேவியுடைய சித்தி வந்து விடுவார்கள். வேலைக்கார ஆயாவும் அவளுக் காக உயிரைக் கொடுப்பாள்.

தேவியே சொன்னதுபோல அவர்கள் எல்லோ ருமே அவளிடம் உண்மையான அன்புள்ளவர்கள்.

மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு, கையிலிருந்த காகிதத்தைத் தேவியின் முன் டீபாயில் வைத்தான். ''உனக்குத் தேவைப்படும் என்று எழுதிக் கொணர்ந் தேன். தேதி போடவில்லை. எப்போது தேவையோ அப்போது தேதியிட்டுப் பயன்படுத்திக் கொள்... குட்பை!'' என்றவன், அதற்குமேல் நிற்காமல், பெட்டி யோடு மடமடவென்று வெளியே நடந்தான்.

கேட் தாண்டி அவன் செல்லும் வரை, அசையாத பார்வையால் அவனையே வெறித்துக் கொண்டிருந்த வள், சட்டென டிரைவரை அழைத்து, புவனமோக னனை அவன் சொல்லும் இடத்திற்குக் காரில் கூட்டிப் போய் விட்டு வருமாறு பணித்தாள்.

ஆனால் டிரைவர் வந்து அப்படிக் கேட்கும்வரை, தான் நடந்து போவதையே உணராமல் சென்று கொண்டி ருந்தவன் நின்று, ''கார் தேவையில்லை!'' என்று டிரைவரை அனுப்பிவிட்டு, அந்த வழியே வந்த ஓர் ஆட்டோவை நிறுத்தி, ஏறிச் சென்றான்.

புவனமோகனனிடம் அப்போது பணம் இருந்தது.

அதை எடுத்து, நண்பர்கள் இருவருக்கும் ஆளுக்கு இன்னும் ஒரு லட்சம் கொடுத்து, ஒழுங்கான தொழில் செய்யும்படி கூறினான்.

மனதில் ஏதோ உறுத்த அந்த வீட்டை வாங்கியவரைப் போய்ப் பார்த்தான்.

ஆனால் அந்த வீடு அவருக்கு ராசியாய் இருந்தது.

''நிஜத் தற்கொலையை, சினிமா ஒத்திகை என்று கதைவிட்டு என் தலையில் இந்த வீட்டைக் கட்டி விட்டீர்களே தம்பி! ஆனாலும், எனக்கு இந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து நல்லதுதான் நடக்கிறது. எதற்கும் மனசு அமைதிக்காக, ஒரு பெரிய பூஜை போட்டேன்! நிம்மதியாய் இருக்கிறேன்'' என்றார் அவர்.

ஓரளவு நிம்மதி அடைந்தவனாய்ப் புவனமோகனன் கொஞ்ச காலம், மனம் போன போக்கில் சுற்றினான். அதுவும் முடியவில்லை.

உள்ளிருந்து வேதனை புழுவாய் அரிக்கும்போது, வேண்டியவர்களின் அருகாமைதான் அதற்கு உரிய மருந்து!

ஆனால் பெரிதாகச் சாதிக்கப் போவதாகச் சொல்லி விட்டு இன்னும் பெரிய இழப்புகளோடு எப்படித் திரும்பி வருவது?

இந்தத் தயக்கம் நீடிக்கவில்லை.

''மான அவமானத்தை மீறி எனக்கு அப்பா, அம்மா, நீ எல்லோரும் தேவைப்பட்டீர்கள். வெட்கத்தை தூரவிலக்கி விட்டு வந்துவிட்டேன்!'' என்று முடித்தான் புவனமோகனன்.

''நமக்குள் என்ன அண்ணா, மானமும் அவமானமும். எப்படியோ நீங்கள் வந்து சேர்ந்ததே பெரிய விஷயம். அதுவே போதும்'' என்றாள் வசுதா அண்ணனுக்கு ஆறுதலாக.

கையை நீட்டித் தங்கையின் கூந்தலைப் பாசத்துடன் ஒருதரம் வருடி விட்டான் புவனமோகனன். ''நீ ரொம்ப நல்ல பெண், வசும்மா! உன்னை மருமகளாக அடைகிற வீடு ரொம்பவும் கொடுத்து வைத்ததாகத்தான் இருந்தாக வேண்டும். முழு மடையனாக, மூடனாக நடந்து கொண்டிருக்கிறேன். நீ ஒரு வார்த்தை என்னைக் குற்றம் சொல்லவில்லை பார்!''

''நீங்களே வேதனைப்பட்டுக் கொண்டு இருக்கும் போது, அது வேறா? ஆனால் ஒன்று, நீங்கள் மட்டும் பழைய மாதிரி அலட்சிய பாவனையோடு வந்து நின்றிருந்தீர்கள் என்று வையுங்கள். உங்களைக் கிழி கிழி என்று பீஸ் பீசாய்க் கிழித்திருப்பேனாக்கும்!'' என்றாள் வேடிக்கையாக.

விளையாட்டாய்த் தங்கையின் கூந்தலைக் கலைத்து விட்டான் அண்ணன்.

அவன் கையைப் பிடித்துக் கொண்டு, ''ஒன்று கேட்கலாமா அண்ணா?'' என்று வினவவும், ''கேளம்மா!'' என்றான் அண்ணன்.

''என்ன வேண்டுமென்றாலும் கேள்!'' என்றான் தாராளமாய்.

''முன்பு நீங்கள் வீட்டை விட்டுப் போனபோதே எங்களுக்கெல்லாம் எவ்வளவு கஷ்டமாக இருந்தது தெரியுமா? இவ்வளவு பாசமாக இருக்கிறீர்களே? உங்களுக்கும் அதேபோல வருத்தமாகத்தான் இருந்தி ருக்கும்?''

தங்கையின் கேள்விக்குப் பதில் கூறப் புவனமோக னன் சிறிது நேரம் எடுத்துக் கொண்டான். பிறகு,

''அவ்வப்போது பார்க்க வேண்டும். பேச வேண்டும் என்ற வேகம் வந்தது உண்டுதான். ஆனால், நீ அம்மா மாதிரி கிடையாது. அப்பாவிடம் கிட்டத்தட்ட சவால் விட்ட மாதிரிதானே? செய்து காட்டுகிற வேகம்தான் தலையாய சவால்! அதில் ஈடுபட்டிருக்கும்போது, ஆசை பாசம் எதற்குமே இடமே இருப்ப தில்லை'' என்றான் புவனமோகனன் ஒரு வருத்தமான முறுவலுடன்.

''அண்...'' என்று ஏதோ கேட்க வாயெடுத்து விட்டு, உடனே மூடிக் கொண்டாள் வசுதா.

''சும்மா கேட்டுவிடும்மா! இந்த அண்ணனுக்குக் கோபம் வருமோ, வருத்தப்படுவானோ என்று இல்லா ம்ல் மனதில் இருப்பதை மறையாமல் கேட்டுவிடு வசும்மா'' என்று புவனன், தங்கையை ஊக்குவித்தான்.

''அதில்லை, அண்ணா! வந்து... வந்து?''

''ம்? சொல்லு!''

''வந்து அண்ணி மட்டும் இப்படிப் பிரிந்திராவிட் டால் எங்களை எல்லாம் பார்க்க நீங்கள் வந்திருப்பீர் களா அண்ணா?''

கேள்வியைக் கேட்டதுமே மிகவும் பயங்கரமாக உணர்ந்தாள் வசுதா. காயத்தில் கத்தியை விட்டுத் திருப்புகிற வேலை அல்லவா இது?

ஒருகணம் மிகுந்த வேதனையைக் காட்டியபோ தும், புவனன், அமைதியாகவே பதில் சொன்னான். ''வந்திருப்பேன் வசும்மா!'' என்றான் மிகவும் தாழ்ந்த குரலில். ''நிச்சயமாக வந்திருப்பேன்! ஆனால் இப்போ

தல்ல! சொல்லாமல் கொள்ளாமல் திருமணம் செய்து விட்டதால் அம்மாவுக்கும் ஓரளவு அப்பாவுக்கும் உனக்கும்கூட ஏற்பட்டிருக்கக் கூடிய நியாயமான கோபத்தைக் குறைத்து அடியோடு விலக்கி விடக்கூடிய சக்தி உடைய ஒரு குழந்தையோடு இங்கே வருவதாக இருந்தேன்!'' என்றான் அவன்.

சட்டெனப் பரபரப்புற்று, ''அண்ணா... ஒரு வேளை, இப்போது கூட அண்ணி கு... குழந்தை...'' என்று அவள் ஆவல் மிகுதியில் திக்கித் தடுமாறினாள் வசுதா.

''வேண்டாம்மா வேண்டாம்!'' என்று மிகுந்த வேதனையோடு செவிகளைப் பொத்திக் கொண்டான் புவனமோகனன். ''எப்பேர்ப்பட்ட சொர்க்க சுகங்களை இழந்து விட்டோமே என்று எண்ணி, இன்னமும் அதிகமாக துன்பமுற வைத்து விடாதே! சும்மாவே நான் சொர்க்கங்களைத் தொலைப்பதில் மன்னன்! முதலில் இந்த அன்பான குடும்பத்தைத் தொலைத்தேன். பிறகு...'' என்று வருத்தத்துடன் வாக்கியத்தை முடிக்கா மலே நிறுத்தினான் புவனமோகனன்.

''இந்தக் குடும்பம்தான் மீண்டும் கிட்டிவிட்டதே, அண்ணா! அது போல, அண்ணியும்... மனம் மாறியி ருக்கலாம்'' என்று நம்பிக்கையுடன் பேசினாள் தங்கை.

புவனமோகனன் தீர்மானமாய்த் தலையசைத்து மறுத்தான். ''தேவியுடைய உறவினர் பற்றி உனக்குத் தெரியாது, வசுதா. உன் அண்ணியின் மனதில் நான் கொன்றது போக, மிச்சம் மீதி இருந்திருக்கக் கூடிய கொஞ்சநஞ்ச அன்பையும் அவர்கள் அடியோடு கிள்ளி

எறிந்திருப்பார்கள். எங்கள் திருமணத்தின் போது தேவியுடைய பெரியம்மா பையன் என்னிடம் ஒன்று சொன்னான். 'எங்கள் தேவியை மணப்பவன், எத்தனையோ பிறவிகளில் பெரும்தவம் பண்ணியிருக்க வேண்டும். உங்களைப் பார்த்தால் அப்படித் தவம் பண்ணியவராக எனக்குத் தோன்றவில்லை. எப்படியோ, அவளை வருத்தப்பட விட்டு விடாதே! உன் நல்லதிருஷ்டத்தைத் தக்க வைத்துக் கொள் என்றான் அந்த ரகு. உண்மைதான். நான் அந்தத் தவம் பண்ணியிருக்கவில்லை, வசு!'' என்ற புவனமோகனன் சட்டென்று உடைந்தான்.

அன்பான உறவினரின் அருகாமையில் புவனமோகனின் மனப்புண்ணும் மெல்ல ஆறத் தொடங்கியது.

''மகளுக்கு இருபது வயது முடிந்து விட்டது. திருமணம் செய்ய வேண்டும்'' என்று வாசுகி தொடங்கினாள்.

மாப்பிள்ளை விஷயத்தில் வசுதா ஒரே ஒரு நிபந்தனையை மட்டும் முன்வைத்தாள். மணமகன் தமிழ்நாட்டில், அதிலும் முக்கியமாகச் சென்னையில் வசிக்க வேண்டும் என்றாள் அவள் பிடிவாதமாக!

## 11

**வ**சுதாவின் பிடிவாதம் அந்த வீட்டில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியது.

''இருந்திருந்து இரண்டு பெற்றேன். ஒன்று தனி மரம் என்று விட்டது! அடுத்ததையும் எங்கோ கண்கா ணாத இடத்தில் விட்டு விட்டு நான் என்ன செய் வேன்?'' என்று வாசுகி, மகளின் விருப்பத்தை எதிர்த் தாள்.

''கண்காணாத தூரமா? அடுத்த அறைக்குள் இருந் தால் அது கூடக் கண்காணாத இடம்தான். இடைச்சுவ ரைத் துளைத்துக் கொண்டு பார்க்க முடியாதே! அப்புறம் 'கல்சுரல்' வகுப்புகளுக்குப் போய் வருகிறேனே; அது கூடக் கண்காணாத தூரம்தான். அவ்வளவு தூரம் உங்களால் பார்க்க முடியாதுதானே? இப்போது மட்டும் என்னம்மா?'' என்று கொஞ்சும் குரலில் குழைந்தாள் வசுதா.

''மற்ற எது தெரிகிறதோ இல்லையோ வக்கணை யாக விதண்டாவாதம் பண்ணுவதை மட்டும் நன்றாகப் படித்து வந்திருக்கிறாய்! அடுத்த அறையும், கல்லூரியும், சென்னை அளவு தூரமா? அடுத்த அறையில் எட்டிப் பார்த்து விடலாம்; கல்லூரிக்கு காரை எடுத்துக் கொண்டு வந்துவிடலாம். நீ சொல்லுகிற தமிழ்நாட்டை அப்படி எட்டிவிட முடியுமாடீ?''

''காருக்குப் பதில் விமானத்தைப் பிடித்தால் போயிற்று! அவ்வளவுதானே? இந்தப் போக்குவரத்து நெரிசலில் நீங்கள் கல்லூரிக்கு வரும் நேரம்தான், விமானத்தில் ஏறி உட்கார்ந்து சென்னை சென்று அடையவும் ஆகும்...''

''அந்த விமானத்தில் ஏறி உட்காரவும் இந்தப் போக்குவரத்து நெரிசலில் இப்படித்தான் போயாக...ச்சு!

இதெல்லாம் என்னடி பேச்சு அவ்வளவு தூரத்தில் எல்லாம் வேண்டாம்!'' என்று அன்னையாக அதட்டிப் பார்த்தாள் வாசுகி.

ஆனால், அந்த அதட்டலுக்கு பயப்படத்தான் அங்கே ஆள் யாரும் இல்லை.

''அம்மா, ப்ளீ...ஸ்மா! நான் வேறு ஏதாவது கேட்கிறேனா? இந்த ஒரே ஓர் சின்ன ஆசை! இதற்குப் போய் 'முடியாது' என்கிறீர்களே! அப்படியானால் எனக்குத் திருமணமே வேண்டாம்! அவ்வளவுதான்!'' என்று மகள் முறுக்கிக் கொள்ளவும், தாய்தான் இளகி, இறங்கி வரவேண்டியதாயிற்று.

''யோசித்துதான் கேட்கிறாயாம்மா?'' என்று ஒரு தரத்துக்கு இருமுறையாக உறுதி செய்து கொண்டதற்கு மேலாகத் தந்தை கார்த்திகேயன், மகள் விருப்பத்துக்கு மாறாக ஒன்றும் கூறவில்லை.

ஆனால், அண்ணன் புவனமோகனன், மற்றவர் முன் எதுவும் கேளாத போதும் ஒருநாள் தங்கையைத் தனிமையில் பிடித்து விசாரித்தான். ''அப்படி என் னம்மா, திடீரென்று தாய்மொழி மோகம் பிடித்து விட்டது?''

''தாய்மொழியை மறப்பவர்கள் தாயையே மறக்கு மளவு மோசமானவர்கள்; அதனால் வீட்டில் தமிழ்தான் பேச வேண்டும் என்று என்னை ஒருகாலத்தில் கட்டா யப்படுத்திய அண்ணனா இப்படிக் கேட்பது?' என்று பெரிதும் வியந்தாள் தங்கை.

''அதற்காகத் தமிழ்நாட்டுக்குள்ளேயே அடைந்து கொள்ள வேண்டுமா? உலகம் முழுவதும் தமிழர்

இருக்கிறார்கள்! இங்கேயே நம்மைச் சுற்றிலும் எத்தனை தமிழ்க் குடும்பங்கள்! அத்தோடு, தாய்மொழி தமிழ் என்றாலும், தாய்நாடு இந்தியா என்றுதானே கொள்ள வேண்டும்?''

''மற்ற நாட்டாரிடம் 'நாம் இந்தியர்' என்று வைத்துக் கொள்ளலாம் அண்ணா! ஆனால், நமக்குள் ஆயிரம் வேறுபாடுகள் இருக்கத்தானே செய்கின்றது! அரசாங்கமே, மொழிவாரியாகத்தானே மாகாணங்களைப் பிரித்திருக்கிறது?''

''அது நிர்வாக வசதிக்காகத்தானே தவிர, வேறு பாட்டை வளர்ப்பதற்காக அல்ல. வித்தியாசமாய் நினைப்பதே தவறு வசும்மா?''

''ம்ம்... இதெல்லாம் சும்மா, வாய் வார்த்தைக்குச் சொல்லிக் கொள்ளலாம், அண்ணா! மற்றபடி...நீங்களே பாருங்கள், இங்குள்ளவர்கள் அவர்கள் கலாச்சாரம்தான் மேல் என்கிறார்கள்! நமக்கு நம்மது உயர்வாய்த் தோன்றுகிறது...''

''உரக்கச் சொல்லாதே! யாரும் கேட்டால் சிரிப்பார்கள். ஈமெயிலும், இன்டர்நெட்டுமாக உலகமே உள்ளங்கை அளவுக்குச் சுருங்கி, எல்லோருமே நெருங்கி விட்ட பிறகு, ஒரு நாட்டுக்குள்ளேயே வேறுபடுத்திப் பேசுகிறாயே! வேடிக்கைதான்!'' என்று நகைத்தான் புவனன்.

லேசாக முறுவலித்துவிட்டு, உச்சுக் கொட்டினாள் தங்கை. ''என்ன நெருக்கம், அண்ணா!'' என்றாள் அலுப்புடன். ''நீங்கள் சொல்லும் இவ்வளவு முன்னேற்றத்துக்கு நடுவில் உலகில் எத்தனை விதச் சண்டை

சச்சரவுகள்! மதச் சண்டை, இனச்சண்டை... வெள்ளை யர், கறுப்பர், ஆசியர், ஐரோப்பியர் பாகுபாடு என்று தினம் தினம் எத்தனை செய்திகள்! பொருளாதாரச் செய்திகள் தவிர, பத்திரிகையில் மற்றதையும் படியுங்கள் அண்ணா! ஊர் உலகத்தில் என்னென்ன நடக்கிறது என்பதும் தெரியும்!'' என்று பெரிய அறிவுரை பாணி யில் கூறிவிட்டுத் தலையைச் சரித்துச் சிரித்தாள் வசுதா.

''சரிங்க, டீச்சரம்மா! இனிமேல் நீங்கள் சொல்கிற மாதிரியே ஒரு வம்பு தும்பு விடாமல் பத்திரிகை படிக்கிறேனுங்க!'' பணிவாய் ஒத்துக் கொண்டு விட்டுக் கூடச் சேர்ந்து நகைத்தான் அண்ணன். பிறகு தங்கையின் காதைப் பிடித்து லேசாகத் திருகி, ''பெரிய சட்டாம்பிள் ளைத்தனம் பண்ணுகிறீர்களாக்கும்! அதையெல்லாம் வரப்போகிறவரிடம் வைத்துக்கொள். ஆனால் மெய்யா கவே, இந்த ஒரு காரணத்துக்காக, அம்மாவைவிட்டு அவ்வளவு தூரம் போக வேண்டுமா?'' என்று இலகுவா கவே கேட்டான் புவனன்.

''இது ஒன்று மட்டும் காரணம் அல்ல, அண்ணா!'' என்று வசுதா உடனே ஒப்புக் கொண்டாள். ''எனக்கு, நம் வீட்டை விட்டுக் கொஞ்சம் தூர இருக்க வேண்டும் என்று எண்ணம், அண்ணா. பின்னாலே, அம்மா வீடு என்று வந்தால், குறைந்தது ஒரு மாதமாவது அக்கடா என்று நிம்...மதி யாகத் தங்கி விட்டுப் போக வேண் டும்...''

''இங்கே இருந்தால் அது முடியாதாக்கும்?'' என்று குரலில் கேலி தொனிக்கக் கேட்டான் அண்ணன்.

''மெய்யாகவே முடியாது அண்ணா! என் சிநேகி திகளின் வீடுகளில் தான் பார்க்கிறேனே! 'இதோ,

இங்கேயேதானே! நினைத்தால் பார்த்துக் கொள்ளலாமே என்று சொல்லிவிட்டு, இப்போது அப்போது என்று கடத்திக் கொண்டே இருப்பார்களாம். வேலையோ, தொழிலோ அன்றாட அலுவலை விட்டுவிட்டு மனைவியை அவளுடைய பிறந்த வீட்டுக்கு அழைத்துச் செல்ல, வீட்டு மருமகன்மாருக்கு மனமே வராதாம். அதே ஊரிலேயே அவரவர் வீடு இருக்கும் போது மாமனார் வீட்டில் தங்கவும் பிடிக்காதாம்! அதே ஊரில், மனைவியை இன்னோர் இடத்தில் இருக்கவிடவும் இந்தத் துரைகளுக்கு மனம் வராதாம்! ஆக, உள்ளூர் மாப்பிள்ளை என்றால் அப்புறம் அம்மா வீட்டை அடியோடு மறந்துவிட வேண்டியதுதான் என்கிறார்கள் என் சினேகிதிகள்!'' என்று, தகுந்த ஏற்ற இறக்கமும் அபிநயமுமாகச் சொல்லி முடித்தாள் வசுதா.

புருவம் உயர்த்தி, ''ஆக, சினேகிதி, சினேகிதி என்று மணிக் கணக்காய்ப் பேசுவதெல்லாம் இதைத்தானாக்கும்? பிரமாதம்!'' என்றான் அண்ணன் கிண்டலாக.

''பேசியதால்தானே விவரம் தெரிந்தது?'' என்றாள் வசுதாவும் விடாமல்.

''மறுக்க முடியாத உண்மை'' என்று சிரித்தான் புவனன்.

சிறு மவுனத்தின் பின், தங்கையின் தலையில் கைவைத்து லேசாக உலுக்கினான் புவனமோகனன். ''இந்தப் பேச்சு போதும், வசு. உண்மையைச் சொல்லு. என் வாழ்வை சீர்ப்படுத்தும் நோக்கத்தில் தானே, நீ சென்னை மாப்பிள்ளை வேண்டும் என்கிறாய்?'' என்று நேரடியாகக் கேட்டான்.

சற்றே முகம் சிவந்த போதும், நிமிர்ந்து, ''அப்படித் தான் என்று இல்லை, அண்ணா! ஆனால் அந்த மாதிரி ஆசைப்படுவதிலோ, முயற்சி செய்வதிலோ என்ன தப்பு?'' என்று அண்ணனை நேராகப் பார்த்து வினவி னாள் வசுதா.

தோளைக் குலுக்கி, ''வீண் வேலை!'' என்றான் தமையன்.

''ஏன்? ஏன் வீண்வேலை?'' என்றாள் வசுதா வேகத்துடன். ''அதெப்படி வீண் வேலையாகும்?'' அண்ணா, நான் ஒன்றும் சின்னக் குழந்தை இல்லை தெரியுமா? தினம் தினம் உள்ளூர நீங்கள் படும் வேதனை எனக்குத் தெரியாது என்றா நினைக்கிறீர்கள்? சத்தம் போட்டுச் சிரிக்கிறீர்களே, அந்தச் சிரிப்பு உங்கள் கண்களை எட்டவே இல்லையே! அவ்வப்போது அடி பட்ட தோற்றம்; தவிப்பு...! அண்ணன், நீங்கள் இப்படி இருந்தால், அதைச் சீர் செய்யும் ஆவல், தங்கை எனக்கு வராதா?'' என்று பொரிந்தாள்.

''வராது என்று நான் சொல்லவில்லையே!'' என் றான் புவனமோகனன் தணிந்த குரலில். ''அது பயனற்ற வேலை என்றுதான் சொன்னேன்.''

''முயன்று பாராமலே பயனற்றது என்று எப்படிச் சொல்ல முடியும்?'' என்று மடக்கினாள் தங்கை.

''அதுகூட எனக்கு ஆச்சரியம்தான் அண்ணா! தொழிலில் எவ்வளவு முனைப்புடன், புதிதுபுதிதாகச் செய்கிறீர்கள்; வாழ்க்கையைச் சீர் செய்வது விஷயமாய் ஓர் எட்டுகூட எடுத்து வைக்காமல் எப்படி இருக்கிறீர் கள்?''

அண்ணாந்து வானத்தைப் பார்த்தான் புவனமோகனன், சிலுசிலுத்த காற்றின் விசையால் உந்தப்பட்டு சென்ற மேகங்களும், மேலே இருந்து பிரகாசித்த சந்திரனும், ஏதோ நிலவுதான் எதிர்திசை நோக்கி விரைந்தோடுவது போன்ற பிரமையை உண்டாக்கின.

ஏதோ நினைவில் புவனமோகனின் முகம் வாடியது. தலையைக் குலுக்கி அந்த நினைவை ஒதுக்கிவிட்டுத் தங்கையிடம் திரும்பினான்.

கூரிய பார்வையுடன் அமர்ந்திருந்த வசுதாவைப் பார்க்கையில் அவனுக்கு வியப்புடன் சிரிப்பும் வந்தது. ஏழு வயது சின்னவளான தங்கை. என்ன போடு போடுகிறாள்! வந்த விஷயத்தையே ஒதுக்கிவிட்டு, இவள் வாயைக் கிளறி வம்பு வளர்க்க வேண்டும் என்று ஆசை வந்தது. ஆனால் திருமண வரவேற்புக்குச் சென்றிருக்கும் பெற்றோர் திரும்பி வருமுன் இவளிடம் பேசி முடிக்க வேண்டும்; அத்தோடு, இனி இந்த மாதிரியான நினைப்பு கூட தகாது என்று தெளிவுபடுத்தியாக வேண்டும்...

''வசும்மா, ஒரு வேலை செய்யுமுன், அந்த முயற்சி பயனளிக்குமா, முதலில் அந்த முயற்சியே நியாயமானதா என்றெல்லாம் யோசித்து அதன் பிறகுதான். நீ சொன்னாயே அந்த மாதிரி ஓர் எட்டு எடுத்து வைக்க வேண்டும். இரண்டுமே இல்லை எனும்போது...''

''ஆனால்...''

''பொறும்மா! முதலில் என் பேச்சைக் கொஞ்சம் பொறுமையாகக் கேள்...பாரம்மா, க்ண்ட பேச்சு பேசி விட்டுப் போனேன்! அப்படியிருந்தும், நீ, அம்மா,

முக்கியமாக அப்பா...? எல்லோரும் என்னை மறக்கா மல் இருந்தீர்கள்; வெறுக்காமல் ஏற்றுக் கொண்டீர்கள் என்றால் அதன் காரணம் ரத்த பாசம்! ஆனால், தேவிக்கும் எனக்கும் இடையே என்ன இருக்கிறது?''

கொஞ்சம் அதிர்ந்து போனாள் தங்கை. ''அண்ணா, அவர்கள் உங்கள் மனைவி! நம் அப்பாவும் அம்மாவும் மாதிரி நீங்களும் அண்ணியும்...''

''ஊகூம்' அப்பா அம்மா உறவையும் எங்களுடை யதையும் சம்நிலையில் வைத்துப் பேசாதே. வசுதா! அப்பா, நம் அப்பா, நம் அம்மாவை, அவருடைய வாழ்க்கைத் துணையாக, தன் சிறந்த பாதியாக, தன் எதிர்கால முழுமைக்கும் உரிமை உள்ளவராக ஏற்றவர். ஆனால் நான்? தேவி மூலம் கிடைக்கக் கூடிய லட்சக் கணக்கான பணத்துக்காக மட்டுமாக அல்லவா அவளுக் குத் தாலி கட்டினேன்! வசும்மா, கொன்றால் பாவம் தின்றால் தீரும் என்று ஒரு பழமொழி உண்டு தெரியுமா? முன்பெல்லாம், இதற்கு ஒரு வேடிக்கை விளக்கம் கூட நான் கொடுப்பது உண்டு. ஆடோ, மாடோ, கோழியோ, அதைக் கொன்றுவிட்டால், அதைக் கொன்ற பாவம், அந்த ஆடு மாடு கோழியைச் சமைத்துச் சாப்பிட்டால் தீர்ந்துவிடும் என்பேன். ஆனால், இப்போதுதான் அதன் உண்மையான அர்த் தம், அவரவர் செய்த தீவினையின் பயனை அவரவர் அனுபவித்துத்தான் தீர்த்தாக வேண்டும் என்பது புரிகி றது. அனுபவித்துத் தீர்த்துக் கொண்டு இருக்கும்போது தான் விஷயம் விளங்குகிறது!''

''அண்ணியிடம் இவ்வளவு அன்பை வைத்துக் கொண்டு எப்படி அண்ணா உங்களால் அண்ணியை இப்படி ஏமாற்ற முடிந்தது?''

''இந்த அன்பு முதலிலேயே வந்துவிடவில்லை. வசும்மா. மிகவும் தேவைப்பட்ட, இருபத்தைந்து லட்சத்தை அடைவதற்கு உரிய வழியாகத்தான் எனக்கு முதலில் தேவி தென்பட்டாள். அப்போது என் தொழில் முறை உனக்குத் தெரியுமில்லையா? உள்ளதற்குப் பத்துமடங்கு உயர்த்திக் காட்டி விற்பது...வாழ்வையும் தொழிலாக்கி, என்னை உயர்த்திக் காட்டி, அவளை ஏமாற்றி மணம் புரிந்தேன். அவளிடம் பணம் கேட்கும் போது கூட உள்ளூர உதைப்புத்தான். ஒட்டுமொத்தமாய், அவளுடைய உறவினர் அத்தனை பேரும் என்னைப் பற்றி அவளிடம் எச்சரித்திருந்தார்களே! அதுதான் உண்மையோ என்று தோன்றிவிடக் கூடும் என்று, அந்த எண்ணத்தை மாற்றவும் பல்வேறு அலங்காரப் பேச்சுக்கள் எல்லாம் தயார் பண்ணி வைத்திருந்தேன். ஆனால், அவள், எதற்காக என்றுகூடக் கேளாமல், கையெழுத்திட்டுக் கொடுத்தாள். அந்த வினாடியில் இருந்துதான் அவளை நான் முழுமனதோடு நேசிக்கத் தொடங்கினேன்! பாங்கில் கூட செக்கை சும்மா 'பாஸ்' பண்ணிவிடவில்லை. அவள் குடும்பத்தார் எச்சரித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.தேவியிடம் டெலிஃபோனில் கேட்டுவிட்டு, அதிலும் திருப்தி அடையாமல் நேரிலேயே, வீட்டுக்கு ஆள் அனுப்பியே விசாரித்திருக்கிறார்கள். 'செக்' என் கணவர் பெயருக்கு என்ற பிறகு இது என்ன அனாவசிய விசாரிப்பு என்று 'பாங்க்' அலுவலரை அதட்டி பேசித் திருப்பி அனுப்பிவிட்டாள்.

அதிலிருந்து அவள் என் உயிர் ஆனாள்.அவள் பணத்தை வட்டியோடு திரும்ப அவள் பேரில் கட்டி னேன்! பாங்க் மானேஜர். அன்று என்னை விழிபிதுங்கப் பார்த்தார்! அவ்வளவு ஆச்சரியம்! மீந்த பணத்தில், அப்பா மாதிரி நேர்மையாகத் தொழில் நடத்தி உயர வேண்டும் என்று தீர்மானம் செய்தேன்! ஆனால்...அது தான் முதலில் சொன்னேன் இல்லையா? 'கொன்ற பாவத்தைத் தின்றுதான் தீர்த்தாக வேண்டும்' என்று! தீர்த்துக் கொண்டு இருக்கிறேன்...''

இந்த இழப்பு தனக்குரிய நியாயமான தண்ட னையே என்று அண்ணன் அதைப் பணிவுடன் ஏற்று அனுபவிப்பது, வசுதாவை மிகவும் வாட்டியது.மேலும் இதைக் கிளறுவது, சும்மாவே நொந்திருப்பவனை மேலும் துன்புறுத்துவது ஆகுமோ என்ற கவலை இருந்த போதும், அண்ணனின் இந்தத் துன்பம் தீர ஏதேனும் வழி கிடைக்கக் கூடுமோ என்ற ஆவலில், அவள் விடாமல் மேலும் அதையே கிளறினாள்.

''இவ்வளவு ஆழமான அன்புக்கு எதிரொலி இல்லாமல் போகாது அண்ணா! அதுவும், ஏற்கனவே தன் பழைய உறவுகள் அனைத்தையும் துறந்து உங்களை மணந்தவர்கள்! அந்தக் காதல் எப்படி அழிய முடியம்? அண்ணா! அதனால் எதற்கும் ஒரு...''

''சொன்னால் புரியவில்லையம்மா? அந்தக் காதலை நானே கொன்றுவிட்டேனேம்மா! திரும்ப உயிர்த்தெழ முடியாதபடி தலையைத் திருகி எறிந்து விட்டேனே!'' என்று கட்டுப்பாட்டை மீறித் தவித்தவன், உடனே சமாளித்து, ''பார், வசு! தேவியைப் பொறுத்த

வரையில், என்னைப் பற்றிய நினைவே அடியோடு அழிந்து போவதுதான் நல்லது. அதனால், இந்த முயற்சிகளை விட்டுவிடு!'' என்றான் முடிவாக.

ஆனால், அப்போதும் விடவில்லை தங்கை, தன் கடைசி ஆயுதமாக, ''ஒன்றை யோசித்தீர்களா, அண்ணா? உங்கள் உறவில் ஒரு குழந்தை பிறந்திருந் தால்?'' என்று கேட்டாள்.

அவள் எதிர்பார்த்தது போலவே, இந்தக் கேள்வி, புவனமோகனை மிகவும் பாதித்துவிட்டது! உட்கார்ந்தி ருக்கமாட்டாமல் 'சட்டென எழுந்தவன் வேகமாக நடந்து, மொட்டை மாடியின் கட்டைச் சுவரின் மீது கைகளை ஊன்றிக் கொண்டு நின்றான்.

பெரிய பெரிய மூச்சுக்களை எடுத்து அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதைப் பின்புறமிருந்து பார்த்த அவளுக்கும், அதற்கு மேல் சும்மா உட்கார்ந்தி ருக்க முடியவில்லை. ரணசிகிச்சையால் புண்ணை ஆற்ற முயற்சிப்பதாக எண்ணிக் காயத்தைக் கத்தியால் திருகி விட்டாளா?

எழுந்து சென்று அண்ணன் அருகே நின்று, ''அண்ணா?'' என்று மெல்ல அழைத்தாள்.

பெருமூச்சு ஒன்றை எடுத்து விட்டுவிட்டுத் தங்கை யிடம் திரும்பி, ''பைத்தியக்காரி!'' என்றபோது, புவன னின் முகம் பெருமளவு இயல்புக்குத் திரும்பியிருந்தது.

''ஏனோ?''

''அப்படி ஒன்று பிறக்க அவர்கள் விட்டிருப்பார் கள் என்றா நினைத்தாய்? உருவானது தெரிந்ததுமே அழித்திருப்பார்கள்!''

''அண்ணா!''

'ஆமாம்மா! உனக்கு உன் அண்ணன் உயர்வு! அவர்கள் எல்லோருக்கும் நான் ஒரு சந்தர்ப்பவாதி, அவர்களுடைய அருமைப் பெண்ணை ஏமாற்றிய நயவஞ்சகன்! அது உண்மையும்தான்! என் அடையாள மாய் ஒன்று வளர, அவர்கள் அனுமதித்திருக்கவே மாட்டார்கள்.''

''அழிப்பதற்கு அண்ணி ஒத்துக்கொள்ள வேண் டுமே! அவர்கள் மறுத்திருந்தால்?''

''எங்கேம்மா!'' என்றான் அண்ணன் ஆற்றாமை யோடு ''அவளைத்தான் நான் உள்ளூரக் கொன்றுவிட் டேனே! தன் விருப்பம், தன் முடிவு என்று எண்ணிப் பார்க்கக்கூட இயலாதபடி அவளது தன்னம்பிக்கையை அடியோடு அழித்துவிட்டேனே! அவர்கள் அத்தனை பேரையும் எதிர்த்து அவள் எடுத்த முடிவு பெரும் பிழை என்று ஆன பிறகு அதற்கெல்லாம் அவளுக்குத் தைரியம் எங்கிருந்து வரும்? முதுகெலும்பே இல்லாமல் நன்றாகப் பிசைந்த களிமண்ணாய், அவர்கள் கையில் கொடுத்து விட்டேனே! அவர்கள் காலடியில் விழ வைத்து விட்டேன்...ஆனால் ஒன்று! அவர்கள் எல்லோ ரும் தேவியிடம் உண்மையான அன்பு உள்ளவர்கள்! அதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்! அவளது இந்த நிலைமையை, அவர்கள் வசதிக்குப் பயன்படுத்திக் கொள்ளமாட்டார்கள். அவளுக்கு நன்மையைத்தான் செய்வார்கள். தகுதியற்ற என்னை மறக்க வைத்து, வேறு நல்ல வாழ்வை, அவளுக்கு அமைத்துத் தருவார்கள்... அதுவே தான் இப்போது என் விருப்பமும்! இனி

அவளுக்கு நிம்மதியான, நல்ல வாழ்வு அமைய வேண்டும்!... அமைந்திருக்கவும் கூடும்!''

இதற்கு மேல் இவனிடம் என்ன பேசுவது என்று அறியாமல் வசுதாவும் சற்று நேரம் மவுனமாய் நின்றாள்.

பிறகு மெல்லவே, ''அண்ணா, எனக்கு அண்ணி யின் விலாசம் தருகிறீர்களா?'' என்று கெஞ்சுதலாகக் கேட்டாள்.

''மாட்டேன்!'' என்றான் அவன் உறுதியான குர லில். ''நீ போய், அவள் வாழ்வில் என் நினைவைத் தூண்ட நான் அனுமதிக்கமாட்டேன். அவளுடைய உறவினரைப் போலவே, தேவி என்னை முழுமையாக மறப்பதுதான் அவளுக்கு நல்லது என்பதுதான் என் முடிவும்... இனி இந்தப் பேச்சு போதும்... இப்போது சொல்லு. இனி இந்தப் பக்கமாய் மாப்பிள்ளை பார்க்க லாமா?'' என்று பழையபடி கேலியாகக் கேட்டான்.

சற்றே அசடுவழிந்த போதும், ''இல்லையண்ணா! உங்கள் விஷயம் என் பல காரணங்களுள் ஒன்று மட்டும்தானே தவிர, அதுவே முழுக் காரணமும் அல்ல. மற்ற என் காரணங்களும், அத்தனையும் உண்மைதான். எனவே எனக்குத் தமிழ்நாட்டு மணமகன்தான் - அதிலும் முடிந்தவரை, சென்னை வாசிதான் வேண்டும்!'' என்றாள் தெளிவாக, அவள்.

வசுதாவின் விருப்பம் போலவே இரண்டு தலை முறையாகச் சென்னையில் வசித்துத் தொழில் செய்த ஒரு குடும்பத்தில் அவளுக்குத் திருமணம் நடந்தது.

மணமகன் கங்காதரன், புவனமோகனைப் போலவே வீட்டின் ஒரே பையன். இரண்டு மூத்த

சகோதரிகள். இருவரும் திருமணமாகி வெளிநாட்டில் இருந்தார்கள்.

''ஒரே பையன் பிற்பாடு, ஓய்ந்த காலத்தில் மாமனார் மாமியாருக்கு இவள் மட்டுமாக அல்லவா பார்க்க வேண்டும்?'' என்று வாசுகி முணுமுணுத்தாள்.

''ஆனால், உனக்கும் ஒரே பிள்ளைதானே? அதை மறந்து பேசுகிறாயே'' என்று கார்த்திகேயன் சிறு கடுப்புடன் கூறவும் அதுசரிதான் என்று அவள் மாறி விட, மற்ற எல்லா வகையிலும் ஒத்துப் போய்விட கங்காதரன் வசுதா திருமணம் நல்லபடியாக நடந்தேறி யது.

பெரிய அரிசி மண்டி அவர்களுடையது, படித்து விட்டு வந்து தொழிலில் புகுந்த கங்காதரன், இல்லத்தரசி களின் வேலையை எளிதாக்கும் வண்ணம் இட்லி மாவு, முறுக்கு மாவு, பணியார மாவு என்று தயாரித்து விற்பனை செய்யத் தொடங்கினான். பொருட்களுக்கான வரவேற்பு நன்றாயிருந்தது.

அவர்களின் தயாரிப்பு முறை, புவனமோகனுக்குச் சுவாரசியமாய் இருக்க புவனனின் வேலைத்திறம் கங்காதரனுக்குப் பிரமிப்பைத்தர, மைத்துனனுக்கும் மைத்துனனுக்கும் ஒருவரை ஒருவர் பிடித்துப் போயிற்று. பெயர் சொல்லி அழைக்கும் அளவுக்கு நெருங்கிப் பழகினார்கள்.

அவ்வளவு நெருங்கிய பிறகும், சென்னையில் நடந்த திருமண வரவேற்பில் கலந்து கொள்ளாதிருக் கவே புவனன் முயன்றான்.

வெகுவாக முயன்றும் அதிலிருந்து ஒதுங்கிக் கொள்ள முடியாது போகவே, விழா நேரம் முழுவதும் பின்னணியிலேயே ஒதுங்கி இருந்தான்.

அண்ணனின் காரணம் புரிபட்டு விட்டதால் வசுதா எதுவும் சொல்லவில்லை!

ஆனால், "வா...எங்கே புவன்! இங்கே என்னோடு நில்லுங்கள்!" என்று கங்காதரன் அண்ணனை முன்னே இழுத்து நிறுத்திய போதும், அவள் சும்மாவே இருந்து விட்டாள்.

ஆனால், ஒவ்வொரு விருந்தாளியாக வந்து, அறிமுகப்படுத்தும் போதெல்லாம் வசுதாவின் பார்வை கூர்மையுடன் ஒருதரம் புவனன் முகத்தில் பாய்ந்து கொண்டேதான் இருந்தது! ஆனால், அங்கே, அவள் எதிர்பார்த்த மாற்றத்தை உண்டாக்கும்படியாக, உறவு, நட்பு என்று யாருமே வராது போய்விட்டது, அவளுக்குக் கொஞ்சம் ஏமாற்றம்தான்.

புவனனுக்கு, 'அப்பாடி' என்று நிம்மதி!

முதலில், சென்னை வர புவனனுக்கு மிகவும் தயக்கம்தான். ஆனால், வாசுகிக்கு மகளைப் பாராமல் இருக்க முடியவில்லை! அத்தோடு, தனியாக அதிக தூரம் பயணம் செய்தும் பழக்கம் இல்லை.

தந்தையும் மகனுமாக மாறி மாறி வாசுகியைச் சென்னைக்கு அழைத்து வந்து கூட்டிச் சென்றது, "இந்த அலைச்சல் என்னால் முடியவில்லையடா!" என்று கார்த்திகேயன் கூறிவிடவும், தாயின் பயணங்கள், புவனனுடையவையாகவும் ஆயின. இதன் விளைவாக அவன் வாழ்வில் ஒரு திருப்பம் நேர்ந்தது.

# 12

புவனனின் சென்னைப் பயணங்கள் பெருக இன்னொரு காரணமும் ஏற்பட்டது. அது அவனது தொழில் பெருக்கம். அவனது 'கிரில்' அமைப்புகள், கண்ணைக் கவர்வனவாக மட்டுமின்றிக் கட்டிடத்துக்கும் உறுதி தருவனவாக இருந்தன. எனவே விஷயம் அறிந்தவர்கள் போட்டி போட்டுக் கொண்டு, அவனிடம் வந்து நின்றனர். மும்பையிலிருந்து, டில்லி, கல்கத்தா போன்ற பெரிய நகரங்களில் வேலை ஒத்துக் கொண்டு செய்தவன், தெற்குப் பிராந்தியத்தை மட்டும் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லித் தள்ளிவிட்டுக் கொண்டே இருந்தான். இப்போது தங்கையைப் பார்க்க என்று அடிக்கடி அன்னையை அழைத்துக் கொண்டு சென்னைக்கு வரப்போக இருக்கவும், அந்த நாட்களைத் தொழில் ரீதியாகப் பயன்படுத்திக் கொள்ள எண்ணிச் சென்னையிலும் வேலைகள் ஏற்றுச் செய்யலானான்.

'நெய்க்குத் தொன்னையா? தொன்னைக்கு நெய்யா? எது ஆதாரம் என்பார்களே! அதுபோல, வாசுகி மகளைப் பார்க்க வரும்போது, புவனனும் கூட வந்து, தொழிலையும் கவனித்துக் கொண்டான். அதே போலப் புவனமோகனன் தொழிலைக் கவனிக்கச் சென்னை செல்லும்போது, தாயாரும் கூட வந்து மகளைச் சந்தித்தாள்.

கங்காதரனோடு, அவனுடைய பெற்றோரும் மரும களுடைய உறவினரையும் தங்களுக்குச் சமமான மனித

ராக மதித்து அன்புகாட்டியதால், சம்பந்திவீடு என்ற தயக்கம் விரைவிலேயே மறைந்து போயிற்று.

மொத்தத்தில் சென்னை புவனனும் அவன் தாயும் மாதம் ஒருமுறையேனும் வந்து இரண்டு மூன்று நாட்கள் தங்கிச செல்லும் இடமாயிற்று.

கங்காதரனுக்கும், புவனமோகனனுக்கும் வேலையில் ஓய்வு கிடைக்கும் போது எல்லோருமாக எங்கேனும் வெளியே போய் வருவார்கள்.

கங்காதரனுடைய பெற்றோரில் ஒருவருக்குச் சர்க்கரையும் ஒருவருக்கு ரத்த அழுத்தமும் என்று இருவருமே பத்தியச் சாப்பாட்டுக்காரர்கள். தூக்கம், ஓய்வு, உணவு நேரம் போன்றவற்றிலும் ரொம்பவும் கணக்காய் இருப்பவர்கள்! எனவே, வெளியே செல்வது பெரும்பாலும் கங்காதரன், வசுதாவோடு புவனமோகனனும், மகளைப் பிரியமாட்டாமல் அவளோடு கூட இருக்கும் ஆவலில் வாசுகியும்தான் செல்வார்கள்.

இப்படி வெளியே செல்லும் நேரங்களில், திடீர் என்று வேலை வந்துவிட்டதாகச் சொல்லி, அவ்வப்போது, புவனமோகனன், கழன்று கொள்வது உண்டு.

வாசுகிஅதை அப்படியே ஏற்றுக் கொள்ள, இது அண்ணன் மனைவியோடு சம்பந்தப்பட்ட இடம் என்று வசுதா எண்ணுவாள்.

அது பெரும்பாலும் சரியாகவும் இருந்தது.

ஒருதரம் புவனமோகனனிடம் அவள் அதுபற்றித் தனிமையில் கேட்ட போது, அவனே அதை ஒத்துக் கொண்டான். ஆனால் ''நாங்கள் அதிகம் வெளியே

சென்றதில்லையேம்மா. வீடேதான் சொர்க்கமாயிருந்ததே!'' என்றான் ஒரு மரத்த குரலில்.

வசுதா கருவுற்ற பிறகு தாய், சகோதரனின் சென்னை வருகை மாதம் இரு தடவைகள் என்று ஆயிற்று.

ஒவ்வொரு தரமும் மகளைப் பிரிந்து ஊருக்குக் கிளம்பும்போது, வாசுகியின் கண்கள் கலங்கிவிடும்.

''என்னம்மா, நீங்கள்? இன்னும் பத்து நாட்களில் மீண்டும் வரப் போகிறீர்கள்; குழந்தை மாதிரி இப்படி அழுகிறீர்களே!'' என்று வசுதா கேலி பேசிச் சிரிப்பாள்.

''உனக்கு ஒரு பெண் பிறந்து புரிய வைக்கும் பார்!'' என்று கருவுவான் அண்ணன்.

''என்னளவு மகிழ்ச்சியாக என் மகள் இருந்தால், நான் ஏன் கலங்கப் போகிறேனாம்?'' என்று தலையைச் சிலுப்பினாள் தங்கை. ''ஷ்...கண்ணைத் துடையுங்கள், அம்மா! உங்கள் மருமகனுக்கு எப்படி இருக்கும்?'' என்று தாயின் காதோரம் முணுமுணுத்தாள்.

''இதுதான்மா பெற்றமனம் பித்து; பிள்ளைமனம் கல்லு' என்று சொல்வது! ஆமாம், அம்மையார் என்னவோ திருமணத்திற்கு முன்பாக ரொம்பவும் அளந்தீர்களே! இப்போது பார்த்தால், அப்படி ஓர் ஐடியா இருப்பதாகவே தெரியவில்லையே!'' என்று கிண்டலாகக் கேட்டான் புவனமோகனன்.

''எல்லாம் உங்களால் வந்ததுதானே?'' என்று கடைக்கண்ணால் கணவனைப் பார்த்தாள் வசுதா.

''அய்யோ! நான் என்னம்மா செய்தேன். போடு தோப்புக்கரணம் என்றால், பத்து போதுமா, இருபது

வேண்டுமா என்று கேட்பேன்! ஒருவேளை கேளாமலே போட்டிருக்க வேண்டுமோ?... தோப்புக்கரணத்தைச் சொன்னேன்!'' என்று கங்காதரன் பயந்தவன் போலக் கூறவும் எல்லோருக்கும் சிரிப்பு வந்தது.

வாசுகியும், கண்களைத் துடைத்துக் கொண்டு லேசாக முறுவல் செய்தாள்.

''இதைத்தான், இதைத்தான்...இதையேதான் நானும் சொல்கிறேன். ஊர் உலகத்தில் உள்ள புகுந்த வீடுகள் போல, இங்கேயும் எல்லாரும் என்னைப் பிக்கி, பிடுங்கிப்...''

''அதென்ன பிக்கி, பிடுங்கி?'' என்று புவனன் விளக்கம் கேட்க, ''பிக்கல் பிடுங்கல் என்ற பெயர்ச் சொற்களுக்கான வினை எச்சங்கள்தான் இந்தப் பிக்கி, பிடுங்குவதிலிருந்து தப்பிப்பதற்காக அவ்வப்போது அம்மா வீட்டுக்கும் படை எடுத்து விடலாம் என்று நினைத்திருந்தேன். இங்கேதான் பிக்கிப் பிடுங்க யாருக் குமே தெரியவில்லையே! அதனால்தானம்மா வர வில்லை!...ஆனால் கவலைப்படாதீர்கள். இனிமேல் தான் சீக்கிரமே வரவேண்டுமே!'' என்று லேசாகக் கன்னம் சிவந்தாள் தங்கை.

''அடேடே! உலக அதிசயம், புவனன்! உங்கள் தங்கை கூட வெட்கப்படுகிறாளே!'' என்று கங்காதரன் சிரிக்க எல்லோரும் அதில் கலந்து கொள்ள, வாசுகியின் பிரிவாற்றாமை, அதில் காணாமல் போயிற்று.

இதுபோன்ற பேச்சுகள் அடிக்கடி நடப்பன. எப்படி யாவது, வாசுகியைச் சிரிக்க வைத்துவிடுவார்கள், அதுவே குறிக்கோள் போல.

ஒருநாள், 'டிரைவ் இன்'னுக்குப் போனார்கள்.

உள்ளே, உணவுக்கு ஆர்டர் பண்ணிவிட்டுக் காத்திருக்கையில், ''நான் சுற்றிப் பார்த்துவிட்டு வருகி றேன்!'' என்று வசுதா கிளம்பினாள்.

கங்காதரன் மைத்துனனிடம் சொன்னான். ''உங்கள் தங்கை எங்கே போகிறாள் தெரியுமா, புவன்? அந்தப் பக்கமாகச் சிறுவர்கள் விளையாட இடம் இருக்கிறது. ஊஞ்சல்கள், சறுக்குமரம், ஜங்கிள் ஜிம் என்று வைத்தி ருக்கிறார்கள். இங்கு வழக்கமாக வருகிறவர்களின் பிள்ளைகள் எல்லாம் அங்கேதான் ஆடிக் கொண்டு இருப்பார்கள். அவர்களைப் பார்த்துத் தன் பிள்ளைஅவர் களுள் யாரைப் போல இருக்கும் என்று கனவு காண்பதற்காகப் போகிறாள்'' என்று சிரித்தான்.

வாயால் எதுவும் சொல்லாமல், மூக்கைச் சுருக்கி, உதட்டைக் குவித்துக் கணவனுக்கு அழகு காட்டிவிட்டு, வசுதா நடக்க, சிறு முறுவலோடு வாசுகியும் மகளோடு கூடச் சென்றாள்.

மெய்யாகவே, ''அம்மா, பாப்பாவுக்கு இந்த மாதிரி மூக்கு, அந்த மாதிரி வாய்...'' என்று வசுதா அடுக்கவும் வாசுகிக்குச் சிரிப்பு வந்தது.

''இந்தா! இனி உன்முறை.சரியாக ஐம்பது முடிந்த தும் என்னிடம் தந்துவிட வேண்டும்!'' என்று கணீர்க்குர லில் கூறிய சிறுமி ஒருத்தி, ஊஞ்சலை இன்னொரு சிறுமியிடம் கொடுத்துவிட்டு இவர்களிடம் வந்தாள்.

வட்டக் கண்கள் விரிய, ''உன் வயிறு ஏன் பெரிதாக இருக்கிறது?'' என்று வசுதாவிடம் நேராகக் கேட்டாள்.

திகைப்புற்றவர்களாகத் தாயும் மகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

மிஞ்சிமிஞ்சி நாலு வயது இருக்கக்கூடும். சின்னஞ் சிறுமி! இவளிடம் போய், இந்தக் கேள்விக்கு என்ன வென்று பதில் சொல்வது?

''வந்து...வந்து...'' என்று சற்றுத் தடுமாறி விட்டு, ''அது வந்து, இவள் மதியம் நிறைய சாப்பிட்டு விட்டாள்! அதனால்தான் வயிறு பெரியதாகத் தெரிகிறது!'' என்று சமாளித்தாள் வாசுகி.

'அப்பாடி' என்று மூச்சுவிடும்போதே, ''பொய்!'' என்று ஆணித்தரமாக அறிவித்தாள் குழந்தை!

இருவரும் திகைப்பும் கூடவே ரசனையுமாக நோக்கையில் அந்தச் சிறுமி சொன்னாள் ''சின்னப் பிள்ளைகளிடம் பொய்யே சொல்லக் கூடாதின்னு எங்கள் சின்னப் பாட்டி எல்லோருக்கும் சொல்லிக் கொடுத்திருக்காங்க. நிஜ...த்தைச் சொல்லுங்க. இவங்க வயிற்றுக்குள்ளே குட்டிப் பாப்பாதானே இருக்குது?''

மீண்டும் திகைத்து விழித்துவிட்டு. ''அப்படீன்னு உனக்கு யார் சொன்னார்கள்?'' என்று வசுதா வினவினாள்.

''உங்க பாப்பா பத்தி யாரும் சொல்லலை. ஆனால், எங்கள் மோனிச் சித்திக்கும் இதுபோலத் தொப்பை பெரிசாயிருந்தது. நான் ஏன் என்று கேட்டதுக்கு, உள்ளே பாப்பா இருக்குதுன்னு சின்னப் பாட்டி சொன்னாங்க'' என்று விளக்கம் உரைத்தாள் சிறுமி.

இனி வேறு கதை அவசியமில்லை என்று தீர்மானித்து, ''ஆமாம் பாப்பா! இந்த அக்காவுக்குள்ளும்...''

என்று தொடங்கிய வாசுகியை இடைமறித்து, ''அய் யய்யே! அக்காவாம்!'' என்று சிரித்தாள் அவள்.

''இவங்க அக்கா இல்லை பாட்டீ! ஆன்ட்டீ! இவ்வளவு பெரியவங்க ஆயிட்டா அப்புறம் ஆன்ட்டீன் னுதான் சொல்லணும்! சரியா?'' என்று, சிறுமி லேசாக ஒருபுறமாய்த் தலையைச் சாய்த்து, சுட்டுவிரல் நீட்டிக் கற்றுக் கொடுக்கவும், வாசுகி தன்னையறியாமல் அவ ளைத் தூக்கி அணைத்து முத்தமிட்டாள்.

''சரிடாக் கண்ணு!'' என்றாள் குரலில் பணிவு காட்டி

குழந்தையின் கவனம் அதற்குள் ஊஞ்சலிடம் பாய்ந்தது. ''ஐ! என் முறை வந்து விட்டது!'' என்று உடல் நெளித்து இறங்கி, வாசுகியின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஓடிப்போனாள்.

தாயின் பார்வையைக் கவனித்து விட்டு, ''என் னம்மா, அப்படிப் பார்க்கிறீர்கள்?'' என்று வசுதா விசாரித்தாள்.

''நீ சின்னதாய் இருந்தது நினைவு வருகிறதுடா! இதைவிட, உனக்குக் கொஞ்சம் நீளமாய் முடி வளர்த்தி ருந்தேன்! மற்றபடி வெடுவெடு என்று இதே பேச்சுதான். வாயாடி என்று யாரும் சொல்லிவிடுவார்களோ என்று பயந்து, ஓயாமல் உன்னைக் கண்டிப்பேன். ஆனால் இப்படிப் பேசுவதும் அழகாய்த்தானே இருக்கிறது'' என்றாள் தாயார். இன்னமும் குழந்தையிடமே கவன மாக.

''பல்வலி என்ன சொல்லிற்று?'' என்று பக்கத்தில் குரல் கேட்கவும் இரு பெண்களும் திரும்பிப் பார்த்தனர்.

பிள்ளைகள் விளையாடும் இடத்தின் நுழைவா யிலை ஒட்டி, சற்று உட்புறமாய் நின்று பேசிக் கொண்டிருந்தவர்கள் அருகே தோளில் கிடந்த சிறு குழந்தையைத் தட்டிக் கொடுத்தபடி, ஓர் இளம்பெண் வந்து சேர்ந்திருந்தாள்.

''பல்வலியா?''

'ஆமாம்' பல்லவி என்று பெயர். 'தொண தொண' என்று உயிரை வாங்கி விடுவாள். அதனால் இப்படிப் 'பல்வலி' என்று அழைத்துக் கிண்டலடிப்போம்.'' என்று பல் தெரியச் சிரித்தாள் அந்தப் பெண்.

''நன்றாகப் பேசுகிறாள்!'' என்றாள் வசுதா.

''அவள் வாயாடி என்பதை ரொம்ப நாகரீகமாகக் கூறுகிறார்கள். ஆனால் பாருங்கள், வீட்டில் அத்தனை பேரும் செல்லம் கொடுத்தால் பிள்ளை வாயாடாமல் என்ன பண்ணும்? ஏதோ, பவிக்குட்டி நல்ல பெண் என்பதால், இந்த துருதுருப்போடு நிற்கிறது. இதுவே வேறு குழந்தை என்றால் கழுதை ஆகியிருக்கும்!' என்றாள் புதியவள்.

''உங்கள் மகளா?''

''ஊகூம் நான் அவளுக்குச் சித்தி. இதோ, இதுமட் டும்தான் என் பிள்ளை!''

''ஓகோ! சற்று முன் சொன்னாளே,பெரிய வயிற்றுக் குள் பாப்பா என்று! அப்படியானால் நீங்கள்தான் 'பல்லவி'யுடைய மோனிச் சித்தியாக இருக்க வேண் டும்.''

சிரித்த வண்ணம் ஒத்துக்கொண்டாள் அந்த மோனி.

''இவள் பல்லவி என்றால், அடுத்து அனுபல்லவி, சரணம் என்று இவள் அம்மாவுக்கு மூன்று பிள்ளைகள் வேண்டுமாமா?'' என்று புன்னகையோடு வினவினாள் வசுதா.

சற்று முகம் வாடி ''அப்படியில்லை. இவள் அம்மா விஷயம்...'' என்று இழுத்துவிட்டு உடனே மோனி அந்தப் பேச்சை நிறுத்தினாள். ''அது அப்படியில்லை! பல்லவிதான் எங்கள் குடும்பங்களில் முதல் பேரக் குழந்தை! மூன்றாம் தலைமுறையின் தொடக்கம் என்று பெரியம்மாவும் அம்மாவுமாக இவளுக்கு இந்தப் பெயர் வைத்தார்கள்!'' என்று முடித்தாள்.

மோனியின் ஏமாற்றத்தைக் கவனியாதவள் போல, ''தொடக்கத்தைத் துரத்திக் கொண்டு இது ஒன்று தெரிகிறது! மற்றது?'' என்று விளையாட்டுப் பகுதியை ஒருதரம் விழிகளால் வலம் வந்தாள் வசுதா.

''இருக்கிறதே! அண்ணாவுக்கு இரண்டு! மைத்திக்காவுக்கு ஒன்று. எனக்கு இது. சரத் அண்ணாவுக்கு இனிமேல்தான் திருமணம் ஆக வேண்டும்!'' என்று மோனியும் இப்போது வெளிப்படையாகவே விடை சொன்னாள்.

பேசிக் கொண்டு இருக்கும் போதே, தோளில் கிடந்த குழந்தை தூங்கிவிட, ''குழந்தையைக் காரில் கிடத்திவிட்டு வருகிறேன். கொஞ்சம் பல்லவியிடம் ஒரு கண் வைத்துக் கொள்கிறீர்களா?'' என்று மோனி கேட்டாள்.

தாயும் மகளும் ஆவலோடு ஒத்துக்கொள்ளவே, குழந்தையோடு மோனி, காரை நோக்கிச் சென்றாள்.

தன் ஆட்டம் முடிந்ததும் பல்லவி மீண்டும் இவர்களிடம் ஓடி வந்தாள்.

''பார்த்தீங்களா? அதுதான் எங்கள் மோனிச்சித்தி. சித்தியோட தோள்லே படுத்திருந்ததே, அந்த பாப்பா தான் - அந்தப் பாப்பா பேர் குட்டிச் செல்லம் - அதைத்தான் எங்கள் சித்தி வயிற்றுக்குள்ளே இருந்து டாக்டர் எடுத்தாங்களாம்!'' என்று பெரிதாகக் கதை சொன்னாள் குழந்தை.

''அப்படியா, கண்ணு?!'' என்று அவளுக்குத் தோதாகப் பெரியவர்கள் இருவரும் விழிவிரித்துக் கேட்கும்போதே, புருவம் சுருக்கி, ''ஆனால், வயிற்றுக் குள்ளே இருக்கிற பாப்பாவை டாக்டர் எப்படி வெளியே எடுப்பாங்க?'' என்று கேட்டு, மீண்டும் அவர்களைத் திகைக்க வைத்தாள்.

வாசுகி விழித்துக் கொண்டு நிற்கையிலேயே, ''அதை டாக்டரிடம் அல்லவா கேட்க வேண்டும்!'' என்றாள் வசுதா.

''ஓகோ!'' என்ற பல்லவி, சற்று யோசித்து, ''சரி, பெரிய தாத்தாவைச் 'செக்கப் பண்ண டாக்டர் வர்ற போது கேட்கிறேன்!'' என்று முடித்தாள்.

''பாவம் டாக்டர்'' என்று தன்னையறியாமல் வசுதா சொல்லிவிட, அதைப் பிடித்துக் கொண்டு, ''ஏன்? டாக்டர், ஏன் பாவம்?'' என்று கேட்கத் தொடங்கினாள் சிறுமி.

சிரிப்பு ஒருபக்கம் வந்தாலும், அவசரமாக யோசித்து, ''அதில்லை, சும்மாவே உன் தாத்தாவை

'செக்கப்' பண்ணுவது அது இதென்று அந்த டாக்டருக்கு நிறைய வேலை! அதற்குமேல், உனக்கு பதில் சொல்வது என்றால் எவ்வளவு சிரமம்? பாவம்தானே?'' என்று சமாளித்தாள் வசுதா.

ஆச்சரியமாய் நோக்கிய தாயிடம், ''ஒத்திகை அம்மா! நாளைக்கு என வாலுக்குப் பதில் சொல்லத் தெரிய வேண்டும் அல்லவா?'' என்று மேலும் கூறவும், ''உங்கள் வாலா?'' என்று அதைப் பிடித்துக் கொண் டாள் பல்லவி.

''நிஜம்மா உங்களுக்கு வால் இருக்குதா? எங்கே காட்டுங்க!'' என்று அவள் வசுதாவின் முதுகுப்புறம் சென்று பார்க்கவும் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கி னாள்.

''ஊகூம் மெள்ளச் சிரிடி; எங்காவது பிடித்துக் கொள்ளப் போகிறது! முதலில் எங்காவது உட்கார். ரொம்ப நேரமாய் நின்று கொண்டே இருக்கிறாயே! கால் வலிக்கப் போகிறது!'' என்று வாசுகி கவலைப்படத் தொடங்கினாள்.

''காலை வலிக்குதா, ஆன்ட்டி. வாங்க, உட்கார லாம்'' என்று வசுதாவின் கையைப் பிடித்து, அருகில் கிடந்த சிமெண்ட் பெஞ்சருகே அவளை இழுத்துச் சென்றாள் பல்லவி.

''ஷ். ஆட்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் பார். வேண டாம். நில்லு...'' என்று வசுமதி கூறியதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல், ''எழுந்திருங்க, எழுந்திருங்க! எங்கள் ஆன்டிக்குக் கால் வலிக்குதாம்!'' என்று அவள் விரட்டிய விரட்டலிலும் வசுதாவின் தாய்மைத் தோற்றத்

திலுமாக, 'பெஞ்ச்'சில் அமர்ந்து எதையோ விவாதித்துக் கொண்டிருந்த சில இளைஞர்கள் அவசரமாய் எழுந்து இடம் கொடுத்தனர்.

''ப...பரவாயில்லை!'' என்று கூச்சத்தில் முகம் சிவக்க நின்ற வசுதாவை ''உட்காருங்க ஆன்ட்டி'' என்று பிடித்து இழுத்து உட்கார வைத்துவிட்டுப் பல்லவி தானும் அருகில் அமர்ந்து கொண்டாள்.

வசுதாவை ஒட்டி அமர்ந்து கொண்டு, ''பாட்டீ, நீங்களும் வாங்க. வந்து உட்காருங்க. உங்களுக்கும் இடம் இருக்குது!'' என்று வாசுகியையும் அழைத்து உபசரித்தாள்.

புன்னகையோடு அருகில் வந்து, சிறுமியின் கன்னம் தடவி, ''என் சமர்த்துக் கண்ணு!'' என்று திருஷ்டி கழித்தாள் வாசுகி.

''என்ன? இன்னமும் இந்தப் பிள்ளைகளை விட்டுக் கிளம்ப மனம் வரவில்லையா? அங்கானால் வடை ஆறிப்போனால் உங்கள் தங்கைக்குப் பிடிக்காதே என்று மாப்பிள்ளை கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறார் கிளம்பு வசு!'' என்றபடி புவனமோகன் அவர்களை நோக்கி வர, அவனைப் பார்த்து முறுவலித்தபடி, ''இதோ அண்ணா! இரண்டே நிமிஷம்! இந்தப் பல்லவி யுடைய சித்தி வந்துடட்டும்! அவர்களிடம் குழந்தையை ஒப்படைத்து விட்டு வந்து விடுகிறோம்!'' என்று எழுந்தாள் வசுதா.

கூடவே எழுந்தபடி, ''யாரது குழந்தை? நானா? நான் ஒன்றும் குழந்தை இல்லை! பெரிய பொண்ணு ஸ்கூலுக்கெல்லாம் போகிறேன் தெரியுமா?'' என்றாள் பல்லவி.

''அது யாரது பள்ளிக்கெல்லாம் போகிற பெரிய பொண்ணு?'' என்று விளையாட்டாய்க் கேட்டபடி முன்னே வந்து ''ஹலோ; நீங்கள் தான் பல்லவியா? என் பேர் புவனமோகனன்!'' என்று தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்டு கையைப் பற்றிக் குலுக்குவதற்காக கையை நீட்டினான்.

பெரிய மனுஷி மாதிரி அவன் கையைப் பற்றிக் குலுக்கி, ''நான் தான் பல்லவி! யூகேஜி!'' என்று பெருமையோடு தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டாள் பல்லவி!

''ரொம்பவும் கெட்டிக்காரக் குழ...வந்து கெட்டிக் காரப் பெண்ணடா!'' என்று சமயத்தில் தன்னைத் திருத்திக் கொண்டு பல்லவியைப் புகழ்ந்து பேசினாள் வாசுகி.

''ரொம்ப நேரமாகி விட்டதாம்மா? சாரிம்மா! குழந்தை தூங்குகிறது என்று கிடத்தப் போனால் அரைகுறையாக விழித்துக் கொண்டது. தட்டித் தூங்க வைத்துவிட்டு வர...'' என்று வேகமாகப் பேசியபடி விரைந்து வந்து சேர்ந்தாள் மோனி.

குனிந்து பல்லவியின் கையைப் பற்றிக் குலுக்கிக் கொண்டிருந்தவனின் முகத்தைப் பார்த்ததும், அவள் முகம் பேயறைந்தாற் போல ஆயிற்று.

சட்டெனப் பல்லவியைப் பிடித்துத் தன்புறமாக இழுத்தாள். குழந்தையின் கையை இறுகப் பற்றியவாறு, ''வா! நேரமாயிற்று!'' என்று வெளியே செல்லத் தொடங்கினாள்.

"**சித்**...தி... இன்னும் கொஞ்சம் ஊஞ்சலில்..." என்று முரண்டு பிடித்த பெண்ணை "வாடி என்றால்..." என்று அதட்டியபடி, தரதரவென்று பலமாகப் பிடித்து இழுத்தவாறே வேகமாகச் சென்று, காரில் ஏறி, காரோட்டியை அதட்டிக் காரைக் கிளப்பிக் கொண்டு சென்றும் விட்டாள்.

## 13

**வா**சுகிக்கு ஒரே ஆச்சரியம்! "பாரேன் அந்தப் பெண்ணை! அவளாக வந்து முதலில் எவ்வளவு பிரியமாகப் பேசினாள்! இப்போது ஒரு 'போய் வருகிறேன்' கூட இல்லாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு போகிறாளே! பூப்போலப் பிள்ளையை வேறு முரட்டுத்தனமாக இழுத்துக் கொண்டு! சேச்சேச்சே! ரொம்ப மோசமான பெண் போல இருக்கிறது! மரியாதையே தெரியவில்லையே!" என்று எரிச்சலும் வருத்தமுமாக அங்கலாய்த்தாள்.

இரும்பென இறுகி நின்ற அண்ணனின் முகத்தையே பார்த்தபடி "அண்ணா!" என்று மெல்ல அழைத்தாள் வசுதா. "நான் அந்தக் கார் நம்பரை மனதில் பதிய வைத்துக் கொண்டேன்!" என்றாள் தொடர்ந்து.

"தேவையில்லை!" என்றான் புவனமோகனன் சுருக்கமாக.

"அண்ணா!"

"அவர்கள் இருக்கக் கூடிய இடங்கள், வீட்டு முகவரி எல்லாம் எனக்குத் தெரியும். ஆனால், அங்

கெல்லாம் அவர்களைத் தேடி நாம் செல்ல வேண்டிய அவசியம் இல்லை!'' என்றான் அழுத்தமான குரலில்.

சட்டெனக் கட்டுப்பாட்டை இழந்து, தாயாருக்கு இந்த விஷயம் எதுவும் தெரியாது என்பதையும் மறந்து, ''என்னண்ணா உளறுகிறீர்கள்? அந்தக் குழந்தை பல்லவி உங்கள் மகளாகவே இருக்கக்கூடும்!'' என்றாள் வசுதா.

''அப்படி ஒன்றும் கட்டாயமில்லை! அவர்கள் ஐந்துபேர். அவர்களில் யார் மகளாகவும் இந்தப் பெண் இருக்கக் கூடும்'' என்றான் புவனன் சற்றுக் கடுமையாக.

ஆனால் அந்தக் கடுமைக்கு வசுதா அடங்குவதாக இல்லை! ''ஆனால் அந்த ஐந்து பேரில் யார் மகளும், நம் வீட்டு ஜாடையில் - என் சாயலில் இருக்க முடியாதே!'' என்றாள் விடாமல்.

''வசுதா, ப்ளீஸ்! இந்தப் பேச்சை விடு!'' என்று முடிக்க முயன்றான் புவனன்.

இவ்வளவு நேரம் அண்ணனும் தங்கையும் பேசிய பேச்சைத் திகைப்புடன் கேட்டுக் கொண்டு நின்ற வாசுகிக்கு விஷயம் விளங்கியது.

''என்னது? அந்தக் குழந்தை பல்லவி என் பேத்தியா? வசு, என்னம்மா? நிஜம்தானா? அய்யோ, கார் போய்விட்டதே? புவனா, காரை எடு பின்னோடு போய்க் கூட்டி வருவோம்!'' என்று பதைப்புடன் மகனை அவசரப்படுத்தினாள்.

''வேண்டாம்!'' என்றான் மகன் ஒற்றைச் சொல்லாக.

"என்னடா வேண்டாம்?" என்றாள் தாயார் ஆத்திரமாக.

"கல்யாண பேச்சு கூடக் கூடாது என்றாய்; மனைவி பற்றிப் பேசக் கூடாது என்றாய்! குலம் விளங்க வைக்க வேண்டிய பிள்ளை இப்படித் தனிமரமாய் நிற்கிறானே என்று எங்களுக்கு எவ்வளவு வேதனை இருக்கும்? மீண்டும் வீட்டை விட்டுப் போய்விடுவாயோ என்று பயந்து, ஒரு வார்த்தை சொல்லாமல் உள்ளுக்குள்ளேயே வைத்துப் புழுங்கிக் கொண்டு இருக்கிறோம்! இப்போது குருத்து மாதிரிப் பிள்ளை இருப்பது தெரிந்தும் விட்டு விட வேண்டுமா? ஐய்யோ! மணிமணியாய்ப் பேச்சும் சுட்டித்தனமுமாய் உன்னைப் போலவே இருக்கிறதே! முடியாது! நீயும் உன் மனைவியும் சேர்வீர்களோ, பிரிந்தே இருப்பீர்களோ, எப்படியோ போங்கள்! எனக்கு என் பேத்தி வேண்டும்!" என்று சற்று உரத்த குரலில் கூறி முடித்தாள்.

"ஷ்.. ப்ளீஸ். மெலலப் பேசுங்கள். அம்மா, மற்றவர்கள் திரும்பிப் பார்க்கிறார்கள் பாருங்கள்!" என்று தாயை அடக்க முயன்றான் புவனமோகனன்.

"அதற்காகத்தான் இவ்வளவு தூரம் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு பேசுகிறேன். மற்றபடி, எனக்கு நெஞ்சையெல்லாம் அடைத்துக் கொண்டு 'ஓ' என்று கத்த வேண்டும்போல எப்படி வருகிறது, தெரியுமா? கண்ணா, தயவுபண்ணி நான் சொல்வதைக் கேளப்பா! போய், என் தங்கத்தை என்னிடம் அழைத்துக் கொண்டு வந்து விடுப்பா!" என்று குரல் தழுதழுக்க வாசுகி மகனிடம் கெஞ்சிக் கேட்டாள்.

''...அம்மா, அங்கே சாப்பாடு வந்து ஆறிக் கொண்டு இருக்...''

''சாப்பாடா இப்போது முக்கியம்? எனக்கு என் பேத்தி வேண்டும்!'' என்றாள் வாசுகி பிடிவாதமான குரலில்.

தங்கையை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''என் விஷயம் என்னுடனே தான் மடிய வேண்டும். யாரிட மும் சொல்லக் கூடாது என்று முதலில் நினைத்திருந் தேன். அதை மீறியது தப்பு என்று இப்போது தெரி கிறது!'' என்றான் கசப்புடன்.

''அண்ணா!''

அடிபட்ட திகைப்பைத் தங்கையின் முகத்தில் காணவும் அவனுக்கு உடனே ஒருமாதிரி ஆகிவிட்டது. ''சாரிம்மா! மன்னித்துக் கொள். நான் செய்த தப்புக்கு உன்னை வருத்துவானேன்? அம்மா, இதோ பாருங்கள்! நான் சொல்வதைக் கொஞ்சம் கவனித்துக் கேளுங்கள். அந்தப் பெண் பல்லவி, ஒருவேளை, உங்கள் பேத்தியா கவே இருந்தாலும், நினைத்தாற்போலப் போய்க் கூட்டி வர முடியுமா? அவர்கள் விடுவார்களா? முதலில், வளர்ந்த, பழகிய இடத்தையும் மனிதர்களையும் பிரிந்து அவள்தான் வருவாளா? அதெல்லாம் போனேன் வந் தேன் என்று முடிகிற விஷயமா?

''அத்தோடு யோசியுங்கள்! அங்கே மேஜையில் தட்டுத் தட்டாய் உணவு வகைகளோடு மாப்பிள்ளையை அங்கே மொட்டு மொட்டென்று உட்கார வைத்துவிட்டு நாம்பாட்டில் இங்கு நின்று மாநாடு நடத்திக் கொண்டி ருந்தால், பாவம் அவருக்கு எப்படியிருக்கும்? வாருங்

கள், போகலாம். இதுபற்றிப் பிறகு சொல்லுகிறேன்'' என்று அழைத்தான்.

''சொல்லுகிறேன், என்கிறாயே தவிர, பிள்ளையை அழைத்து வருகிறேன் என்று சொல்ல மாட்டேன் என்கிறாயே!'' என்று தாயார் குறைபபட்டாள்.

''சொன்னேன் இல்லையா? அதெல்லாம் அப்புறம் போகலாம். இப்போது அங்கே மாப்பிள்ளை முன் இதெல்லாம் காட்டிக் கொள்ளாமல் இருங்கள்'' என்று கெஞ்சலும் கூடவே கண்டிப்புமாகச் சொல்லித் தாயை யும் தங்கையையும் புவனமோகனன் உணவுக் கூடத் திற்கு அழைத்துச் சென்றான்.

கங்காதரன் முட்டாளல்ல. மைத்துனனும் சேர்ந்து, தாமதமாகி வந்ததும், மூவரின் முகங்களும் ஒருமாதிரி இருந்தது எல்லாம் கவனித்தும், மனைவியின் ஒரு சிறு விழி அசைவைப் புரிந்து கொண்டு, வேறெதுவும் கேளாமல் இயல்பாகவே பேசிப் பழகினான்.

தன் வீடு என்றால் எந்த நேரத்திலும், மகனை அழைத்துக் கேட்க முடியும். ஆனால், விருந்தாடி வந்த இடத்தில் அது முடியுமா?

ஆனாலும் விடாமல், இரவு உணவின் பின், வயிறு உப்புசமாக இருப்பதாகவும், ''கொஞ்சம் நடந்தால் நன்றாயிருக்கும்! கொஞ்சம் துணை வருகிறாயாடா?'' என்று கேட்டு, மகனை அழைத்துக் கொண்டு வாசுகி கிளம்பினாள்.

சற்றுதூரம் சென்றதும், ''என்னடா, ஒன்றுமே பேசமாட்டேன் என்கிறாயே! என் தங்கத்தை எப்போது

அழைத்து வரப்போகிறாய்?'' என்று நேரடியாகக் கேட்டாள்.

கொஞ்சநேரம் பேசாமல் நடந்து விட்டு, ''அம்மா, பல்லவி உங்களுக்குப் பேத்தி என்றால் எனக்கு மகள். இவ்வளவு பெரிய மகள் இருப்பதே எனக்குத் தெரியாது என்றால் எனக்கு எப்படி இருக்கும்? யோசித்துப் பார்த்தீர்களா? ஆனால்... அம்மா, இதில் மேலே செய்வதற்கு ஒன்றும் இல்லை. அம்மா! ரொம்பவும் மனதுக்குக் கஷ்டம்தான். ஆனால், சகித்துக் கொள்ளத் தான் வேண்டும், அம்மா! ஒரு விபத்தில் கை கால் போய் விட்ட மாதிரி, ஏற்றுக் கொண்டு விட வேண்டும். வசுவின் பிள்ளையைப் பார்த்து ஆறுதல் அடையுங்கள்.... அம்மா, ப்ளீஸ், இதுபற்றி மீண்டும் மீண்டும் பேசி வேதனையை அதிகப்படுத்தாதீர்கள்... உங்களுக்குப் பெரும் துன்பம் தான். ஆனால், என்னைப் போலவே நீங்களும் அதை அடக்கிப் பழகிக் கொள்ள வேண்டும். வாருங்கள் போவோம்!'' என்று விஷயத்தை அத்தோடு முடித்து விடப் புவனமோகனன் முயன்றான்.

பெருமளவுக்கு வீட்டில் ஆண்களின் அதிகாரத்துக்குப் பணிந்து போவது வாசுகிக்குப் பழக்கம் தான். ஆனால், இந்த விஷயம் அப்படி விட்டு விடக்கூடியது அல்லவே!

தாயார் மீண்டும் மீண்டும் மகனிடம் கெஞ்சி, மிஞ்சி வற்புறுத்திப் பேசிப் பார்த்தாள். ''குழந்தை என் கண்ணுக்குள்ளேயே நிற்கிறாளேடா! இல்லை என்றால் பரவாயில்லை! இருப்பது தெரிந்தபிறகு எப்படி விடுவது? நம் வாரிசு! நம் சொத்துதானே? கோர்ட்டுக்குப் போய்...''

''பத்துமாதம் சுமந்து பெற்ற தாய்க்கு இல்லாத உரிமையா, அம்மா?'' என்றான் மகன்.

''அப்படியானால், மருமகளையும் அழைத்து வா!'' என்றாள் வாசுகி பிடிவாதமாக. ''கண்ணா, தீர்க்கமுடியாத சிக்கல் என்று உலகத்தில் ஒன்றுமே கிடையாதுடா! உனக்கு வெட்கமாயிருந்தால் சொல்லு, நான் போய், மருமகளிடம் பேசுகிறேன். அவள் காலில் விழுந்தாவது...'' என்று மேலேமேலே பேசிய தாயை புவனன் மீண்டும் இடைமறித்தான்.

''அம்மா! ப்ளீஸ்... தயவுபண்ணி இதுபற்றி இனிப் பேசாதீர்கள். பொறுங்கள். முதலில் நான் சொல்வதைக் கேட்டு முடித்து விடுங்கள். உங்கள் மகன் ஒன்றும் நல்லவன் அல்ல அம்மா! அதிலும் ஒருகாலத்தில் மகா அயோக்கியனாகத்தான் இருந்தேன். அம்மா, உப்பைத் தின்றால் தண்ணீர் குடித்துத்தான் தீர வேண்டும். அன்று செய்த தப்புகளுக்கு நான் தண்டனை அனுபவித்தே ஆகவேண்டும்! என்னைப் பெற்ற பாவம், பெற்றதும் கழுத்தைத் திருகித் தூர எறியாத பாவம், நீங்களும்...''

''அய்யோ! என்னடா கண்ணா பேசுகிறாய்?!''

தரையைப் பார்த்தபடி சற்று நேரம் வாய்மூடி நின்றுவிட்டு, புவனமோகனன் மீண்டும் தொடர்ந்தான். ''அம்மா, மீண்டும், இதையே சொல்ல எனக்குப் பிடிக்கவில்லைதான். ஆனாலும், எனக்கு வேறு வழியில்லை! கவனியுங்கள். அம்மா! நீங்கள் மீண்டும் இந்தப் பேச்சை எடுத்தீர்கள் என்றால், அப்புறம் நான் மீண்டும் வீட்டிலிருந்து வெளியேறும்படி ஆகிவிடும். இது நிச்சயம். ஞாபகம் இருக்கட்டும்!'' என்று தெளிவாக நிதானமாகக் கூறினான்.

அந்தக்குரலின் தன்மை பெற்றவளுக்குத் தெரி யாதா?

எனவே, "என்னடா, இப்படிச் சொல்லிவிட் டாயே!" என்று, ஆற்றாமையோடு முனகியதற்கு மேல், வாசுகி, தன் பேத்தி பற்றி எதுவும் பேசவில்லை.

பேசாதபடி வாயை இறுக மூடிக் கொண்டபோதும், எவ்வளவோ முயன்றும் அவளது வேதனையை முகம் காட்டிவிட, "என்ன அண்ணி, வயிறு இன்னமும் சரியாகவில்லையா? ஒரு மாத்திரை தருகிறேன், சாப்பி டுங்கள்! உடனே சரியாகி விடும்!" என்று மருத்துவ ஆலோசனை கூறத்தொடங்கினாள், வசுதாவுடைய மாமி யார்.

தன் மிரட்டலுக்குப் பயந்து வாயை மூடிக் கொண்ட போதும், வெளியே செல்கையில் தாயின் பார்வை தவிப்புடன் அங்குமிங்கும் தேடி அலைவதைக் காண்கை யில் புவனமோகனனுக்குப் பரிதாபமாகத்தான் இருந் தது. ஆனால், தன் அனுதாபத்தை அணுவளவு வெளியே காட்டினாலும், தாயார் தன் 'பேத்தி' பஜனை யைத் தொடங்கி விடுவாள் என்று தெரிந்திருந்தமை யால், புவனன் எதையும் கண்டு கொண்டதாகக் காட்டிக் கொள்ளவே இல்லை.

ஆனால், புவனன் வெளியே காட்டிக் கொண்டது போல, மகளைப் பற்றிய நினைவே அவனுக்கு இல்லை என்று வசுதா நம்பவில்லை. எப்படி, அவன், மனைவி யைப் பற்றிய தன் உணர்ச்சிகளை மற்றவர்களிடமிருந்து மறைத்தானோ, அதுபோலவே மகளைப் பார்க்கும் ஆவல், ஏக்கங்களையும், உறவினரிடமிருந்து ஒளிக்கி றான் என்றே அவள் நினைத்தாள்.

எனவே, அண்ணன் செல்லும் இடங்களைப் பற்றி, அவன் அறியாமல் விசாரித்துப் பார்த்தாள்.

அவளது வீட்டுக் கார்களில் ஒன்றையே, டிரைவரோடு புவனமோனனுக்கு கொடுத்திருந்ததால், விசாரணை அவளுக்கு எளிதாகவும் இருந்தது.

ஆனால், பலன்தான் ஒரு பெரிய கோழி முட்டையாகிப் போயிற்று. அவள் சந்தேகப்படும்படியான எந்த இடத்துக்கும் அவள் அண்ணன் செல்லவே இல்லை.

சரியான கல்லுளிமங்கள் இந்த அண்ணன் என்று உள்ளூரத் திட்டிக் கொண்டு வசுதா சும்மா இருக்கும்படி ஆயிற்று. ஆயினும், அவள் அடியோடு சும்மா இருந்து விடவும் இல்லை!

இந்த அளவுக்கு ஒரு மகள் இருக்கிறாள் என்கிற நிலைக்கு வந்து விட்டபிறகு விடக்கூடாது என்று தன்னால் ஆன முயற்சி செய்தாள்.

சேது அணைகட்ட ராமபிரானுக்கு அணில் செய்த உதவிபோலத் தான். தன் முயற்சியாக, ஏதோ ஒரு வகையில், புவனமோகனனைச் சென்னையில் பிடித்து வைக்க முயன்றாள்.. அவன் இங்கேயே இருந்து, இன்னும் ஒருதரம் எங்கேனும் மகளைச் சந்திக்க நேர்ந்தால், ஏதேனும் நல்ல விளைவு ஏற்படக் கூடுமே?

ஏற்கெனவே மனைவி மீது உயிரை வைத்திருந்தான். அடுத்து, பிள்ளைப் பாசமும் சேர்ந்தால் அவனைச் சும்மா இருக்க விட்டுவிடுமா?

அதன் விளைவாக, கணவனைப் பிரிந்து பம்பாய் வர அவளாலோ, மனைவியைப் பிரிந்து இங்கே

இருக்கக் கங்காதரனாலோ முடியாது என்று சொல்லிப் பிரசவத்தைச் சென்னையிலேயே வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்தாள்.

''ஆமாம்! ஊர் உலகத்தில் இல்லாத கணவன் மனைவி!'' என்று லேசாகச் சலித்துக் கொண்ட போதும், புவனமோகனன், தங்கையின் விருப்பத்தை ஏற்கவே செய்தான்.

வாசுகியைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்!

சித்தய்யனை வைத்துக் கொண்டு தன் பாட்டைப் பார்த்துக் கொள்வதாகக் கார்த்திகேயனும் கூறிவிடவே, வாசுகியும், புவனமோகனனும் சென்னையிலேயே தங்குவதாக ஏற்பாடாயிற்று.

புவனனுக்குச் சென்னையில் மேலும் சில நல்ல ஒப்பந்தங்கள் கிடைக்கவே, பம்பாய்ப் பொறுப்பைக் கார்த்திகேயன் பார்த்துக் கொள்வதாகவும், இங்கேயே வீடு எடுத்துப் புவனனும், அவன் தாயும் குடித்தனம் போட்டார்கள்.

தங்கள் வீட்டிலேயே இருக்கும்படி கங்காதரனும், அவனுடைய பெற்றோரும் கூறியபோதும் - ஓரளவு வற்புறுத்தியபோதும் கூடப் புவனமோகனனும் வாசுகியும் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. எப்போதாவது வந்துபோவது வேறு; நிரந்தரமாகத் தங்குவது வேறு. அத்தோடு, வசுதாவைப் பிரசவத்திற்காகப் பிறந்த வீட்டுக்கு அழைத்துச் சென்று முறைப்படி எல்லாம் நடத்த ஆசை என்று அவர்கள் கூறவும், அதற்குமேல் கங்காதரன் குடும்பம் பிடிவாதம் பிடிக்கவில்லை.

எனவே, வசுதாவுக்கு வளைகாப்பு செய்து, சென்னையிலேயே பிறந்த வீட்டுக்கு அழைத்துப் போனார்கள்.

வைபவத்துக்குக் கார்த்திகேயன், சித்தையனோடு வந்துவிட்டுப் போனார்.

''என் கையாலே மீன் குழம்பும் புட்டும் செய்து போடணுமின்னு நினைத்தேன்; ஏமாத்திட்டியே சின்னம்மா!'' என்று அங்கலாய்த்த சித்தையனிடம், குழந்தை பிறந்தபின் கட்டாயம் வருவதாகச் சமாதானம் சொல்லி, அனுப்பி வைத்தாள் வசுதா.

வளைகாப்பு விழாவுக்கு வந்தபோது, புதிதாக ஒத்துக்கொண்ட சில வேலைகள் குறித்து கார்த்திகேயன் மகனிடம் சொன்னார். ''இங்கேயே மூன்று வேலைகள், புவன். ஒன்று, கீழே 'ஷாப்பிங் ஏரியா'வும் மேலே கலையரங்கும். பம்பாயில் நீ செய்த சில வேலைகளைப் பார்த்து விட்டு இங்கே கட்டித்தரச் சொல்லி ரொம்பவும் கேட்டார்கள். போக்குவரத்துச் செலவு எல்லாம் அவர்களே ஏற்றுக்கொள்கிறார்களாம். ரேட் எல்லாம் ஒத்துக்கொள்ளவே சரியென்று விட்டேன். மற்ற இரண்டும், எதற்கும் நீயும் ஒரு முறை பேசிவிட்டு முடிவு செய். இந்தக் கம்பெனி சேர்மன் அடுத்த வாரம் சென்னைக்கு வருகிறாராம். உனக்கு டெலிஃபோன் செய்வார் சந்தித்து, இடத்தைப் போய்ப்பார்'' என்றார்.

கார்த்திகேயன் கூறியது போலவே, 'பல்லவி கன்ஸ்ட்ரக்ஷன்' சின் சேர்மன், நமச்சிவாயம் என்று ஒருவர் டெலிஃபோன் செய்து, புவனமோகனனை ஒரு 'பிசினஸ் டின்னரு'க்கு அழைத்தார்.

'பல்லவி' என்ற பெயர் உள்ளூர எழுப்பிய வலியை மறைத்துக் கொண்டு, அவரது அழைப்பைப் புவனன் ஏற்றுக் கொண்டான்.

உயர்தர ஓட்டல் ஒன்றில் புவனனை வரவேற்று, "என் மகனையும் வரச்சொல்லியிருந்தேன். குழந்தைக்கு உடம்பு சரியில்லை என்று டாக்டரிடம் கூட்டிப் போயிருக்கிறானாம். சீக்கிரமாகத் திரும்பிவிட்டால் கடைசியாக வந்து கலந்து கொள்வான். வாருங்கள், நாம் உணவைத் தொடங்கலாம்... கூடவே பேச்சு வார்த்தையையும்!" என்று நமச்சிவாயம் புன்னகை செய்ய, ஒப்புதலாய் ஒரு முறுவலுடன் புவனன் அவருடன் நடந்தான்.

மகன் சார்பில் கார்த்திகேயன் ஒத்துக் கொண்டிருந்த வேலை, அவனுக்கும் பிடித்தமாகவே இருந்தது. என்னென்ன மாதிரி வடிவமைக்கலாம் என்று புவனன் கூறிய யோசனைகள் நமச்சிவாயத்துக்கும் மிகவும் லாபகரமாகவும் அதேசமயம் கவர்ச்சிகரமாகவும் தோன்றவே, அவனது திட்டங்கள் ஒவ்வொன்றையும் அவர் முழுமையாக ஒத்துக்கொண்டார்.

உணவு முடிந்ததும், 'செல்'லில் பேசிவிட்டு, "இன்று பையன் வந்து கலந்து கொள்ள வழி இல்லை, மிஸ்டர் புவனன். நீங்கள் அடிப்படை வரைபடங்கள் தயாரித்துக் கொண்டு நாளை என் அலுவலகத்துக்கு வாருங்கள். வேலை முடிப்பது, பணம் தருவது பற்றிய ஓர் அட்டவணை அப்போது போட்டு முடித்து விடுவோம். எனக்கு முடிந்த அளவு வேலை விரைவாக முடியவேண்டும். தாமதம் ஆக, ஆக செலவழித்த

தொகைக்கு உரிய வட்டி நஷ்டம்தானே?'' என்றார் பெரியவர்.

''ஆனால், கட்டிடம் உறுதியாக இருக்க வேண்டுமானால், ரொம்ப அவசரப்பட முடியாது, சார். என் வேலை, உறுதிப்பாட்டுக்கும் உதவும்படி தான் இருக்கும்!'' என்றான் புவனன், குரலில் சிறு அழுத்தத்துடன்.

முறுவலித்து, ''அதனால் தான், உங்கள் கம்பெனியைத் தேர்ந்தெடுத்தேன் மிஸ்டர் புவனன். நான் குறிப்பிட்டது அனாவசியமான தாமதங்களை!'' என்றார் நமச்சிவாயம்.

''நேரம் பொன்னானது; அதை வீணாக்கக் கூடாது என்பது எங்கள் நிறுவனத்தின் முக்கியக் கொள்கைகளுள் ஒன்று. சார், உங்கள் வேலையை இழுத்தடித்துக் கொண்டு இருப்பது எங்களுக்கும் பாதிப்புதானே? எடுக்கும் வேலைகளை முடிக்க, முடிக்கத்தானே அடுத்ததைத் தொடங்க முடியும்?'' என்றான் புவனன் பழைய குரலிலேயே!

நமச்சிவாயத்தின் புன்னகை மேலும் விரிவடைந்தது. ''விட்டுக் கொடாமல் பேசுகிறீர்கள்! தொழிலில் இப்படிக் கறாராக இருப்பதுதான் எனக்கும் பிடிக்கும். அப்போது வரைபடங்களோடு நாளை வருகிறீர்கள்! அனேகமாக என் மகளையும், நீங்கள் அங்கே சந்திப்பீர்கள்! கிளம்புவோமா?'' என்று எழுந்தார் அவர்.

''சரி சார்... வந்து... குழந்தைக்குப் பெரிதாக ஒன்றும் இல்லையே, சார்?'' என்று சிறு கவலையுடன் புவனன் விசாரித்தான்.

''ஊகூம்... அதெல்லாம் ஒன்றுமில்லை! இவர்கள் அரட்டையில் பிள்ளையைக் கவனிக்கவில்லை! நன்றாக மழையில் விளையாடியிருக்கிறான். அதுதான் சளி, காய்ச்சல்... எப்போதுமே பேரனுக்குக் கொஞ்சம் சளித் தகராறு உண்டு. அதனால் கொஞ்சம் அதிகமாகி விட்டது! மற்றபடி, பயப்பட ஒன்றுமில்லை! ஆனால், அதுபற்றி நீங்கள் விசாரித்தது, எனக்கு... உங்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது! வேலையையும் இதே கருத்தோடு செய்யுங்கள்! வேலை நடக்கும் சமயம், தொடர்புக்கு என் மகன்கள், மகள் யாராவது இங்கே, சென்னையில் இருப்பார்கள்... தேவைப்பட்டது நீங்கள், அவர்களிடம் கலந்து கொள்ள, நான் ஏற்பாடு செய்து விடுகிறேன். நாளை வாருங்கள்!'' என்றுரைத்து விடை பெற்றுச் சென்றார் அவர்.

'பல்லவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்!'

இனிமேலாவது ஒரு புதிய நிறுவனத்தைப் புவன மோகனன் தொடங்கினால், அதற்குப் 'பல்லவி' என்று பெயரிடக்கூடும்!

எங்கெங்கோ ஓடத் துடித்த மனதை சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டு, புவனமோகனன், வேலையில் இறங்கினான். மற்றதை மறப்பதற்காகவே இரு மடங்கு தீவிரமாக வேலை செய்தான் எனலாம்.

ஷாப்பிங் பகுதி, அலுவலகப் பகுதி, அடுத்து கலையரங்கு அனைத்தையும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய மாதிரியும் கூடவே வித்தியாசமாகவும் வடிவமைத்து, அடிப்படையான விஷயங்களைக் குறிப்பிட்டு, அவன் வேலையை முடித்து விட்டுப் படுத்தபோது இரவு இரண்டு மணிக்கு மேலாகி விட்டிருந்தது.

வேலையைத் திருப்திகரமாக முடித்திருந்ததால் அயர்ந்து தூங்கி விட்டு, காலையில் சற்றுத் தாமதமாக எழுந்து, வழக்கம் போலத் தங்கையிடம் உடல் நிலை விசாரித்து விட்டு, செல் நம்பர், அன்று அவன் செல்லக்கூடிய இடங்களை எல்லாம் எழுதி வைத்து விட்டு, வேலையைக் கவனிக்கக் கிளம்பினான் அவன்.

வளைகாப்பு முடித்து, வசுதாவை அழைத்து வந்த தில் இருந்தே, எந்தெந்த நேரத்தில், எங்கெங்கே தான் இருக்கக் கூடும் என்பதை எழுதி வைத்து விட்டுத்தான் வெளியே செல்வது என்று புவனன் வழக்கப்படுத்தியி ருந்தான். எந்த நேரம் தங்கைக்கு வலியெடுத்தாலும் அவனோடு தொடர்பு கொள்வது, இலகுவாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு.

ஆனால், அவனது வேலைகள் நடந்த இடங்கள் தவிர, இந்தக் குறிப்புகளில் வேறு எதுவும் இல்லாது போனதில் வசுதாவுக்குத்தான் மிகுந்த ஏமாற்றம்.

தங்கையின் திட்டங்களைப் பற்றி எதுவும் அறி யாது, தன் புதிய திட்டங்களோடு, 'பல்லவி கன்ஸ்ட்ரக் ஷன்'சின் சேர்மன் நமச்சிவாயத்தைச் சந்திக்கச் சென்ற புவனமோகனனுக்கு அங்கே ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விட்டிருந்தபோதும், இந்த வேலையிலிருந்து எப்படியாவது கழன்று கொண்டு விடலாமா என்ற எண்ணமும் ஏற்பட்டது.

## 14

சென்னையின் பிரதான சாலைகளுள் ஒன்றில், பெரிய 'ஆஃபீஸ் காம்பளக்'சில், 'பல்லவி கன்ஸ்ட்ரக் ஷன்'சின் அலுவலகம் இருந்தது. புவனமோகனன் அங்கே சென்றபோது, ''பெரியவர் வீட்டுக்கு ஃபோன் போட்டுக் கொண்டிருக்கிறார்; ஓர் ஐந்து நிமிடங்கள் உட்காரச் சொன்னார்!'' என்று ஆபீஸ் பையன் அவனிடம் பணிவுடன் சொல்லி, உட்காருமாறு உபசரித்து குளிர்பானமும் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனான்.

பானத்தை மெல்ல அருந்தியபடி, டீபாயில் கிடந்த 'பிசினஸ் இந்தியா'வை எடுத்துப் புரட்டலானான் புவன மோகனன்.

ஓரிருவர் வந்து, பக்கவாட்டில் இருந்த அறையினுள் புகுந்தார்கள். அதன்பிறகு எழுந்த மெல்லிய ஒலிகள், அவர்கள் அங்கே பணிபுரிகிறவர்கள் என்பதைப் பறைசாற்றின.

வேகமாக வந்த ஒரு ஜோடிக்கால்கள், சற்று தயங்கி நிற்கவும், புத்தகத்திலிருந்து பார்வையை அகற்றி, நிமிர்ந்து பார்த்த புவனனும், திகைத்துப் போனான்.

ஏனெனில், மின் அதிர்ச்சிக்கு ஆளானவன் போல, அங்கே நின்று கொண்டு இருந்தவன் ரகு! தேவியுடைய பெரியப்பா பிள்ளை! 'நீ தவம் பண்ணியவனாகத் தெரியவில்லை!'' என்று புவனனிடம் முகத்துக்கு நேராகக் கூறியவன்!

இவனுக்கு இந்த இடத்தில் என்ன வேலை!

என்ன வேலை என்பதும், புவனனுக்கு உடனே புரிந்து விட்டது. 'பல்லவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' அவனுடைய - தேவியுடைய குழந்தையான அந்தக் குடும்பத்தின் முதல் பேரக்குழந்தையின் பெயரிலேயே இந்த நிறுவனம் தொடங்கப்பட்டிருக்கிறது!

புவனமோகனனின் யூகம் சரியே என்பதை, சேர்மனின் அறைக்குள் ரகு, உரிமையோடு சென்ற விதம் நிரூபித்தது.

முன்தினம் அவன் எண்ணியதை அவர்கள் முன் கூட்டியே செய்து வைத்திருக்கிறார்கள்! தேவியிடம் அந்தக் குடும்பத்தினர் கொண்டுள்ள அன்பை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்!

புவனனுக்கும் அதே அன்பு இருக்கத்தான் செய்கிறது! ஆனால், அவன் என்னதான் கரடியாகக் கத்தினாலும், அங்கே அதை யார் நம்புவார்கள்? அதிலும், தேவி அவனை அணுவளவும் நம்ப மாட்டாளே?

ஆனால்... அவனுடைய குழந்தையைக் கருவிலேயே அழித்து விடாமல் நல்லபடியாகப் பெற்று வளர்க்கிறாளே! ஒருவேளை...

சட்டென எழுந்து விட்டான் புவனமோகனன்.

இது ஏங்கிக் கிடக்கும் மனது. வெறும் துரும்பில் மாபெரும் கட்டிடத்தைத் தாங்கக்கூடிய இரும்புத் தூணைக் காண முயற்சிக்கிறது!

இங்கே இந்த வேலையை எடுத்துச் செய்வதில் யாருக்கும் லாபமில்லை! நல்ல வருவாய்தான்! வேலைத்

திருப்தியும் கிடைக்கும்தான். ஆனால் மனம் அனுபவிக்கப் போகும் சித்ரவதைக்கு முன் இதெல்லாம் ஒன்றுமே இல்லை. அவனாவது தப்பு செய்தவன்! எவ்வளவு துன்புற நேர்ந்தாலும், அவனது பிழைக்குரிய தண்டனை என்று சகித்துக் கொள்ளலாம்!

ஆனால், ஒருபாவமும் அறியாத தேவிக்குப் பழைய கதையை நினைவூட்டி மீண்டும் அவளை வேதனைக்குள்ளாக்குவது சரியில்லை. ஏற்கெனவே செய்த பிழைகள் போதாதா?

டீபாய் மேல் கிடந்த ஃபைலுள் இருந்த திட்டங்களை எண்ணுகையில் சிறு வருத்தம் தோன்றியது. அருமையான வேலை! ஆனால், என்ன செய்வது? விட்டுவிட வேண்டியதுதான். தந்தையிடம் நமச்சிவாயம் கொடுத்த முன்பணத்தை திருப்பிக் கொடுத்துவிட்டு, ஒப்பந்தத்தையும் ரத்து செய்து விட்டுக் கிளம்ப வேண்டியதுதான்... என்று எண்ணும்போதே, புவனன் முகத்தில் ஓர் ஏளன நகை அரும்பியது.

இங்கே யாரோ அவனிடம் வேலையைக் கொடுத்துவிட்ட மாதிரியும், அதை மறுக்க வேண்டியிருக்கிறதே என்று வருத்தப்படுகிற மாதிரியும் என்ன கதை இது? தேவியின் வாழ்வில் புகுந்து விளையாடியவன் இவன் என்று இந்நேரம் ரகு, அவனுடைய தந்தையான சேர்மன் நமச்சிவாயத்திடம் சொல்லியிருப்பான். சற்றுமுன் பணிவோடு உபசரித்த அதே ஆஃபீஸ் பையனை அழைத்து, புவனனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளும்படி உத்திரவு இடாமல் இருந்தால் அதுவே பெரிய விஷயம்!

இப்போது சொல்லிவிட்டுப் போவதா? சொல்லாமல் போவதா? மோகனன் தயங்கிக் கொண்டு இருந்த போது, ஆஃபீஸ் பையன் வந்தான்.

எந்தவித உணர்ச்சியையும் வெளியே காட்டாமல், புவனன் நோக்க, "பெரிய ஐயா, இப்ப உங்களைப் பார்க்கிறாராம் கூட்டி வரச்சொன்னாங்க!" என்று அழைத்தான்.

முகம் மாறாமல் புவனன் உள்ளே செல்ல, அங்கே ரகுவும், அதே பாவனையுடன்தான் அமர்ந்திருந்தான்.

"வாருங்கள் மிஸ்டர் புவனமோகனன்! உட்காருங்கள்! தாமதத்தைத் தவிர்க்க முடியாமல் போயிற்று. தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள்! இதோ, என் மகன் ரகுநந்தன். அனேகமாக வேலை நிமித்தமாக நீங்கள் இருவரும் தான் அடிக்கடி கலந்து கொள்ளும்படியாக இருக்கும்!" என்றார் நமச்சிவாயம்.

குலுக்கவென்று கையை நீட்டி, ரகுநந்தன், அதை ஏற்றுக்கொள்ளா விட்டால் அவமானமாகி விடுமே என்று எண்ணி, கரம் குவித்து, 'வணக்கம்' என்று விட்டுப் புவனன் அமர்ந்தான்.

ரகுவும் 'வணக்கம்' என்று முணுமுணுத்து வைக்க, புவன மோகனன் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தான்.

இந்த வேலையை எடுத்துச் செய்வதா, விடுத்துச் செல்வதா? வேலை நல்ல வேலை; அவனது திறமைக்கு ஒரு சவாலும் கூட!

நமச்சிவாயமே மீண்டும் பேச்சைத் தொடங்கினார். "நீங்கள் இருவரும் ஏற்கெனவே அறிமுகமானவர்கள்

என்று ரகு சொன்னான். அந்தச் சமயம் நான் 'ஸ்டேட்' சுக்கு அவசரமாய்ச் செல்ல வேண்டியிருந்தது. ஆனால்... அதுபோகட்டும்! முடிந்த கதை! இப்போது நடப்புக்கு வருவோம். தொழில் வேறு; வாழ்க்கை வேறு! இரண்டையும் ஒன்றோடொன்று சேர்த்துக் குழப் பக் கூடாது என்பது என் கருத்து. இந்த வேலையை உங்களிடம் கொடுப்பதாலேயே, என் வீட்டுக்குள் வந்து நிற்கிற உரிமையை உங்களுக்கு நான் தருவதாக அர்த்தமில்லை! அதுபோலவே, இந்தத் தொழில் தொடர் பைக் காரணமாகக் காட்டிக் கொண்டு உங்கள் சொந்த வாழ்வில், நான் மூக்கை நுழைப்பதும் முடியாது. உங்கள் வேலைகள் எனக்குத் திருப்தியாய் இருந்ததால் என் வேலையை நான் உங்களிடம் தருகிறேன்! அதே போல, எங்கள் பண விகிதங்கள் உங்களுக்குத் தகுந்ததா கத் தோன்றுவதால் நீங்கள் எங்கள் வேலையை எடுத்துச் செய்யப் போகிறீர்கள். இந்த விஷயம் எப்போதும் நினைவில் இருக்குமானால், எந்தவிதப் பிரச்சனை எழவும் இடமில்லை!''

''என்ன சொல்கிறீர்கள், புவனமோகனன்? எங்க ளோடு சேர்ந்து வேலை செய்யச் சம்மதமா?'' என்று கேட்டார் பெரியவர்.

ஓர் அரைக்கணம் யோசித்துவிட்டு, ''வேலையை எப்போது தொடங்குவது?'' என்று கேட்டான் புவனன்.

பாராட்டுதலாய் நோக்கிவிட்டு, ''ரகு, நீ நாளை சென்று, அங்கே எல்லோருக்கும் மிஸ்டர் புவனமோக னனை அறிமுகப்படுத்தி வை!'' என்று மகனுக்கு உத்தரவிட்டார் பெரியவர்.

விடைபெற்றுக் கொண்டு திரும்பி வரும்போது, புவனமோகனனுக்கு உள்ளூர ஒரு தவிப்பு உண்டா யிற்று.

இந்த வேலையை ஏற்றது தவறோ? கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளாக அவன் வாழ்ந்த விதம் இதனால் பயனற்றுப் போய்விட்டால்?

தலையை உலுக்கி விட்டுக் கொண்டான். அவன் இதை முன்பே யோசித்திருக்க வேண்டும்! 'துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு' என்று வள்ளுவர் சொல்லியிருப்பது போல, இனி இந்த அலைபாய்தல்கள் அசட்டுத்தனம். மேலும், அவனது கொள்கை இதனால் தலைகீழாகப் போய் விடப் போவது ஒன்றும் நிச்சயமும் அல்ல. தேவிக்கும் இந்த வேலைக்கும் தொடர்பே இருக்கப் போவது இல்லை! வேலை எல்லாம் முடிந்து திறப்பு விழா சமயத்தில் அவள் வரக்கூடும். அதற்குப் புவனனை அழைத்து விடாமல் ரகுநந்தன் பார்த்துக் கொள்வான்!

அப்படி அவனையும் மீறி அழைப்பு வந்தாலும், புவனனே ஏதாவது காரணம் காட்டி, அந்த விழாவில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டு விடலாமே!

மறுநாள், கட்டிடம் கட்டும் இடத்தில் ரகுநந்தன் புவனனை எதிர்கொண்டு, அழைத்துச் சென்று அங்கு பொறுப்பில் உள்ள மற்றவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

தந்தையின் சொல்லை மீறமாட்டான் என்பது நன்றாகவே தெரிந்தது.

இந்த பொறுப்பில் புவனன் ஒருவிதமான ஆறுத லையே அடைந்தான். தேவியிடம் ரகுவுக்கு இருந்த

பாசத்தின் வெளிப்பாடுதானே இந்த வெறுப்பு? அந்த அளவு அன்பு காட்டும் உறவினர் தேவிக்குக் கிடைத்திருப்பதே பெரிய விஷயம்!

புவனனின் யூகத்தை மெய்ப்பிப்பது போல, அறிமுகப்படலம் முடிந்தது. அடுத்துக் கிடைக்கிற தனிமையில், ரகுநந்தன் மற்றவனை எச்சரித்தான்.

''இந்த வேலை மட்டும்தான் உனக்கு! இதைப் பயன்படுத்திக் கொண்டு தேவியிடம் உறவாடலாம் என்று மனப்பால் குடிக்க வேண்டாம்! தேவியை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தாயானால், அப்புறம் அடுத்த எட்டு வைப்பதற்கு உனக்குக் கால்களே இராது!''

'இது எந்தப் படத்தில் வந்த வசனம்! என்று கேட்கத் தோன்றியது, புவனமோகனனுக்கு. பார்வையில் ஏளனம் கலந்து நோக்கி, ''தேவியின் இருப்பிடம் எனக்கு எப்போதுமே தெரிந்ததுதான். அவளோடு தொடர்பு கொள்ள இப்படியொரு வாய்ப்பு கிடைப்பதற்காக, நான் இத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை!'' என்று, உரைத்து விட்டுத் தன் காரை நோக்கி நடந்தான் அவன்!

வாயடைத்து நின்ற ரகுநந்தனுக்குத் தந்தையின் மேல் கோபம் வந்தது.

இந்தப் புவனமோகனன் சொல்வது சரிதான். தேவியைச் சந்திக்க வேண்டும் என்று அவன் நினைத்திருந்தால் அதை எப்போதோ செய்திருக்கலாம்! எப்போது வேண்டுமானாலும் கூடச் செய்திருக்கலாம்! ஏதோ, அவர்கள் குடும்பத்தின் நல்லகாலம்! அவனுக்கு மீண்டும் தேவியை நெருங்கத் தோன்றவில்லை! இவ

னைப் போன்ற பொறுக்கிக்குத் தேவி மட்டும்தானா, பெண்? இவ்வளவு நாளில் இன்னும் எத்தனை பிடித் தானோ?

ஆனால், எவ்வளவு சொல்லியும், இந்த அப்பா ஏன் இதில் இவ்வளவு பிடிவாதமாக இருக்க வேண்டும்? இந்த வேலையில் புவனமோகனன் மிகவும் கெட்டிக்கார னாகவே இருக்கலாம்! ஆனால், இவனை விட்டால் வேறே ஆளே கிடைக்காமலா போய்விடும்? அப்படியே கிடைக்காமல் போனாலும் தான் என்ன? இந்தக் கட்டிடம், அப்படிக் காண்போர் பிரமிக்கும் வண்ணம் இருந்து தான் தீரவேண்டும் என்று என்ன கட்டாயம்?

ஒரு தரம் தேவி பட்ட பாடு போதாதா?

ஒருவழியாய் அவள் மீண்டு வருகிறபோது மீண் டும் பழைய குப்பையைக் கிளறி விடுவதா?

எல்லா விவரங்களையும் விலாவாரியாக எடுத்துச் சொன்னபிறகும் இவனை விலக்க மறுத்து விட்டாரே?

தொழில் வேறாம், வாழ்க்கை வேறாம்! தன் தொழிலுக்காக ஒரு பெண்ணின் - அவர்கள் வீட்டு பெண்ணின் வாழ்க்கையை வீணடித்த ஒருவனை, மீண்டும் உள்ளே புக விடுகிறாரே!

தந்தையை மீற மாட்டாமல், புவனனை உள்ளே விடவும் மனமற்று ரகுநந்தன் சற்றுநேரம் தடுமாறித் தவித்துவிட்டு, ஒரு முடிவுக்கு வந்தவனாய் தன் சிற்றன்னையோடு டெலிஃபோனில் தொடர்பு கொண் டான்.

அவர்களுடைய பெரிய கூட்டுக்குடும்பத்தில், இரண்டாம் தலைமுறைக்கு மிகவும் நெருக்கமானவள்

அவர்களுடைய சிறிய தாயார் சுசீலா தான். பிள்ளைக ளோடு தானும் சேர்ந்து விளையாடுவாள்! கேலி பேசிச் சிரித்து கும்மாளம் அடிப்பாள். ரகுவும் மைத்தியும் ஏதாவது பெரிய விஷயம் பெற்றோரிடம் சொல்ல வேண்டுமானால், அது சுசீலா மூலமாகத்தான் அவர்க ளுக்குப் போகும். பிள்ளைகள் ஐவருக்குமே குடும்பத் தில் நெருக்கமான சினேகிதி சுசீலாதான்.

அவர்களிலும் தேவிக்காக சுசீலா உயிரையும் கொடுப்பாள்!

எனவே, சுசீலாவுக்கு டெலிஃபோன் செய்து, விஷயம் முழுவதையும், அவளிடம் கொட்டித் தீர்த்த பிறகே, ரகுநந்தனின் மனம் சற்றே அமைதி அடைந்தது.

அவன் எதிர்பார்த்தது போலவே சுசீலா அடுத்த இரண்டு நாட்களில் கோவையிலிருந்து கிளம்பி, சென் னைக்கு வந்து சேர்ந்தாள்.

ஆனால், ரகுநந்தன் எதிர்பார்த்ததுபோல, சுசீலா அவளுடைய மைத்துனர் நமச்சிவாயத்திடம் சென்று, புவனமோகனனை கழற்றி விடும்படி சொல்லவில்லை. மாறாக, அவன் - புவனன் இங்கே இருப்பது அவசியம் என்றாள் அவள்.

## 15

**சுசீலா** - கிருஷ்ணாவுடைய கடைசி மகவான **மோனிகா** திருமணமாகி, சென்னையில்தான் வசித்து **வந்தாள்**. குடும்பத்தவர்கள் என்று யார் கோவையிலி ருந்து சென்னைக்கு வந்தாலும், முதலில் தன் வீட்டுக்கு

வந்து தன்னைப் பார்த்துவிட்டுப் போகவில்லை என்றால், அவள் ரகளை செய்து விடுவாள். எனவே, ரயில் அல்லது விமான நிலையத்திலிருந்து நேராக மோனியின் வீட்டுக்குச் சென்று அங்கு குளியல், குறைந்தபட்சமாய் ஒரு வேளை உணவு முதலியவற்றை முடித்துக் கொண்டு, பிறகு வந்த வேலையைக் கவனிப்பது எல்லோரது வழக்கமும் ஆயிற்று.

தேவியின் வீடு, அவளுக்குப் பெரும் மனவேதனையை அளிப்பதைக் கவனித்துவிட்டு பெரியவர்கள் அதற்கு ஓர் ஏற்பாடு செய்தார்கள். அந்த வீடு முழுமையாக வாடகைக்கு விடப்பட்டு, 'பல்லவி கன்ஸ்ட்ரக்ஷன்'சின் பெயரில் புதிதாக வாங்கப்பட்டிருந்த ஃப்ளாட் மற்றபடி தங்குவதற்குப் பயன்பட்டது. அங்கிருந்துதான், ரகுநந்தன், மோனி, சுசீலாவின் கூட்டு மாநாடு நடந்தது.

பல்லவி பற்றிய உண்மையைப் புவனமோகனுடைய குடும்பம் யூகித்திருக்கக் கூடும் என்பதை மோனி தாயிடம் கூறவும், சுசீலா யோசனையில் ஆழ்ந்தாள்.

''அதிலும், புவனன் சகோதரி பல்லவி இருவரின் ஜாடை ஒற்றுமையே அவர்களுக்கு பல்லவி யார் என்பதைப் பறைசாற்றியிருக்கும்! அதனால்தான் கிட்டத்தட்ட ஒன்றரை மாதமாக நான் வீட்டை விட்டு வெளியே எங்கேயும் பிள்ளைகளோடு செல்லவே இல்லை!'' என்றாள் மோனி. ''எதற்கும் பல்லவியை உங்களோடு அழைத்துப் போய் விடுகிறீர்களாம்மா?'' என்று கேட்டாள்.

தனக்கு ஒரு மகள் இருப்பதை அறிந்த பிறகும், புவனமோகனன், அவளை நெருங்க முடியாதது சுசீலாவுக்கு வியப்பளித்தது.

ஒரு வண்டு போலத் தேவியைப் பயன்படுத்திக் கொண்டதோடு பறந்து விட்டான் என்றால், அந்த இருபத்தைந்து லட்சத்தை நல்ல வட்டியோடு புவனமோகனன் திருப்பிக் கட்டிய விதமும், அந்த முடிவுக்கு ஒவ்வாமல் இடித்தது.

மணவிலக்குக்குச் சம்மதம் அளித்து, புவனமோகனன் எழுதி வைத்திருந்ததும், அவர்களுள் சர்ச்சைக்குரியதாகவே இருந்தது. பணத்துக்காகத் தேவியை மணந்தவன், அவளை அட்டையாய் ஒட்டிக் கொண்டு பணம் உறிஞ்சாமல், அடியோடு விலகிவிடச் சம்மதிக்கிறானே!

தேவியின் காதுகளில் விழாதபடி இதுபற்றிய பேச்சு குடும்பத்தில் அவ்வப்போது எழும். அதிலும் முதலில் தேவி, சக்தியே இல்லாதவள் போல, ஓய்ந்து கிடந்த போது, அடிக்கடி, புவனன் பற்றிப் பேசுவார்கள்.

புவனன், ஓர் அயோக்கியன் என்பது அவர்கள் எல்லோராலும் ஒரு மனதாய் நிறைவேற்றப்பட்ட முடிவு. அவர்களது அன்புக்குரிய தேவியின் மறுகல், அவர்களின் வெறுப்பை மிகுதியாக்கியிருந்தது. அதனால், அவனுடைய பழைய காதலி, அல்லது மனைவி கையில் பிள்ளையோடு வந்து மிரட்டியதால் தேவியை விட்டு விட்டு ஓடிவிட்டான் என்றெல்லாம் தங்களுக்குள் கதைகட்டி முடித்தார்கள்.

அப்போதும்கூடப் புவனன் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டுப் போனதற்கு எந்த ஓர் ஏற்புடைய காரணத்தையும் யாராலும் உருவாக்க முடியவில்லை.

நாளாக, ஆக வீட்டில் புவனமோகனனைப் பற்றிய பேச்சு பெரிதும் குறைந்து போயிற்று. கூடவே திரும ணம், குழந்தை பிறப்பு என்று வீட்டில் நிறைய நல்ல நிகழ்ச்சிகள் நிகழ்ந்து வீட்டில் அத்தனை பேர் கவனத் தையும் ஈர்த்தது.

பொதுவாக, தேவியைத் தவிர மற்றவருக்கு, அவன் பெருமளவு மறக்கப்பட்ட வில்லன் ஆனான்.

தேவி என்ன நினைத்தாள் என்பது யாருக்கும் முழுமையாகத் தெரியாது. எப்போதும் உயிர்த்துடிப்பு டன் உலவும் பெண், இப்போது கண்ணில் உயிரைத் தேக்கி வைத்துக் கொண்டு, ஆவிபோல நடமாடினாள்.

அந்த நடமாட்டம் கூட, மற்றவர்களுக்காகத் தான் என்பது சுசீலாவின் யூகம். கூடச் சேர்ந்து சிரித்து விளையாடுகிறவர்களில் ஒருத்தி, சோர்ந்து படுத்துக் கிடந்தால், மற்றவர்களால் உற்சாகமாய் இருக்க முடியா தல்லவா?!

எப்போதுமே, அடுத்தவர் நலம், மகிழ்ச்சியை அதிகம் பேணுகிறவள், இப்போதும் அதற்காகவே, சாதாரணமாக இருப்பது போலக் காட்டிக் கொண்டாள்!

முதல் நாள் தன் சிறிய தாயின் மடியில் விழுந்து குமுறியது தவிரப் புவனமோகனனைப் பற்றி, தேவி எதுவும் பேசியதில்லை.

அவள் கருவுற்றிருந்ததும் எல்லோருக்குமே அதிர்ச்சி தான். உடனே ஏதாவது 'கிளினிக்'கில் சேர்ந்து வயிற்றைச் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டியது என்பதுதான் சின்னவர்களின் ஒருமித்த கருத்து.

எல்லோர் பேச்சையும் தலைநிமிராமல் கேட்டுக் கொண்டு இருந்தவள், முதலில் எந்தப் பதிலும் கூற வில்லை. மற்றவர்கள் அகன்றபின் சுசீலாவின் கையைப் பற்றிக் கொண்டு ''இருக்கட்டும், சித்தி'' என்றாள் குரல் நடுங்க.

சுசீலா ஓரளவு சொல்லிப் பார்த்தாள். இது ஒரு துன்பக்கதையை நினைவுறுத்தும் அடையாளம்! எனவே, அவசியமில்லை, கூடவே, இன்னொரு நல்ல வாழ்வு அமைவதை நாசமாக்கி விடக்கூடும்!

மறுப்பாய்த் தலையசைத்தாள் அவள்.

ஆனால், பிடித்த கையை விடாமல், ''உங்கள் பேச்சை இனி நான் மீற மாட்டேன் சித்தி. ஆனால் இது... இதை அழிக்க வேண்டாம் சித்தி!'' என்றாள் அவள், தவிப்புடன்.

அதற்குமேல் சுசீலா, மகளைக் கட்டாயப்படுத்த வில்லை.

ஆனால், கடந்த காலத்தையே எண்ணிக் கவலைப் பட்டுக் கொண்டிருக்க விடாமல், அவர்களது தொழிலில் தேவியை ஈடுபடுத்தினார்கள். அவளுக்கும் மாறுதல் தேவைப்பட்டதால், முழுமனதோடு வேலை செய்தாள்.

குழந்தை பிறந்தபோது, அவள் தேவியுடைய குழந்தை என்பதாலேயே, பல்லவி எல்லோருக்கும் இரு மடங்கு அன்புக்குரியவள் ஆனாள்.

அந்தக் குடும்பத்தில் எல்லோருக்குமே தேவியிடம் பிரியம் அதிகமே என்றபோதும், சுசீலா அவளிடம் பெற்ற தாயைவிட அதிகப்பாசம் வைத்திருந்தாள் என்றால் அது மிகையல்ல. வயிற்றில் பிறந்த பெண்ணான மோனியைக் கண்டிக்கவோ, அடிக்கவோ நேர்ந்தால், அத்தோடு அதை மறந்து போகிறவள், தேவிக்குத் தண்டனை கொடுத்து விட்டு ரொம்ப நேரம் வருத்தப்பட்டுக் கொண்டிருப்பாள்.

''எனக்கும் அல்பாயுசு. அவருக்கும் வாழ்நாள் கம்மி என்கிறார்கள். சுசீ, அப்படி ஏதேனும் நேர்ந்தால்... நேர்ந்து விட்டால், என் குழந்தை உன் மகள்!'' என்று தேவியுடைய அன்னை சொன்னது காரணமாக இருக்கலாம்!

குடும்பத்தின் பெரியவர்கள் மூத்த ஜோடிக்குப் பொது வேலையும், வெளி வேலையும் அதிகமாக இருந்ததால், அவர்களுடைய பிள்ளைகள் உண்பது, உறங்குவது எல்லாம் சுசீலாவிடம் தான் என்பதால் கூட ஆனந்தி அப்படிச் சொல்லியிருக்கலாம்! ஆனால், பிறந்த குழந்தையைக் கொணர்ந்து, பிரசவ அறைக்கு வெளியே காத்திருந்து சுசீலாவின் கையில் நர்ஸ் வைத்ததும், கொட்டாவி விட்டபடி முறுவலித்த தேவியின் அழகு சுசீலாவை அப்படியே மயக்கி விட்டது எனலாம்.

ஆனந்தி, அஞ்சியது போலப் பிள்ளைப்பிறப்பில் மடியாவிட்டாலும், சில ஆண்டுகளிலேயே சம்பவித்த அவளது மரணம், சுசீலாவின் பாசத்தை மேலும் பன்மடங்காக்கி விட, தேவி, சுசீலாவுடைய செல்லப் பெண் ஆனாள்.

அந்தச் செல்லமகளின் வாழ்வில் என்னவெல்லாம் நடந்து விட்டது!

''அந்தப் புவனமோகனனை நான் பார்க்க வேண் டும், ரகு!'' என்றாள் சுசீலா.

''அவனை என்ன பார்ப்பது, சித்தி? திருட்டு ராஸ்கல்! நீங்கள் முதலில் அப்பாவிடம் சொல்லி, அவனை நம் வேலையிலிருந்து வெளியேற்ற ஏற்பாடு செய்யுங்கள்'' என்று ரகுநந்தன் படபடத்தான்.

''செய்யலாமடா!'' என்றாள் சிற்றன்னை அவ னுக்கு இணக்கமாக ''ஆனால் அவனைக் கொஞ்சம் நான் பார்த்தாக வேண்டும்.''

சில நாட்களாகவே, புவனமோகனனுக்கு யாரோ தன்னைக் கண்காணிப்பது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. வேலை செய்யும் போது, வெளியே சொல்லும்போது, வீடு வரும்போது என்று சர்வசதா யாரோ பார்த்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு குறுகுறுப்பு.

அவ்வப்போது இது நேர்வதுண்டு. பெண்ணைப் பெற்ற பெரிய மனிதர்கள். இவனை ஒரு நல்ல வரனாகக் கருதி அவனது பழக்க வழக்கங்களை அறிய இப்படி,

வேவு பார்த்தது உண்டு. பிறகு, திருமணத்துக்காகப் பேச்சைத் தொடங்கும்போது, அந்த மாதிரி அபிப்பிரா யமே அவனுக்கு இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிந்ததும் விலகுவதும் நடந்திருப்பது தான்.

ஆனால், அதெல்லாம் மெல்ல மெல்ல, அருகியும் விட்டிருந்தது.

இப்போதென்ன திடீரென்று?

என்னவாக இருக்கும், என்பதில், புவனமோகன னுக்கு ஓர் யூகமும் இருக்கவே, வெளிப்படையாக எதையும் காட்டிக் கொள்ளாமல் தன்னியல்பாகவே நடந்து கொண்டான்.

ஆனால் ஒரு வாரத்திற்கு மேல் ஆனபிறகும், இந்த உளவுபார்த்தல் தொடர்ந்து நடக்கவே அவன் பொறுமை இழந்தான்.

உளவாளியையே உளவு பார்த்து மூலத்தைக் கண்டுபிடித்து அவளிடம் சென்று நின்றான் ''ஏன்?'' என்று கேட்டான்.

''உங்களைப் பற்றி அறிந்து கொள்ளத்தான்!'' என்றாள் சுசீலா அமைதியான தோற்றத்துடன். புவனன் நேரே வந்து நின்றதில் உள்ளூர அவளுக்குச் சற்று அதிர்ச்சிதான்.

''அறிந்து கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்?

தன் எண்ணத்தை வெளியிட, சுசீலாவுக்கு மனம் வரவில்லை. எனவே, ''என்ன செய்யக் கூடும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?'' என்று அவனையே கேள்வி கேட்டாள்.

''தேவியை... தேவியிடமிருந்து விலகி நிற்கும் படிக் கேட்பீர்களோ என்று எண்ணினேன்! ஆனால் இத்தனை ஆண்டுகளில் தேவியை நெருங்க நான் ஒரு சிறு முயற்சி கூடச் செய்தது இல்லை என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும். பல்லவியைப் பார்த்த பிறகும், பேத்தி பேத்தி என்று என் தாயாரின் தவிப்பைக் கூட அடக்கி, விலகியேதான் இருக்கிறேன். உங்களுக்கு வேறு என்ன வேண்டும்? இந்த வேலையைக் கைவிட்டு விட்டுப் போ என்று கூறாதீர்கள். இந்த வேலை என் திறமைக்கு ஒரு சவால்! இதை என்னால் விட முடியாது. உங்கள் மைத்துனர் சொன்னது போலத் தொழில் வேறு, வாழ்க்கை வேறு! ஆனால், ஓர் உறுதி தருகிறேன். இந்த வேலையைச் சாக்காக வைத்துக் கொண்டு நான் தேவியைச் சந்திக்க முயற்சிக்க மாட்டேன்!'' என்றான் அவன்.

இதற்குள் சுசீலா முழுமையாகச் சுதாரித்துக் கொண்டாள்.

''ரொம்ப நன்றி!'' என்றாள் அமர்த்தலாக. இவன் என்ன, தேவியை அவன் வாழ்விலிருந்து அடியோடு ஒதுக்கி விட்டானா என்று எண்ணும் போதே அவள் நெஞ்சு கொதித்தது. தேவியோடு நெருங்கிப் பழகி, அவளை நிலைகுலைய வைத்து விட்டு, அவளை இப்படி ஒதுக்குவது எளிதா? முடியுமா? அல்லது... ஒருவேளை...

உண்மை அறிந்தே ஆகவேண்டும் என்பது **சுசீலா**வுக்கு.

எனவே, தொடர்ந்து... ''இந்த விவாகரத்து விஷய மாய், எங்களுக்கும் கொஞ்சம் கொஞ்சமென்ன? ரொம் பவே, உங்கள் உதவி தேவைப்படுகிறது'' என்றாள் புவனனின் முகத்தைக் கவனித்தபடி.

எந்தவிதப் பேச்சுக்கும் தயாராகவே வந்திருந்தபடி யால், புவனனின் முகத்தில் வேறுபாடு எதுவும் காணப் படவில்லை. ''இவ்வளவு காலம் அதைப் பண்ணவில் லையா? ஆச்சரியம்தான்!'' எனறான் சாதாரணமான குரலில். ''நான்தான் சம்மதம் என்று எழுதி வைத்திருந் தேனே!''

கண்ணீருடன் தேவி அந்தக் கடிதத்தைக் கொடுத் தது நினைவுவர சுசீலாவின் முகம் கருத்தது. எவ்வளவு சாதாரணமாக இருக்கிறது இவனுக்கு!

''சட்டப்படி அந்தக் கடிதம் மட்டும் போதாது என்பதால்தான் இன்னமும் விவாகரத்து பண்ண வில்லை. ஒன்று, கணவனின் - உங்களின் ஒத்துழைப்பு வேண்டும். அல்லது நீங்கள் காணாமல் போய் ஏழு ஆண்டுகளேனும் முடிந்திருந்த வேண்டும். நீங்கள் ஐந்து ஆண்டுகள் முடியுமுன் வந்து நிற்கிறீர்கள்!'' என்றாள் சற்று எரிச்சல் நிறைந்த குரலில்.

''அதாவது ஏன் வந்து தொலைத்தாய் என்கிறீர்கள்! திரும்பிப் போய் விடு என்கிறீர்கள்!'' என்றான் அவன் ஒருமாதிரிக் குரலில்.

''உங்களை இருக்கவோ, போகவோ சொல்ல நான் யார்? வந்ததற்கு இந்த விவாகரத்து விஷயத்தில் கொஞ்சம் உதவி செய்யலாமே!''

கண்ணாடி ஜன்னலுக்கு வெளியே தெரிந்த வாக னப போக்குவரத்தை வெறித்தான் புவனமோகனன். மீண்டும் திரும்பி, ''என்ன செய்ய வேண்டும்? சொல் லுங்கள்! வேண்டியதைச் செய்து தருகிறேன்'' என்றான்.

''ரொம்பவும் துடிப்பாக உதவ முன்வருகிறீர்களே! அப்படியானால் இந்த மணவிலக்கு உங்களுக்கு விருப் பம்தான் போல் இருக்கிறது!'' என்றாள் சுசீலா. ரகு சொன்னது போலப் பழைய காதலோ, புதிய காதலோ என்று அவள் மனம் கொதித்தது.

சில கணங்கள் புவனன் பேசாதிருந்தான். பிறகு, ''இதற்கு நான் என்ன பதில் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? இந்தத் திருமணத்தை இல்லை என்று ஆக்கிவிட உங்கள் குடும்பத்திற்கு இருக்கும் வேகம் எனக்குத் தெரியும். தேவி உட்படத்தான் சொல்லுகிறேன். சரி என்று நீங்கள் கேட்பதைச் செய்ய முன்வந்தால், அதிலும் குற்றம்தான் தேடுவீர்களா?'' என்று வறண்ட குரலில் வினவினான்.

''நீங்கள் மறுக்கவோ தயங்கவோ இல்லை எனும் போது...''

''தயங்குவதிலோ மறுப்பதிலோ பயன் ஏதும் இராது எனும்போது? தயங்கி, மறுத்துப் பெறும் உறவில் நலம் ஏதும் கிடையாது எனும்போது தயங்குவதிலோ மறுப்பதிலோ என்ன லாபம் சொல்லுங்கள்?''

''நீங்கள் என்னதான் சொல்கிறீர்கள்?''

''இதை நம்புவது உங்களுக்குக் கடினமாக இருக்க லாம். ஆனால், உங்கள் கேள்வி, வெந்த புண்ணில் வெந்நீர் ஊற்றுவது போல இருக்கிறது.''

''பின்னே சரி என்றீர்களே!'' என்றாள் சுசீலா அவன் முகத்தை ஆராய்ந்தபடி.

''ஆமாம்!'' என்றான் அவன், ஒப்புதலான ஒரு லேசான தலையசைப்புடன். ''ஏனென்றால், அது தேவிக்கு நல்லது!'' என்றான் மெல்லிய குரலில்.

''இதை நான் நம்பவேண்டுமா?'' என்றாள் சுசீலா சுருக்கென.

தோளைக் குலுக்கினான் புவனமோகனன். ''என் பேச்சை நம்புவது உங்களுக்குக் கடினம் என்றுதான் முன்பே சொன்னேனே!''

நம்பிக்கையற்ற குரலில், புவனமோகனன் அதைச் சொன்ன விதம் சுசீலாவைச் சற்று பாதித்தது. ஒரு வேளை, இவன் நல்லவனாக இருந்தால்... என்று எழுந்த கேள்வியை அடக்க முயன்றபடி.. ''உங்களை நம்புவது நம்பவில்லை என்று எனக்கு ஒன்றும் இல்லை. மீண்டும், தேவியை எதுவும் பாதித்துவிடக் கூடாதே என்பதுதான் என் கவலை!'' என்றாள் அவள்.

''சொன்னால், இதை நம்புவதும் உங்களுக்குக் கடினமாகத்தான் இருக்கும். ஏனெனில், என் குறிக்கோளும் தேவியை எதுவும் பாதித்து விடக் கூடாது என்பதுதான்'' என்றான் புவனன்.

செய்வதெல்லாம் செய்துவிட்டு இது வேறா? இப்படிப் பேசித்தான் தேவியை மயக்கியிருப்பான்!

உள்ளூரச் சுள்ளென்று பொங்கிய சினத்தில், ''எப்போதிருந்து இந்த ஞானோதயம்?'' என்று சுசீலா ஏளனமாகக் கேட்டு விட்டாள்.

அவள் கேட்ட வேகத்திலேயே புவனமோகனனும் பதில் சொன்னான். ''என்ன, எதற்கு என்று ஒரு வார்த்தை கேளாமல், ஒரு வினாடி தயங்காமல், என்றைக்கு அவள் இருபத்தைந்து லட்சம் ரூபாய்க்குச் 'செக்' எழுதி என்னிடம் கொடுத்தாளோ அன்றிலிருந்து. இன்னமும் சரியாகச் சொல்லப் போனால், அந்த வினாடியில் இருந்து!''

புவனமோகனனின் குரலில் இருந்த பெருமிதம் சுசீலாவைச் சிந்திக்க வைத்தது. கொஞ்சம் யோசித்து விட்டு, ''நீங்கள் சொன்னதுபோல, எல்லாவற்றையுமே நம்புவது சிரமமாகத்தான் இருக்கிறது! ஆனால்... உங்கள் பேச்சு உண்மை என்றால்.... நீங்கள் அதை எளிதாகவே நிரூபிக்க முடியும்!'' என்றாள் மெதுவாக.

''உங்களிடம் நிரூபிப்பது எனக்கு அவசியம் இல்லை என்றாலும் ஒன்று தேவிக்கு நன்மை தரும் என்றால் அதை நிச்சயமாகச் செய்வேன். என்ன செய்யவேண்டும், சொல்லுங்கள்!''

''மணவிலக்குக்கு ஒத்துழைக்க வேண்டும்!''

''... சரி...'' என்றவன், ''மணவிலக்குக்கு இப்போது ஏதும் அவசரமா?'' என்று கேட்டான்.

இருளில் துழாவிக் கொண்டு, இருந்தவளுக்கு ஒரு வழி கிடைத்தாற்போலத் தோன்றவே, ''இந்தத் திரும

ணத்திலிருந்து விடுதலை கிடைத்தால் தானே அடுத் தொரு வாழ்வை அமைக்க முடியும்?'' என்று அவன் முகத்தை ஊன்றிக் கவனித்த வண்ணம் கேட்டாள்.

சாதாரணமாக இருந்த புவனனின் முகத்தில் மீண் டும் உணர்ச்சியற்ற பாவனை பரவியது. குரலும், அதை ஒத்து ஒலிக்க, ''அப்படியானால், மாப்பிள்ளை தயாராக இருக்கிறாரா?'' என்று வினவினான்.

''தேவி மட்டும் 'இம்'மென்று சொன்னால், மாப் பிள்ளை இன்றைக்கே ரெடி!'' என்றாள் சுசீலா அலட்சிய மாக

அதில் ஒரு வார்த்தையைப் பிடித்து உடனே, அப்படியானால் தேவி இன்னமும் 'இம்' என்று சொல்லவில்லை?'' என்று கேட்டான் புவனன்.

இந்த ஒரு வார்த்தையில் மாட்டிக் கொள்ள, சுசீலாவும் ஒன்றும் அறியாதவள் அல்ல! அவர்கள் குடும்பத்தில் பெண்கள் வீட்டினுள் அடுப்படியில் கிடப்ப தில்லை! சும்மா வரி ஏய்ப்புக்காக வெறும் பெயரில் மட்டும் என்று இல்லாமல், தொழிலிலும் மெய்யாகவே பங்கேற்பவர்கள். அலுவலகத்தில் பொறுப்பு வகிப்பவர் களும் கூட. அந்த அனுபவமும் சுமார் பதினைந்து ஆண்டு முதிர்ச்சியும் கைகொடுக்க, ''எப்படிச் சம்மதிப் பாள்?'' என்று பதிலுக்குக் கேட்டாள் சுசீலா. ''முதல் திருமணம் ரத்து ஆகும் வரை சட்டப்படி இன்னொன்றை ஏற்க உரிமை கிடையாதே?''

''அதுதான் காரணம் என்றால், அந்தத் தடையை நீக்க எந்தவிதமான ஒத்துழைப்பு தேவையோ, அதைத்

திர நான் தயார்!'' என்று உறுதியான குரலில் கூறிச் சுசீலாவை வியக்க வைத்தான் புவனன்.

அவனது குரலையும், வார்த்தைகளையும், முக பாவனையையும் சுசீலா உள்ளூர, அக்குவேறு ஆணிவேறாக அலசிக் கொண்டு இருக்கையில் புவனமோகனன் தொடர்ந்து பேசினான்.

''அந்த மாப்பிள்ளையைத் தேர்ந்து எடுத்தது யார்?'' என்று கேட்டபோது, அவனையும் மீறிக் குரல் சிக்கியது.

மாட்டினாயாடா ராஜா என்று உள்ளூரக் கெக்கலித்தபடி, ''ஏன் நாங்கள்தான்!'' என்று சுசீலா பெருமையாக அறிவித்தாள்.

''ஏன் கேட்கிறீர்கள்?''

''மீண்டும் ஒரு பிழை நேர்ந்து விடக்கூடாதே என்றுதான்...'' என்று புவனன் சொன்னவிதம், சுசீலாவின் தாய்மனதைக் கொஞ்சம் உலுக்கியது.

''உங்கள் தேர்வு என்றால், அதில் அதிகம் கவலைப்பட ஒன்றுமில்லை. ஏனென்றால்... நீங்கள் எல்லோரும் தேவியிடம் மிகுந்த அன்பு கொண்டவர்கள். எனவே மிகவும் கவனத்துடன்தான் தேர்ந்து எடுத்திருப்பீர்கள்! ஆனால்... எதற்கும் நான் அந்த மணமகனைப் பார்க்க வேண்டும்...!''

''எதற்கு? கெடுப்பதற்கா?''

கண்களில் சினம் துளிர்க்க, ''தேவி நன்றாய் இருப்பது தான் என் லட்சியம் என்று முன்பே

சொன்னேன்!'' என்றான் புவனமோகனன் கோபம் கலந்த குரலில்.

''அதனால்...?''

''தேவிக்காக நீங்கள் தேர்ந்தெடுத்திருப்பவனை நான் சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள்!'' என்றான் புவனமோகனன்.

''எப்படி முடியும்?'' என்றாள் சுசீலா.

## 16

தேவியின் மறுமணத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவனைப் பார்க்க வேண்டும் என்று புவனமோகனன் கேட்கவும் சுசீலாவுக்கு முகம் வியர்த்து விட்டது. இது என்ன பைத்தியக்காரத்தனம்?

தன்னை மீறி அவள், ''எப்படி முடியும்?'' என்று விட, புவனமோகனன் கேள்வியாய்ப் புருவம் சுருக்கினான்.

''ஏன் முடியாது? தேவிக்கு ஏற்கெனவே திருமணமானதும், அது தோல்வி அடைந்ததும் அவருக்குத் தெரியும்தானே? பிறகு என்ன?''

இதற்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். கேட்கக் கஷ்டமாய்த்தான் இருக்கும்! ஆனால், மேலே மேலே துருவிக் கொண்டே இருந்தால் பட வேண்டியது தான்.

புவனனை ஒரு தரம் நோக்கிவிட்டு, "அவர் உங்களைப் பார்க்கப் பிரியப்படாமல் போகலாமில் லையா?" என்றாள் அவள் முதலில் சற்று மெதுவாகவே.

"ஏன்?" என்றான் அவன் மீண்டும்.

"ஏனா?" எரிச்சலுடன் மேலே தொடர்ந்தாள் **சுசீலா**.

"தன் வருங்கால மனைவியுடைய முந்நாள் கணவ னைச் சந்திக்க எந்த மனிதனுக்குமே பிடிக்காது தானே? அதிலும் நீங்கள்..."

லேசாக முகம் இறுக, "எல்லோரும், எப்போதும், அவரவருக்குப் பிடித்ததை மட்டுமே செய்து கொண்டி ருக்க முடியாது உங்களிடம் நான் எதையும் மறைத்துப் பேசவில்லை. தேவியின் அன்பை அனுபவித்தவன் நான். அவளைப் பிரிந்து வாழ்வதோ, அவளை இன்னொருவனிடம் ஒப்படைப்பதோ, எனக்கு மட்டும் பிரியம் என்றா எண்ணினீர்கள்? தேவியின் மகிழ்ச்சி யைப் பெரிதாகக் கருதியே எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு இருக்கிறேன். இப்போதும், இந்தச் சந்திப்பும் எனக்கு ஒன்றும் ஒரு சுகானுபவமாக இருந்துவிடப் போவதில்லை. ஆனால், தேவியின் சந்தோஷத்துக்கு எனக்கு உத்திரவாதம் வேண்டும். அதனால், நான் சொல்வதைச் செய்யுங்கள்!" என்றான் புவனன் சற்றுக் கடுமையான குரலில்.

"ரொம்பவும் அதிகாரமாகப் பேசுகிறீர்களே?" என்றாள் சுசீலா, அதற்காகக் கண்டிப்பது போல.

''ஆமாம், அதிகாரம் இன்னமும் அடியோடு போய்விடவில்லையே! இன்னமும் மணவிலக்கு ஆக வில்லை பாருங்கள்!''

புவனமோகனன் பிடிவாதமாக இருக்கவும், மற்ற வர்களோடு கலந்து கொண்டு சொல்வதாகக் கூறி முடித்தார் சுசீலா.

புவனமோகனனும் பேசிய விதத்தில் சுசீலாவால் அவனைப் பற்றி எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. அன்றைய பேச்சை மட்டும் வைத்துப் பார்த்தால், அவன் தேவிக்காக ஏங்குவதாகவும், அவளுக்காக உயிரையே தியாகம் செய்யத் தயாராக இருப்பதாகவும் தோன்றியது.

ஆனால், ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளுக்கு முன்ன தாக, தேவியை விட்டுப் பிரிந்து போய் விடுவதாகச் சொல்லி ஒரு லட்சம் ரூபாயைக் கணவர் கிருஷ்ணனிட லிருந்து பெற்றுக் கொண்டு அதே பணத்தில், தேவிக்கு நிச்சயதார்த்த மோதிரத்தை வாங்கி வந்து திமிரோடு புவனன் நின்ற காட்சியை அவளால் மறக்க முடிய வில்லை.

அதிலும், நல்லபடியாகக் காரியம் சாதித்து விட்ட தாகக் குடும்பமே குதூகலத்தில் ஆழ்ந்திருந்த சமயம் வந்து நின்று, அவர்களுடைய அன்புக்குரிய தேவி, அவர்கள் அத்தனை பேரையும் விரோதிகளாக எண் ணும்படி செய்து விட்டானே!

அதே வாய்சாலமும், சாமர்த்தியமும் இப்போதும் இருக்கத்தானே செய்யும்?

தேவியை ஒரு வகையில் ஏமாற்றிய புவனமோகனன், தன்னையும் ஏமாற்ற முடியும் தானே என்று தோன்றிவிட, சுசீலா, தீவிர சிந்தனையில் ஆழ்ந்தாள்.

தான் மட்டுமாக இதில் முடிவெடுக்கக் கூடாது என்று தீர்மானித்து, மைத்துனர் மகனும் குடும்பத்தின் மூத்த பிள்ளையுமான ரகுநந்தனுடனும், கலந்து ஆலோசித்தாள். ரகுநந்தனுடைய மனைவியும் நல்ல அறிவாளி என்பது அவளது அபிப்பிராயம், எனவே, அகல்யாவையும் தன் ஆலோசனைக் குழாத்துடன் கூட்டிக் கொண்டாள்.

சுசீலா எதிர்பார்த்தது போலவே, அகல்யா, ஒரு நல்ல ஐடியா கொடுக்க, அதை மூவருமாக அலசி ஆராய்ந்து விட்டு, ஒரு முடிவு எடுத்தனர்.

அதன்படி, சுசீலா மீண்டும் புவனனைச் சந்தித்து, தேவிக்கு என்று குடும்பத்தார் பார்த்திருக்கும் மாப்பிள்ளை வெளிநாடு சென்றிருப்பதாகவும், அவரது பயிற்சி முடிந்து, அவர் திரும்பி வர, இன்னும் நாலைந்து மாதங்கள் ஆகக்கூடும் என்றும் கூறினாள். எனவே, இப்போதைக்கு மணவிலக்கு விவகாரங்களைத் தொடங்கி விட்டால் மாப்பிள்ளை திரும்பி வரும்போது விரைவில் திருமணத்தை முடிக்க வசதியாக இருக்கும் என்றாள்.

அவளை யோசனையோடு நோக்கிவிட்டு, "இந்த நாலைந்து மாதங்களுக்குள், எப்படியும் ஒரு மணமகனைத் தேடிப்பிடித்து விட முடியும் என்ற நம்பிக்கையா?" என்று கேட்டான் புவனன்.

சபாஷ்டா, ராஜா! என்று உள்ளூர மெச்சிக் கொண்டாள் சுசீலா. சந்துபொந்துகளை எல்லாம் இப்படி பதுலாவுகிறானே!''

''அதெல்லாம் இல்லை. மாப்பிள்ளை இப்போது இலினாய்சில் தான் இருக்கிறார்! விலாசம் தருகிறேன். நீங்கள் வேண்டுமானால், நேரிலேயே போய்ப் பார்த்து விட்டு வாருங்கள்! அப்போதுதான் உங்களுக்கு முழு நம்பிக்கை வரும் போல் இருக்கிறது!''

''அவ்வளவு தூரம் சென்று விசாரிக்க மாட்டேன் என்று எண்ணமா? என் தங்கையின் பேறுகாலம், பதினைந்து நாட்களுக்குள் எப்போது வேண்டுமானாலும் இருக்கக்கூடும் என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். உங்கள் கட்டிடத்திலும், சிமிண்ட் பூச்சுவேலை தொடங்குமுன், நான் அடிப்படை வேலைகளை முடித்தாக வேண்டுமே! இரண்டும், இப்படி இக்கட்டான நிலையில் வந்து நிற்காததால்... ஏன் மேடம், இலினாய்ஸ் என்ன இன்னொரு கிரகத்திலா இருக்கிறது?'' என்றான் சற்று ஏளனமாக.

ஒரு பதிலும் சொல்லத் தோன்றாமல் சற்று நேரம் திணறிவிட்டு, ''உங்கள் தங்கையின் பிரசவத்தில், சிக்கல் எதுவும் இல்லையே!'' என்று பரிவுடன் விசாரித்தாள்.

''இல்லை... ஆனால் எந்த நிமிடமும் வலியெடுக்க லாம் என்கிற நிலையில் நான் ஊரிலே இருந்தாக வேண்டும் அல்லவா?'' என்றான் புவனன்.

''உங்கள் தங்கை விஷயமாய் ஏதாவது உதவி தேவைப்பட்டால்...''

''அம்மா இங்கேதான அவள்கூடவே இருக்கிறார்கள். அவளுடைய மாமியாரும் உள்ளூர்தான். அதனால் வேறு உதவி எதுவும் தேவைப்படாது என்று நினைக்கிறேன். எனினும், கேட்டதற்கு ரொம்ப நன்றி!'' என்று அந்தப் பேச்சை முடித்தவன், உடனேயே அப்போது இருவருமாகப் பேசிக் கொண்டிருந்த விஷயத்துக்கு வந்தான்.

''உங்கள் தேர்வு தாய்நாட்டுக்குத் திரும்பி வருமுன், தேவி சுதந்திரமடைந்து விடவேண்டும் என்று நீங்கள் விரும்புவதாக எனக்குத் தோன்றுகிறது. ஆனால், அது முடியாது. எனக்கு அவனிடம் திருப்தி ஏற்பட்டாக வேண்டும்!''

''அப்படியானால், தேவியின் வாழ்வில் ஒரு தடைக்கல்லாக இருப்பேன் என்கிறீர்கள்!''

''இல்லை. அப்படி இல்லை. இங்கு மணவிலக்கு செய்வது பற்றி, நானும் சற்று விசாரித்து வைத்திருக்கிறேன். முதலில் கேசை எடுக்கவே மாதக்கணக்காகும். எனவே ரத்து கோரும் மனுவை நீங்கள் பதிவுசெய்து விடுங்கள். அனேகமாகக் கேசை எடுக்குமுன்பே உங்கள் ஆள் வந்து விடுவான். எப்படியும் குடும்பக் கோர்ட்டின், மூன்று ஆலோசனைகள் முடியும் முன்பேனும் அவன் வந்துவிட வேண்டும். வந்துவிடும்படி பார்த்துக் கொள்ளுங்கள். அல்லது மூன்றாவது ஆலோசனைக் கூட்டத்தில், நான் மணவிலக்கை எதிர்த்து விடுவேன்'' என்று முடித்தான் புவனமோகனன்.

''தாராளமாய்!'' என்றாள் சுசீலா அமர்த்தலாக.

தொடர்ந்து சில மாதங்கள் சென்றவிதம், ஒருவகை யில் ஆமை வேகத்துடனும், மற்றொரு வகையில் இறக்கை கட்டிப் பறந்தது போலவும் புவனமோகனனுக் குத் தோன்றியது.

நமச்சிவாயத்துக்கு வாக்குக் கொடுத்தபடி, தாமதம் என்று தன்மீது குறைகூறும்படி ஆகிவிடக் கூடாது என்று, முழுவேகத்துடன் வேலை செய்தான். லேத்துப் பட்டறைக்கும், கட்டுமானப் பகுதிகளுக்குமாக ஓடிஓடி, ஒரு சிறு குறைகூடச் சொல்ல முடியாத, அளவில் வேலை நடத்தினான். இடையே, வீட்டிலும், தங்கையை செக்கப், வெளியே அழைத்துப் போவது என்று அவளுக்கு எந்தவிசக் குறையும் இல்லாமல் வேண்டி யது செய்தான்.

இடையே ஒருநாள், நள்ளிரவில் வசுதாவுக்கு வலியெடுத்து, மறுநாள் உதயநேரத்தில் ஆரோக்கிய மான ஆண்குழந்தை ஒன்றை அவள் பெற்றெடுத்தாள்.

பேரனைப் பார்க்கக் கார்த்திகேயன் உடனே விமா னத்தில் பறந்து வந்தார். விமானத்தில் ஏற மறுத்த சித்தையன் மறுநாள் ரயிலில் வந்து சேர்ந்தான்.

ஆரோக்கியமான பெண், சுகப்பிரசவம் என்பதால் பிள்ளை பிறந்த மூன்றாம் நாளே வசுதா குழந்தையோடு வீடு வந்து சேர்ந்தாள்.

அவளுடைய கணவன், புகுந்த வீட்டினர், அடுத்த சுற்று உறவினர் எல்லோரும் குழந்தையைப் பார்க்க வருவது, போவது என்று வீடு ஒரே பரபரப்பும் கலகலப்புமாக இருந்தது

அத்தனை பேரையும் இனிய முகத்துடன் வரவேற்பதும், உபசரிப்பதும், குழந்தைக்கும் தாய்க்கும் வேண்டியதைத் தானே சென்று ஓடி ஓடி வாங்கி வருவதுமாகப் புவனமோகனன் பறந்தான்!

இடையிடையே கிடைத்த நேரத்தில், கட்டிட வேலைகளையும் சென்று கவனித்தான். தந்தையையும் ஒருமுறை அழைத்துச் சென்று செய்து முடித்த, நடந்து கொண்டிருந்த எல்லா வேலைகளையும் காட்டினான். அவருக்கும் மிகுந்த சந்தோஷம்.

''அதனால்தான்டா, இந்த வேலையை விடக் கூடாது என்று எண்ணி, உன்னைக் கேளாமலே ஒப்பந்தம் போட்டு விட்டேன். இதில் உன் திறமை நன்கு வெளிப்படும், உனக்கும் பிடிக்கும்; உற்சாகத்தோடு செய்வாய் என்று எண்ணினேன்!'' என்று மகிழ்ந்தார் அவர்.

''ஆமாம், அப்பா!'' என்றான் மகன் சுரத்தின்றி.

''என்னடா... என்ன...'' என்று தொடங்கிய தந்தையிடம், ''வீட்டுக்கு நீங்கள் முதலில் போகிறீர்களா, அப்பா. வீட்டில் வசுவுக்கு ஏதாவது தேவைப்படக் கூடும்!'' என்று அவரைக் கிளப்ப முயன்றான் புவனன்.

''அங்கேதான் மாப்பிள்ளை இருக்கிறாரே! சித்தையன் வேறு! வசுவுக்கு வேண்டியதை செய்து இந்த ஊரையே புரட்டியேனும் வாங்கிக் கொடுத்து விடுவார்கள். நீ இதைச் சொல்! இந்த வேலையில் உனக்கு என்ன பிரச்னை? பணம் பட்டுவாடா ஏதும் சரியில்லையா?''

''அதெல்லாம் ஒன்றும் இல்லையப்பா! பில்லைக் கொண்டு நீட்டினால் உடனே காசு கைக்கு வந்துவிடும்!''

''பின்னே! சரியாக மரியாதை தருவதில்லையா?'' என்று துருவினார், தந்தை.

''அய்யோ! என்னப்பா நீங்கள்?! இல்லாததை எல்லாம் கற்பனை செய்து கொண்டு என்னென்னவோ கேட்கிறீர்களே! நான் வேறு நினைவில் குரலைக் கொஞ்சம் இழுத்து விட்டேன்! அதைப் போய்ப் பெரிதாக எடுத்துக் கொண்டு கவலைப்படுகிறீர்களே! வாருங்கள்! நாம் இருவருமே வீட்டுக்குப் போகலாம். சும்மாச் சும்மா குட்டிப் பையனைத் தொட்டுப் பார்க்க வேண்டும் போல ஆசையாக இருக்கிறது, எனக்கே இப்படி இருக்கும்போது, உங்களுக்கு எவ்வளவு ஆவல் இருக்கும்? குழந்தையைப் பிரிந்து, உங்களை நான் இங்கே அழைத்து வந்ததே தப்பு. அதைத்தான் அப் போது நினைத்துக் கொண்டிருந்தேன்...'' என்று, வாய்க்கு வந்ததை எல்லாம் சொல்லிச் சமாளிக்க முயன்றான்.

''சரி, வா, போகலாம்!'' என்ற கார்த்திகேயன், இருவரும் காரில் ஏறி அமரும் வரை ஒன்றும் பேசவில்லை.

காரைக் கிளப்புவதற்காகப் புவனன் கார் சாவியைச் சொருகியபோது சொன்னார். ''தங்கை பிள்ளை மேல் இவ்வளவு ஆசை வைக்கிறவனுக்குத் தன் பிள்ளை மேல் எவ்வளவு பாசம் இருக்க வேண்டும்?''

சாவியைத் திருப்பாமல் கை அப்படியே நின்று விட, ''அப்பா?'' என்றான் புவனன்

''ஆமாம்! அம்மா எல்லாம் சொன்னாள். சொல்லிக் கண்ணீர் விட்டாள்! ஏண்டா, என்னடா இது கண்ணராவி? என்னவோ திருமணம் முறிந்து விட்டது. பிரிந்து விட்டோம் என்றாய்! சரி, மனது ஒட்டவில்லை என்றால் என்ன செய்ய முடியும் என்று பேசாமல் இருந்தோம். இப்போது உங்கள் சண்டைக்காக, நம் குலக்கொழுந்து, அந்தப் பிஞ்சு, தகப்பன் இல்லாத பிள்ளையாக அனாதை போல வளரவேண்டுமா? எங்களுக்கு எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்த்தாயா?''

''அவர்கள் அவளை நன்றாகத்தான் வளர்ப்பார்கள்!'' என்று முணுமுணுத்தான் மகன்.

''ஆமாம் ரொம்ப அருமையாகத்தான் வளர்க்கிறார்கள். அவள் சித்தியோ, யாரோ பிள்ளை கெஞ்சக் கெஞ்ச முரட்டுத்தனமாய் இழுத்துப் போனாளாமே! நம் குழந்தையாய், நம் வீட்டில் வளர்ந்திருந்தால், அவளால் அப்படி இழுத்துப் போக முடியுமா? பெற்ற தகப்பன் வழிப்பாட்டி, அத்தை இவர்களிடமிருந்து பிள்ளையை இழுத்துப் போயிருக்கிறாளே! சொல்லி விட்டு உன் அம்மா, எப்படி அழுதாள் தெரியுமா?''

சற்றுநேரம் பேசாமல் இருந்துவிட்டு, ''அழுது, கோபப்பட்டு... எல்லாம் ஒரு பயனும் இல்லை, அப்பா! இதுபற்றிப் பேச வேண்டாம் என்று நான் முதலிலேயே அம்மாவிடம் சொல்லியிருக்கிறேன்! பிறகும்...'' என்று தொடர்ந்த மகனை ஆத்திரத்துடன் இடைமறித்தார் பெற்றவர்.

''அதையும் சொன்னாள். இந்தப் பேச்சை எடுத்தால் வீட்டை விட்டு மீண்டும் வெளியேறி விடுவதாகச் சொன்னாயாமே! என்ன கோழைத்தனமான மிரட்டல்? ஏன்? இதுபோல மிரட்ட எங்களால் முடியாதா? எங்கள் பேத்தியைக் கூட்டி வந்து சேர்க்காவிட்டால் தூக்கில் தொங்கி விடுவோம் என்று சொன்னால் நீ என்ன செய்வாய்? மிரட்டுகிறானாம்! முதலில் இருந்த சிறுபிள்ளைத்தனம் எல்லாம் மறைந்து அறிவு முதிர்ச்சி பெற்றுத் திரும்பி வந்திருக்கிறாய் என்று நினைத்தேன். அது இல்லை என்று காட்டி விட்டாயே!'' என்றார் கோபத்துடன்.

'ஸ்டியரிங் வீலை' இறுகப் பற்றியபடி, புவனமோகனன் சற்று நேரம் தலைகுனிந்து அமர்ந்திருந்தான். ''எனக்கு வேறு வழியில்லை அப்பா! தேவி... என் மனைவி தேவி விஷயத்தில் பெரிய தப்பு செய்து விட்டேன். அதற்கு உரிய தண்டனையாகத்தான் அடியோடு விலக நேர்ந்தது. மீண்டும், அங்கே போய் நிற்க எனக்கு அருகதையே இல்லை, அப்பா! நிரந்தரப் பிரிவு தவிர்க்க முடியாத ஒன்று. இதை எல்லாம் சொன்னால் அம்மா ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அதனால் தான் அப்படி மிரட்டும்படி ஆயிற்று!'' என்றான் மிகவும் இறங்கிய குரலில்.

''உறவை வளர்க்கும் பாலமாக ஒரு மகள் இருக்கும்போது நிரந்தரப் பிரிவு எப்படியடா சாத்தியம்?''

சாத்தியம்தான் அப்பா போன மாதம் திருமணரத்து வேண்டி மனு தாக்கல் செய்திருக்கிறார்கள்'' என்றான் அவன்.

கார்த்திகேயன் அதிர்ந்ததை புவனனால் உணர முடிந்தது.

''இவ்வளவு நாள் கழித்து இப்போது திடீரென்று என்ன வந்தது?''

இலக்கற்று எதிரே வெறித்தபடி, ''என்னை நம்பிய ஒரே ஒரு குற்றத்துக்காக அவர்கள் வீட்டுப் பெண் வாழ்நாளெல்லாம் தனிமரமாக நிற்பது அவர்களுக்குத் தாங்கவில்லை!'' என்றான் மகன் உணர்ச்சியற்ற குரலில்.

''அவர்களுக்கா? அவளுக்கா?''

''அவர்கள் சொல்லை இனி அவள் மீறமாட்டாள். முதலும் கடைசியுமாக அவர்களை மீறி என்னை நம்பியதற்கு.. அப்பா! ப்ளீஸ்! இந்தப் பேச்சு அவசியம் தானா?''

மகனின் தவிப்பு புரியவே ''இனி ஒன்றுமே செய்வதற்கு இல்லை என்பது நிச்சயம்தான் என்றால் அவசியம் இல்லைதான்'' என்றார் அவர்.

''நிச்சயம்தான், அப்பா!'' என்று முடித்தான் மகன்.

''சரி, காரை எடு'' என்று கார்த்திகேயன் கூறவும், அங்கே இன்னொரு கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கி, ''உங்கள் செக் கொடுக்க வந்தேன் மிஸ்டர் புவனமோகனன்'' என்று ஒரு கவரைக் கொடுத்தான் ரகுநந்தன்.

புவனமோகனன், தந்தையையும், ரகுநந்தனையும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்தான்.

'செக்' இருந்த கவரை வாங்கும் போது புவனனும் அறிமுகம் செய்விக்கையில் கார்த்திகேயனுமாக எல் லோருமே காரை விட்டு இறங்கி நின்றனர்.

ரகுநந்தன் யார் என்று அறிந்ததும், மிகுந்த மகிழ்ச்சியோடு, ''யார்? மிஸ்டர் நமச்சிவாயத்துடைய பிள்ளையா? உங்களைச் சந்தித்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம் தம்பி. அப்பாவைப் பார்க்கும்போது, நான் அவரைக் கேட்டதாகச் சொல்லுங்கள்!'' என்று முகம் மலர்ந்து பேசிய கார்த்திகேயன், அத்தோடு நில்லாமல், ''இன்னும் பத்து நாட்களில், எங்கள் வீட்டில் ஒரு பெயர் சூட்டுவிழா நடக்கப் போகிறது. அதற்கு நீங்கள் குடும்பத்தோடு வர வேண்டும், தம்பி! உங்கள் அப்பா அப்போது, தெய்வச் செயலாய்ச் சென்னைக்கு வந்தார் என்றால், அவரையும் கூட அழைத்து வாருங்கள்!'' என்று அழைப்பு விடுத்தார்.

ஆனால், அழைப்பை முழுமனதோடு ஏற்காமல், 'பா.. பார்க்கிறேன்!'' என்று ரகுநந்தன் அரைகுறையாகப் பதில் அளித்ததும், புவனமோகனன் தன் பங்குக்கு ரகுநந்தனை அழையாமல் விட்டுவிட்டதும் கார்த்திகேய னுக்கு வியப்பை அளித்தன.

## 17

**வ**சுதாவுடைய மகனின் பெயர் சூட்டும் விழா வெகு சிறப்பாக நடந்தேறியது.

ரகுநந்தனுக்கு அழைப்பு விடுத்த மறுநாளே மும்பை சென்று விட்ட கார்த்திகேயன் விழாவுக்கு வந்து சேர்ந்தார்.

அதற்கு முன்பே, மும்பை நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுப்பதற்காக அவருக்கு அனுப்பப்பட்டிருந்த அழைப்பிதழ்களில் இரண்டை எடுத்து ஒன்று ரகுநந்தனுக்கும், ஒன்று நமச்சிவாயத்துக்கும் 'பல்லவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' பெயரில் அனுப்பி வைத்திருந்தார்.

விழாவில் கலந்து கொள்ள அவர்கள் இருவரும் வராததை மனதுள் குறித்துக் கொண்டு, மறுநாள் தனியாகப் பேசிக் கொண்டு இருந்தபோது அதுபற்றிக் குறிப்பிட்டார்.

''அவர்களுக்கு இந்தக் கட்டுமானக் கம்பெனி தவிர வேறு பல நிறுவனங்களும், பல ஊர்களில் இருக்கின்றன அப்பா. அவைகளையும் நிர்வகிக்கும் பொறுப்பு குடும்பத்தாரிடையேதான் இருக்கிறது. அதனால் வர முடியாமல் போயிருக்கலாம்!'' என்றான் மைந்தன் சாதாரணமாக. ''ஆனால் பெரியவர் வாழ்த்து அனுப்பியிருந்தாரே அப்பா!''

''ஆனால், மகன் அதைக்கூடச் செய்யவில்லையே! அதுவும் உள்ளூரிலேயே இருந்து கொண்டு!'' என்றவர், மகன் ஏறிட்டு நோக்கவும், ''ஆமாம்பா டெலிஃபோன் செய்து விசாரித்துத் தெரிந்துகொண்டேன். அன்று அழைக்கும்போதே ஏதோ வேறுபாடு தோன்றியது. அதனால்தான் விசாரித்தேன்! அதுமட்டுமல்ல அந்தக் குடும்பத்தில், தேவி என்று ஒரு பெண் இருப்பதாகவும்

தெரிந்து கொண்டேன்! அவள் அதே தேவிதானா?'' என்று கேட்டார்.

கடவுளே! என்று உள்ளூர முனகியபடி தரையைப் பார்த்தான் தனயன். தந்தை, துப்பு துலக்கியது இவ்வளவு தானா? இன்னும் இருக்கிறதா?

தகப்பனார் நேரிலேயே பேசப்போய், அங்கே அவமானப்பட்டு விடக் கூடாதே என்பது புவனுக்கு. கூடவே விஷயம் தேவி வரையில் எட்டி, அவள் மீண்டும் மனம் நொந்து விடக் கூடாதே என்ற தவிப்பும்தான்.

மகனின் மவுனத்திலேயே பதிலைப் புரிந்து கொண்டவர் மேலே கேட்டார். ''பேசித்தீர்க்க முடியாத பிரச்சினையே கிடையாது புவன். உனக்குக் கூச்சமாக இருந்தால் நான் பேசட்டுமா?''

மறுப்பாய்த் தலையசைத்தான் மகன்.

மீண்டும் கார்த்திகேயன் ஏதோ கூற முற்படுமுன் முந்திக் கொண்டு ''அப்பா, ப்ளீஸ்! இந்தப் பேச்சை விட்டுவிட முடியாதாப்பா? உங்களுக்கு என்னைத் தெரியாதா? முயற்சியே வேண்டாம் என்று நான் சும்மா சொல்லுவேனா! உங்கள் பேத்தியை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தாலும், சம்பந்தப்பட்ட அத்தனை பேருக்கும் அது பெருந்துன்பமாகத்தான் முடியும். 'பல்லவி' என்கிற பெயரில் பெரிய தொழிலையே தொடங்குகிறவர்கள், அவளை நம்மிடம் சும்மா தந்துவிடுவார்களா? கோர்ட்டிற்குப் போவார்கள். கோர்ட்டில் கேஸ் சந்தி

சிரிக்கும்! நமக்கு அப்படி ஓர் அவமானம் தேவையா? அதன்பிறகு இங்கே நான் தொழில் நடத்த முடியுமா? என்னை விடுங்கள்! தந்தை, தாய்க்கு இடையே அந்தக் குழந்தைக்கு எவ்வளவு அல்லாடல் ஆகிவிடும்? அதன் தாய்? அவள் ஒருதரம் பட்டது போதும் அப்பா! இந்த இழுபறிக்குள் அவளை இழுத்துத் துன்புறுத்த எனக்கு விருப்பம் இல்லை!'' என்று முடித்தான். முடிக்க முயன்றான்.

''அவர்கள் கோர்ட்டுக்குப் போகாமலும் இருக்கக் கூடும், புவனா! தந்தை என்ற முறையில் உனக்கு உரிமை இருப்பதால் கொஞ்சம் விட்டுக் கொடுக்கக் கூடும்!'' என்றார் தந்தை விடாமல்.

''மாட்டார்கள் அப்பா. தகப்பன் என்கிற முறையில் என் நிழல் அந்தக் குழந்தை மீது படுவதைக் கூட அங்கே யாரும் அனுமதிக்க மாட்டார்கள்! முழுமூச்சு டன் எதிர்ப்பார்கள். ஏனெனில், அவர்களைப் பொறுத்த வரையில் நான் முழு அயோக்கியன்! நம்ப வைத்துக் கழுத்தறுக்கும் நயவஞ்சகன்! வேதனை என்னவென்றால் அவர்களால் அதை நிரூபிக்கவும் முடியும். நிரூபித்தால் இப்படி ஒருவனிடம் குழந்தை பழகுவது, குழந்தைக்கு நல்லதல்ல என்று வாதாடி, வெற்றியும் பெறுவார்கள். ஒரு லாபமும் இல்லாமல் இப்படிப் பட்ட அவமானமும் வேதனையும் நமக்குத் தேவைதானா, அப்பா? எல்லா வகையிலும் யோசித்து விட்டுத்தான் சொல்கிறேன். தயவுபண்ணி இந்தப் பேச்சை விட்டுவிடுங்கள்!'' என்று இந்த முறை மெய்யாகவே முடித்தான் புவனமோகனன்.

ஏனெனில், அதற்குமேல், அவனுடைய தந்தை, அந்த விஷயம் தொடர்பாகப் பேச்செடுக்கவில்லை.

புவனமோகனன், தன்னைத் தேவியுடைய உறவினர்கள் முழு அயோக்கியனாகக் கருதுகிறார்கள் என்று தந்தையிடம் சொன்னபோது, அதை வெகு நிச்சயமாக நம்பித்தான் சொன்னான். ஆனால் உண்மை அப்படி இருக்கவில்லை!

யார் தன்னை மகா அயோக்கியன் என்று நினைத்து, மிகுந்த வெறுப்புடன் இருக்கிறான் என்று எண்ணினானோ, அந்த ரகுநந்தன் முதலில் தன் அபிப்பிராயத்தில் - புவனமோகனன் ஒரு முழு அயோக்கியன் என்ற அவனது முதல் கருத்தில் சற்றே உறுதி இழந்தான்.

ரகுநந்தனும் கிட்டத்தட்டப் புவனமோகனனின் வயதை ஒத்தவன் தான். சில ஆண்டுகளாகத் தந்தையால் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தவனும் கூட. எனவே, புவனன் தொழில் செய்யும் முறையை வியந்து பாராட்டாமல் இருக்க, அவனால் முடியவில்லை.

முதலில் தனக்குள்ளேயே யோசித்துக் கொண்டிருந்தவன், பிறகு சித்தி சுசீலாவிடம் அதுப்பற்றிப் பேசினான்.

''ஓர் இலக்கு நிர்ணயித்துக் கொள்வதும், பிடிவாதமாய் அதை நிறைவேற்றுவதும், அப்படி, ஒன்றும் பெரிய காரியம் இல்லை, சித்தி. அவன் ஆட்களிடம் நோகாமல் வேலை வாங்கும் நேர்த்தியிருக்கிறதே! அதைப் பார்த்து ரசித்துக் கொண்டே இருக்கலாம், சித்தி!

வரிவிதிப்பு பற்றி 'கோல்டன் ரூல்' அரசாங்கத்துக்கும் பணம் வந்து சேர வேண்டும்' என்று சொல்வார்கள். அதுபோலச் செய்கிறான், சித்தி. வேலையும் நடக்கிறது, சில சமயம் மாலை ஏழு, எட்டு மணி வரையும் கூடச் செய்கிறார்கள். ஆனால், செய்கிறவன் எவனும் முகம் சுளிக்கக் காணோம். 'ஓவர்டைம்' மாதிரித் தனியாகக் கொடுக்கிறான் என்று நினைக்கிறேன்.

''ஆனாலும், இது வெறும் பணத்துக்காகச் செய்கிற வேலை இல்லை சித்தி. அவனைப் பற்றி ஒரு வார்த்தை குறைவாகப் பேசினால் மேலே பாய்ந்து விடுவார்கள் போல இருக்கிறார்கள். பணியாட்களிடம் இந்த மாதிரிப் பாசத்தை ஏற்படுத்துகிறவன் எப்படிச் சித்தி, கெட்டவனாக இருக்க முடியும்?'' என்று கேட்டான்.

''முதலில் இருந்தே அவர் பேச்சில் கெட்டிக்காரர் தானே, ரகு? தன்னிடம் வேலை செய்கிறவர்களையும் அப்படியே குளிப்பாட்டி வைத்திருக்கிறாரோ, என்னவோ?'' என்றாள் சுசீலா. ஆனால், சொல்லும்போதே அவள் கண்களிலும் யோசனை விடை தேடும் ஆராய்ச்சி தென்பட்டது.

''சித்தி, நீங்கள்தான் சொல்லியிருக்கிறீர்கள் சிலரைச் சிலநாள் ஏமாற்றலாம். பலரைப் பலநாள் ஏமாற்றலாம்; ஆனால், எல்லோரையும், எப்போதும் ஏமாற்ற முடியாது' என்று! அதனால்தான், புவனமோகனனால், முழுக்க முழுக்கத் தேவியை ஏமாற்ற முடியாமல் போய்விட்டது என்றீர்களே! நினைவில்லையா? ஒருவன் போல, அவன் ஆட்கள் அவ்வளவு பேரும்

அவ்வளவு தூரம் ஒத்து வேலை செய்கிறார்கள், சித்தி. அன்றைக்குப் பார்க்கிறேன் அவர்களில் ஒருவனுக்கு உடம்பு கொஞ்சம் சரியில்லையாம். அவனுக்குப் பதிலாக, சட்டையைக் கழற்றிப் போட்டுவிட்டு 'இவனே' வேலை செய்கிறான்! சித்தி, நம் ஆட்களில் ஒருவன், தான் செய்யட்டுமா என்று கேட்டிருக்கிறான். செய்யச் சொல்லியிருந்தால், நம்மால் பெரிதாக ஒன்றும் சொல்லியிருக்க முடியாது. நம் வேலைதானே? 'உன் வேலை சீக்கிரமாக முடிவதற்காகத்தான்' என்று எளிதாகச் சொல்லியிருக்கலாம். ஆனால், வேண்டாம் என்று விட்டான், சித்தி, நான் பார்த்துவிட்டுக் கேட்டபோதும், 'உங்களுக்குத் தேவையான ஆட்களைத்தானே நீங்களும் ஏற்பாடு செய்திருப்பீர்கள்! அவர்களில் ஓர் ஆளை எடுத்தால், அந்த அளவு வேலை தடைப்படத்தானே செய்யும்? வேண்டாம்' என்று விட்டான். நோய்ப்பட்டவனுக்கு வைத்தியத்திற்கு ஏற்பாடு... புவனமோகனனை நான் உருவகப்படுத்தி இருந்ததற்கும், இதற்கும் கொஞ்சமும் ஒத்துப்போகவில்லை, சித்தி!''

'அன்றைக்குப் பேசியபோதே எனக்கும் அப்படித்தான் தோன்றியது, ரகு! அப்போது, தேவியை ஏமாற்றித் திருமணம் செய்தவன்! இப்போது பார்த்தால், தேவிக்காக உயிரைக் கொடு என்றாலும் கொடுப்பான் போலத் தோன்றுகிறது! ஆனால் ஒரு தரம் பட்ட சூடு, அவனை நம்பவும் முடியவில்லை!..ச்சு! 'சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக் கொள்வது இல்லை' என்பார்கள். அன்றைய பாம்பு இன்றைய இந்தப் பழுதைதான் என்று ஒத்துக்கொள்ளப் பயமாகவும் இருக்கிறது...'' என்று

சுசீலா நெடுமூச்சு விட்டாள். ''ஒருதரம் பயங்கரமாய்க் 'கொத்து'பட்டு விட்டோமே!''

''அதனால்தான் துருவித்துருவித் தேடுகிறேன், சித்தி! ஆனால், தேடத் தேட, நல்லதாய்க் கண்ணில் படுகிறதா ஒரே குழப்பமாகி விடுகிறது! எல்... லாம் வேஷமோ என்ற சந்தேகமும், போக மாட்டேன் என்கிறது!'' என்றான் ரகுவும் குழப்பத்துடனேயே!

''ஆனால் சித்தி, அவன் குடும்பம் அப்பழுக்கு இல்லாதது. அவன் தகப்பனாரை ஒருநாள் நேரிலேயே பார்த்தேன் என்று சொன்னேனே! வீட்டு விலாசத்தைக் கொண்டு, அந்தப் பக்கம் ஒரு குறை தெரியவில்லை. என்னதான் இவன் வேஷம் போட்டாலும், மொத்தக் குடும்பமுமா நடிக்கும்? மோனியும், அவனுடைய் தாய், தங்கை இருவரையும் பற்றி நன்றாகத்தான் சொல்கிறாள்...''

''நல்லமரத்தில் புல்லுருவி பாய்ந்தாற்போல என்று சொல்வதில்லையா? அந்தக் குடும்பத்தில் இவன் ஒருவன் மட்டுமே கெட்டவனாகவும் இருக்கக் கூடும்! ஆனால், பல்லவியைப் பார்த்தபிறகும், அந்தக் குடும்பம் சும்மா இருப்பதுதான் ஆச்சரியமாய் இருக்கிறது. அதிலும், இந்த அசட்டு மோனி, பிள்ளையை அவர்களிடமிருந்து இழுத்து வந்த விதமே அவள் யார் என்று பறையறைந்து சொல்வது போலத்தான். அப்படியிருந்தும், அவள் விஷயமாக அவன் மூச்சுக்கூட விடவில்லையே! அழகும், துறுதுறுப்பும், சிரிப்பும்! மகள் என்று தெரிந்தபிறகும், அவளை விட்டு விலகி நிற்க வேண்டு

மானால், அவன் மனம் இரும்பாய்த்தான் இருக்க வேண்டும்!''

''அல்லது, ஆசையை இரும்பு மனதோடு அடக்கி வைத்திருக்க வேண்டும்! தேவியின் மகிழ்ச்சிதான் குறிக்கோள் என்றவன் பிள்ளையை அவளிடமிருந்து பறிப்பானா?''

''பிள்ளை ஒரு தொல்லை என்று எண்ணியிருக்க லாமல்லவா?''

''நம் பல்லவியையா?! என்ன சித்தி சொல்கிறீர் கள்?'' என்றான் ரகுநந்தன் ஒத்துக்கொள்ளாத பாவனை யில், தொடர்ந்து, ''எப்படியும், நாம் முன்பு நினைத்தது போலப் பழைய காதலியோ, வேறு மனைவியோ இல்லை என்பது உறுதியாய்த் தெரிகிறது!'' என்றான்.

சிறு முறுவலோடு மைத்துனர் மகனை நோக்கி, ''என்னப்பா, விட்டால் புவனமோகனனுக்குப் புகழா ரமே சூட்டுவாய் போல இருக்கிறதே! ஜாக்கிரதை! தேவி காது கேட்க இப்படி எதுவும் சொல்லி விடாதே!'' என்றாள் சுசீலா.

லேசாக அசடு வழிய, ''ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, புவனனை எனக்கு அடியோடு பிடிக்கவில்லை, சித்தி. இப்போதும், இவனோடு ஒப்பந்தமே போட வேண்டாம் என்று அப்பாவிடம் முதலில் எவ்வளவோ வாதாடினேன். ஆனால், அடிக்கடி பார்க்கப் பார்க்க, அந்த வெறுப்பை இழுத்துப் பிடித்து வைத்துக் கொள்ளா விட்டால், அடியோடு மறைந்து காணாமல் விடும் போல இருக்கிறது'' என்றான் பிள்ளை.

''அப்படியானால், காணவில்லை பகுதியில், பத்தி ரிகையில் விளம்பரம் போட்டுக் கண்டுபிடித்துக் கொள்ள வேண்டியதுதான்!'' என்று சிற்றன்னை சிரிக்க, ''போங்கள் சித்தி!''கூடச் சேர்ந்து சிரித்தான்.

சிரிப்பினால் சற்று சுமையிறங்கிய உணர்வு இருவருக்கும் உண்டாயிற்று.

அப்போதும், ''எப்படியும் ரகும்மா, தேவி முன்னிலையில் பேச்சில் கவனமாயிரு'' என்று மீண்டும் எச்சரித்தாள் சுசீலா.

''எனக்குச் சொல்ல வேண்டுமா சித்தி? அவள் கோவையில் இருந்து கொண்டு இங்கே நம் பேச்சைக் கேட்க முடியாது என்கிற தைரியம்தான் இவ்வளவு தூரம் புவனமோகனன் பெயரை எடுத்து நான் பேசியதே!... என்ன சித்தி?'' என்று.. சுசீலாவின் முகத்தில் யோசனையைக் கண்டு கேட்டான் ரகு.

''இல்லை... தேவி சென்னைக்கு வந்து ரொம்ப நாளாயிற்று அல்லவா? நாம் எல்லோரும் இங்கே வந்து போய் இருக்கும்போது, அவள் மட்டும் அங்கேயே கிடப்பானேன் என்று நினைத்தேன்!'' என்றாள் அவள்.

''சித்தி!?''

''ரகு, உன் மைத்துனன் திலீபன் எப்போது இலினாய்சில் இருந்து திரும்பி வருகிறான் என்றாய்?'' என்று அவள் தொடர்ந்து கேட்கவும் ரகுவின் கண்கள் விரிந்தன.

''இன்னும் இருபது நாட்களில்! அவனை வரவேற்கத் தேவி இங்கே வரட்டும் என்கிறீர்களா, சித்தி?''

''வந்தால் நல்லதல்லவா? வருகிறவள் கூடவே வேலையையும் பார்க்கட்டுமே! தொழிலில், அவளும் ஒரு டைரக்டர்தானே?'' என்றாள் சுசீலா தீவிரமாகச் சிந்தித்தபடி.

அடுத்த இருபது நாட்களில் புவனமோகனனுக்கும் ரகுநந்தனுக்கும் இடையே ஒருவிதமான நட்பு உருவாக லாயிற்று. தேவியைப் பற்றிய பேச்சு, மறந்தும், இருவர் உதடுகளிலும் இருந்து வெளிவந்ததில்லை. ஆனால், மற்றபடி, ஊர் விஷயம் எல்லாம் பேசினார்கள். தொழில் பற்றிய பேச்சில் தொடங்கியதுதான். ஒருவர் வேலையை அடுத்தவர் பாராட்டினார்கள். பிறகு உலக விஷயமெல்லாம் ஆராய்ந்தார்கள். நாடு உருப்பட வழி ஆராய்ந்தார்கள். அவரவர் தொழில் சிறப்படைய ஒருவ ருக்கொருவர் ஆலோசனை நல்கினார்கள். அதற்காக, ஒருவருக்கொருவர் நன்றி சொல்லிக் கொண்டார்கள்.

மொத்தத்தில், இளைஞர்கள் இருவருமே அடுத்தவ ரோடு பேசிப்பழக விரும்பினார்கள்; பழகினார்கள்!

அன்று பணப்பட்டுவாடா செய்ய வேண்டிய நாள். பெரும்பாலும் 'செக்'கைக் கொணர்ந்து புவனமோகன னின் கையில் கொடுத்து விடுவது ரகுநந்தனின் வழக் கம். ஏதாவது தவிர்க்க முடியாத வேறு வேலை இருந்தால், ''கொஞ்சம் அலுவலகத்துக்கு வந்துவாங்கிக் கொள்ளுங்களேன் புவனன்!'' என்பான். புவனனும் சென்று 'செக்கை' வாங்கி, அப்படியே 'பாங்கி'ல் கட்டி விட்டு, கட்டிட வேலை நடக்குமிடத்துக்கு வருவான்.

அன்றும் 'செக்'கை 'பல்லவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' அலுவலகத்துக்கு வந்து வாங்கிக் கொள்ளுமாறு ரகுநந்தன் புவனமோகனனைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

'பல்லவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' அலுவலகத்துக்குச் செல்ல நேரும் போதெல்லாம் புவனமோகனனுக்கு ஒரு விசித்திரமான உணர்வு ஏற்படும். ஆவல் கலந்த தயக்கம்!

அந்த அலுவலகத்தின் உள் அறையில், டைரக்டர் இருக்கையின் எதிரே ஒரு கை விரலை உயர்த்தியபடி பல்லவியின் பெரிய படம் ஒன்று மாட்டப்பட்டிருக்கும். 'எனக்கு வயது ஒன்று' என்று படத்தின் அடியில் எழுதப்பட்டிருந்த வாசகத்தைக் கொண்டு அது, பல்லவியின் முதலாம் பிறந்த நாளன்று எடுக்கப்பட்ட படம் என்று, புவனன் ஊகித்திருந்தான்.

அந்தப் படத்தைப் பார்க்கும் ஆவல், அவனை அந்த அலுவலகத்துக்கு இழுக்கும். ஆனால் முந்தைய வாழ்வின் ஞாபகம் அவன் காலைப் பின்னுக்கு இழுக்கும்.

ஆனால், ரகுநந்தன் நல்லபடியாகப் பேசிப் பழகத் தொடங்கிய பிறகு அவனது தயக்கம் மெல்ல மறையத் தொடங்கியிருந்தது.

அன்றும், பல்லவியின் படம் மாட்டியிருந்த சுவரைப் பார்த்தபடியே கதவைத் திறந்து கொண்டு புவனமோகனன் உள்ளே சென்றான்.

மகளின் படத்தை வேகமான ஒரு பார்வையிட்ட பின், ''மிஸ்டர் ரகு...'' என்றபடி திரும்பியவன், அங்கே டைரக்டர் இருக்கையில் தேவி அமர்ந்திருப்பதைக் கண்டதும் திகைத்து நின்றான்.

## 18

'பல்லவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்'சின் உரிமையில் தேவிக்கும் பங்கு இருக்கும் என்று அறிந்திருந்த போதும், அந்த இடத்தில் தேவியைச் சந்திக்கக்கூடும் என்று, புவனமோகனன் கனவிலும் கருதியவன் அல்ல.

ரகுநந்தன் நட்புகாட்டிப் பழகத் தொடங்கியிருந்த போதும், தேவி பற்றி ஒரு வார்த்தை கூட அவன் சொன்னதில்லை.

அவனுடைய தந்தை கூறியதன்படி, தொழில் வேறு, வாழ்க்கை வேறு என்று ரகு பிரித்துக் கொண்டதால் தான் இந்த நட்பு கூடக் காட்டப்படுகிறது என்பதுதான் புவனனின் கருத்து.

மற்றபடி, மென்மையே உருவான தேவியை மீண்டும் தன் கண்ணில் படவிடவே மாட்டார்கள் என்றுதான் புவனன் எண்ணியிருந்தான்.

ஆனால்... டைரக்டரின் இருக்கையில் அமர்ந்திருந்த தேவியிடம்... அவளது பார்வையிலும், முக வடிவிலும், உடல் அமைப்பிலும், அவளது ஒவ்வோர் அணுவிலும் முன்பு தென்பட்ட... விவரிக்க இயலாத

மென்மை இப்போது அவளிடமிருந்து காணாமல் போயிருந்தது.

முன்பு கொடியெனத் துவண்ட மேனியின் இன் றைய நிமிர்வும், அமர்த்தலாக அவள் அமர்ந்திருந்த பாணியும் தேவி மிகவும் மாறிவிட்டாள் என்பதை உணர்த்தின.

மாறவைத்த பாவி அவன்தான்!

குற்றக்குறுகுறுப்பில் புவனன் குன்றிக் கொண்டி ருக்க தேவி லேசாகத் தொண்டையைச் செறுமினாள்.

வந்த வேலையைப் பாராமல், அவன் சும்மா நின்று கொண்டு இருக்கிறானாம்! நினைவுபடுத்துகிறாள்!

தறிகெட்டு ஓடிய எண்ணங்களுக்கு வினாடியில் தடையிட்ட புவனன், ''நான் 'பல்லவி'யின் டைரக்ட ரைப் பார்க்க வந்தேன்'' என்றான் சற்று அழுத்தமாக.

''நானும் இதில் ஒரு டைரக்டர்தான்'' என்றாள் தேவி, சிறு ஏளனம் கலந்த குரலில். ''என்ன விஷயமாய் வந்தீர்கள்?''

''இன்றைக்குப் பணம் பட்டுவாடா செய்ய வேண் டிய நாள்'' என்றான், அவன் மொட்டையாக.

''இதோ செக் தயாராக இருக்கிறது!'' என்று கூறி, மேஜை அறையைத் திறந்து, ஒரு கவரை எடுத்து மேஜை மேல் வைத்தாள், தேவி!

கவரை எடுத்துப் பிரித்து, உள்ளிருந்த செக்கைத் தேதி, தொகை சரி பார்த்து விட்டு மீண்டும் உறையிலிட் டான் அவன்.

''ஏன்? ஏதாவது ஏமாற்று வேலை இருக்கும் என்று எதிர்பார்ப்பா?''

என்ன குத்தல்? இருக்கட்டும். நொந்த மனது திருப்பிக் கொடுக்கத் துடிக்கிறது! இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது! ''செக்' கிடைத்தால், தேதி, தொகை சரிபார்ப்பது தொழில் வட்டாரப் பழக்கம். நம்பாமல் அல்ல. மேலும் நீ... நீங்கள் ஏமாற்ற மாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்'' என்றான் புவனமோகனன்.

''ஆமாம்! நாங்கள் யாரையும் ஏமாற்றுவது இல்லை! அடுத்தவர்களால் ஏமாற்றப்பட்டுத்தான் எங்களுக்குப் பழக்கம்!'' என்று அடுத்த சாட்டையடி விழுந்தது.

பதில் சொல்லத் துடித்த வாயை இறுக மூடிக் கொண்டு 'செக்'கை ப்ரீஃப் கேசினுள் வைத்தான் புவனமோகனன்.

பெட்டியை மூடியபடியே, ''இன்னும் எவ்வளவு நாட்கள் சென்னையில் தங்கப்போவதாக உத்தேசம்?'' என்று வினவினான்.

''அதைக் கேட்க உங்களுக்கு உரிமை இருக்கிறதா?''

''உரிமையில் கேட்கவில்லை! அனாவசியமாகக் கண்ணில் பட்டு, வேண்டாததை எல்லாம் நினைவுபடுத்துவானேன் என்றுதான் கேட்டேன். இருக்கிற நாட்கள், கண்ணில் படாமல் ஒதுங்கிக் கொண்டு விடலாம் அல்லவா?''

''அப்படியென்றால், கண்ணில் படாதது எல்லாம் உடனே மறந்து போய்விடுமா?''

ஒருகணம் பளிச்சிட்ட புவனமோகனின் பார்வை, தேவியின் முகத்தைக் கூர்ந்ததும், உடனே மாறியது. ''புரியவில்லை'' என்றான் உணர்ச்சியற்ற குரலில்.

''நல்ல விஷயங்கள், சந்தோஷங்கள் மனதில் நில்லாமல் மறைந்து விட வாய்ப்புண்டு. ஏனென்றால் அவை மூச்சு விடுவது, இதயம் துடிப்பது போல இயல்பானவை. நாம் மூச்சு விடுகிறோம் என்று நினைத்துக் கொண்டேயா இருக்கிறோம்? வலி, துன்பம் என்று இயற்கைக்கு மாறானவை எளிதில் மறப்பது இல்லை. அதிலும், ஏமாற்றம் என்பது, கல்லில் பொறித்த எழுத்தாகி விடுகிறது!'' என்றாள் தேவி, ஓர் அலட்சியப் பார்வையுடன்.

வேண்டும் என்றே காயப்படுத்துகிறாள்!

''ஏமாற்றத்தை மறப்பது கடினம்தான்!'' என்றான் புவனன் தேவியின் கூற்றை ஒத்துக்கொள்வது போல!

அவள் யோசனையோடு நோக்கவும், தொடர்ந்து ''ஆனால் ஒன்று! அன்பு அதிகமாக இருக்கும்போது தான், ஏமாற்றத்தின் பாதிப்பும் பெரிதாகத் தெரியும்! அன்பை மறக்கடித்து விட்டால், கல்லில் பொறித்த எழுத்து தண்ணீரில் எழுதியதாகி விடும்! முயற்சி செய்யுங்கள்!'' என்று அவளைப் போலவே சிறு ஏளனம் கலந்த குரலில் உரைத்தான்.

ஆனால், மேலே பேச மாட்டாமல், அவள், வாயடைத்துப் போகவும், கழிவிரக்கம் கொண்டு, ''சாரி! நான் இப்படிப் பேசியிருக்கக் கூடாது; மன்னித்துக் கொள்! ஆனால், குட்டுவதற்கு வசதியாக குனிந்து கொடுத்துக் கொண்டே இருப்பது என் இயல்பு அல்ல!'' என்றவன் பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே செல்லக் கிளம்பினான்.

''உங்கள் இயல்பு அதுமட்டும் அல்லவே! நம்ப வைத்து ஏமாற்றுவது உங்கள் அரும்பெரும் குணநலன்க ளில் முக்கியமான ஒன்றாயிற்றே!'' என்றாள் அவள் கொதிப்பும் குரோதமுமாக.

கதவருகில் நின்று, ஒருமுறை அவளைத் திரும்பிப் பார்த்த புவனன் வேறு எதுவும் பேசாமல் வெளியேறிச் சென்று விட்டான்.

கீழே லிஃப்ட் வாயிலில் மலர்ந்த முகத்துடன் நின்ற சுசீலாவை, அவன் சந்திக்க நேர்ந்தது.

''வணக்கம்'' என்று முகமன் உரைக்கும்போது, குரலையும் முகத்தையும் சாதாரணமாக வைத்துக் கொள் ளப் புவனன் மிகவும் சிரமப்பட நேர்ந்தது.

அந்த 'வணக்க'த்தின் பின், நின்றுபேச மனமின்றி, ''நீங்கள் மேலே செல்ல லிஃப்டுக்காக காத்திருக்கிறீர்கள் போலத் தெரிகிறது உங்களை நிறுத்தி வைத்துப் பேசு வது நியாயமில்லை! வரட்டுமா? லிஃப்ட் கிளம்பப் போகிறது. போய் ஏறிக்கொள்ளுங்கள்'' என்று விடை பெற முயன்றான்.

ஆனால், லிஃப்டில் ஏற, சுசீலா சற்றும் அவசரம் காட்டினாளில்லை. செல்லும்படி, லிஃப்ட் ஆபரேட்டரிடம் சைகை செய்து விட்டு, ''எனக்கு ஒன்றும் அவசரம் இல்லை, மிஸ்டர் புவனமோகனன். தேவி வேலை முடித்து விட்ட பிறகு, அவளை பியூட்டி பார்லருக்கு அழைத்துப் போகத்தான் நான் வந்தது... இன்றைக்குத் திலீபன் திரும்பி வருகிறார் பாருங்கள்!'' என்று முறுவலித்தாள்.

''ஓ'' என்றதற்கு மேல் சற்றுநேரம் வேறு எதுவுமே சொல்ல, புவனமோகனனால் முடியவில்லை. எதிர்பார்த்தது தான்! ஆனாலும், பேச மாட்டாமல், தொண்டையை ஏதோ இறுகப் பிடிப்பது போல உணர்ந்த அவன், சற்று நேரம் அசைவற்று நின்றான்.

லிப்ட் கீழிறங்கி வருவதை கீழே நோக்கி ஒளிர்ந்த சிவப்பு நிற அம்புக்குறி பறைசாற்றியது.

புன்னகையோடு தலையசைத்து விட்டு, சுசீலா லிஃப்டின் புறமாய்த் திரும்பினாள்.

அவசரமாகத் தொண்டையை அடைத்ததை விழுங்கிச் சீர்செய்து கொண்டு, ''அவரை...மிஸ்டர் திலீபனை நான் சந்திக்க வேண்டும் என்றேனே!'' என்றான் புவனமோகனன்.

சுசீலாவின் சிரித்த முகம் அவன்புறம் திரும்பியது. ''நினைவிருக்கிறது. மிஸ்டர் புவனன்! உங்களை ஆசீர்வாதத்துக்காக என்று காட்டிக் கொள்ளாமல், சாதாரணமாகச் சந்திக்க ஏற்பாடு செய்கிறேன். இப்போது...

லிஃப்ட் வந்துவிட்டது! வரட்டுமா?'' என்று விடைபெற்றபடியே லிஃப்ட்டினுள் மறைந்தாள் அவள்.

இவர்களால் எப்படிச் சிரிக்க முடிகிறது என்று தவித்த புவனனின் மனம் மெல்ல அமைதி அடைந்தது.

'சுசீலாவுக்கு ஏன் சிரிப்பு வராது? அருமைப்பெண் தேவியின் வாழ்வு மீண்டும் மலரப் போகிறது எனும் போது, உள்ளம் துள்ளத்தானே செய்யும்?' ஆனந்தத்தை அவள் இந்த அளவில் அடக்கிக் காட்டுவதே பெரிய விஷயம் தான்!

இன்னும் ரகுநந்தனும் இந்தப் பாடு - மகிழ்ச்சியை அடக்கிக் காட்டும் பாடுபடத்தான் செய்வான்.

அந்தக் குடும்பம் மகிழ்ச்சியை அடக்கிக் காட்டுகிற போது, புவனன் துக்கத்தை அடக்கிக் காட்ட வேண்டும். முழுமூச்சோடு முயன்று அதைச் செய்ய வேண்டும்!

எண்ணத்தைச் செயலாக்குவது சிரமமாகவே இருந்தபோதும், புவனமோகனன் முயன்று, அமைதியான தோற்றத்தை வருவித்துக் கொண்டு, காரை நோக்கி நடந்தான்.

சுசீலாவின் சிரிப்பு தேவிக்கும் பிடிக்கவில்லை தான்.

''என்ன சித்தி சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது? அப்படி எதைப் பெரிதாகச் சாதித்து முடித்து விட்டீர்கள்? பாருங்கள், இந்த ரகு அண்ணா ஆஃபீஸ் நடத்துகிற லட்சணத்தை? 'செக்' பட்டுவாடா எல்லாம் 'கூரியரில்' கொடுத்து அனுப்புவதற்கு என்ன? சும்..ம்மா

'செக்' வாங்க வருகிறேன் என்று கண்டவர்கள் எல்லாம் வந்து, வேலையைக் கெடுத்துக் கொண்டு இருக்கிறார்களே! இங்கேதானே இருக்கிறீர்கள்? நீங்கள் சொல்லியிருக்கக் கூடாது?'' என்று படபடத்தாள்.

சுசீலாவின் முகத்தில் மலர்ச்சி குறையவில்லை எனினும் வியப்பு தோன்றியது. ஆச்சரியத்துடன் மகளை உற்றுநோக்கினாள்.

சிறிய தாயின் முகத்தைப் பார்த்த தேவியும், 'சொத்'தென அடங்கிப் போனாள். இருக்கையில் இருந்து எழுந்து வந்து, சுசீலாவின் கையைப் பிடித்துக் கொண்டு ''சாரி! சித்தி! நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது! என்னைப் பெற்ற தாய் உயிரோடு இருந்திருந்தால் கூட உங்களைப்போல இவ்வளவு தூரம் எனக்காகப் பாடுபட்டிருப்பார்கள் என்று சொல்ல முடியாது எல்லாம் தெரிந்தும், உங்களிடம் கோபமாக கத்திப் பேசி விட்டேனே! தயவு பண்ணி மன்னித்து விடுங்கள், சித்தி!'' என்றாள் கண்ணில் நீர்பெருக.

''ஷ்.... என்ன அழுகை? ம்? சித்தியிடம் பேச உனக்கு உரிமை இல்லையா? சொல்லு, இப்போது என்ன பண்ண வேண்டும்?'' என்று அருகில் கிடந்த நாற்காலி ஒன்றில் தேவியை அமர்த்தித் தானும் அருகில் கிடந்ததில் அமர்ந்து கொண்டு பெண்ணின் கையைக் கனிவோடு வருடியபடி சுசீலா வினவினாள்.

சோர்வுடன் சற்றுநேரம் பேசாமல் அமர்ந்திருந்த தேவி, அப்படியே சரிந்து, சுசீலாவின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். ''இன்றைக்குச் 'செக்'

வாங்க என்று, புவனமோகனன் இங்கு வந்திருந்தார் சித்தி'' என்றாள் மெல்லிய குரலில்.

மகளின் கூந்தலை மிருதுவாய் நீவி விட்டபடி சுசீலா பேசினாள். ''உன் பெரியப்பாவிடம் நாலு ஆண்டுகளாகத் தொழில் பயிற்சி எடுத்தவள் நீ. தொழில் வேறு, வாழ்க்கை வேறு என்று அவர் கற்றுக் கொடுத்தி ருக்கிறார் அல்லவா? பிறகு என்னடா! நமக்காக - நம் தொழிலுக்காகப் புவனமோகனனுடன் ஓர் ஒப்பந்தம் செய்திருக்கிறோம். அதற்காகப் பணம் கொடுக்கிறோம். அவ்வளவுதானே! நாம் என்ன, அவரை வீட்டுக்கு அழைத்து விருந்தா வைக்கிறோம்? இல்லையே! வெறும் அலுவலகத்தோடு நின்றுவிடப் போகிற தொடர்பு! இதைப்போய்ப் பெரிதாக எடுத்துக் கொள்வார்களா? ஊகூம்! எழுந்திரு, கண்ணைத்துடை!'' என்று தேற்றி, உற்சாக மூட்டினாள்.

ஒருவாறு, தேவி எழுந்து முகத்தைச் சீர்செய்து கொண்டதும், ''ஆமாம், புவனமோகனனிடம் ஒன்றும், நீ இப்படி அழுதுவிடவில்லையே!'' என்று விசாரித்தாள்.

''சேச்சே! இல்லை சித்தி! நன்றாகக் குத்தலாகத்தான் பேசினேன். 'திமிர்' என்றுகூட நினைத்திருப்பார்!'' என்றாள் தேவி.

''கரெக்ட், அப்படித்தான் தைரியமாய் நடந்து கொள்ள வேண்டும். உனக்குச் செய்ததை நினைத்து நினைத்து அவர் வருந்தும்படிச் செய்ய வேண்டும். நீ மட்டும் சித்தி சொல்படி நடந்து கொண்டாய் என்றால், அவரை நன்றாகப் பழிவாங்கி விடலாம்!''

''பழிவாங்குவது, வாங்காதது என்று என்ன சித்தி? நான் உங்கள் பேச்சை எப்போது தட்டி நடந்தேன்? ஒரே ஒருதரம் - உங்களை மீறிப் புவனனை மணந்ததில் எவ்வளவு பெரிய பாடம் கற்றிருக்கிறேன்! இனி எப்போதும் உங்கள் சொல்படிதான் நடப்பேன், சித்தி!'' என்று மெல்லிய குரலில் உறுதி கூறினாள் தேவி.

''அப்படிச் சொல் கண்மணி! இப்போது... நம் ரகுவுடைய மைத்துனன் திலீபன் இல்லை, அவன் படிப்பதற்காக இலினாய்ஸ் போனான்; தெரியுமல்லவா? அவன் திரும்பி வருகிறான். அவனை வரவேற்க நாம் விமான நிலையத்துக்குப் போக வேண்டும்!'' என்றாள் சீலா!

''சரி சித்தி'' என்றாள் தேவி பணிவாக.

ஒருநாள் மாலையில் தேவியும் சுசீலாவுமாகக் கட்டிட வேலை நடக்குமிடத்துக்கு ரகுநந்தனை, விமான நிலையத்துக்கு அழைத்துப் போகவென்று, காரில் வந்தார்கள்.

புவனமோகனனிடம் ஏதோ பேசிக்கொண்டு நின்ற ரகுநந்தனிடம், சுசீலா வந்து, ''என்னப்பா, ரகு? திலீபன் வருவது மறந்துவிட்டதா? தேவி அப்போது பிடித்து என்னை விரட்டிக் கிளம்ப வைத்தாள். பார், காரிலேயே காத்துக் கிடக்கிறாள். கிளம்பு! விமானம் சரியான நேரத்திலேயே வந்து விடுமாம். தேவி டெலிஃபோனில் கேட்டுச் சொன்னாள்'' என்றுரைத்து, மகனை அவசரப் படுத்தினாள்.

''இதோ! நானும் ரெடிதான், சித்தி. வேலை முடித்து விட்டேன். வெளியே வரும்போது மிஸ்டர் புவனனைப் பார்த்தேனா, பேச்சு சுவாரசியத்தில் நேரம் போவது தெரியாது போயிற்று. இதோ, கைப்பெட்டியை எடுத்துக் கொண்டு வந்து விடுகிறேன். நீங்கள் காருக்குப் போங்கள்! எனக்காக நின்று, நேரத்தை வீணாக்க வேண்டாம்!'' என்றான் கரிசனத்துடன்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை!'' என்று வெகு நேரத்துக்குப் பிறகு வாய்திறந்து, உபசாரமாகப் பேசினான், புவனமோகனன். சற்றே தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''வந்து...இவர்தானே, 'இலினாய்'சிலிருந்து வரும் மிஸ்டர் திலீபன்? தே... தேவிக்காக உங்கள் தேர்வு!?'' என்று கேட்டான்.

''எல்லாம் சரிதான். ஒரே ஒரு சின்னத் திருத்தம் தவிர என்னது மட்டுமல்ல. முழுக்குடும்பத்துடையதும் தான்! அதாவது தேவி உட்பட!'' என்று பெருமையோடு உரைத்தாள் சுசீலா.

''ஓ!... அவனை... அவரை, நான் சந்திக்க ஏற்பாடு செய்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறீர்கள்!'' என்று புவனமோகனன் அவளுக்கு நினைவூட்டினான்.

''மறப்பேனா?'' என்றாள் சுசீலா உற்சாகமான குரலில்.

அவள் வாக்களித்தது போலவே, ஒருநாள் ரகுநந்தனோடு, அவனுடைய மைத்துனன் திலீபன், கட்டிட வேலையைப் பார்த்துப் போகும் சாக்குடன் சென்றான்.

அங்கே, புவனமோகனனை, ரகுநந்தன், திலீப னுக்கு அறிமுகப்படுத்தி வைக்க, மூவருமாய்ச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

விடைபெற்றுத் திரும்பிச் செல்லும்போது ரகுநந்த னிடம், ''என்ன அத்தான், என் சாவு மிஸ்டர் புவனமோ கனனின் கையால்தான் என்று முடிவு செய்து விட்டீர்கள் போல் இருக்கிறதே!'' என்று திலீபன் யோசனையோடு கூறினான்.

அவர்கள் இருவரும் விடைசொல்லிக் கொண்டு கிளம்பியதும், வேலையை, அடுத்த ஆளிடம் ஒப்ப டைத்து விட்டு, புவனமோகனன் சுசீலாவோடு தொடர்பு கொண்டு, அவள் சொன்ன இடம் சென்று அவளைச் சந்தித்தான்.

''வேண்டாம்! இந்தத் திலீபனிடம் ஏதோ பொய்மை இருக்கிறது! அதனால் தயவுசெய்து தேவி, திலீபன் திருமண ஏற்பாட்டை நிறுத்தி விடுங்கள்!'' என்றான் அவசர அவசரமாக.

சுசீலா திகைத்து போனவள், உடனே சமாளித்து, ''அதெப்படி முடியும்?'' என்று கேட்டாள்.

# 19

**சு**சீலா 'எப்படி முடியும்' என்று கேட்டதும், புவனமோகனன் பதறி விட்டான். 'எப்படி முடியும்' என்றால் என்ன அர்த்தம்? நிச்சயம், உறுதி பண்ணுவது

என்று பிறர் அறியச் செய்து விட்டீர்களா? என்னிடம் கேளாமல் எப்படி நீங்கள் அதைச் செய்யலாம்?'' என்று படபடத்தான்.

வியப்பை மறைத்துக் கொண்டு ''தேவிக்கு நல்லது எது என்று உங்களைவிட எங்களுக்குத்தான் தெரியும்!'' என்றாள் சுசீலா, சிறு முறுவலுடன்.

கண்மூடித்திறந்து, ''இருக்கலாம், ஆனால், தேவி யின் மனமகிழ்ச்சியை ஒரே குறிக்கோளாகக் கொண்டி ருப்பது நானாகத்தான் இருக்க முடியும்!'' என்றான் அவன்.

''அப்படியானால், எங்களுக்கெல்லாம் தேவி சந் தோஷமாய் இருப்பதில் அக்கறை இல்லை என்கிறீர் களா?''

''சும்மா, வெறுமனே, வாதாடுவதற்காக வார்த்தைக ளைக் கூறாதீர்கள், மிஸஸ் கிருஷ்ணன். தேவி மகிழ்ச்சி யோடு வாழ வேண்டும் என்பதில் உங்களுக்கு நிறை யவே அக்கறை உண்டுதான். ஒத்துக்கொள்கிறேன். ஆனால், உங்களுக்கு அவள்மட்டும் தான் என்பது இல்லை. ஐந்து பேர்களில் அவள் ஒருத்தி. எனக்கு அவள் மட்டும்தான். அவளது சந்தோஷம் மட்டும்தான் வேண்டும். நீங்கள், அவளது மகிழ்ச்சியோடு, எதிர் காலப் பாதுகாப்பு, அதைத் தரக்கூடிய குடும்பப் பின்னணி என்று பார்த்து, இது குறைந்தால் அது ஈடுகட்டும் என்று மொத்தக் கணக்குப் போடுவீர்கள். அவளது ஆனந்தமான எதிர்கால வாழ்வில் அவளை ஒரு துரும்புகூடக் குத்திவிடக் கூடாது என்பது எனக்கு!

தன்னிலை விளக்கம் இத்தோடு போதும் என்று நினைக் கிறேன். சொல்லுங்கள்! இந்தத் திலீபனைப் பற்றி உங்களுக்கு முழுத்திருப்தி தானா? நன்றாக விசாரித்துத் தெரிந்து கொண்டீர்களா?'' என்று கேட்டான் புவனமோ கனன்.

''திலீபன், ரகுநந்தனுடைய சொந்த மைத்துனன். அந்தக் குடும்பமே முன்பே தூரத்து உறவுதான் என்ப தோடு, பல காலமாகச் சேர்ந்து பழகியதும் கூட. சிறுவயதில் இருந்தே திலீபனை எங்களுக்குத் தெரி யும்...''

''அதுபற்றி என்ன வந்தது? வெளிநாடெல்லாம் போய் வந்திருக்கிறானே, இப்போதும் அவனைப் பற்றி நன்றாகத் தெரியுமா?'' என்று குறுக்கிட்டுக் கேட்டான் புவனன்.

''ஆமாம். தேவியைப் பற்றியும் திலீபனுக்கு நன்றா கத் தெரியும். மற்றபடியும், முழு விவரங்களையும் எடுத்துச் சொல்லி, அதன்பிறகு அவர் ஒப்புதலோடு தான் முடிவு செய்தோம்!'' என்றாள் சுசீலா விளக்கமாக.

''ஓ''! என்று குழப்பத்துடன் கை முஷ்டியால் நெற்றியைத் தட்டிக் கொண்டான். ''ஆனால், திலீபனி டம் ஏதோ ஒரு தப்பு இருக்கிறது. மிஸஸ் கிருஷ்ணன். ஏதோ பொய்யாய்...''

லேசாகத் தலை சரித்து நோக்கி, ''தேவி கையை விட்டு அடியோடு போய் விடப்போகிறாள் என்கிற உண்மை, உங்களை அப்படி எண்ண வைக்கிறது!'' என்றாள் சுசீலா.

தலையசைத்து, ''தேவியை இழப்பது வேதனை தான். ஏற்கெனவே இழந்ததுதான் என்றாலும், அதைச் சட்டபூர்வமாய் முழுமையாக முத்திரை இடப்போவது பெரும் துன்பம்தான். இல்லையென்று, உங்களிடம் நான் பொய் சொல்ல மாட்டேன். ஆனால், என் வேதனையை விட, அவளது மகிழ்ச்சி எனக்கு முக்கியமானது; அதனாலேயே இவ்வளவு பார்க்கிறேன் என்று உங்களிடம் நான் எப்படி நிரூபிக்கட்டும்?'' என்று அலுப்பும் தவிப்புமாகக் கேட்டான் அவன்.

''எளிதாகவே நிரூபிக்கலாம்!'' என்றாள் சுசீலா இலகுவாக. ''திலீபன் விஷயத்தில் நீங்கள் ஒதுங்கி நின்றால் போதும்!''

கண்களில் கவலை படர, ''உங்கள் திலீபன் அவளை உண்மையாக நேசித்தால் சரிதான். ஆனால்... மிசஸ் கிருஷ்ணன் நீங்கள் தேவியிடம் மிகுந்த அன்பு உள்ளவர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால்... திலீபன் விஷயத்தில் நீங்களுமே ஏமாந்திருக்கக் கூடும் அல்லவா? கடைசி முடிவு எடுக்குமுன் இன்னும், கொஞ்சம் நன்றாக விசாரியுங்களேன்!'' என்றான் கெஞ்சலாக.

''விசாரிக்க வேண்டியது உங்களை நீங்களேதான் என்பது என் அபிப்பிராயம். ஒன்று பிடிக்கவில்லை என்றால், அதற்கான காரணங்களைத் தேடிக் கண்டு பிடிப்பது மனித இயல்பு!'' என்று மனோதத்துவம் பேசினாள் சுசீலா.

அவன் பேச்சை ஒதுக்கி, ''ஒருவேளை, தங்கை கணவரை எதிர்க்கும் துணிவு இல்லாததால், விருப்பம்

இல்லாமலே, திலீபன்... இதற்குச் சம்மதித்திருக்கலாம் இல்லையா?'' என்று வாய்விட்டு யோசித்தான் அவன்.

''இருக்காது! நான் நேரிலேயே பேசித்தெளிவு செய்து கொண்டு விட்டேன்.''

''ஓ.. பின்னே, தவறாக எதுவும் இருக்க வாய்ப் பில்லை. ஒருவேளை, நீங்கள் சொன்ன மனோதத்துவம் தான் சரியோ என்னவோ? சரி, கிளம்புகிறேன்...'' என்று சோர்வுடன் எழுந்தான் புவனமோகனன்.

கூடவே எழுந்தபடி, ''குடும்ப கோர்ட்டில் விரைவி லேயே உங்கள் விவாகரத்து மனு எடுத்துக் கொள்ளப் படப்போகிறது என்றார்கள். மூன்று 'கவுன்சிலிங்'கும் கூடச் சீக்கிரமே வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்து விடலாம்...'' என்றாள் சுசீலா.

''... எப்போது என்றாலும் நீங்கள் சொல்கிற மாதிரிச் செய்ய நான் தயார்'' என்றான் அவன் இறுகிய குரலில்.

''யோசித்துப் பார்த்தால் இந்த வகையில் சிக்கல் தீருவது நல்லது என்றுதான் தோன்றுகிறது. அவளைப் பற்றிய குற்ற உணர்ச்சி தீருவது உங்களுக்கும் ஒரு மாதிரி விடுதலை போலத்தான் இருக்கும்...'' என்று அவனோடு சேர்ந்து நடந்தபடி சுசீலா கூறினாள்.

''விடுதலையா?''

புவனமோகனனின் முகம் சட்டெனச் சொல்லொ ணாத வேதனையைக் காட்டியது. சில வினாடிக்குள் சமாளித்து, இயல்பான குரலில், ''தேவியிடமிருந்து

விடுதலையை சுய உணர்வுள்ள எந்த மனிதனும் விரும்ப மாட்டான். ஆனால், அது அவளுக்கு நல்லது என்பதால், என் விருப்பத்தை ஒதுக்கி, வைத்து, அவளுக்கு அந்த விடுதலையைத் தர நான் முன் வந்திருக்கிறேன். அவ்வளவே!'' என்று மெதுவாக உரைத்தான்.

''ரொம்ப சந்தோஷம்! எப்படியோ, சட்டத்தின் மூலம் இணைந்தவர்கள், சட்டத்தின் மூலமே பிரியப் போகிறீர்கள்!'' என்றாள் சுசீலா.

சட்டெனத் திரும்பி, அவளைக் கூர்ந்து நோக்கினான் அவன்.

சுசீலா கேள்வியாய் அவனை நோக்கவும், ''என்னை வருத்தவென்று நீங்கள் இப்படிப் பேசுகிறீர்கள் என்றால்... அது, செத்த பாம்பை அடிப்பது போலத் தான்! ஆனால், எந்த நோக்கமும் இல்லாமல் வந்த பேச்சு என்றால், தயவுபண்ணித் தேவி முன்னிலையில் இப்படி ஏதும் சொல்லி விடாதீர்கள்!'' என்று, வெறுத்த குரலில் உரைத்துவிட்டு, புவனமோகனன் அங்கிருந்து வெளியேறினான்.

அவன் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்த சுசீலாவின் முகத்தில் புன்னகை விரிந்தது.

அன்று மாலை, வீடு திரும்பிய ரகுநந்தனிடம் அன்று நடந்தது பற்றி சுசீலா கூறத் தொடங்கவும், உள்ளே ஏதோ ஆரவம் கேட்க, ரகு எச்சரிக்கையோடு அவளை நோக்கினான்.

''உன் மனைவிதானடா. தேவி, மகளைப் பார்த்து வர என்று, மோனி வீட்டுக்குப் போயிருக்கிறாள்!'' என்று அவள் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, சிற்றுண்டித் தட்டோடு ரகுவுடைய மனைவி அகல்யா வந்தாள்.

மனைவியைப் பார்த்து முறுவலித்து, ''சமையல்காரர் செய்தது தானே? பயப்படாமல் சாப்பிடலாமில்லையா?'' என்று கிண்டலடித்துவிட்டு, வெங்காய பஜ்ஜியைச் சட்டினியில் தோய்த்து ஒரு விள்ளல் வாயில் போட்டுக் கொண்டான்.

அவள் சிரித்தபடியே, ஒற்றை விரலால், 'பத்திரம்' காட்டி விட்டு மீண்டும் உள்ளே செல்லவும் சிற்றன்னையை நோக்கி, ''சித்தி, தேவி இங்கே இருக்கும் நாட்களிலாவது பல்லவியைக் கூட வைத்துக் கொள்ளலாம் இல்லையா? எதற்குத் தினம் மோனி வீட்டுக்குப் போய்ப் பார்க்க வேண்டும்?'' என்றான்.

''பிறகு திருப்பிக் கொண்டு விடும்போது குழந்தை அடம்பிடிப்பாளோ என்ற பயம்தான். எப்போதும் கூடவே வைத்துக் கொள்ளேன் என்றால், ரொம்பச் செல்லம் கொடுத்துக் கெடுத்து விடுவோமோ என்ற பயம் அவளுக்கு. அத்தோடு, வேலை முடிந்து ஓய்ந்து வருகிறவர்களுக்குப் பல்லவியோடு ஈடுகொடுத்துப் பார்க்க முடியவில்லை; இங்கே மோனி வீட்டில் நன்றாய்த்தானே வளருகிறாள்; இருக்கட்டும் என்றாள். ஆனால், இப்போது மாலை வீடு வந்ததும் வராததுமாக விழுந்தடித்துக் கொண்டு, மகளைப் பார்க்க ஓடுவதைப் பார்த்தால் பாவமாய் இருக்கிறது!'' என்றாள் சுசீலா.

''ம்ம்....'' என்று ரகு ஏதோ சிந்தனையில் ஆழவும், ''என்னடாப்பா?'' என்று விசாரித்தாள் சித்தி.

''என்னவோ, தேவி இந்த அளவுக்கு, மகளைத் தேடி ஓடியதாக எனக்கு ஞாபகமே இல்லை. ஓரளவுக்குக் கண்டிப்பாக இருக்கத்தான் முயற்சி செய்வாள். முதல் பேரக்குழந்தை என்று எல்லோரும் செல்லம் கொடுக்கிறீர்கள் என்றுதானே அவள் சொல்வதுண்டு. சொல்லப்போனால், அவள் ஓரளவுக்குப் பல்லவியிடமிருந்து விலகி இருக்க முயற்சிப்பது போலத்தானே தோன்றும்? நாம் கூட, பல்லவி, அவள் தந்தையை நினைவூட்டுவதால் தேவி தூர நிற்க முயற்சிக்கிறாள் என்று பேசியிருக்கிறோம்; நினைவிருக்கிறதா, சித்தீ?'' என்று கேட்டான் பிள்ளை.

சற்று யோசித்துவிட்டு, ''ஒரு வேறுபாடு எனக்கும் தோன்றியது ரகும்மா! ஆனால், உன்னளவு யோசியாமல் விட்டுவிட்டேன்... நான் வேறு... ஒன்று தெரியுமா? சில நாட்களாகவே; தேவி இரவில் சரியாகத் தூங்கக் காணோம். முன்பு... முதலில் இருந்தாளே, அந்த அளவு இல்லையென்றாலும், உள்ளூர ஓர் அலைபாய்தல், இருக்கத்தான் செய்கிறது. நேற்றிரவு 'சிட் அவுட்'டில் இரவு பன்னிரண்டு மணிவரை உட்கார்ந்திருந்தாள். ''என்னடாம்மா, தூங்கவில்லையா என்று கேட்டதற்கு அவள் என்ன சொன்னாள் தெரியுமா?'' என்று நிறுத்தினாள் சிறிய தாய்.

மனைவி கொண்டு வந்து கொடுத்த காஃபியை வாங்கிக் கொண்டு, ''என்ன சித்தி?'' என்று சிறு பரபரப்புடன் விசாரித்தான் மகன்.

''நாம் முன்பு நினைத்தது போல வேறு மனைவி, பிள்ளைகளோடு வந்திருக்கிறாரா என்று விசாரித்தீர்களா, சித்தி? என்று கேட்கிறாள்! யாரை என்று தெரிகிறதில்லையா? எனக்கு ஒரே அதிர்ச்சியாகி விட்டது. வேண்டுமென்றே புரியாத மாதிரி, யாரைச் சொல்கிறாய், கண்ணம்மா'' என்றேனா, சுதாரித்துக் கொண்டு, பேச்சை மாற்றி விட்டாள்!

''நீ வந்ததும் சொல்ல வேண்டும் என்று இருந்தேன். இப்படியே போனால் நல்லதில்லை அல்லவா? ஏதாவது விரைவாகச் செய்தாகவேண்டும்! அகல்யா, உன் அண்ணன் ஒன்றும் பின்வாங்கிவிட மாட்டேனம்மா?'' என்று, திலீபனுடைய தங்கையான மருமகளை விசாரித்தாள்.

''நிச்சயமாக மாட்டான், சின்னத்தை! தேவி அண்ணி இந்தக் குடும்பத்தில் அத்தனை பேருக்கும் எவ்வளவு முக்கியம் என்று உங்கள் பிள்ளையும் நானும் 'ஸீன்' போட்டு போட்டு விளக்காததுதான் குறை என்பது போலத் திரும்பத் திரும்ப விவரித்திருக்கிறோம். அதனால் திலீப் நிச்சயமாக உங்கள் விருப்பத்துக்கு மாறாக நடக்கவே மாட்டான்!'' என்று அகல்யா உறுதி கூறினாள்.

''திலீபனை அவன் இவன் என்கிறாயே! நாளைக்கு அவனுக்கு மணமாகி, உன் அண்ணிக்காரி வந்ததும் தலையில் இடிக்கப் போகிறாள், பார்!'' என்று சுசீலா விளையாட்டாக மிரட்ட, ''அதெல்லாம் நடக்காது! எனக்கு வரப்போகிற அண்ணி சாது என்று எனக்குத்

தெரியும்!'' என்று காதுத் தொங்கட்டான்கள் ஆடத் தலையசைத்துச் சிரித்தாள் மருமகள்.

''ஆனால் எப்படியும், இன்னும் கொஞ்சம் சோதித்துப் பார்க்க வேண்டும், ரகு. இன்னொரு ஏமாற்றம் நேர்ந்தால், பிறகு, தேவியை உயிரோடு பார்க்க முடியாது!'' என்றாள் சுசீலா.

'ஆமாம்... என்ன செய்யலாம்...?'

யோசித்துக் கொண்டிருந்தபோதே, திடுமென நினைவு வந்தவனாக, ரகுநந்தன், ''ஏய், ஐந்தாம் படை! நீ போய் எங்காவது வாயை விட்டு விடாதே!'' என்றான் மனைவியைப் பார்த்து.

''ம்ம்? என்னையா ஐந்தாம் படை என்கிறீர்கள்? இதோ பார்த்தீர்களா, இந்த டிராப்ஸ்?'' என்று காதுத் தொங்கட்டான்களைத் தொட்டுக் காட்டினாள், அகல்யா. ''இது எனக்கு தேவி அண்ணி கொடுத்தது. அப்படியிருக்க, நான் போய்ச் சொல்லுவேனா?'' என்று தாங்கலாகக் கேட்டாள்.

''அதனால்தானடி கேட்டேன். பாசமிகுதியில், நல்லது என்று நினைத்து, ஏதாவது குளறுபடி பண்ணிவிடக் கூடாதே என்றுதான் எச்சரிக்கிறேன்'' என்றான் கணவன்.

''நான் ஒன்றும் அவ்வளவு மக்கு அல்ல என்று உங்கள் 'ரகு'ம்மாவுக்கு சொல்லுங்கள், சின்னத்தை!''

''தேவி அண்ணியின் நலனுக்காக நீங்கள் செய்கிற எதுவும், ஒரு வார்த்தைக் கூட என் மூலம் வெளியே

போகாது!'' என்று வாக்குக் கொடுத்தாள், திலீபனுடைய தங்கை.

சில நாட்கள் சென்றபின், இன்னொரு செக் வாங்க, புவனமோகனன், 'பல்லவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' அலுவலகத்துக்குச் செல்ல நேர்ந்தது. மாலையில்தான் 'செக்' தயார் ஆகும் என்றதும், வேலை முடிந்து வீடு செல்லும் போது 'செக்' வாங்க வருவதாகப் புவனன் கூறியிருந்தான். முதலில் இருந்தே - ரகு 'செக்' விஷயங்கள் கவனித்துக் கொண்டிருந்தபோதிருந்தே அதுதான் புவனனின் வழக்கம்.

அன்று 'செக்'கை வாங்கிக் கொண்டு அவன் வெளியே வந்தபோது கவலையுடன் சுசீலா அங்கே கையைப் பிசைந்து கொண்டு நிற்கக் கண்டான்.

என்னவென்று அவன் விசாரிக்கவும், அவள் விவரம் சொன்னாள்.

அன்று, திலீபனும், தேவியும் சினிமாவுக்குப் போகப் போகிறார்கள்! அந்தக் காலத்து அருமையான காதல் படம் 'கம் செப்டம்பர்!' இங்கானால் டிரைவர் இன்று பார்த்து காரை 'சர்வீசு'க்குக் கொடுத்து வைத்திருக்கிறான். சின்னச் சின்ன 'டச்சப்' எல்லாம் முடித்து கார் வரத் தாமதம் ஆகுமாம்.

''அதற்கென்ன? மிஸ்டர் திலீபன் அவரது காரில் தானே வருவார்?'' என்று வினவினான் புவனன்.

''அதுதானே பிரச்சினையே!'' என்றாள் சுசீலா சோகமாக. ''அடுத்த தெருவில்தான் சம்பந்தியின் அலு

வலகம். காரை அப்பாவுக்கு விட்டுவிட்டு, இங்கே நடந்து வந்து விடுங்கள்; நம் காரில் போய்விடலாம் என்று ஜம்பமாகச் சொல்லி விட்டேன். இங்கே கார் இல்லை.. டாக்சி வரச் சொன்னால், அது...கொஞ்சம் நன்றாயிராதா என்று இருக்கிறது!''

''எந்தக் காட்சி?''

''மாலைக்காட்சி! இன்னும் பத்து நிமிடங்களில் கிளம்பியாக வேண்டும்!''

''சரி.. நான் கொண்டு விட்டுவிட்டுப் போகிறேன். ஆனால் வீடு திரும்புவதற்கு?''

''அதற்குள் இங்குள்ள கார் வந்துவிடும்.''

''வராவிட்டால் எனக்கு ஃபோன் பண்ணுங்கள். வருகிறேன்!'' என்றான் புவனன், உணர்ச்சியற்ற குரலில்.

''இல்லையில்லை.. அதற்கு அவசியப்படாது! நீங்கள் தியேட்டருக்குக் கூட்டிப் போய்விட்டால் அதுவே பேருதவி! ரொம்பவும் நன்றி, மிஸ்டர் புவன மோகனன்!'' என்று மலர்ந்து விட்ட முகத்துடன் நன்றியுரைத்தாள் சுசீலா.

பார்வையாளர் அறைக்கு அவனை அழைத்துச் சென்று, உட்கார வைத்து உபசரித்தாள். ''இதோ, இருவரும் வந்துவிடுவார்கள். நீங்கள் ஏதாவது பழச் சாறு குடிக்கிறீர்களா?''

''இல்லை! ஒன்றும் வேண்டாம்'' என்று மறுத்து விட்டு, அசையாத சிலை என அமர்ந்திருந்தான் அவன்.

நேரம் தவறாமல் திலீபன் வந்துவிட, தேவியும் சற்றே முகத்தைச் சீர் செய்து கொண்டு வந்து சேர்ந்தாள்.

இருவரையும், தியேட்டரில் விட்டுவிட்டுப் புவன மோகனன், மீண்டும் சுசீலாவிடம் ஓடி வந்தான்.

''நீங்கள் தேவியிடம் கேட்டீர்களா? அந்த... வந்து, மிஸ்டர் திலீபனை அவளுக்குப் பிடித்திருக்கிறதாமா?'' என்று விசாரித்தான்.

''எப்போதுமே திலீபனிடம் தேவி பிரியமாகத்தான் பழகுவாள்!''

பொறுமையிழந்த மூச்சுடன், ''அதல்ல... அதல்ல நான் கேட்பது! இந்த மாதிரி என்று சொல்லிக் கேட்டீர்களா?'' என்று எரிச்சலும் கவலையுமாகப் பரபரத்தான் அவன்.

''ம்! கேட்டேனே!'' என்ற சுசீலா, பதிலை அத்தோடு நிறுத்திக் கொண்டாள்.

''தே... தேவி என்ன சொன்னாள்?'' என்று மீண்டும் விடாமல் கேட்டான் புவனன்.

''அதுவா?'' என்று புன்னகை செய்தாள் சுசீலா. ''உங்கள் விருப்பம் போல நடக்கிறேன், சித்தி'' என்றாள் என்று பெருமையோடு உரைத்தாள்.

முகம் கல்லாய் இறுக, ''ரொம்ப நல்ல கருத்து! முன்பே, இப்படி நடந்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்!'' என்று வறண்ட குரலில் உரைத்து விட்டு வெளியேறினான் புவனமோகனன்.

ஆனால் உள்ளூர அவனுக்கு ஒரே குடைச்சல்.

எப்போதும் வீடு திரும்பியதும், வசுதாவுடைய குழந்தையான தன் மருமகனிடம் சென்று, சொடக்குப் போட்டு விளையாட்டுக் காட்டி விட்டுத்தான், தண்ணீர் கூடக் குடிப்பான்! அன்று யோசித்தபடியே, அவனது அறைக்குள் போய் உட்கார்ந்தான்.

தேவியும் திலீபனும் அவனது காரின் பின்சீட்டில் அமர்ந்திருந்த விதம் - அன்னியர்கள் போல இரு ஓரங்களிலுமாக அவர்கள் உட்கார்ந்திருந்தது அவனை, மனம் குழம்ப வைத்தது.

ஏன்?

ஒருவேளை, சட்டரீதியான விடுதலைக்காகக் காத் திருக்கிறார்களோ? அல்லது, அவன் காரில் ஏறியதால், ஒரு மாதிரி உணர்ந்து அப்படி உட்கார்ந்தார்களோ? அப்படி உணர்கிறவர்கள், அவனது காரில் ஏறாமலே விட்டிருக்கலாமே!

மனதுள் ஏதோ நெருஞ்சியாய் நெருடத் தொடங்கி விட திலீபனையும், தேவியையும் முடிந்த அளவு கண்காணிப்பது என்று புவனமோகனன் முடிவெடுத் தான்.

அந்தக் கண்காணிப்புக்கு, அவனுக்கு வெகு விரை விலேயே பலன் கிடைத்தது.

மழைநாளான அன்று, ஒரு பெண்ணைத் தோளாடு அணைத்துச் சிரித்துப் பேசியவாறு, ஒரே குடையின்கீழ் திலீபன் நடந்து சென்று கொண்டிருந்ததைப் புவனமோக னன் நேரில் காண நேர்ந்தது.

## 20

'ஸ்பென்சர்' அருகே, சிவப்பு விளக்கு மாறுவதற் காகப் புவனன் காரில் அமர்ந்திருக்க, அந்தப் பெண் ணோடு சாலையைக் குறுக்கே கடந்து கொண்டிருந்தான் திலீபன்.

காரைவிட்டு இறங்கிச் சென்று, கையும் களவுமாகத் திலீபனைப் பிடிக்கலாம். இவன் கார், போக்குவரத்து நெரிசலுக்குக் காரணமாகி விடும். அப்படியே பிடித்தா லும், பொது இடத்தில், ஓர் அருவெருப்பான ரகளை - தவிர வேறு என்ன லாபம்!

அதைவிட, இதைச் சொல்லவேண்டிய இடத்தில் சொல்வது மேல் என்று முடிவு செய்து, அதற்குள் பச்சை விளக்கு ஒளிரத் தொடங்கவும் காரைக் கிளப்பினான புவனமோகனன்.

ரகுநந்தனோடு, நல்லவிதமாக, நட்போடு பழகிய போதும், தேவி பற்றி அவன் புவனனிடமோ, புவனன் ரகுவிடமோ எதுவும் பேசியதில்லை. மேலும், புவனன் குற்றம் சாட்டப்போவது ரகுவுடைய சொந்த மைத்து னனை! தேவியிடம் அவனுக்குப் பாசம் உண்டு என்றா லும், இந்தப் பக்கம் மைத்துனன் ஆயிற்றே!

எனவே, புவனன், மீண்டும் சுசீலாவிடம் போய் நின்றான். ஆனால், அவளும் இதை ஒருபொருட்டாக மதிக்கவே இல்லை

''திலீபனைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்! நல்ல பிள்ளை! அவன் வெளிநாடு சென்று படித்தவன். அங்கெல்லாம் ஆண்பெண் வேறுபாடில்லாமல் தான் பழகுவது. மழையில் நனையாமல் ஒரு பெண்ணைத் தன் குடையில் அழைத்துச் சென்றதை கட்டுப்பெட்டித்தனமாகத் தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது, புவனன்!'' என்றாள் அவள் நிதானமாக.

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு, ''பாருங்கள், மேடம். நானும் பம்பாய்க்காரன் தான். அங்கும் பால் வேறுபாடு இல்லாமல் பழகுவதுதான். ஒரே குடையில் சென்றதை நான் தப்பாகச் சொல்லவில்லை. தோளோடு அணைத்துக் கொண்டு தெரு வீதி உலாப் போனதுதான் கண்ணையும் மனதையும் உறுத்தியது!'' என்றான் புவனன்.

''அதுவும், உறுத்தத் தேவை இல்லை! இருப்பது ஒரு குடை... இதில் கண்ணியம் காத்து, விலகி நடந்து போவதைவிடக் குடையை மடக்கி வைத்துவிட்டு, இருவருமே மழையில் நனைந்துக் கொண்டு போய் விடலாம்! முடிந்த அளவு நெருங்கி நடந்தால்தானே, நனையாமல் போக முடியும்? அதற்காகத் தோளைப் பிடித்திருப்பான்! இதையெல்லாம் தப்பாக நினைக்கிறீர்களே, தம்பி!'' என்று சுசீலா சிரிக்கவும், புவனனுக்கு ஆத்திரம் வந்தது.

ஆனால், செல்லாத ஆத்திரம்! தம்பியா! மரியாதை வளர்கிறது! திரும்பத் திரும்ப இந்த அம்மாவிடம் வந்து நிற்பதால் அல்லவா, அவனுக்கு புத்திகொல்லும் இந்த இளக்காரம் வந்தது!

இந்தத் திலீபனுக்கு ஓர் ஒற்றன் ஏற்பாடு செய்ய லாமா என்று, புவனமோகனன் யோசிக்கையிலேயே, திலீபனும் அந்தப் பெண்ணும், இன்னொரு வாரம் அவனுக்குக் காட்சி தந்தார்கள்.

இப்போது, ஒரு நகைக்கடையிலிருந்து வெளியே வந்தார்கள்.

எப்போதுமே, அந்த நகைக்கடைக்குச் சற்றுத்தள்ளி காரை நிறுத்தி விட்டு, பக்கவாட்டுத் தெருவில் இருந்த ஒரு ஃபாஸ்ட் ஃபுட் மினி ஓட்டலில், மாலைச் சிற்றுண்டி காஃபியை முடித்துக் கொள்வது புவனமோகனனின் வழக்கம். பிறகு மீண்டும் ஓர் சுற்று வேலை செய்வான். குறிப்பிட்ட அளவு வேலை முடிந்து விட்டால், வீடு திரும்புவதும் உண்டு.

அன்றும், மாலைச் சிற்றுண்டி முடிந்து அவன் திரும்பி வரும்போது, திலீபனும் அந்தப் பெண்ணும் சிரித்தபடியே நகைக்கடையிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தார்கள். உரசியபடியே இருவரும் நடந்து வந்த தினுசிலேயே, இது சாதாரண நட்புக்கும் அதிகப்ப டியானது என்பது தெள்ளெனத் தெரிந்தது.

இருவருமாக, ஒரே காரில் ஏறிக்கொண்டு செல்வ தைப் பார்த்து விட்டு வந்த புவனன் தன் காரில் ஏறி அமர்ந்தான்.

இன்றையக் கண்டுபிடிப்பைச் சுசீலாவிடம் கொண்டு செல்ல புவனனுக்கு விருப்பம் இல்லை. அதில் எந்தப் பயனும் இல்லை!

புவனமோகனனால் சுசீலாவைப் புரிந்துகொள்ள முடிந்தது. தேவியிடம் அந்த அம்மாவுக்கு மிகவும் அன்பு இருந்தது. தேவிக்கு ஒரு நல்ல வாழ்வை அமைத்துக் கொடுக்கும் ஆர்வமும், அதில் இப்போது அவசரமும் இருந்தது.

தேவிக்கு இனி நஷ்டமே இருக்கக் கூடாது என்று விரும்பிய புவனமோகனன் போல அல்லாமல், லாப நஷ்டங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, சிறு நஷ்டங்கள் இருந்தாலும் இதில் லாபம் அதிகம்; எனவே உகந்தது என்று முடிவு செய்திருக்கிறார்.

திலீபன் இளைஞன்; பார்வைக்கு நன்றாக இருந்தான்; நல்ல வளமான குடும்பத்துப் பிள்ளை; வெளிநாடு சென்று வந்ததால் குறுகிய சமூகக் கண்ணோட்டம் இல்லாதவன்; எனவே வருங்கால மனைவிக்கு, தான் இரண்டாவது கணவன் என்பதைப் பொருட்படுத்த மாட்டான்; அதைவிடவும், ரகுநந்தனுடைய மைத்துனன் என்பதால் தேவியை நல்லபடியாகவே நடத்துவான்!

இத்தனை லாபங்கள் இருக்கும்போது, வேறு சிறு சிறு கெட்ட பழக்கங்கள் இருந்தால் அதைப் பெரிதாக எண்ணி, இந்தத் திலீபனைக் கைகழுவ விட்டுவிட, சுசீலா தயாரில்லை! இன்னொரு பெண்ணின் பழக்கத்தையும், இந்தச் சிறு நஷ்டங்களுக்குள் ஒன்றாகத் தான் தேவியுடைய சிற்றன்னை கருதுகிறாள்!

ஆனால், புவனனால் அப்படி எண்ண முடியவில்லை! தன் கணவன் வாழ்வில், இன்னொரு பெண் இருப்பது தெரிந்தால் தேவிக்கு எப்படி இருக்கும்? ஏற்கெனவே, அவள் அனுபவித்திருப்பது போதாதா?

தேவியிடமே விஷயத்தைச் சொல்லி, 'உனக்கு ஏற்ற உத்தமன் வருவான்; பொறுத்திரு; இவன் வேண் டாம்' என்று கூறலாமா என்று தோன்றவும், புவனன் காரைக் கிளப்பினான்.

தேவி இப்போது இருக்கக் கூடிய இடம், புவனன் அறிந்ததே. அலுவலக வேலை முடிந்ததும், நேரே மோனியின் வீட்டுக்குச் சென்று, மகளை அழைத்துக் கொண்டு, அருகில் இருந்த பூங்காவுக்குச் செல்வாள். அங்கே ஊஞ்சலிலும், சறுக்கு மரத்திலும் மெரிகோ ரவுண்டிலும் மகள் ஆடுவதைக் கண்ணில் ஏக்கமும் உதடுகளில் புன்னகையுமாகப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். இடையிடையே ஓடிவந்து சளசளக் கும் மகளுக்குப் பதில் சொல்வாள். மகள் கையைப் பற்றியபடிச் சற்று நேரம் நடப்பாள்.

இதையெல்லாம், நிராசையும், ஏக்கமும் கலந்த முறுவலோடு, மறைந்தாற்போல நின்று பார்ப்பது புவன னின் வழக்கம். காரில் வந்தால், தேவி கண்டு கொள் வாளோ என்று, காரை விட்டு விட்டு, ஆட்டோவில் வந்து, பார்த்துவிட்டுப் போவான். தினமும் என்று இல்லாவிட்டாலும், இப்படி அவன் வந்து நிற்கும் நாட்கள் அதிகரித்துக் கொண்டே போயின!

பூங்காவுக்கு வெளியே காரை நிறுத்திவிட்டு, வழக்கமான இடத்திற்குப் போய் எட்டிப் பார்த்தான். மகளை மடி மீது வைத்து, அணைத்தபடி அமர்ந்திருந் தாள் தேவி.

இந்தக் குழந்தைதான் எல்லாமே என்பது போல ஒரு தோற்றம்!

இவளுக்கு, இன்னொரு துன்பத்தைக் கொடுப் பதா? ஏற்கனவே, ஒருவன் பணத்துக்காக அவளை மணந்தான் என்கிற அவமானம் இன்னமும் உள்ளே எரிந்து கொண்டு இருக்கும். இப்போது அடுத்தவனும், இன்னொரு பெண்ணுடன் தொடர்பு கொண்டிருக்கிறான் என்றால் எப்படி இருக்கும்?

இவள் வரை போகாமல் இதைத் தீர்த்து விடவேண் டும் என்று தோன்றிவிடக் காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

இரண்டு நாட்கள், திலீபனின் பின்னோடு அலைந்து, அவனோடு சுற்றிய பெண்ணைத் தனியே பிடித்தான். ''அதோ, அந்த ஓட்டல் காஃபி ஷாப்பில் அமர்ந்து கொஞ்சம் பேசலாமா? நம் பேச்சு உனக்குப் பெரும் லாபம் தருவதாக அமையக்கூடும்!'' என்று அழைத்தான்.

அவளும் மறுக்கவில்லை.

''பாரம்மா! சற்றுமுன் வரை உன்னோடு சுற்றிக் கொண்டு இருந்து விட்டுப் போனானே, அந்த திலீபனுக் கும் உனக்கும் என்ன தொடர்பு?'' என்று கேட்டான்.

''பார்த்தாலே தெரியவில்லையா?'' என்று கிளுக் கிச் சிரித்தாள் அவள்.

''தெரிகிறது! ஆனாலும் புரியவில்லை! விரைவி லேயே அவனுக்கும் இன்னொரு பெண்ணுக்கும் திரும ணம் நடக்கப் போகிறது! இப்போது சொல்! உங்கள் உறவுக்கு என்ன பெயர் வைப்பது?''

''அது...'' என்று சொல்லத் தொடங்கியவள் நிறுத்தி, யோசித்தாள். பிறகு, ''நீங்கள் யார் அதைக் கேட்க?'' என்றாள்.

''நானா? அவன் மணக்கப் போகிற பெண்ணுக்காக உயிரையும் கொடுக்கத் தயாராக இருப்பவன். அதே போல, அவளுக்கு யாராவது தீமை செய்தால், அவர்கள் உயிரை எடுக்கவும் தயங்க மாட்டேன்!'' என்றான் புவனன்.

விழிகளில் லேசாக அச்சம் படர, ''என்ன சார், தனியே கூப்பிட்டு மிரட்டுகிறீர்களா?'' என்றாள் அவள்.

''தனியே என்ன அம்மா? சுற்றிலும் இத்தனை பேர் இருந்து சாப்பிடுவது தெரியவில்லை? ஆனால், என் பேச்சை எடுத்துக் கொண்டால், அதில் ஒரு வார்த்தை கூடப் பொய் அல்ல! தேவிக்குத் துன்பம் விளைவிக்கிறவர்கள், எனக்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும்!''

''இப்போது நான் என்ன செய்யவேண்டும் என்கிறீர்கள்?!''

''அப்படிக் கேள், சொல்லுகிறேன். திலீபனின் தொடர்பை அடியோடு விட்டுவிட்டு தேவியின் வாழ்வில் குறுக்கிடாமல் இருப்பதற்காக நான் உனக்கு நிறைய பணம் தருகிறேன்!''

''அப்படி எவ்வளவு பணம் தருவீர்கள்?''

''பத்து லட்சம்?''

உதட்டைப் பிதுக்கினாள் அவள். ''பத்து லட்சம ரூபாயை வைத்து, நகர எல்லைக்குள் ஒரு மனையளவு நிலம்கூட வாங்க முடியாது, சார்!''

''இருபது? பார், முப்பது லட்சம் தருகிறேன்! திலீபனை விட்டு விலகிக்கொள். ஆனால் ஒன்று! பணத்தையும் வாங்கிக் கொண்டு, என்னை ஏமாற்ற நினைத்தால், உன்னைக் கொலை செய்யக் கூட நான் தயங்க மாட்டேன்!'' என்றான் புவனமோகனன் மிரட்டலாக.

வியப்பினால் கண்ணகல அவனை நோக்கிவிட்டு, ''எனக்கு எதுவுமே ஒரு பைசாகூட வேண்டாம் சார்!'' என்றாள் அவள்.

''என்ன சொல்கிறாய்? எப்படியும் தேவியின் வாழ்வில் நீ குறுக்கிட... நான் அனுமதிக்க மாட்டேன்! அதனால்....''

குறுக்கிட்டு, ''அய்யோ, சார்! உங்கள் தேவியின் வாழ்வில் நான் சத்தியமாகக் குறுக்கிட மாட்டேன் சார். ஆனால்; அதற்காக, நீங்கள் எனக்குப் பணம் எதுவும் தர வேண்டாம். அந்தப் பெண் மீது நீங்கள் வைத்திருக்கும் அன்பைப் பார்க்கும்போது எனக்குப் புல்லரிக்கிறது, சார்! அதனால் அவர்கள் வாழ்வில் இருந்து விலகுவதற்காக எனக்கு நீங்கள் பணமேதும் தரவேண்டாம், சார்!'' என்றாள் அவள்.

நம்பமாட்டாமல், ''மெய்யாகத்தான் சொல்கிறாயா?'' என்று புவனன் வினவினான்.

''என்ன சார், நீங்கள்? சத்தியமாக என்ற பிறகும நம்ப மாட்டேன் என்கிறீர்களே! சார், என் பெயர் அபிராமி! இந்த அபிராமியாகிய என் பேரில் ஆணை யிட்டுச் சொல்கிறேன்; அந்த தேவிக்கா வாழ்வில் என்னால் எந்தவிதப் பாதிப்பும் நேர நான் விடமாட் டேன், இது சத்தியம்! சத்தியம்! சத்தியம்!!! போதுமா சார்?'' என்றாள் அவள்.

அவளது பேச்சு, பாவனைகளில் எதுவோ புவன மோகனனைக் குழப்பியது, ஆனால், இவ்வளவு ஆவே சமாய் ஆணையிடுகிறவளை எப்படி நம்பாமல் இருப் பது?

''போதும் அம்மா!'' என்றான் அவன்.

''ஆனால், பணம் ஏதும் தேவைப்பட்டாலும் வாங்கிக் கொள்! பெரிதாக வசனம் பேசிவிட்டோமே என்று கூச்சப்பட வேண்டாம்!'' என்றான் தொடர்ந்து.

''இல்லை சார். வேண்டாம், சார்! வந்து... உங்களி டம் ஒரு பைசா கூட வேண்டாம் என்றேனில்லையா? இந்தக் காஃபியில் என் பங்குக்கு உரிய பணத்தைத் தந்து விடட்டுமா, சார்?'' என்று அவள் விழிவிரித்துத் தலையசைத்துக் கேட்கவும் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

''வேண்டாம் வேண்டாம்!'' என்று சிரித்தபடியே பில்லுக்குப் பணம் எடுத்து வைத்தவன், சட்டென நிமிர்ந்து, ''ஆமாம் 'தேவிக்கா' என்றாயே! அவள் உன்னைவிடப் பெரியவள் என்று உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டான்.

''அது... வந்து... என்னது? நான் தேவிக்கா என்றா சொன்னேன்? ஆ...மாமில்லை? அது... தானாக ஓர் ஊகத்தில் வாயில் வந்திருக்கும் என்று தோன்றுகிறது சார்!''

''என்ன ஊகம்?'' என்றான் அவன் இமையிடுங்க.

''அதுதான் சார்! நீங்கள் தப்பாக எடுத்துக் கொள் ளக்கூடாது...'' என்று இழுத்தாள் அபிராமி.

''இல்லை! சொல்லு!''

''வந்து... அந்தத் தேவிக்காக நீங்கள் இவ்வளவு வக்காலத்து வாங்குகிறீர்கள். அவர்கள் நிம்மதிக்காக லட்சக்கணக்கில் பணம் கொடுக்க முன் வருகிறீர்கள்? அப்படி என்றால், உங்களுக்கும் அவர்களுக்கும் இடையே ஏதோ... ஏதோ... இருந்து... அப்புறம் அது முறிந்து போயிருக்க வேண்டும். அப்புறம், மனம் மாறியோ, தேறியோ, அந்தத் தேவி இன்னொருவரை மணக்க முன் வந்திருக்கிறார்கள்! எப்படியும் இதெல் லாம் நடக்க ஒரு சில - ஒரு நாலைந்து ஆண்டுகளாவது ஆகியிருக்க வேண்டும் அல்லவா? நான் இப்போது தானே சார் பி.எஸ்சி. முடித்தேன்! அதனால்தான், உங்கள் தேவிக்கு ஓர் 'அக்கா' அடைமொழி கொடுத்து விட்டேன்! தப்பா சார்! ஒருவேளை, அக்கா என்றால் வயதான மாதிரி தெரிகிறது என்று உங்கள் தேவிக்குப் பிடிக்காதா, சார்?'' என்று மீண்டும் அப்பாவியாய் விழிகளை விரித்தாள் அபிராமி.

''தப்பும் இல்லை! தேவி இதுபோன்ற விஷயங்க ளைப் பொருட்படுத்துகிறவளும் இல்லை!'' என்று,

தட்டில் திரும்பி வந்த பில்லையும் மீதிப் பணத்தையும் எடுத்துக் கொண்டு, வெயிட்டருக்கு 'டிப்ஸ்' வைத்து விட்டுப் புவனமோகனன் எழுந்தான்.

''செய்த சத்தியத்தை மறக்கமாட்டாய் என்று நம்புகிறேன். நீ எங்கே போகவேண்டும், சொல்லு. கூட்டிப் போய் விட்டுவிட்டுப் போகிறேன்!'' என்றான் புவனன்.

''அய்யோ! வேண்டாம், சாமி! ஆளை விடுங்கள்! அப்புறம், உங்கள் மேல் அக்கறை உள்ள யாராவது, அவரோடு காரில் எப்படியடி போகலாம், என்று என் சிண்டைப் பிடித்து உலுக்குவார்கள். எதற்கு வம்பு? நான் தனியாகவே போய்க் கொள்ளுகிறேன், சார்!'' என்று அவள் பாவனையோடு சொல்லத் தன்னை மீறி முறுவலித்து விட்டு அவன் கிளம்பினான்.

தேவிக்காகப் பெரிய காரியம் சாதித்திருக்கிறான்! ஆனாலும், உள்ளூரச் சோர்வுதான் அதிகமாயிற்றே தவிர, புவனனுக்கு நிம்மதி சற்றும் கிட்டவில்லை. எப்படியோ, தேவி வாழ்வில் இனிப் பிரச்சினை இராது! அந்த அளவில் திருப்தி அடைய வேண்டும் என்று உள்ளூர உருப்போட்டு, கொஞ்சம் அமைதியை வரவழைத்துக் கொள்ள முயன்றான் அவன். ஆனால், காதலிக்காகத் தியாகம் செய்வதே சந்தோஷம்தான் என்பதெல்லாம் எவ்வளவு பெரிய பொய் என்பதைத்தான் அவன் அறிந்து கொள்ள நேர்ந்தது! ஆனால், தேவிக்காக அந்த வேதனையைத் தாங்கிக் கொண்டான் அவன்.

அடுத்த இரு வாரங்கள் இப்படியே ஒருவிதமான மந்தகதியில் கழிந்தன.

வீட்டில், வசுதாவின் பிள்ளை முகம் பார்த்துச் சிரிக்கத் தொடங்கியது, தாய்மாமனின் முகத்தில் சற்று மலர்ச்சியை உண்டுபண்ணியது.

மூன்றாம் மாதம் மகளையும் பேரனையும் அவளது புகுந்த வீட்டில் கொண்டு விடவேண்டும் என்று சொல்லி, முறைப்படி மகளோடு அனுப்ப வேண்டிய பொருட்களை, வாசுகி வாங்கிச் சேர்க்கத் தொடங்கினாள்.

அவள் வாங்கிக் குவித்த வேகத்தைப் பார்த்து, ''ஏய், நம் வீட்டிலும் கொஞ்சம் வாங்க வேண்டும் என்று ஆசையாய் இருக்கிறோமடி! உன் அம்மாவைக் கொஞ்சம் அளவோடுதானே வாங்கச் சொல்லு!'' என்றான் வீட்டு மருமகன்.

வசுதா அதைப் பெருமையாய்ச் சொல்ல, எல்லோருக்கும் சிரிப்பு வந்தது. கூடவே குழந்தையை விரைவிலேயே பிரியவேண்டும் என்று வருத்தமாகவும் இருந்தது.

''வீடு வெறிச்சோடிப் போய்விடும். இங்கே இருக்க வேண்டியவர்கள் இருந்தால், அப்படி இல்லாமல், ஒருமாதிரி ஓரளவு சமாளிக்கும்! ஆனால் நமக்குக் கொடுப்பினை இல்லையே!'' என்று குறையோடு புலம்பினாள் வாசுகி.

புவனமோகனன் காதே கேளாதவன் போலக் கையில் எடுத்திருந்த பத்திரிகையில் ஆழ்ந்தான்.

கண்கலங்கிய தாயாரை, வசுதா, ஆதரவாகக் கூட்டிக் கொண்டு உள்ளே சென்றாள்.

அன்று, புதன்கிழமை! காலையில் வழக்கமான 'ஜாகிங்' போகாமல் ஓய்ந்து கிடந்த அண்ணனை வசுதா எழுப்பி விட்டாள். ''என்னண்ணா காலையில் சோம்பல்? வழக்கமான நல்ல பழக்கங்கள் எல்லாவற்றையும் விட்டுவிடுவீர்கள் போலத் தெரிகிறதே! நானானால், 'என் அண்ணனைப் பார்த்துப் படியுங்கள்! எப்படி உடம்பைக் கச்சிதமாய் வைத்திருக்கிறார் பாருங்கள் என்று விரட்டிக் கொண்டிருக்கிறேன்! அவர் முன்னால் என்னைக் கேவலப்படுத்தி விடாதீர்கள்! கிளம்புங்கள்!'' என்று விரட்டினாள்.

தங்கை சொல்வது சரிதான் என்று புவனனுக்கும் தோன்றியது. இப்படிச் சோர்ந்து கிடப்பதால் பார்வைக்குச் சொங்கிபோலத் தோற்றம் அளிப்பது தவிர வேறு என்ன லாபம்?

'சும்மா இருப்பவனின் மனம் சாத்தானின் உலைக்களம்! இன்னும் கண்டதையும் எண்ணி மனது ரத்தக்களறி ஆகிறது, அவ்வளவே!'

தனித்து இருப்பதை விடுத்து, வெளியே சென்று, நாலு இடத்தை, நாலு பேரைப் பார்க்கும்போது மனதும் பார்ப்பதைப் பற்றி நினைக்கத் தொடங்கி விடுகிறது. அதோ எஜமானனை ஆளுக்கொரு பக்கம் இழுக்கும் இரண்டு நாய்கள், முகத்தை வெட்டுகிற அந்தப் பெண், பதனீர் என்று சர்க்கரைத் தண்ணீரை விற்கும் கிழவன், அந்த பைக்கில் முன்னிருப்பவனின் இடையை இறுகக் கட்டிக் கொண்டு பார்ப்போருக்கெல்லாம் தங்கள் காதலைப் பறைசாற்றும் அந்த ஜோடி!

புவனன் திகைப்புற்ற அந்த நாற்சந்தியின் வடதிசைச் சாலையில் நிற்க, கிழக்குப் பக்கமிருந்து வேகமாக வந்து நேரே மேற்கு நோக்கிச் சென்ற பைக்கில், இருந்த ஜோடி திலீபனும், அந்தப்பெண் அபிராமியும்தான்!

## 21

அபிராமியையும், திலீபனையும் அப்படி ஓர் இறுக்கத்தில் அதை மற்றவர்கள் பார்ப்பார்களே என்ற எண்ணமே இல்லாமல், தங்களிலேயே மூழ்கி முகமெல்லாம் பூரிப்பாய்க் கண்டுவிட்ட புவனமோகனனுக்குச் சற்றுநேரம் ஒன்றுமே ஓடவில்லை!

என்ன தைரியம்!?!

பெரிதாகச் சத்தியம் செய்து கொடுத்தாளே! அந்தச் சத்தியத்தைக் காப்பாற்றுகிற அழகு இதுதானா?

இந்தத் திலீபன்தான் என்ன? நல்லவன் மாதிரி நடித்து, அங்கே தேவியை மணக்க ஏற்பாடு செய்து கொண்டு இங்கே இன்னொருத்தியோடு சல்லாபமா?

.. ... அது சல்லாபமேதான்! ஒரு பெண் இறுக அணைத்திருப்பதை ஆனந்தமாய் அனுபவித்துக் கொண்டு செல்வது அவன் முகத்தில் நன்றாய்த் தெரிந்ததே!

பின்னே, இவளையே மணந்து கொள்வதுதானே? தேவி எதற்கு? அவளது திரண்ட சொத்துக்காகவா?

அவனே வசதி உள்ளவன் என்கையில் சொத்துக்காக ஒருத்தியை மணக்க வேண்டிய தேவை என்ன?

பணவெறியா? சொத்துக்காகத் தேவியையும் மணந்து, ஆசைக்காக இந்த அபிராமியையும் வைத்துக் கொள்ளத் திட்டமா?

இங்கே புவனமோகனன் ஒருவன் இருப்பதை மறந்து திட்டம் போட்டு விட்டான், பாவம்!

முதலில், தேவிக்கும் திலீபனுக்குமான திருமணப் பேச்சை முறிக்க வேண்டும். அதற்கு சுசீலாவை மட்டும் நம்பிப் பயன் இல்லை என்பது ஏற்கெனவே தெளிவான விஷயம். ரகுநந்தனிடம் சொல்ல வேண்டும். அவனும் வாளா இருந்தால் தேவியிடம் தெரிவிக்க வேண்டும்! அவளும் நம்ப மறுத்தால், திருமணத்தை எதிர்த்து வாதாட வேண்டியதுதான்!

தேவியுடைய பெரியப்பா நமச்சிவாயத்திடம் கூடப் போகலாம்.

வேகமாக வீட்டுக்குச் சென்று, செல்ஃபோனில் ரகுநந்தனோடு தொடர்பு கொள்ள முயன்றான். இது டெலிஃபோனில் பேசுகிற விஷயம் அல்ல என்றாலும் ரகுவுடன் சந்திப்பை உறுதி செய்து கொள்ள புவனன் முயன்றான்.

ஆனால் 'செல்' தொடர்பு கிடைக்கவில்லை! 'செல்' பாட்டரி தீர்ந்து போயிருக்கும்! அதைக்கூடப் பாராமல் 'செல்ஃபோன்' எதற்கு வைத்துக் கொண்டிருக்கிறான்!?

மடமடவென்று கிளம்பி அலுவலக 'சைட்'டுக்குச் சென்றான்.

அங்கும் அவனுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. ரகுநந்தனைக் காணவில்லை... இன்னமும் வரவில்லை. அவன் வருகைக்காகக் காத்திருக்க வேண்டியதுதான் என்று புவனன் நினைக்க, 'சைட்' மேஸ்திரி வேறு சொன்னான்.

''காலையிலே ரகு சார் வரலீங்களாமேய்யா. அப்பவே போனிலே கூப்பிட்டுச் சொன்னாங்கய்யா! என்னமோ இன்றைக்குக் காலைலே அவங்க வீட்டிலே கல்யாணமாமே!'' என்றான் அவன்.

ஏனோ பகீரென்றது புவனனுக்கு. வீட்டில் யாருக்குக் கல்யாணம்? ஒன்றும் அவனிடம் மூச்சு விடவில்லையே! வேண்டுமென்றே சொல்லவில்லையா?

''யாருக்கப்பா கல்யாணம்?'' குரலை இயல்பாக வைத்துக் கொள்ள புவனன் படாதபாடு படவேண்டியிருந்தது.

மேஸ்திரி மேலும் ஓர் இடியைத் தூக்கிப் போட்டான்.

''அவங்க தங்கச்சிக்குத்தான் சாரு. வடபழனியிலே கல்யாணம்!''

''எ.. எந்தத் தங்கை?''

''வேற யாரு சாரு! தேவியம்மாதான். அவங்க மட்டும்தானே தனியா இருக்கிறாங்க? என்னமோ அருமை தெரியாதவன்கிட்டே மாட்டி முதல் கல்யாணம் வீணாப்போச்சுதாம். படிச்சவங்க இல்லை! அதை ரத்து பண்ணிட்டு வேற கல்யாணம் பண்றாங்க. எங்களிலே

யும் அறுத்துக் கட்றது உண்டுங்க. இவங்களும்... என்னா சாரு...?''

''ஓ... ஒன்றும் இல்லை! திருமணம் எங்கே? வடபழனி கோயிலிலா?''

''கோயில்ல இல்லீங்க... பக்கத்திலே... கோயில் பின்னாடி ஏதோ மண்டபமாம்... என்ன... சாரு...'' மேலே அவன் காற்றோடுதான் பேசிக் கொண்டிருந்தான்.

வழக்கம்போல வடபழனி கோயிலுக்குச் செல்லும், நீண்ட ஆற்காடு சாலையில் போக்குவரத்து மிகுந்திருந் தது. இதில் மேலே ஊர்ந்து போவதை விடச் சுற்றுவழி யில் என்றாலும் வேகமாகச் செல்வது மேல் என்று, பக்கத்துக் கிளை வழியில் திரும்பி முடிந்த அளவு விரைவாகப் புவனமோகனன் வடபழனி கோயிலை அடைந்தான். அங்கேயும் ஒரே கூட்டம். காரை செலுத்த முடியாத அளவு நெரிசல்!

ஏன் இப்படி என்று எரிச்சல்பட்டவனுக்கு, ''ஜோடி ஜோடியாக வந்த மணமக்களையும், உற்றார் உறவினர் கூட்டத்தையும் காணவும், காரணம் விளங்கியது. அன்று ஒரு முகூர்த்த நாள்.

நெஞ்சுக்கூடே காலியாகி விட்டது போன்ற உணர்வு அவனுக்கு! இந்தக் கூட்டத்தினுள் காரில் செல்வதை விட நடந்து செல்வது சுலபம் என்று உணர்ந்து, காரை ஓரமாக நிறுத்திச் சாவியை மட்டும் எடுத்துக் கொண்டு விரைந்தான். கண்ணாடி ஏற்றிக்

கதவைப் பூட்டிப் பொன்னான நிமிடங்களை வீணாக்கி விடக் கூடாது!

கோவிலுக்குப் பின் பின்னாடி... ஏதோ மண்டபம்!

இப்புறமும் அப்புறமுமாய்ப் பார்வையைச் சுழல விட்டபடியே ஓட்டமும் நடையுமாக விரைந்தவன், தொலைவில், தேவி குடும்பத்தின் கார் ஒன்றைக் கண்டுபிடித்தான்.

அதைக் குறிவைத்து ஓடியபோது, அடுத்தடுத்து நின்ற கார்களைப் பார்த்ததும், அடுத்தடுத்து வாழை மரமும் தோரணங்களுமாக அலங்கரிக்கப்பட்டிருந்த மண்டபங்களில் முதலாவதில் வேகமாக உள்ளே சென்றான்.

பன்னீர் தெளித்த வரவேற்பாளர் கனிவோ, எதிர்ப்பட்ட மற்றவர்களிலோ தெரிந்த முகங்கள் எதுவும் காணாமல், மீண்டும் வெளியே ஓடி வந்தான். அய்யோ! பல வினாடிகள் வீணாகி விட்டனவே!

வியர்வை ஊற்றாய்ப் பெருக, அடுத்த மண்டபத்துக்குள் புகும்போது ''அப்பாடி, நேரத்துக்கு வந்து விட்டீர்களே, புவனன்!'' என்று ரகுவின் குரல் கேட்டது.

''ரகு, இப்போது விளக்கம் சொல்ல நேரமில்லை. நான் சொல்வது போலச் செய்யுங்கள். முதலில்,'' என்று, மூச்சைப் பிடித்துக் கொண்டு அவன் சொல்லிக் கொண்டு போனபோது, பின்னிருந்து யாரோ அவன் வாயைப் பொத்தினார்கள். ''அச்சானியமாய் எதையும் சொல்லி விடாதே!'' என்றபடி.

குரலிலேயே திகைத்து, ''அப்பா!'' என்றபடி திரும்பினான், புவனமோகனன். ''நீங்கள் எப்படி இங்கே, இப்போது?'' என்று குழப்பத்துடன் வினவினான்.

''மணமேடையைக் காட்டி திருமணத்திற்காக வந்தேனடா. பொறு ஒன்றும் சொல்லாதே!'' என்றவர் கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்து விட்டு, ''கொஞ்ச நேரம் தான் இருக்கிறது. போ! வியர்த்து வழிகிறாய்! போய் முகம் கழுவி உடைமாற்றிக் கொண்டு வந்து உட்கார்!'' என்று அவசரப்படுத்தினார். ''உனக்குப் புது டிரஸ் அம்மா கொண்டு வந்திருக்கிறாள்!''

''அம்மா?! ஆனால் அதெல்லாம் இருக்கட்டும் அப்பா! நான் முதலில் ஒன்று சொல்லியாக வேண்டும்!...'' என்றவனை, ''திலீபனைப் பற்றித்தானே?'' என்று, இப்போதும் யாரோ இடைமறித்தார்கள்.

''சார்!'' என்று திரும்பினான் புவனமோகனன்.

குரலிலிருந்து அவன் கண்டு கொண்டபடி நமச்சிவாயம் தான்.

''தெரியும்! திலீபனையும் அபிராமியையும் பற்றி இங்கே எல்லோருக்கும் - தேவி உட்படத்தான். எல்லோருக்குமே தெரியும்!'' என்றார் அவர் புன்னகையோடு.

ஒரு கணம் திகைத்தவன், உடனேயே, ''இப்போது இங்கே யாருக்குக் கல்யாணம்?'' என்று விசாரித்தான்.

முறுவல் விரிவடைய, ''தேவிக்குத்தான். ஆனால் மாப்பிள்ளை திலீபன் அல்ல!'' என்று நிறுத்திச் சிரித்தார் அவர்.

சட்டென உடல் விறைப்புற புவனமோகனன் நிமிர்ந்தான். சூழ இருந்த முகங்களின் மலர்ச்சியும், தந்தையின் வரவும், அம்மா கொண்டு வந்திருக்கும் புத்தாடையும் அவனுக்கு ஒரு சேதியை உரக்கவே பறையறிவித்தன!

ஆனால், அதை நம்பும் துணிவு அவனுக்கு வர மறுத்தது. ''நீங்கள் - நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று இறுகிய குரலில் வினவினான்.

''ஆமாம்! சொல்லுகிறார்கள், சுரைக்காய்க்கு உப்பில்லை என்று! போடா போடா! போய் உடைமாற்றிக் கொண்டு வந்து உட்கார் என்றால்....''

''சும்மா எங்கள் மாப்பிள்ளையை விரட்டாதீர்கள், சம்பந்தி, புவனன் நீங்கள்தான் தேவிக்குத் தாலிகட்டப் போகிறீர்கள்! அன்று சட்டப்பட்டி நடந்த திருமணத்தை இப்போது சாஸ்திரப்படி நிறைவுபடுத்தப் போகிறோம். பொதுவாக இது முன்பின்னாக நடக்கும். சாஸ்திரப்படி நடப்பதைச் சட்டப்படி முத்திரை குத்துவார்கள். எப்படி நடந்தாலும் தப்பில்லை. போங்கள், இன்னும் பதினைந்து நிமிடம் தான் இருக்கிறது. கொஞ்சம் சீக்கிரமாக உடைமாற்றிக் கொண்டு வாருங்கள்!'' என்றார் நமச்சிவாயம்.

அப்போதும், புவனமோகனன் அசைந்தானில்லை. அந்த இடத்தில் வேரோடியவன் போல நின்றவன்,

''தேவியிடம் கேட்டீர்களா? அவளுக்கும் இந்த ஏற்பாடு சம்மதம்தானா?'' என்று வினவினான்.

''தேவிக்குப் பிடிக்காதது, எங்கள் வீட்டில் நடக்காது, மாப்பிள்ளை! பிகு பண்ணாமல் சீக்கிரமாக வாருங்கள்!'' என்று புவனமோகனனின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு போனான் ரகுநந்தன்.

பெரியவர்களுக்குப் பணிவது போல அவனோடு சென்றாலும், ''தேவியின் சம்மதத்தை அவளது வாய் மொழியாக நான் அறியவேண்டும் ரகுநந்தன். அது தெரியும் வரை மேலே எதுவும் நடக்காது'' என்றான் புவனமோகனன் பிடிவாதமாக.

சட்டென அவனை எதிர்ப்புறமாய் இருந்த மணமகள் அறைப் பகுதிக்கு இழுத்துச் சென்றான் ரகுநந்தன்.

உள்ளே, தலையை நீட்டி, ''தேவி, ஒரு நிமிஷம், இங்கே வந்து விட்டுப் போ!'' என்று அழைத்தான். தேவி வந்ததும், புவனனின் பிடிவாதத்தைச் சொன்னான். ''சொல்லிவிடு, அம்மா உன் வாயாலேயே இவர் மனது திருப்தியாகும்படி சொல்லிவிடு!'' என்றான்.

தேவி யோசித்த அந்த ஒரு வினாடி, புவனமோகனனுக்கு ஒரு யுகமாய் முடிவற்றதாய்த்தோன்ற, அவள் மெல்ல வாய்திறந்தாள். ''அம்பாசமுத்திரம் பக்கம் ஒரு சிநேகிதி வீட்டுத் திருமணத்துக்குப் போயிருந்தேன். அங்கே, திருமணத்துக்கு முன், மணப்பெண், மணமகனிடம் சென்று, என்னைக் கல்யாணம் செய்து கொள்ள வாருங்கள் என்று அழைத்து அதன் பிறகுதான் திரும

ணம் நடக்கிறது. நானும் அப்படி அழைத்தால்தான் இவருக்குத் திருப்தியாகுமோ என்று கேளுங்கள், அண்ணா!'' என்றாள் அவள்.

அதற்குமேல் புவனமோகனன் வினாடி நேரம்கூடத் தயங்கவில்லை! ஐந்தே நிமிடங்களில், உடம்பு கழுவி, உடைமாற்றி, மணையில் வந்து அமர்ந்து விட்டான்.

மிகவும் எளிமையான, கல்யாணப் பெண் அலங்கா ரத்தில் தேவி வந்து அமர, புவனமோகனன் அவள் கழுத்தில் திருமாங்கல்யத்தை அணிவித்தான்.

''அண்ணி இவ்வளவு அழகாய் இருக்கும்போது, நீ மதிமயங்கிக் கிடந்ததில், என்னண்ணா அதிசயம் இருக்கிறது?'' என்றாள் வசுதா.

வாசுகி, பல்லவியை விட்டு அகலவே இல்லை!

''ஹை! டிரைவ் இன்னில் பார்த்த நல்ல பாட்டி, நல்ல ஆன்ட்டி!'' என்று பல்லவியும் அவர்களோடு இழைந்தாள்.

''அப்போ உங்கள் வயிற்றுக்குள்ளே இருந்த பாப்பா இதுதானா?'' என்ற பல்லவியை உச்சிமுகர்ந் தாள் அத்தைக்காரி.

தாலிகட்டி முடிந்ததும், பெரியவர்களை வணங்கி எழுந்த புவனமோகனன், தேவியை, உட்கார வைத்து எல்லோரும் அரட்டை அடித்தனர்.

புவனமோகனன் கையை உயர்த்தி, ''முதலில் எனக்கு விவரம் எல்லாம் சொல்லுங்கள்! திலீபன்

விஷயம் எல்லாமே ஒரு நாடகம் என்று தெரிகிறது. ..'' என்று தொடங்கிக் கொடுத்தான்.

கேலியும் கிண்டலுமாகக் கதை தொடங்கியது.

அன்றைக்கு தேவியுடைய வருங்காலக் கணவனைப் பார்க்க வேண்டும் என்று புவனமோகனன் கேட்டதும், சுசீலாவுக்கு வியர்த்து விறுவிறுத்துப் போயிற்றாம்! அப்படி ஒருவனுக்கு எங்கே போவது? விவாகரத்து மறுமணம் எல்லாம் பெருமளவு சாதாரணம் ஆகிவிட்ட இந்தக் காலத்தில், அழகு, கல்வி, செல்வம் என்று எல்லாமே உள்ள தேவியை மீண்டும் மணக்கத் தகுதியுள்ள விருப்பம் உள்ள எத்தனையோ பேர் இருக்கத்தான் செய்கிறார்கள்! ஆனால் அவர்களில் ஒருவரைத் தன் துணையாக ஏற்க, தேவி ஒத்துக் கொள்ள வேண்டுமே! அவளைப் பொறுத்தவரையில், புவனமோகனனோடு திருமணம், குடும்ப வாழ்வு எல்லாம் முடிந்துவிட்ட மாதிரியல்லவா, நடந்து கொண்டாள்!

அந்தச் சமயத்தில் தான் சுசீலாவுக்கு இந்த யோசனை உண்டாயிற்று. தேவி, வேறு வாழ்வை ஏற்கிற மாதிரித் தெரியவில்லை! ஒருவேளை, புவனமோகனன் இந்த ஐந்தாண்டு காலத்தில் நல்லபடியாக மாறியிருந்தால்...?

''மாறியது உண்மை. மிக... சின்ன அத்தை! ஆனால், ஒரு மாற்றம் நிகழ்ந்தது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாகவே! தேவியை மணந்ததிலிருந்தே தொடங்கிய மனவளர்ச்சி அவளை விட்டுப் பிரிந்த அன்றே முழுமை

யும் அடைந்து விட்டது!'' என்றான் புவனமோகனன் கம்மிய குரலில்.

''அது எனக்குத் தெரியாதே!'' என்றாள் சுசீலா. ''ஒரு விளக்கமாக, அதை - நீங்கள் திருந்தி விட்ட விவரத்தை எழுதி, உங்கள் நெற்றியில் ஒட்டிக் கொண்டிருக்கலாம். அல்லது போர்டாக எழுதிக் கழுத்தில் தொங்கவேனும் விட்டிருக்கலாம்! இரண்டில் எதையுமே நீங்கள் செய்யாத குற்றத்தால் அல்லவா, நாங்கள் வேறு வழியே யோசிக்க நேர்ந்தது!'' என்று சுசீலா சொன்ன பாவனையில் எல்லோருக்கும் சிரிப்பு வந்தது. புவனனுக்குமே!

''அப்புறம் திலீபனைப் பிடித்தோம். அவனும் தேவிக்கு உத்வத் தயார்'' என்றான்.

'தேவியிடம் சொன்னால், வேண்டாம் என்று மறுப்பாள்' என்று முடிந்தவரை, தேவியிடம் சொல்லாமலே இருந்துவிட ரகுவும் சுசீலாவும் முடிவு செய்தார்கள்.

''திலீபனை வரவேற்க தேவி கிளம்பியிருக்கிறாள்'' என்று காட்டுவதற்காகவே ரகுநந்தனை அழைத்துப் போகும் சாக்கில், வேலை இடத்திற்கு வந்து விஷயத்தை புவனனுக்குத் தெரியப்படுத்தி விட்டுச் சென்றார்கள்.

''திலீபனோடு பேசியதுமே உங்கள் கூரிய உள்ளுணர்வு - அதுவும் தேவி விஷயமாகப் பன்மடங்கு கூர்மை தீட்டப்பட்டிருந்த உள்ளுணர்வு அவனிடம் இருந்த பொய்மையைக் கண்டுகொண்டது. எங்களுக்கு

ஓரளவு சந்தோஷம் தான். ஆனால் தேவிக்காக நீங்கள் எந்த அளவு செல்வீர்கள் என்று பார்க்க நினைத்தோம்.''

''அங்கேதான் அபிராமி காட்சிதரத் தொடங்கியதா?''

''ஆமாம் அபிராமி திலீபனுடைய வருங்கால மனைவிதான். இருவருமே சம்மதித்து, ஒத்துழைத்தார்கள்...''

''நீங்கள் டவுனுக்குக் கிளம்புகிற நேரம் பார்த்து 'செல்'லில் எங்களுக்குத் தகவல் கொடுப்பார்கள். நாங்கள் இருவரும் ஸ்பென்சர் பக்கம் காத்துக் கொண்டு நிற்போம். இரண்டுதரம், சிக்னலில் நீங்கள் நிற்கும்படியாக இல்லாமல் பச்சையே இருந்து நேராகப் போய் விட்டீர்கள். மூன்றாவது தடவைதான் மாட்டினீர்கள். நல்லவேளையாக அன்று மழை வேறு!'' என்று உரைத்த திலீபன், அபிராமியைப் பார்த்து கண்ணடித்துச் சிரித்தான்.

''ஆமா...ம்.. நடிப்பு 'நடிப்பு' ஒத்துழை என்று சொல்லிக் கொண்டு இதுதான் சாக்கு என்று...'' என்று செல்லக் கோபம் காட்டினாள் அபிராமி.

திலீபன் வாய்விட்டு நகைக்க, ''எனக்கென்னமோ, இன்றைய கோபம் தான் நடிப்பு போலத் தெரிகிறது. அன்றைய அபாரமான ஒத்துழைப்பில், அணுவளவு கூட நடிப்பு தெரியவில்லை!'' என்று புவனன் கூற, எல்லோருமே சிரித்தார்கள்.

''அப்புறம் நகைக்கடை, நீங்கள் காரைப் பார்க் பண்ணும் ஓட்டல் பக்கம்தானே! உங்களைப் பார்த்துக்

கொண்டே இருந்து விட்டு கடையிலிருந்து வெளியே வந்தோம்!'' என்றான் திலீபன்.

லேசாகப் புருவம் நெறித்து, ''அன்றளவும் கூட, நீங்கள் தேவியிடம் விவரம் சொல்லவில்லை! இல்லையா? அன்று தேவியிடமாவது திலீபனின் சுயரூபத்தை - சுயரூபம் என்று நான் நினைத்ததை, அவளிடம் சொல்லி விடலாம் என்று போனபோது, பூங்காவில் அவள் உட்கார்ந்திருந்த நிலை...'' என்று அவன் தொண்டையடைத்து நிறுத்தவும், ரகுநந்தன் குறுக்கிட்டு, ''பார்த்து, மாப்பிள்ளைக்கு அப்படியே மனம் உருகி விட்டதாக்கும்!'' என்று கேலியாக இயம்பினான்.

மற்றவர்கள் சிரிக்க, லேசாக முறுவலித்து, ''ஆமாம், ரொம்பவும் மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. அதனால், இவன் மனதுக்கு இன்னும் ஒரு துக்கம் நேரக்கூடாது என்று, வேறு வித முயற்சியில் முனைந்தேன்'' என்றான் புவனன்.

சட்டெனப் பரவிய சிரிப்பலையினூடே ரகுநந்தன் சொன்னான். ''அதன்பிறகுதான், புவன், எங்களுக்கு முழு நம்பிக்கை வந்தது. வாய்வார்த்தையால் உருகுவது எளிது - ஆனால், தேவியுடைய மகிழ்ச்சிக்காக, நீங்கள் எதுவும் செய்யத் தயாராக இருக்கிறீர்கள் என்பதைத் தெளிவாக்கியது. உங்களது அந்த முயற்சிதான். அதற்குப் பிறகுதான், இந்த விஷயம் பற்றி நாங்கள் தேவியிடம் மூச்சுவிட்டதே!''

கிளுக்கிச் சிரித்தபடியே அபிராமி கூறினாள். ''அய்யோ, தேவிக்கா! தேவியின் வாழ்வில் குறுக்கி

டாதே, உனக்கு இருபது லட்சம் தருகிறேன்; முப்பது லட்சம் தருகிறேன்; என்றெல்லாம் உங்கள் 'பார்ட்டி' கெஞ்சினார் பாருங்கள்! பெரிய்ய லாட்டரி டிக்கட் பரிசு அடித்த மாதிரிப் பணத்தை வாங்கிக் கொண்டு, உங்கள் தேவிக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை என்று போய்விடலாமா என்று எனக்கு மனம் துடித்..தது! ஆனால் அப்புறம், எங்கள் அண்ணியுடைய கணவர், 'இவர்'காதைத் திருகிக் கையில் கொடுத்து விடுவாரே என்றுதான் அடக்கிக் கொண்டு சும்மா இருந்தேனாக்கும்!'' என்று அபிநயத்தோடு அவள் உரைக்க, மீண்டும் பரவிய நகையொலியினூடே, பெருமையும் கனிவுமாகத் தேவி, கணவனை நோக்கினாள்.

அகற்ற மாட்டாதது போலப் புவனமோகனனின் பார்வையும் அவளது நோக்கோடு இணைந்தது.

பெரிய ட்ரேயில் கொண்டுவரப்பட்ட குளிர் பானத்தை ரகுவுடைய மனைவி அகல்யாவோடு கூடச் சேர்ந்து எல்லோருக்கும் வினியோகித்தபடி, ''இன்று காலையில் எங்கள் இருவரையும் 'பைக்'கில் பார்த்தது உங்களுக்குப் பெரிய அதிர்ச்சியாய் இருந்திருக்கும்!'' என்றாள் அபிராமி.

''ஓகோ! இப்போது வசுவும் இதில் உங்கள் கூட்டா? நீ சொல்வது சரிதானம்மா! கையில் கிடைத்திருந்தால் கழுத்தையே நெறித்து விட வேண்டும்போல வெறி! முயன்று அமைதிப்படுத்திக் கொண்டு, ரகுவைத் தேடி வந்தால்... ஆனால், இவ்வளவு செய்தவர்கள். கோயிலிலேயே கல்யாணத்தை வைத்துக் கொண்டிருக்க

லாமில்லையா? எனக்குக் கண்டுகொள்வது எளிதாய் இருந்திருக்கும்! இப்படி இன்னொரு கல்யாண மண்டபத் துக்குள் ஓடித் தேடித் திரும்பி... முகூர்த்த நேரம் முடிந்து போய்விடுமோ என்று அஞ்சத் தேவை இருந்திராதே!'' என்றான் புவனன்.

''செய்திருக்கலாம் மாப்பிள்ளை! ஆனால், இந்தக் கோயிலில் திருமணம் செய்தால், திருமணத்தைப் பதிவு பண்ண வேண்டும். ஏற்கெனவே அங்கே பதிவேட்டில், இருப்பதை மீண்டும் என்ன பதிவு செய்வது? அதனால் தான்.''

''ஓகோ! அப்படியானால், விவாகரத்து மனு கொடுக்கவே இல்லை! அதுவும் ஒரு கதைதான்!''

''ஆமாம், மாப்பிள்ளை!'' என்று ஒத்துக்கொண் டாள் சுசீலா. ''எங்கள் வீட்டில், இதய நரம்புகளைக் கண்டபடி இழுத்து, அறுத்தது கிடையாது. எங்கள் பேச்சை மீறக்கூடாது என்பதற்காக, விவாகரத்துக்குச் சரியென்று சொல்லிவிட்டு, இரவெல்லாம் இருளில் போர்வையில், கண்ணீரில் தேவி கரைந்தாள். ஆனால், அதே அறையில் இருந்து கொண்டு, இன்னொருவர் அழுவதை அறிய விளக்கோ, வெளிச்சமோ தேவையில் லையே! அதனால், மணவிலக்கு பற்றி அதற்குமேல் நாங்கள் முயற்சியே எடுக்கவில்லை!''

''பிறகும்.... அதாவது, இப்போது என்னிடம் கையெழுத்து வாங்கியது கூட நாடகம்தான்!''

''ஆமாம், மாப்பிள்ளை! உங்கள் எதிரொலியை அளக்க வேண்டியிருந்தது. ஒருமுறை குட்டுபட்டு

விட்டதால், நாங்கள் பலவாறு நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. தொழிலில் நீங்கள் நேர்மையாய் இருப்பதாகப் பெரிய அத்தான் சொன்னார்கள். அதை நம்பித்தான், அவரிடம் கெஞ்சிக் கூத்தாடி, தேவியை இங்கே வரவழைத்து, சந்திக்க வைத்தோம். நம்பிக்கையும், பயமுமாக ஊசலாடிக் கொண்டிருந்தோம். ஆனால், சொந்த வாழ்விலும் நீங்கள் மாறி விட்டீர்கள் என்று உங்கள் அப்பா சொன்னார். ஆனால், பெற்றவர் சொல்வதை எப்படி முழுமையாக நம்புவது?''

''அப்பாவா!? என் பேச்சைக் கேட்டு, அத்தோடு சும்மா விட்டுவிட்டாரே என்று உள்ளூர ஆச்சரியப்பட்டேன்! ஆனால், விடவில்லை என்று இப்போது தெரிகிறது!'' என்றான் புவனன் இளநகையுடன்.

''எப்படி விடுவார், பாவம்? பிள்ளைப்பாசத்தை விடவும், பேரன் பேத்திப் பாசம் ரொம்பவும் வலுவானது தெரியுமா? உங்கள் அம்மாவோ, பல்லவியை நேரில் பார்த்தவர்கள்! விடுவார்களா? மும்பை எஸ்டிடி பில்லை எடுத்து விவரம் பாருங்கள். எத்தனை தரம் உங்கள் அப்பா டெலிஃபோனில் பேசியிருப்பார், தெரியுமா?

''உண்மையான அன்புள்ள உறவு எல்லாமே அப்படித்தான். எப்படியாவது என் மனைவியோடு ஒரு தொடர்பு நேர வழி பிறக்கக்கூடும் என்கிற ஒரு காரணத்துக்காகவே என் தங்கை வசுதா, தனக்குச் சென்னையில் மாப்பிள்ளை பார்க்கச் சொன்னாள், தெரியுமா?''

---

''என்ன அண்ணா, எனது மண்டையைப் போட்டு உருட்டுகிறீர்கள்!'' என்று கேட்டபடி, பல்லவியைக் கையில் பிடித்துக் கொண்டு வசுதா வந்தாள், தன் புகுந்த வீட்டு உறவினர், பெற்றோருடன் மண்டபத்தின் முன் புறம் இருந்து பேசிக் கொண்டிருந்தவள் அவள்.

''அங்கே இன்னொரு 'செட்' குளிர்பானம் அனுப் பும்படி, மாமா ... அண்ணியுடைய பெரியப்பா சொல்லச் சொன்னார்கள், அத்தை!'' என்று சுசீலாவிடம், கூறிவிட்டு, மீண்டும் என்னவென்று கேட்டாள்.

விவரம் அறிந்ததும் முறுவலித்து, ''பெருமளவு அண்ணன் சொன்னது சரிதான். அண்ணனைத் தமிழ் நாட்டுப் பக்கம் வந்து போகச் செய்து விட்டால் கடவுள் அருளும் இருந்தால், எப்படியும் அண்ணியோடு அண்ணனின் சந்திப்பு ஏற்படும். அதிலிருந்து நல்ல விளைவுகள் ஏற்படும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது! கூடவே, தமிழ்நாட்டில் வாழவேண்டும் என்ற ஆசையும் இருந்தது! எப்படியோ, கடவுள் அருளால், என் நம்பிக்கை, ஆசை இரண்டுமே நிறைவேறி விட்டன!'' என்றாள் அவள் மகிழ்ச்சியோடு.

உடனேயே, ''எ... என்னம்மா? ஏன் இழுக்கிறாய்?'' என்று கையைப் பிடித்து இழுத்த அண்ணன் மகளிடம் கேட்டாள்.

''குட்டித் தம்பிக்குத் தண்ணீர் எடுத்துகிட்டுப் போகாமல், சும்மா பேசிக்கிட்டு நிற்கிறீங்களே! தாகத்திலே, தம்பிப்பாப்பா அழுதா? போய் எடுத்துக்கிட்டு வரலாம் வாங்க!'' என்று வசுதாவின் கையை மீண்டும் பற்றி இழுத்தாள் சிறுமி.

அண்ணனின் பார்வை மகளின் மீது இருப்பதைக் கண்டு விட்டு வசுதா, ''பாப்பாவுக்குத் தாகம் எடுக்க இன்னும் கொஞ்சம் நேரம் ஆகும். அதனால் மெள்ளவே தண்ணீர் எடுக்கப் போகலாம். அதற்கு முன்னால் ...அதோ பார், உன் அப்பா!'' என்று புவனனைக் காட்டினாள்.

''ம்ம்..'' என்று யோசனையோடு தந்தையைப் பார்த்தாள் குழந்தை.

''இங்கே வா!'' என்று புவனன் மகளை மென்மை யாக அழைத்தான்.

''முதல்ல நீங்க எழுந்து நில்லுங்க! நான் பார்ச் கணும்!''

மகளின் கட்டளைக்கிணங்கப் புவனமோகனன் எழுந்து நிற்கவும் பல்லவிக்கு ஒரே கொண்டாட்டம். ''ஹைய்யா! எங்கப்பா எவ்வளவு உயர்...ர்ரம்! சித்தி, மோனி சித்தி! பாருங்கள்! எங்கப்பாதான் எல்லாரையும் விட உயரம்! அம்மா, பாருங்க!'' என்று ரப்பர் பந்தாய்த் துள்ளிக் குதித்துக் குதூகலித்தாள்.

பிறகு, தந்தையிடம் வந்து இரு கை விரித்து, ''என்னைத் தூக்குங்கப்பா! தோளிலே!'' என்று, அடுத்த ஆணை பிறப்பித்தாள்.

அவன் தூக்கிக் கொண்டதும், ''ஹைய்யா! இப்போ நான் தான் எல்லாரையும் விட உயரம்! இல்லையாப்பா? அய்யோ! சித்தியெல்லாம் என்னைத் தொடக்கூட முடியாது!'' என்று பெருமைப்பட்டாள்!

அரவணைப்பாய்த் தூக்கியிருந்தவனின் விழிகளில் நீர் திரையிடுவதைக் காணவும் எல்லோருக்குமே உருகி விட்டது!

ஏறிய வேகத்திலேயே, ''என்னை இறக்கி விடுங் கப்பா!'' என்று பல்லவி கீழே இறங்க முற்பட்டாள்.

மெல்ல அவளை இறக்கிவிட்டபடி, 'ஏம்மா?'' என்று கேட்டான் தந்தை.

''தம்பிப் பாப்பாவுக்குத் தண்ணீர் கொடுக்க, இந்த அத்தையைக் கூட்டிக்கிட்டுப் போகணும்பா! இல்லாட்டி, இப்படியே நின்று நின்று... வேடிக்கை பார்த்திட்டே இருப்பாங்க! அங்கே, பாட்டிகிட்டே பாப்பா அழுவும்! வாங்க அத்தை!'' என்று பல்லவி, வசுதாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள்.

''சரியான அடாவடி!'' என்று செல்லமாக வைதாள், மோனி. ''அங்கேயும் இப்படித்தான் அம்மா. பாப்பாவுக்கு அதைப்பண்ணு, இதைப் பண்ணு என்று என்னை 'டிரில்' வாங்கி விடுவாள்! தான் சொல்லத் தேவையே இல்லையே என்பார்கள் மாமியார்!''

''குடும்பத்துக்கு இப்படி ஒன்றிரண்டாவது கட்டா யம் தேவை! இல்லாவிட்டால் ஒருவேலை நடக்காது!'' என்றாள் சுசீலா, பெருமையாக!

''சாப்பாட்டுக்கு ஓட்டலில் ஏற்பாடு செய்தாயிற்று. அதனால் மண்டபத்தை இப்போதே காலி பண்ணி விடலாம்'' என்று பேச்சு நடக்கவும், ''ரத்து என்று எதுவும் செய்யாத போது, இதுஒரு கூத்து அவசியம்

தானா, ரகு?'' என்று புவனமோகனன் கேட்க, அதற்கு சுசீலா பதில் சொன்னாள்.

''இது எங்கள் ஆசைக்கு என்று வைத்துக் கொள்ளுங்களேன்!'' என்றாள் அவள். ''முன்பு, 'ரிஜிஸ்ட்ரார்' அலுவலகத்தில், வெறுமனே மாலை மட்டும் மாற்றித் திருமணம் செய்து கொண்டீர்கள். என்னவோ, எனக்கு அது மனதில் ஒரு மாதிரி இருந்தது இன்னும், எதிர்காலத்தில், திருமணம் நடக்கும் முறையே அதுதான் என்று கூட வரக்கூடும்! ஆனால், இப்போது, எங்களுக்கு உங்களை இப்படிப் பார்க்கத்தான் விருப்பமாக இருந்தது. அத்தோடு, உங்கள் பெற்றோரும் உங்கள் திருமணம் பார்க்க வேண்டும் அல்லவா? ஒரே பிள்ளை ஆயிற்றே! அதனால்தான் இப்படி ஏற்பாடு செய்தோம். அதில் உங்களுக்கு வருத்தம் ஒன்றுமில்லையே?'' என்று திடுமென ஏற்பட்ட கவலையுடன் வினவினாள்.

''சேச்சே! அப்படி ஒன்றும், இல்லை! அத்தை! இந்த மண்டபம் எடுத்து, எவ்வளவு வேலை? அனாவசிய சிரமம்தானே என்றுதான் கேட்டேன்! வேறு ஒன்றும் இல்லை!'' என்றான் புவனன் சமாதானமாக.

கேலி, சிரிப்பு, பழங்கதை, புதுநிலை என்று கலகலப்புடன் பேசிக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் விடைபெற்றுச் சென்றனர்.

''இன்று, குழந்தை என்னோடு இருக்கட்டும்மா?'' என்று பல்லவியை, வாசகி அழைத்துச் சென்றபின், புவனமோகனனிடம் ஓர் இறுக்கத்தை உணர்ந்தாள் தேவி.

யோசனையோடு கணவனை நோக்கி, ''என்ன?'' என்று விசாரித்தாள்.

சற்றுத் தயங்கிவிட்டு, ''தேவி, நான் ஒன்று கேட்டால் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டாயே?'' என்று வினவினான் அவன்.

''தப்பாக எடுத்துக் கொள்ள, இனி நம்மிடையே எதுவும் இராது. எதற்குமே சரியானதொரு விளக்கம் இருக்கும் கேளுங்கள்!'' என்றாள் அவள் அமைதியான குரலில்.

''தேவி... தேவி... நீ பல்லவிக்காக - அவளுக்கு ஒரு தந்தை வேண்டும் என்பதற்காக.. இப்போது என்னை ஏற்றாயா?'' என்று கேட்டுவிட்டு, கவலையும் பயமுமாய் அவளைக் கூர்ந்து கவனித்தான் அவன்.

வியப்பும் ஆர்வமுமாய் மலர்ந்த கண்களால், புவனமோகனனை அவள் உற்றுநோக்கினாள்.

முன்பு அவன் செய்த பிழையின் எதிரொலி இது! மனைவியின் அன்பு நிலைத்திருக்கக் கூடும் என்கிற எண்ணம் தோன்றவே காணோம்!

''உண்மையைச் சொல் தேவி! அப்படித்தானா?'' என்று மீண்டும் கலக்கத்துடன் கேட்டான் அவன்.

தேவியின் செவ்விதழ்களில் மென்னகை அரும்பியது. ''எல்லோராலும் புத்திசாலி என்று கொண்டாடப்படும் என் கணவர், அவ்வப்போது, அடிமக்காகவும் இருப்பார் என்று இப்போதல்லவா, தெரிகிறது!'' என்றாள் சிரிப்படக்கிய குரலில்.

"அப்படி என்றால்?"

உதட்டோரம் ஒரு தசை துடிக்க, கண்களில் எதையும் காட்டாத கவனத்துடன் புவனன் தொடர்ந்து கேட்கவும் தேவிக்கு மனம் உருகி விட்டது.

முறுவலித்து, "சொல்லுங்கள். பல்லவிக்குத் தகப்ப னார் இப்போது தானா வேண்டும்? குழந்தைக்கு ஒரு தந்தை தேவை என்பதற்காக என்றால், அது உருவான போதே விலகியிருப்பேனா?" என்று அவள் கேட்கவும் அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"அபபடியென்றால்?" தேவியின் தோளைப் பற்றி "அப்படியென்றால் உனக்கு அப்போதே தெரியுமா? தேவி, நீ ஏன் அதை என்னிடம் சொல்லவில்லை?" என்று புரியாத பரபரப்புடன் வினவினான். "சொல்லியி ருந்தால் எந்த நிலையிலும் உன்னை விட்டுப் பிரிந்தி ருக்க மாட்டேனே. அதட்டி மிரட்டி, கெஞ்சி, கூத்தாடி எப்படியாவது என்னை உனக்குப் புரிய வைத்திருப் பேனே! பட்டினி கிடந்து, தலைகீழாய் நின்று, எந்தத் தண்டனை அனுபவித்தேனும் உன் மன்னிப்பைப் பெற்றி ருப்பேனே! சொல் தேவி! நீ ஏன் அப்போதே என்னிடம் சொல்லவில்லை?"

"சொல்லவேண்டும் என்றுதான் வந்தேன்..." என்ற வளின் முகம் அன்றைய நினைவில் வாடியது.

"பின் ஏன் சொல்லவில்லை?"

மெல்ல விலகிச் சென்று, மேஜை விளிம்பில், சாய்ந்தாற்போல அமர்ந்து, "அன்றைக்கு நடந்தது

எல்லாம உங்களுக்கு நினைவிருக்கிறதா?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள் அவள்.

வருத்தமான ஒரு பெருமூச்சுடன், ''இன்றேனும் மறக்குமா?'' என்றபடி அருகில் கிடந்த இருக்கையொன் றில் புவனன் அமர்ந்தான்.

''அன்றைக்கு ஒரு சினேகிதியைப் பார்க்கப் போவ தாகச் சொன்னேன் இல்லையா? ஆனால், நான் பார்க்கப் போனது, டாக்டரை! என் சந்தேகத்தைச் சொன்னதும், பரிசோதனை பண்ணி, கருவுற்று இருப்பது உண்மைதான் என்று சொல்லி, என்னை வாழ்த்தினார் கள்! அதை உங்களை முதலில் பார்த்து, உங்களிடம் தான் முதலில் சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட் டேன். டாக்டருக்குக் கார் தேவைப்பட்டதால் வீட்டின் பின்னே இருந்த கோடவுன் வாசலில் இறங்கிக் கொண்டு, காரை அவர்களிடம் கொடுத்து அனுப்பி விட்டேன். அந்த வீட்டில் வாயில் பக்கம் வருவது என்றால் 'ஒன்வே' சுற்ற வேண்டும்; நினைவிருக்கிறதல் லவா?''

ஏதோ விளக்கம் தெளிவு பட்டு விட்டாற்போலப் புவனனின் விழிகள் அகன்றன. வேதனையோடு தலை யசைத்து, ''எப்படித் தெரிந்தது, எப்படித் தெரிந்தது என்று பலமுறை யோசித்துப் பார்த்திருக்கிறேன். இப் போது தெரிகிறது! கோடவுன் தாண்டி வீட்டின் பின்புறக் காம்பவுண்டு வழியாக உள்ளே வந்திருக்கிறாய்...'' என்றான்.

ஒப்புதலாய், ஒரு சோகத்துடன் தலையசைத்தாள் அவள். "உங்கள் நண்பர்கள் செல்லட்டும்; பிறகு உங்களிடம் சொல்லலாம் என்று, செடிப் புதரின் பின்னே ஒளிந்திருந்தேன்."

சொல்லொணாத வேதனையைக் காட்டியது அவன் முகம். "நாங்கள் பேசியதை எல்லாம் கேட்டிருப்பாய்! அய்யோ! இடியே விழுந்தாற்போல, அப்போது உனக்கு எவ்வளவு வேதனையாக இருந்திருக்கும்?"

அவனது கை முஷ்டிகளின் இறுக்கத்தில் கை மொழிப் பகுதிகள் மென்மையாகத் தெரிய, அவனது துன்பம் உணர்ந்தவளாய், எழுந்து அவனிடம் வந்தாள். அவன் அருகே அமர்ந்து, அவனது விரல்களை மென்மையாகப் பிரித்து விட்டாள். "அப்போது பெரிய அதிர்ச்சிதான். அதிர்ச்சியை அனுபவித்துக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில், நீங்கள் என்னைப் பணத்துக்காக ஏமாற்றியிருந்தீர்கள்; இப்படி ஓர் ஏமாற்றுக்காரத் தந்தை என் குழந்தைக்குத் தேவை இல்லை; உங்கள் வாடை கூடக் குழந்தைமேல் பட்டுவிடக் கூடாது என்றும் நினைத்தேன். உங்களை வேண்டாம் என்று ஒதுக்கத்தான் பல்லவி காரணமாக இருந்தாளே தவிர, வேண்டும் என்று இணைவதற்கு அல்ல!" என்றாள் அவள்.

"அப்போது பல்லவி, பேச, விரும்பாத தெரியாத குழந்தை!" என்றான் புவனமோகனன், சமாதானம் அடையாமல்.

"இப்போதும் பல்லவி தந்தைக்காக என்று, என்றைக்குமே ஏங்கியதில்லை. அங்கே, எல்லோருக்குமே

அவள் அருமை! அதனால், அப்பாவின் தேவையை அவள் உணர நேர்ந்தது இல்லை. இன்றைக்குக் கூட 'அப்பா' என்றதும் சந்தோஷப்பட்டாளே தவிர, அதற்குமே அதிகப்படியாக ஒட்டிக் கொண்டு கிடந்தாளா, சொல்லுங்கள்!''

பிள்ளைக்காக மணந்தாளோ என்ற அவனது கலக்கத்தைத் தீர்த்து விடும் வேகத்தில் தேவி பேசியது, புவனனை இன்னொரு விதத்தில் காயப்படுத்தியது. ''உங்கள் இருவருக்குமே நான் தேவைப்படவில்லை! இல்லையா, தேவி?'' என்றான் வருத்தத்துடன்.

அவனை ஆழப்பார்த்துவிட்டு, ''எப்படிச் சொல்லுகிறீர்கள்?'' என்று நிதானமாகக் கேட்டாள் அவள்.

''பல்லவிக்கு அப்பா தேவைப்படவில்லை என்று நீயே சொன்னாய். நீயும், தொழிலில் இறங்கி, வெற்றிகரமாகவே நடத்துகிறாய்! எனக்காக ஏங்கிக் கொண்டு கிடக்கவில்லை!''

''வெற்றிகரமாகவா? பெரியப்பா கற்றுக் கொடுத்ததைச் சரியாகச் செய்வதாலேயே ஏங்கவில்லை என்று ஆகிவிடுமா? நீங்கள், தானாகவே - சுயமுயற்சியிலேயே எவ்வளவோ உயர்ந்திருக்கிறீர்கள்! அதனால், என்னை நினைக்கவே இல்லை என்று நான் எடுத்துக் கொள்ளலாமா?'' என்று தேவி மடக்கவும், புவனன் சற்று வாயடைத்துப் போனான்.

பிறகு, மெல்ல முகம் தெளிய, ''நினைக்கவில்லையா? இந்த ஐந்து ஆண்டுகளில், தன்னை மீறி

உறங்கும் நேரம் தவிர, ஒரு கணம் கூட உன்னை மறந்தது. இல்லை. தேவி! அந்த ஏக்கத்தில் ஓய்ந்து விடாமல் மீளத்தான் தொழிலில் முழுமூச்சுடன் ஈடுபட்டதே!'' என்றான் ஒரு வருத்தமான முறுவலுடன்.

''உங்களுக்கு மட்டும்தான் அப்படி இருக்குமா? சித்தி சொல்லவில்லையா. இரவில் நான் அழுதது பற்றி? எவ்வளவு கஷ்டமாக இருந்தது தெரியுமா?'' என்ற போது அன்றைய நினைவில் அவளது விழிகளில் நீர் அரும்பியது.

இதற்கு வாய்ச் சொற்களால் என்ன ஆறுதல் சொல்ல முடியும்? மெல்ல மனைவியை அருகிழுத்து கண்ணீரைத் துடைத்து, தோளோடு சாய்த்துக் கொண்டான்.

சில கணங்கள் மவுனத்தில் கரைந்தபின், ''எனக்காவது உன் ஏக்கம் மட்டும். உனக்குக் கணவன் அயோக்கியன் என்ற வேதனையும் கூட இருந்திருக்கும்! உன்னால், எப்படித்தான் என்னை மன்னிக்க முடிகிறதோ?'' என்றான் கழிவிரக்கத்துடன்.

''தப்பு செய்தவர், அதை உணர்ந்து திருந்தும் போது, கொலைப்பாவம் கூடக் கரைந்து போகிறது என்கிறார்கள். உங்கள் விஷயத்தில், நீங்கள் வட்டியோடு பணத்தைத் திரும்பக் கட்டியது, நண்பர்களுக்குப் பணம் கொடுத்து நியாயமான வழியில் தொழில் நடத்தச் சொன்னது... எல்லாம் உங்கள் மனம் மாறிவிட்டதைக் காட்டுவதுதானே?... பிறகு ஒரு நாள், நீங்கள் வாங்கிய பொருட்களை எல்லாம் எடுத்துப் பார்த்தேன். எல்லாமே

எனக்கு மட்டும் தானே! உங்களுக்காக, ஒரு பட்டன் கூட வாங்கவில்லையே! நினைத்து, நினைத்துப் பார்க்கும்போது, முதலில் பணத்துக்காக என்னை மணந்தாலும், பிறகு அன்பு தோன்றிவிட்டது என்று எனக்குத் தோன்றியது. அவசரப்பட்டு உங்களைப் பிரிந்து போகச் சொல்லிவிட்டேன் என்று எண்ணினேன். ஆனால், அதை நான் யாரிடம் சொல்ல முடியும்? முதலில் இருந்தே வீட்டில் எல்லோரும் உங்களுக்கு எதிர்ப்பு. அவர்கள் பேச்சை நிரூபிப்பது போல நடந்து விட்டது! காயப்பட்டு நிற்கிறேன் என்று என்மேல், அன்பு காட்டினாலும் காயப்படுத்தியவர் என்று உங்கள் மீது முழு வெறுப்புதானே! பேசி, முடித்து இனி வேண்டாம் என்று ஒதுக்கி மூடி வைத்து விட்ட விஷயம் நீங்கள் யாரையும் எதிர்த்து மறுத்து ஒருவிரல் அசைக்கும் திடம் கூட எனக்கு வரவில்லை!''

''அப்படித்தான் இருப்பாய் என்பதுதான் என் ஊகமும். முதுகெலும்பே இல்லாத ஒரு புழு மாதிரி ஆக்கி விட்டு வந்துவிட்டோமே என்று வருந்துவேன். ஆனால், உன்னைச் சுற்றி உள்ளவர்கள், உன்மேல் உண்மையான அன்புள்ளவர்கள், உனக்கு நல்லதுதான் செய்வார்கள், என்று அது ஒன்று தான் சற்று ஆறுதலாக இருக்கும்!''

''அது உண்மைதான் என்றாள் தேவி. ''எல்லோரும் மிகவும் பிரியமாய் இருந்தார்கள். அந்த அன்பு மட்டும் இல்லை என்றால், அன்றையத் துன்பத்திலும், மசக்கையிலும் இருந்து நான் மீண்டிருக்கவே முடியாது!

ஆனால், இந்த அன்பு உங்கள் மேல் இல்லாத பழியெல்லாம் சூட்டிவிட்டது. உங்களுக்குப் பழைய காதலி, அவளுக்குப் பிள்ளை என்று பெரிய கதை தோன்றி விட்டது. நீங்களும், தகவலே இல்லாமல் போய்விட்டீர்களா? அதுவே காரணமாக இருக்கக் கூடுமா என்று...''

''ஐயோ, கண்மணி!'' என்று அவள் வாயைப் பொத்தினான் புவனமோகனன். ''கனவில் கூட நான் இன்னொரு பெண்ணை எண்ணியதில்லை, கண்ணம்மா!'' எனக்கு, முதலிலிருந்தே நீ தான். இன்றுவரை எனக்கு நீ மட்டும்தான்'' என்றான் ஒரு வேகத்துடன்.

''ம்ம்...'' என்று யோசித்தாள் தேவி. புருவங்களை நன்றாக சுளித்து ஆழ்ந்து சிந்தித்து. ''என்னவோ பெரிய தப்பாகத் தெரிகிறதே!'' என்று இழுத்தாள்.

''ஊகூம்! நிஜம்!'' எனும்போதே கண்களில் ரசனை தோன்றிவிட ''என்னம்மா தப்பு?'' என்று பயந்தாற் போன்ற பாவனையில் புவனமோகனன் கேட்டான்.

''இன்றுவரை என்றதுதான்! அப்படி என்றால், நாளையிலிருந்து மாறுவீர்கள் என்று அர்த்தமா? ம்?'' என்று உதடு குவித்துக் கேட்டாள் தேவி.

மொட்டாய்க் குவிந்திருந்த இதழ்களை ஒருவிரலால் ஆசையுடன் வருடிவிட்டு, ''ஆமாம்!'' என்றான் புவனன்.

''என்னது!?!'' மாறுவீர்களா?''


''ஆமாம்! ஆமாம்! ஆமாம்! நிச்சயமாக மாறத் தான் போகிறேன்! நாளைக்கு இரு மடங்கு, அடுத்த மாதம் மூன்று மடங்கு என்று உன்மேல் ஆசையை வளர்த்துக் கொண்டே போவேன்! வளர்ச்சியும் ஒரு மாற்றம் தானே?''

''உங்களைப் பேச்சில் வெல்ல யாரால் முடியும்?''

''பேச்சு மட்டும்தானா? செயலைப் பார்க்கிறாயா? ம்?''

கிளுகிளுத்துச் சிரித்தாள் தேவி!

பல்வரிசை பளீரிடக் கள்ளமற்றுச் சிரித்த மனைவி யின் முகத்தை இரு கைகளாலும் ஏந்தி, ஆவலுடன் பார்த்தான் புவனமோகனன். ''தேவியை அடைய முற்பிறவியில் தவம் பண்ணியிருக்க வேண்டும்! உன் னைப் பார்த்தால் தவம் பண்ணியவன் போலத் தோன்ற வில்லையே! என்று உன் ரகு அண்ணா சொன்னார். அது உண்மையாக இருந்து, பிரிவும் நேர்ந்தது! ஆனால், இந்த ஐந்தாண்டுத் தவம் உன்னை எனக்கு மீண்டும் தந்துவிட்டது, தேவி!'' என்று, பூரிப்பும் பெருமிதமு மாய்க் கூறி, அவளை ஆசைபொங்க முத்தமிட்டான்!


தவம்
பண்ணிடவில்லையடி
ரமணிசந்திரன்